பல்துறைசார் நவீன ஆய்வுகள்
E-ISSN : 2584-1238
அக்டோபர் - 2025

ISBN 978-93-343-7954-9
9 789334 379549
E-ISSN : 2584-1238



**தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),**
(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, ஆற்றல்சால் கல்லூரி,
தேசியத் தர நிர்ணயக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A+' தரம் பெற்றது.
யுஜிசி பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகத் தகுதி பெற்றது)
சிவகாசி – 626 123. விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

**முத்தரசி-கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,**
**மதுரை - 625016, தமிழ்நாடு, இந்தியா**

SPECIAL EDITION: VI VOLUME - III

# பல்துறைசார் நவீன ஆய்வுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

**பதிப்பாசிரியர்கள்**

**முனைவர் ப.மீனாட்சி,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

**முனைவர் நா.கவிதா,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

**கருத்தரங்க ஆலோசகர்கள்**

**முனைவர் பா.பொன்னி**
துறைத்தலைவர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி

**முனைவர் செ. ஞானேஸ்வரன்,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்,
பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம்,
திருவனந்தபுரம்

அக்டோபர் - 2025




**தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),**

(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, ஆற்றல்சால் கல்லூரி,

தேசியத் தர நிர்ணயக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A+' தரம் பெற்றது.

யுஜிசி பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகத் தகுதி பெற்றது)

**சிவகாசி – 626 123, விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா**

**&**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,**

**மதுரை-625016, தமிழ்நாடு, இந்தியா**

SPECIAL EDITION: VI VOLUME - III


# பல்துறைசார் நவீன ஆய்வுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்


**பதிப்பாசிரியர்கள்**

**முனைவர். ப.மீனாட்சி**

உதவிப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முனைவர் நா.கவிதா**

உதவிப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.

**கருத்தரங்க ஆலோசகர்கள்**

**முனைவர் பா. பொன்னி**

துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முனைவர் செ.ஞானேஸ்வரன்**

உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை மற்றும் ஆய்வுமையம்,

பல்கலைக்கழகக் கல்லூரி, பாளையம்.

திருவனந்தபுரம்.



**அக்டோபர் - 2025**

# பதிப்புக்குழு

- முனைவர் மா.பத்மபிரியா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ர.விஜயப்ரியா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ச.தனலெட்சுமி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் கு.வளர்மதி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் வி.அன்னபாக்கியம் - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் இரா.செண்பகவள்ளி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் வீ.முத்துலட்சுமி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் மா.முத்துச்செல்வி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் பெ.ஆனந்தி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி மு.பூங்கோதை - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் சி.தேவி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் கு.செல்வ ஈஸ்வரி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- முனைவர் ச.மீனாட்சி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி இர.கிருஷ்ணவேணி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி மா.முத்துகாயத்ரி - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
- திருமதி செ.வித்யா - முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை

# <u>நூல் விவரம்</u>


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பல்துறைசார் நவீன ஆய்வுகள்<br>(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை) |
| முதற்பதிப்பு | : | அக்டோபர், 2025 |
| பதிப்புரிமை & வெளியீடு | : | தங்கமாரி சுடலை,<br>12/6, மேலப்பொன்னகரம் 8 வது தெரு,<br>4வது குறுக்கு, ஆரப்பாளையம்,<br>மதுரை – 625016. |
| மின்னஞ்சல் முகவரி | : | laks@muththarasi.org |
| வலைதளம் | : | https://muththarasi.org/ |
| ISBN No | : | 978-93-343-7954-9 |
| E.ISSN No | : | 2584 – 1238 |
| புத்தக அளவு | : | A4 |
| பக்கங்கள் | : | 197 |
| விலை | : | 300/- |
| அச்சிட்டோர் | : | லேசர் பாயிண்ட்,<br>வசந்த நகர் முதன்மைச் சாலை,<br>மதுரை – 625 003 |

# <u>பதிப்புரை</u>

கரிசல் பூமியில் பெண் கல்விக்காக 1968-ஆம் ஆண்டு தோன்றிய, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, நிறுவனத் தலைவர் திருமதி.திலகவதி இரவீந்திரன் அவர்கள், கல்லூரிச் செயலர் திருமதி.அருணா அசோக் அவர்கள், முதல்வர் டாக்டர்.இரா. சுதா பெரியதாய் அவர்கள் ஆகியோரின் வழித் துணையோடு மிளிர்கின்றது. எம் கல்லூரியானது பல்துறை ஆய்வுக்கு வழிகாட்டும் உயராய்வு மையங்களுடன் ஆய்வுத் தளத்தில் உலக தரத்தைப் பெற்றுப் பல பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் நிகழ்த்தி வருகின்றது. இத்தகு சீர்மிகு ஆய்வுத் தடத்தின் தொடர்ச்சியாக எம் கல்லூரியின் முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையும் முத்தரசி இணைய இதழும் இணைந்து நடத்துகின்ற '**பல்துறை சார் நவீன ஆய்வுகள்**' என்னும் தலைப்பிலான ஒரு நாள் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கு தமிழ் கூறும் நல்லுலகில் வெற்றித்தடம்பதிக்கும் மணி மகுடம்.

**"விருந்தேதானும் புதுவது கிளந்தயாப்பின் மேற்றே"** என்னும் தொல்காப்பியர் கூற்று திறனாய்வுலகிற்கு ஏற்புடையது. "பல்துறை சார் நவீன ஆய்வுகள்" என்ற ஆய்வுத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள படைப்புகள், காலத்தின் தேவைக்கு ஏற்ப பரிணமித்தது போன்ற ஆய்வுத் தடங்களுடன் பலவாக விரிவடைந்துள்ளன. சமூக அறிவியல், இயற்பியல், உயிரியல், தகவல் தொழில்நுட்பம், மேலாண்மை, சுற்றுச்சூழல், வணிகவியல் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் இடம் பெற்றுள்ள நவீன ஆய்வுகளை ஒருங்கிணைத்து ஆய்வாளர்களுக்குப் புதிய பார்வையையும், பரந்த சிந்தனையையும் அளிப்பதாக இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் அமைகிறது.

‘ஆய்வாளர்களின் அறிவை ஒரு துறையில் மட்டுப்படுத்தாமல், பலதுறைகளிலும் செயல்படுவதன் வழி தான் உண்மையான முன்னேற்றம் ஏற்படும்’ என்ற கருத்தை இந்த ஆய்வுத் தொகுப்பு நூல் முன்னிறுத்துகிறது. பல்துறை சார்ந்த ஆய்வுக்கட்டுரையாளர்களின் ஆழ்ந்த ஆராய்ச்சிதிறன், தெளிவான வெளிப்பாடு, மற்றும் புதுமையான அணுகுமுறை இந்நூலின் தனித்துவம்.

நவீன ஆராய்ச்சித் துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்கள், ஆய்வாளர்கள், மற்றும் கல்வியாளர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூலாக இந்நூல் அமைகிறது. மேலும் எதிர்கால ஆராய்ச்சிக்கான திசைகளை சுட்டிக்காட்டும் வழி காட்டி நூலாகவும் விளங்குகிறது.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கப் பணியினை எமக்கு வழங்கிய எம் கல்லூரி நிர்வாகத்தினருக்கும் கல்லூரி முதல்வர் டாக்டர்.இரா. சுதா பெரியதாய் அவர்களுக்கும் முத்தரசி கலை இலக்கிய பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழுக்கும் ஆய்வுக் கட்டுரைகளைச் சேகரிக்க உறுதுணையாகத் திகழ்ந்த முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறையின் பேராசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளோடு இந்நூலை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவகாசி,

08.10.2025

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**முனைவர். ப.மீனாட்சி**

**முனைவர்நா.கவிதா**

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்

மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

THE STANDARD FIREWORKS RAJARATNAM COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
(Affiliated to Madurai Kamaraj University, Re-accredited with 'A+' GRADE by NAAC,
College with Potential for Excellence by UGC and Mentor Institution under UGC PARAMARSH)
SIVAKASI - 626 123

Mrs. A.Aruna, B.Sc.,
*Secretary*

Dr.(Mrs.)R. Sudha Periathai, M.Sc.,M.Phil.,Ph.D.
*Principal*

10.10.2025



## வாழ்த்துரை

"தீபம் எரிகின்றது
ஜோதி தெரிகின்றது
காலம் மலர்கின்றது
கனவு பலிக்கின்றது"

காலம் ஒருநாள் மாறும் என்று நம்மை வாழ்வில் நம்பிக்கை கொள்ள வைத்த கவிஞர் கண்ணதாசனின் கவிதை வரிகள் இவை. உலகின் மூத்த மொழியாகவும், இலக்கிய வளமிக்க மொழியாகவும், நம் உயிர் மூச்சாகவும் திகழும் நம் தமிழ் அணங்கிற்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக "பல்துறைசார் நவீன ஆய்வுகள்" என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கில் நூற்றுக்கும் மேலான பூமாலைகள் கட்டுரைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

'கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்ற கட்டளைக்கு ஏற்ப நடைபெறும் இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் பல துறை சார்ந்த நவீன ஆய்வுகள் குறித்து எடுத்துரைக்கப்பட உள்ளன. உலகத்தின் எல்லா மூலைகளிலும் உள்ள அனைவரையும் இணைக்கும் பட்டு நூலாகத் திகழும் தமிழ் மொழியை இப்பன்னாட்டு கருத்தரங்கு மேலும் பலப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இந்நிகழ்வு சீருடனும் சிறப்புடனும் நடைபெற வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இக்கருத்தரங்கு நடைபெற அனுமதி அளித்து ஆதரவளித்த எம் கல்லூரி நிர்வாகத்தினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இப் பன்னாட்டுக் கருத்தரங்கினை நேர்த்தியாக ஒருங்கிணைத்த கருத்தரங்க ஆலோசகர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு குழுவினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளை உரித்தாக்குகின்றேன். இக்கருத்தரங்கில் பங்கு பெற்று சிறப்புரை ஆற்ற இருக்கும் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் கட்டுரை நல்கிய தமிழ் ஆர்வலர்கள், ஆசிரியப் பெருமக்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரா. சுதா பெரியதாய்

வாழ்த்துக்களுடன்
முதல்வர்
தி ஸ்டாண்டர்டு பயர்ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி



Phone : 04562 - 220389
Fax : 04562 - 226695
E-Mail : sfrc@sfrcollege.edu.in
Website : www.sfrcollege.edu.in

# இதழ் ஆசிரியர்குழு


| | |
|---|---|
| முனைவர் சு.தங்கமாரி,<br>முதன்மை ஆசிரியர்,<br>முத்தரசி ஆய்விதழ்,<br>மதுரை, தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : laks@muththarasi.org<br>கைப்பேசி: (+91)98941 02130 | **Dr.S.THANGAMARI,**<br>Editor-in-Chief,<br>Muththarasi journal,<br>Madurai, tamilnadu, india.<br>E-Mail: laks@muththarasi.org<br>Mobile : (+91)98941 02130  |
| *முனைவர் கா.ஸ்ரீதர்,*<br>*தலைவர் & உதவிப்பேராசிரியர்,*<br>*தமிழ்த்துறை(சுயநிதி),*<br>*வி.இ. நா. செந்திக்குமார நாடார் கல்லூரி,*<br>*விருதுநகர்,தமிழ்நாடு, இந்தியா.*<br>*மின்னஞ்சல் : sridhar@vhnsnc.edu.in*<br>*கைப்பேசி: (+91) 94434 49595* | **Dr K. SRIDHAR,**<br>Head & Asst. Professor of Tamil (SF),<br>V.H.N.Senthikumara Nadar college,<br>Virudhunagar, Tamil Nadu, India.<br>E-Mail: sridhar@vhnsnc.edu.in<br>Mobile : (+91) 94434 49595  |
| **ADVISORY EDITORIAL BOARD** | |
| *முனைவர் பாரதி சங்கர ராஜுலு,*<br>*விரிவுரையாளர், தமிழ் & தெலுங்கு,*<br>*கலிபோர்னியா பல்கலைக்கழகம்,*<br>*பெர்கிலி, அமெரிக்கா*<br>*மின்னஞ்சல் : bharathy57@gmail.com*<br>*கைப்பேசி : 650-430-2473* | **Dr.Bharathy Sankara Rajulu**<br>Lecturer – Tamil & Telugu<br>University of California, Berkeley. USA.<br>E.Mail : bharathy57@gmail.com<br>Mobile : 650-430-2473  |
| | |
| *முனைவர் சீதாலட்சுமி,*<br>*இணைப்பேராசிரியர், ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள் தேசியக் கல்விக்கழகம்,*<br>*நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,*<br>*1,நன்யாங் வாக், சிங்கப்பூர்.637616*<br>*மின்னஞ்சல் : seetha.lakshmi@nie.edu.sg*<br>*கைப்பேசி : +65 9451 0735* | **Dr.SEETHA LAKSHMI,**<br>Associate Professor,<br>Asian languages and cultures,<br>National institute of education,<br>Nanyang technological university, 1,<br>nanyang walk, Singapore.637616<br>E-Mail: seetha.lakshmi@nie.edu.sg  |
| | |
| *பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்,*<br>*தலைவர்,*<br>*தமிழ்த் துறை,*<br>*பேராதனைப் பல்கலைக்கழகம்,*<br>*இலங்கை.*<br>*கைப்பேசி : +94 77 305 3241*<br>*மின்னஞ்சல் : spirashanthan01@gmail.com* | **Prof. Sri.PIRASAANTHAN,**<br>HOD, Dept.of. Tamil,<br>University of Peradeniya<br>Peradeniya. 20400<br>Sri Lanka<br>Cell : +94 77 305 3241<br>E.Mail : spirashanthan01@gmail.com  |
| | |
| *முனைவர் பா.பொன்னி,*<br>*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,*<br>*முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,*<br>*தி ஸ்டாண்டர்ட் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),*<br>*சிவகாசி,தமிழ்நாடு, இந்தியா.*<br>*மின்னஞ்சல் : ponni-tam@ sfrcollege.edu.in*<br>*கைப்பேசி : (+91)9787800804* | **Dr.B.PONNI**<br>Associate professor and Head<br>PG and Research Department of Tamil<br>The Standard Fireworks Rajaratnam<br>College for women (Autonomous)<br>Sivakasi, Tamilnadu, India.<br>E.Mail : ponni-tam@sfrcollege.edu.in<br>Mobile : (+91)9787800804  |
| | |
| *முனைவர் ரா. ராஜராஜன்*<br>*உதவிப்பேராசிரியர்*<br>*தமிழாய்வுத்துறை*<br>*பிஷப் ஹீபர் கல்லூரி*<br>*திருச்சிராப்பள்ளி – 620 017 தமிழ்நாடு, இந்தியா.*<br>*மின்னஞ்சல் – thanivairams@gmail.com*<br>*கைப்பேசி : (+91) 94427 40363* | **Dr. R. RAJARAJAN**<br>Assistant Professor in Tamil<br>Bishop Heber College<br>Tiruchirappalli – 620 017, Tamilnadu, India.<br>E.mail : thanivairams@gmail.com<br>Mobile : (+91) 94427 40363  |
| *முனைவர் மு.செந்தில்குமார்,*<br>*உதவிப்பேராசிரியர்,*<br>*செந்தமிழ்க் கல்லூரி,*<br>*மதுரை-625001, தமிழ்நாடு,இந்தியா.*<br>*மின்னஞ்சல் : mpputhiyavan@gmail.com*<br>*கைப்பேசி: +91 99420 80277* | **Dr.M.SENTHILKUMAR,**<br>Asst. Professor,<br>Senthamil College,<br>Madurai- 625001, Tamilnadu, India.<br>*மின்னஞ்சல்* : mpputhiyavan@gmail.com<br>*கைபேசி: +91 99420 80277*  |

| | |
|---|---|
| சந்திரகௌரி சிவபாலன்(கௌசி),<br>வயோதிபர் பராமரிப்பு<br>ஃபெல்ட்ர்ஸ்ர் – 56,<br>சொலிங்கன்,, ஜெர்மனி.<br>மின்னஞ்சல்: c.gowry@yahoo.de<br>கைப்பேசி : +49 1520 9419269 | **CHANDRA KOWRI SIVABALAN(KOWSI),**<br>Alttags Betreuung<br>Felderstr – 56<br>Solingen Germany<br>E.Mail : c.gowry@yahoo.de<br>Mobile : +49 1520 9419269  |
| **REVIEW MEMBERS** | |
| முனைவர் செ.ஞானேஸ்வரன்<br>உதவிப் பேராசிரியர்<br>முதுகலைத்தமிழ்த்துறை<br>அரசுக் கல்லூரி<br>மூணாறு – 685612 கேரளா மாநிலம், இந்தியா.<br>மின்னஞ்சல் : gnaneswaran11@gmail.com<br>கைப்பேசி:9943814293 | **Dr.GNANESWARAN.S**<br>Assistant Professor PG Department of Tamil<br>Government College<br>Munnar-685612<br>Kerala State, India.<br>E.mail : gnaneswaran11@gmail.com<br>Mobile-9943814293  |
| | |
| முனைவர் ஜ. ஜான்சிராணி,<br>ஆய்வு வளமையர்,<br>உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை,<br>மருத்துவர் தங்கராசு சாலை,<br>சட்டக் கல்லூரி அருகில்,<br>மதுரை – 625020 தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : jansiraniwts1981@gmail.com<br>கைப்பேசி: +91 81100 16911 | **Dr. J. JANSIRANI,**<br>Resource Person,<br>World Tamil Sangam Madurai,<br>Dr. Thangaraj Road,<br>Near by Law College,<br>Madurai – 625020, Tamilnadu, India<br>E.Mail : jansiraniwts1981@gmail.com<br>Mobile : +91 81100 16911  |
| **CONSULTANT** | |
| திருமதி ஆ.இலட்சுமி,<br>இதழ் ஆலோசகர்,<br>முத்தரசி ஆய்விதழ்,<br>மதுரை, தமிழ்நாடு, இந்தியா.<br>மின்னஞ்சல் : gandhilakshmi361@gmail.com<br>கைப்பேசி: (+91)9789186545 | **Mrs. A.LAKSHMI,**<br>Consultant,<br>Muththarasi Journal,<br>Madurai, Tamilnadu, India.<br>E-mail: gandhilakshmi361@gmail.com<br>Mobile : (+91)9789186545  |

# பொருளடக்கம்


| கட்டுரை எண் | தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 1. | சங்க இலக்கியத்தில் காவிரி ஆறு<br>ச. மணிகண்டன், முனைவர் ந. அருள்மொழி | 1 |
| 2. | எட்டுத்தொகையில் மீஇயல்பாற்றல்கள்<br>முனைவா் மா. முத்துச்செல்வி | 7 |
| 3. | பட்டினப்பாலையில் வணிகச் செய்திகள்<br>திருமதி அ.ஏஞ்சல் ராணி | 16 |
| 4. | நற்றிணையில் புலப்பாட்டு உத்திகள்<br>முனைவர் பெ.ஆனந்தி | 21 |
| 5. | மானிடவியல் பார்வையில் பொன்னீலனின் புதிய மொட்டுகள்<br>திருமதி சு.வினோதா | 29 |
| 6. | சமூகவியல் கோட்பாடு நோக்கில் திருக்குறள்<br>பா.பாண்டிச்செல்வி | 34 |
| 7. | நற்றிணைப் பாடல்களில் ஐந்தறிவுச் சொற்புலம் (ஆநிரை)<br>ரா.அஜித்குமார், முனைவர் க.அன்பழகன் | 38 |
| 8. | தொல்காப்பியத்தில் பெண்கட்டமைப்பு<br>திருமதி இர.கிருஷ்ணவேணி | 42 |
| 9. | கலித்தொகை காட்டும் நம்பிக்கைகள்<br>திருமதி மா.முத்து காயத்ரி | 47 |
| 10. | ஆற்றுப்படை இலக்கியத்துள் பல சொல் ஒரு பொருள் தருகின்ற குறிப்பு உரிச்சொற்கள் (மிகுதி & அச்சம் - பொருள் தரும் உரிச்சொற்கள்)<br>திருமதி மு.பூங்கோதை | 52 |
| 11. | சக்கை நாவல் உணர்த்தும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல்<br>திருமதி பெ.சிவசக்தி, முனைவர் வி.கலாவதி | 59 |
| 12. | சமூகப் பார்வையில் அரவாணியம்<br>திருமதி மா. மாரீஸ்வரி | 63 |
| 13. | சிற்றிலக்கியக் காலச் சமுதாய மாற்றம்<br>முனைவர் திருமதி நா.கவிதா | 67 |
| 14. | இடைக்காடர் பாடல்களில் சிவதத்துவங்கள் - ஓர் ஆய்வு<br>செ.வித்யா | 72 |
| 15. | நாட்டுப்புறவியல் குறிப்பிடும் மக்களின் வாழ்வியல்<br>பி. சந்தனமாரி | 77 |

| கட்டுரை எண் | தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 16. | தனுஷ்கோடி ராமசாமியின் தோழர் புதினமும் சமூகச் சிந்தனையும்<br>பேரா. க.மாரிசெல்வம் | 80 |
| 17. | சங்க இலக்கியத்தில் திருமணம்<br>முனைவர் அ.தனலட்சுமி | 87 |
| 18. | நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாடு<br>முனைவர் ச. திவ்யபாரதி | 92 |
| 19. | மணிமேகலை : குரலற்றவர்களின் குரல்<br>முனைவர் சோ.ஹரிபாண்டிராஜன் | 99 |
| 20. | அகநானூற்றுக் கவிதையியலில் இறைமை<br>முனைவர் ப.கலைவாணி | 104 |
| 21. | பழந்தமிழரும் சைவமும்<br>முனைவர் ஜெ.குணசீலி | 108 |
| 22. | சித்தர்களும் சமூகக் குரல்களும்<br>முனைவர் மு.ஜீனதாஸ் | 113 |
| 23. | பதினெண்கீழ்க்கணக்கில் மழைசார் பதிவுகள்<br>முனைவர் ச.மீனாட்சி | 118 |
| 24. | சங்ககால ஔவையின் படைப்பாக்க ஆளுமை<br>முனைவர் சி.க.கோவிந்தராஜ் | 126 |
| 25. | பழந்தமிழிலக்கியங்களில் வேளாண்மை<br>முனைவர் ப.மீனாட்சி | 130 |
| 26. | கோபல்ல கிராமம் புதினத்தில் பெண்களும் மாற்றங்களும்<br>முனைவர் இரா.டயாணா | 137 |
| 27. | மதுரைக்காஞ்சியில் வணிகம்<br>முனைவர் ஜெ. அமுதா | 141 |
| 28. | பழந்தமிழரின் நீர் அறிவியல் (Water Science)<br>முனைவர் மா.பத்ம பிரியா | 146 |
| 29. | இருளர் பழங்குடிகளின் வாழ்வியலும் சமூகவியலும்<br>முனைவர் ச.தனலெட்சுமி | 156 |
| 30. | முடியரசன் கவிதைகளில் மொழி ஆளுமை<br>திருமதி ஏ.பாரதி பிரபா, முனைவர் பா.பொன்னி | 160 |
| 31. | கல்வி மற்றும் மின்கற்றலில் Photoshop<br>திரு.கி.சரவணன் | 164 |

| கட்டுரை எண் | தலைப்பு மற்றும் ஆசிரியர் பெயர் | பக்க எண் |
|---|---|---|
| 32. | கவிஞர் மீராவின் கவிதைகளில் சமூகச் சாடல்<br>பேரா. அ.பார்த்திபன் | 167 |
| 33. | திருக்குறளில் அலர்அறிவுறுத்தல்<br>திருமதி சி.கீர்த்தனா, முனைவர் ச.தனலெட்சுமி | 172 |
| 34. | விருதுநகர் மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்<br>திருமதி க.பொற்கொடி, முனைவர் மா.பத்மபிரியா | 177 |
| 35. | பாரதியார் கவிதைகளில் குழந்தைகளுக்கான நன்னெறிச் சிந்தனைகள்<br>திருமதி மா.குருவம்மாள், முனைவர் மா.பத்மபிரியா | 182 |

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 1. சங்க இலக்கியத்தில் காவிரி ஆறு

**ச. மணிகண்டன்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலைத் தமிழ்த்துறை,
தமிழாய்வு மையம்,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி), சிவகாசி.

**முனைவர் ந. அருள்மொழி**
இணைப்பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்
முதுகலைத் தமிழ்த்துறை, தமிழாய்வு மையம்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி), சிவகாசி.

*DOI 10.5281/zenodo.17251533.*

**Abstract:**

More than fifteen rivers have been mentioned in the Sangam poems. The rivers recorded in the Sangam poems are natural resources. These resources are renewable resources. Rivers fulfill the basic needs of the Sangam people and also serve as fields of ecological thought. Naturally occurring rivers are subject to change over time. In this way, the article studies the ancient boundaries of the Cauvery River. The objective of the research article is to introduce the Cauvery River as mentioned in the Sangam records and to study the records of its tributaries and tributaries through the authors.

**KeyWords:** Sangam Periods - Rivers - Ponni River - Ecology

சங்கப் பாக்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட ஆறுகள் பாடப்பெற்றுள்ளன. சங்கப் பாடல்களில் பதிவு பெற்றுள்ள ஆறுகள் இயற்கையின் வளங்கள். இவ்வளங்கள் புதுப்பிக்கத்தக்க வளங்கள். சங்க மாந்தர்களின் அடிப்படைத் தேவைகளை ஆறுகள் நிறைவு செய்வதோடு சூழலியல்சார் சிந்தனைக் களங்களாகவும் திகழ்கின்றன. இயற்கையாகத் தோன்றிய ஆறுகள் கால அடிப்படையில் மாறும் தன்மை மிக்கன. அவ்வகையில் காவிரி ஆற்றின் பண்டைய நில எல்லைகளைக் கட்டுரை ஆய்கின்றது. சங்கப் பதிவில் இடம்பெறும் காவிரி ஆற்றினை அறிமுகம் செய்வதாகவும் அதன் கிளையாறுகள், துணையாறுகள் குறித்த பதிவுகளை உரையாசிரியர்கள் வழி ஆய்ந்தறிவதும் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## காவிரி ஆறு

மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குடகு நாட்டுப் பகுதியில் காவிரி ஆறு தோன்றுகின்றது. இதனை, **"குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி" (மலை : 527)** என்ற பதிவு மூலம் அறியமுடிகின்றது. குடகு நாட்டு மக்கள் காவிரி தோன்றும் இடத்தில் முப்பது அடி சதுரமான குளம் ஒன்று அமைத்துள்ளனர். அக்குளத்தில் எப்போதும் இரண்டரை அடி ஆழமே நீர் நிறைந்து காணப்படும். இதற்குத் தலைக்காவிரி என்று பெயர். இங்கிருந்து செல்லும் காவிரி ஆறு பல கிளை ஆறுகளுடன் பாய்கின்றது. **"காவிரியாறு குடகுநாட்டில் தோன்றி மைசூர் நாடு, கொங்கு நாடு, சோழநாடு ஆகிய நாடுகளில் பாய்ந்து வளம் பெருக்குகிறது. காவிரியாறு சோழ நாட்டில் பல கிளையாறுகளை உண்டாக்கிக் கொண்டு அந்நாட்டை வளம்மிக்க நாடாகச் செய்துள்ளது. எங்கு நோக்கினும் ஆறுகள், வாய்க்கால்கள், நீர் நிலைகள் என்று கூறுமளவில் சோழநாடு இருத்தல் காவிரியாற்றுப் பாய்ச்சலினால்தான் (இராசமாணிக்கனார், 2016 : 39).** இக்கூற்றிலிருந்து காவிரி ஆற்றின் வளமையினை அறிய இயலுகின்றது.காவிரி ஆறு பாயும் தன்மை அடிப்படையில், காவிரிப் பலராடு பெருந்துறை (குறு. 258 :2 - 3), காவிரி மலர் நிறையன்ன நின் மார்பு (ஐங். 42 : 3 - 4), காவிரி மண்டிய சேய்விரி வனப்பு (பதிற்று. 73 : 8), பண்ணன் காவிரி (அகம். 177 : 16),


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பெருநீர்க் காவிரி (அகம். 226 : 10), நெடுநீர்க் காவிரி (அகம். 396 : 14), மிகுபெருங் காவிரி (புறம். 178 : 8), தண்புனற் காவிரி (புறம்.58 : 1), மாஅகாவிரி மணங்கூட்டும் (பட்டி : 116) எனச் சங்கப்பாக்கள் பதிவு செய்துள்ளன.இப்பதிவுகளைக் காவிரி ஆற்றின் நிலவியலாகக் கருதமுடிகின்றது. சங்கப்புலவர்தாமற் பல்கண்ணனார்சோழன் மாவளத்தானை, **"நின் ஆயுள், மிக்கு வரும் இன்னீர்க் காவிரி, எக்காட்ட மணலினும் பலவே" (புறம். 43 : 21 -23)** என வாழ்த்தியுள்ளார். சோழன் மாவளத்தானை வாழ்த்த காவிரி ஆற்றினையும் ஆற்றின் மணற்குன்றினையும் சங்கப் புலவர் நோக்கியமை புலப்படுகின்றது.இதன்வழி மன்னர்களைப் பாடியபுலவர்கள் அவர்களின் ஆட்சிப் பகுதியில் பாய்ந்த ஆற்றினைப் பாடியமை புலனாகின்றது.

பொன்னி என்று அழைக்கப்படும் காவிரி ஆறு கொங்கு மாவட்டங்களை வளப்படுத்திய பிறகு தெற்கே சோழநாட்டில் பாய்கின்றது. சோழநாட்டில் வாணன் சிறுகுடி, போஒர், கழா அர், உறந்தை, அம்பர் போன்ற ஊர்களை வளப்படுத்துகின்றது. சிறுகுடி காவிரியின் அருகில் உள்ளது. இவ்வூர் வாணன் என்பவனுக்கு உரியது. கடற்கரைச் சோலைகள் சூழ்ந்த வாணன் சிறுகுடி, நீர்வளம் நிறைந்து வயலில் வளைந்த கதிர்களைக் கொண்டு நெற்பயிர்கள் உள்ளன. இதனை,

**"பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை**
**வாணன் சிறுகுடி வணங்குகதிர் நெல்லின்"**

**(அகநானூறு . 269 : 21 - 22)**

என்று புலவர் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.நீர் மேலாண்மைச் செயல்பாடுகளுள் ஒன்று அணைக்கட்டுதல். ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டப்படுகின்றன. ஆற்று நீரோட்டத்தைத் தடுக்கவும் திசை திருப்பவும் தேக்கி வைக்கவும் பல்வகைப் பயன்பாட்டிற்கும் அணைக்கட்டுகள் பயன்படுத்தப் பெறுகின்றன. காவிரி ஆற்றின் நிலவியல் அமைப்பில் கல்லணை குறிப்பிடத்தக்கது. கரிகாலன் காவிரியில் கல்லணை கட்டினான் என்பதை,

**"நுரைத்தலைக் குறைப்புனல் வரைப்பகம் புகுதொறும்**
**புனலாடு மகளிர் கதுமெனக் குடைய"**

**(பொருநராற்றுப்படை:240-241)**

எனும் பதிவு விளக்குகின்றது. இங்கு வரைப்பகம் என்பதற்கு 'அணை' என்று உரைப்பதிவு பொருள் தருகின்றது. கல்லணை அமைவிடம் குறித்து, **"தஞ்சை நகருக்கு மேற்கே ஏறத்தாழ 26கி.மீ. தொலைவிலும், சீரங்கத்திலிருந்து 15கி.மீ. (9 மைல்) தொலைவிலும், திருச்சியிலிருந்து தனிச்சாலை வழியாக 16கி.மீ. (10 மைல்) தொலைவிலும் லால்குடியிலிருந்து 3கி.மீ. (2 மைல்) தொலைவிலுமம் காவிரியின் இடக்கரையில் கல்லணை கட்டப்பட்டிருக்கிறது" (சோமலெ, 1961:79-80)** எனும் பதிவு சுட்டி நிற்கின்றது. **"கரிகாலன் காவிரிக்குக் கரை இடுவித்தான் என்ற தெலுங்குச் சோழர் பட்டயம் ஒன்று கூறுகின்றது. முதலாம் இராசேந்திர சோழனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி.1017இல்) வெளியான திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் இச்செயலைக் குறிக்கின்றன. இங்ஙனம் கரிகாலன் காவிரிக்குக் கரை இடுவித்தமையால், சோழ நாடு வெள்ள அழிவிலிருந்து காக்கப்பட்டதுடன், வேண்டும்போது ஆற்றிலிருந்து வாய்க்கால் வழியே குளங்களுக்கும் ஏரிகளுக்கும் நீரைச் செலுத்திக் கொள்ளும் வழி ஏற்பட்டது; இம்முயற்சியில் சோழநாட்டு வளம் பெருகியது" (இராசமாணிக்கனார், 2025:224)** எனும் பதிவிலிருந்து கல்லணையின் பயன்பாட்டையும் கரிகாலன் காவிரியில் கல்லணை அமைத்தான்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்பதைத் தெலுங்குச் சோழர் பட்டயச் சான்று கூறுவதையும் அறிய முடிகின்றது.குடகு மலையில் பிறந்த காவிரி ஆறு கிழக்கு நோக்கிப் பாய்கின்றது. பல்வேறு இடங்களில் வளைந்தும் நெளிந்தும் விரிந்தும் பல கிளையாறுகளுடன் கடலில் கலக்கின்றது. காவிரி ஆறு கிழக்கு நோக்கிப் பாய்ந்து செல்லும் நிலவியல் சூழலை

**"சிறைபறைந் துரைஇச் செங்குணக் கொழுகும்**
**அந்தண் காவிரி"** **(அகநானூறு,** 76 : 11 -12)

**"செங்குணக் கொழுகும் கலுழி மலர்நிறைக்**
**காவிரி"** **(பதிற்றுப்பத்து,**50 : 5 - 6)

எனும் சங்கப் பாக்கள் அடையாளப்படுத்துகின்றன. செங்குணக்கு ஒழுகும் என்பதற்கு நேர்கிழக்கே ஓடும் ஆறு என உரைப்பதிவு பொருள் தருகின்றது. இப்பதிவிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி, கிழக்கே வங்கக் கடல் நோக்கிப் பாயும் காவிரி ஆற்றின் நிலவியல் அமைப்பினை ஆய்ந்தறிய முடிகின்றது.காவிரி ஆறு காவிரிப்பூம்பட்டினத்தில் வங்கக் கடலுடன் கலந்து விடுகின்றது. இதனை,

**"மாமலை யணைந்த கொண்மூப் போலவும்**
**தாய்முலை தழுவிய குழவி போலவும்**
**தேறுநீர்ப் புணரியோடு யாறுதலை மணக்கும்**
**மலி ஓதத்து ஒலிகூடல்"** **(பட்டினப்பாலை** 95 - 98)

என்ற பதிவு விளக்குகின்றது. மலையை அணைத்த மேகத்தைப் போலவும், தாயின் முலையைத் தழுவிய குழந்தையைப் போலவும் தெளிந்த கடல் நீருடன் காவிரி ஆறு மிகுந்த அலைகளின் ஒலியையுடைய புகார் நகரில் கலக்கின்றது என்பதை உணர முடிகின்றது.

**காவிரி ஆற்றின் கிளையாறு**

**அரிசில் ஆறு**

சோழ நாட்டை வளப்படுத்துவது காவிரி ஆறு. காவிரி ஆற்றின் கிளையாறு அரிசில் ஆறு. **"நிலவமைப்புக்கு ஏற்றவாறு ஒரு ஆற்றிலிருந்து தனியாக அல்லது கிளையாகப் பிரிந்து பயணிக்கும் ஆற்றை கிளையாறு** (Distributary) **என்பர்"** **(முகுந்தகுமார்,** 2024 : 99).இப்பதிவு கிளையாறு குறித்த புரிதலை ஏற்படுத்துகின்றது. **"காவிரியிலிருந்து பல ஆறுகள் பிரிகின்றன. அவை : வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, வடவாறு, அரிசிலாறு, வீரசோழனாறு, பாமணியாறு, திருமலை ராசனாறு" (சுந்தர சண்முகனார்,** 1988 : 23 - 24) எனும் பதிவு அரிசிலாறு கிளையாறு என்பதை அடையாளப்படுத்துகின்றது. அரிசிலாறு சோழநாட்டு அம்பர் (தஞ்சாவூர் மாவட்டம்) நகரத்தில் பாய்கின்றது. அம்பர் என்பது கிள்ளி வளவன் வெற்றி கொண்ட சங்க கால ஊர். அவ்வூரில் கிள்ளி வளவனின் யானைப் படைகளும் கிள்ளி வளவனின் புகழ் பரப்பும் அலங்கரிக்கப்பெற்ற உயர்ந்த கொடிகளும் காட்சியளித்தன. இவ்வூரைச் சூழ்ந்து அரிசில் ஆறு பாய்ந்துள்ளது. அரிசிலாற்றின் கரைகளில் இருந்த கருமணல் தலைவியின் கூந்தலுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதனை,

**"ஏந்துகோட்டு யானை இசைவெங் கிள்ளி**
**வம்புஅணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த**
**அரிசில் அம்தெள் அறல் அன்ன இவள்**
**விரிஒலி கூந்தல்………"** **(நற்றிணை** 141 : 9 - 12)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எனும் பதிவு விளக்குகின்றது.

**காவிரி ஆறும் அதன் துணையாறுகளும்**

துணையாறு என்பது நேரடியாகக் கடலில் கலக்காமல் வேறொரு முதன்மை ஆற்றுடன் கலந்து விடும். சங்க இலக்கியத்தில் காவிரி ஆற்றின் துணையாறுகளாகக் காஞ்சி ஆறும், ஆன்பொருநையும், வானியாறும் பாடப்பெற்றுள்ளன. “**தானாகத் தோன்றும் ஒரு ஆறு மற்றொரு ஆற்றுடன் கலந்தால் அதை துணையாறு** (Tributary) **என்பர்** (**க.முகுந்தகுமார்** 2024 : 98). இப்பதிவு துணையாறு குறித்த புரிதலை ஏற்படுத்துகின்றது.

**காஞ்சியாறு**

காவிரி ஆற்றின் துணையாறு காஞ்சியாறு. மேற்குத் தொடர்ச்சி மலையில் வெள்ளிமலை என்ற இடத்தில் தோன்றுகின்றது. காஞ்சியாறு நொய்யலாறு என்று அழைக்கப்படுகின்றது. கோவை, திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டங்கள் வழியாகப் பாய்கின்றது. “**காஞ்சியாறு, பேரூர்க் கருகிலோடும் யாறு. நம்பியாரூரர் மீகொங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமானே” என்று இவ் யாற்றைச் சிறப்பித்துள்ளார். இதனை இப்போது நொய்யலாறு என வழங்குகின்றனர்” (ஔவை துரைசாமி**, 2009 : 341) கொடுமுடி அருகில் காவிரியில் காஞ்சியாறு நொய்யலாறாய்க் கலந்து விடுகின்றது. சங்க காலத்தில் காஞ்சியாற்றங்கரையில் புனலாட்டு விழா (புதுப்புனல்), வேனில் விழா நடைபெற்றுள்ளது. சங்க மாந்தர்கள் நீராடவும் விளையாடவும் இன்பம் பயக்கும் களனாகவும் இவ் ஆறு இருந்துள்ளது.

> **நின்மலைப் பிறந்து நின்கடல் மண்டும்**
> **மலிபுன னிகழ்தருந் தீநீர் விழவிற்**
> **பொழில்வதி வேனிற் பேரெழில் வாழ்க்கை**
> **மேவரு சுற்றமொ டுண்டினிது நுகரும்**
> **தீம்புன லாய மாடும்**
> **காஞ்சிஅம் பெருந்துறை மணலினும் பலவே”**
>
> (**பதிற்றுப்பத்து** 48 : 13 -18)

இப்பதிவிலிருந்து காஞ்சியாற்றின் வளமையினை அறியமுடிகின்றது.

**ஆன்பொருநை ஆறு**

சங்க காலத்தில் ‘ஆன் பொருநை’ என்றழைக்கப்பட்ட ஆறு தற்காலத்தில் அமராவதி என்று பெயர் பெற்றுள்ளது. காவிரி ஆற்றின் துணையாறாகப் பாய்கின்றது. ஆன் பொருநை ஆறு சோழ நாட்டின் எல்லையை அடுத்துள்ள கொங்கு நாட்டுக் கருவூரில் பாய்கின்றது. “**இது வஞ்சிமாநகர்க்கு வெளிப்படை வஞ்சி நகர்க்கண்மையிலோடும் பொருநை ஆன்பொருநையெனப்படும். கரூவூர்க்கல்வெட்டும் அதனை வஞ்சி நகரென்றும், அமராவதியை ஆன்பொருந்த மென்றும் குறிக்கின்றன. “மண்ணாள் வேந்தே நின் வாணாட்கள் தண்ணின் பொருநை மணலினுஞ் சிறக்க” (சிலம்பு** 28 : 125 - 126)**என அடிகளும் உரைப்பது காண்க. எனவே சேரநாட்டு வஞ்சி தண்பொருநைக் கரையிலும் கொங்கு நாட்டுக் கருவூராகிய வஞ்சி ஆன்பொருநைக் கரையிலும் இருப்பனவென வேறுபடுத்தறிய வேண்டவனவாம்.” (ஔவை துரைசாமி**, 2009 : 553 - 554) எனும் பதிவு ஆன்பொருநை ஆறு குறித்த பதிவினை அடையாளப்படுத்துகின்றது.கொங்கு நாட்டுக் கருவூர் செல்வம் மிகுந்த நகரம். இந்நகரில் தெளிந்த நீரினையுடைய குளிர்ச்சி பொருந்திய ஆன்பொருநை ஆறு பாய்ந்தோடுகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்**
**தெண்ணீர் உணர்கரைக் கவைஇய**
**தண்ணான் பொருநை மணலினும் பலவே"**

**(அகநானூறு** 93 : 21 - 23)

எனும் பதிவு ஆன்பொருநை ஆற்றின் வளமையினை விளக்குகின்றது.

**வானியாறு**

சங்க காலத்தில் வானியாறு என்றழைக்கப்பட்ட ஆறு தற்காலத்தில் பவானி ஆறு என்று பெயர் பெற்றுள்ளது. காவிரி ஆற்றின் துணையாறாகப் பாய்கின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையின் நீலகிரி மலையில் தோற்றம் பெறுகின்றது. **"வானியாறு நீலகிரியில் தோன்றிச் சந்தனமரம் செறிந்த காட்டு வழியாக வருதலின், சாந்துவரு வானி யென்றார். அதன் நீர் மிக்க தட்பமுடைய தென்பது அது காவிரியொடு கலக்குமிடத்தே இக்காலத்தும் இனிது காணலாம் (ஔவை துரைசாமி,** 2009 : 579). வானி ஆற்று நீரில் சந்தன மரங்கள் மிதந்து வருவதாகச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது.

**"சாந்துவரு வானி நீரினும்**
**தீம்தண் சாயலள் மன்ற தானே"** **(பதிற்றுப்பத்து** 86 : 12 - 13)

என்ற அடிகள் வானியாறு குறித்த அடையாளப் பதிவைத் தெளிவுறுத்துகின்றது.

**நிறைவுரை**

நிலவியல் அடிப்படையில்காவிரி ஆறு பாய்வதை அறிய இயலுகின்றது.குடகு மலையில் தோன்றும் காவிரி ஆற்றின் தோற்றத்தையும் காவிரி ஆறு வங்கக் கடலுடன் கலப்பதையும் ஆய்ந்தறிய முடிகின்றது. காவிரி ஆற்றில் கட்டப்பட்டுள்ள கல்லணையின் அமைவிடத்தையும் சிறப்பினையும் கண்ணுற முடிகின்றது. சோழநாட்டின் வளமைக்கும் செழுமைக்கும் காவிரி ஆறு அடித்தளம் என்பதைக் கட்டுரை விளக்கி நிற்கின்றது. காவிரி ஆற்றின் கிளையாறாக அரிசிலாறும் துணையாறுகளாகக்காஞ்சியாறும் ஆன்பொருநை ஆறும் வானியாறும் பாடப்பெற்றுள்ளதை உரையாசிரியப் பதிவு மூலம் அறிய முடிகின்றது. அரிசிலாறு பாயும் (தஞ்சை) அம்பர் நகரின் சிறப்பினைத் தெளிய முடிகின்றது. காஞ்சியாற்றங்கரையில் புதுப்புனல் விழா, வேனில் விழாமுதலான விழாக்கள் நடைபெற்றுள்ளன.இன்பம் பயக்கும் களமாகக் காஞ்சி ஆற்றின் கரையைத் தேர்ந்துபயன்படுத்தியுள்ளனர். சங்ககால ஆன்பொருநை ஆற்றின் வளமையினையும் வானி ஆற்றின் சிறப்பினையும் அறிய முடிகின்றது. இத்தரவுகளின் வழி சங்கப் புலவர்கள் நிலவியல் அறிவினைப் பெற்றிருந்தனர் என்பது புலனாகின்றது.

**துணை நின்றவை**

1. அகநானூறு(களிற்றுயானைநிரை,மணிமிடைபவளம்,நித்திலக்கோவை), நாவலர் உரைகள், தமிழ்மண் பதிப்பகம், சென்னை, பதிப்பாண்டு - 2007.
2. ஆற்றங்கரை நாகரிகம் (தமிழ்நாடு), டாக்டர் மா.இராசமாணிக்கனார், ராமையா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2016.
3. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் உரை, டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், சென்னை, பதிப்பாண்டு - 2017.
4. ஐங்குறுநூறு மூலமும் உரையும், பொ.வே. சோமசுந்தரனார் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதிப்பாண்டு-2007.
5. தமிழ்க் காவிரி, முனைவர் சுந்தர சண்முகனார், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு - 1988.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

6. தஞ்சாவூர் மாவட்டம், சோமலெ, பாரி நிலையம், சென்னை, பதிப்பாண்டு-1965.
7. நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் உரை, டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், சென்னை, பதிப்பாண்டு - 2017.
8. பத்துப்பாட்டு பகுதி - 1,பகுதி - 2, பொ.வே.சோமசுந்தரனார் உரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, பதிப்பாண்டு - 2017.
9. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மா. இராசமாணிக்கனார், சாகித்திய அகாதெமி வெளியீடு, புதுதில்லி, மூன்றாம் பதிப்பு-2025.
10. பதிற்றுப்பத்து, ஔவை துரைசாமி உரை, இனியமுது பதிப்பகம், சென்னை, பதிப்பாண்டு - 2009.
11. புறநானூறு பகுதி - 1, ஔவை துரைசாமி உரை, இனியமுது பதிப்பகம், சென்னை, பதிப்பாண்டு - 2009.
12. பொன்னி, க.முகுந்தகுமார், சோழன் நூலகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு - 2024

# 2. எட்டுத்தொகையில் இயல்பாற்றல்கள்

**முனைவர் மா. முத்துச்செல்வி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
muthuselvi-tam@sfrcollege.edu.in

*DOI 10.5281/zenodo.17251671.*

**Abstract:**

Everything that is beyond human power is considered as elements of nature. The gods found in nature, beliefs related to gods, negative beliefs such as demons, ghosts, and so on are recorded in literature as elements of nature. Through this, it is possible to understand that exploring the thoughts of gods constitutes supernatural power.

**Keywords:** Sangam Literature - Ettuthogai - Metaphysical powers - Supernatural Power

மனித சக்திக்கு அப்பாற்பட்டவை யாவற்றையும் இயற்கை இகந்த கூறுகளாகக் கொள்வர். இயற்கையில் காணப்படும் தெய்வம், தெய்வம் தொடர்பான நம்பிக்கைகள், எதிர்மறை நம்பிக்கைகளான அணங்கு, பேய், சூர், போன்றவை இயற்கை இகந்த கூறுகளாக இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. இது குறித்து "இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் என்பது, இயற்கை உலகில் காணப்படாத தெய்வம், தெய்வீக நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகும். தெய்வங்களின் செய்கைகளும், தெய்வம் சார்பான நிகழ்ச்சிகளும், மக்கள் வாழ்வில் நேரில் காணப்படாமல் இயற்கை வாழ்விற்கு அப்பாற்பட்டு நின்ற தொடர்பு பற்றி அவை இயற்கை வாழ்வுக்கு அப்பாற்பட்டு நின்று தொடர்பு பெறுவது பற்றி அவை இயற்கை வாழ்விற்கு அப்பாற்பட்டவை எனக் கருதப்படுகின்றன"[1] என்று குறிப்பிடுவர். இதன் வழி தெய்வச் சிந்தனைகள் குறித்து ஆராய்வது மீஇயல்பாற்றலாக அமைவதை அறிய இயலுகிறது.

### இயற்கை வழிபாடு:

சங்க காலத்தில் மக்கள் இயற்கை சார்ந்த வாழ்வியலை மேற்கொண்டமையால் இயற்கையையே இறையாக வழிபட்டனர் எனலாம். இயற்கை வழிபாடும் மக்களின் அச்ச உணர்வின் அடிப்படையிலேயே தோன்றியது என்பர். "மனிதன் தனக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இறைவனை வழிபட ஆரம்பித்தான். வழிபடு என்ற வேர் சொல்லிருந்து பிறந்ததே வழிபாடு என்ற சொல்லாகும். வழிபடு என்ற சொல் வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை என்ற பொருளை தருகின்றது."[2] என்ற கூற்றிலிருந்து வழிபாடு குறித்த விளக்கத்தை அறியலாகின்றது. மேலும், "ஒவ்வொரு மனிதனும் ஆயிரக்கணக்கான நம்பிக்கைகளின் குவியலாகக் காணப்படுகின்றான். நன்மையைத் தேடும் மனதின் பற்றுக்கோடாக நம்பிக்கை துணைநிற்கிறது. கடலிலே அகப்பட்டுத் தவிக்கும் ஒருவனுக்குக் கையில் கிடைத்த சிறிய மரக்கட்டையும் தெப்பமாகத் தெரியும் அதுபோல் அலைக்கழிக்கப்படும் மனது நம்பிக்கைகளைப் பற்றிக் கொள்ளும்பொழுது புத்துணர்ச்சி பெறுகிறது"[3]என்பதன் வழி நம்பிக்கை மனித வாழ்வின் பற்றுக்கோடாக அமைந்துள்ளது எனலாம். "மனித இனத்தின் வழிபாட்டிற்கு உரியன எனத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள பல்வேறு பொருள்களும் அவனோடு நெருங்கிய உறவுடையனவாக இருந்தன. அப்படி அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட பொருள்கள் மரம், செடி, கொடி முதலானவை ஆகும்"[4] என்று சுட்டுவதிலிருந்து மனிதனின் இயற்கை வழிபட்ட வழிபாட்டு முறையினை அறிலாம். இயற்கையின் சீற்றத்தைக் கண்டு அச்சமுற்ற மனிதன் அவற்றை அமைதிபடுத்தும் விதமாக அவ்வியற்கையை வழிபட்டான் எனவும்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

கருத இடமுண்டு. பழந்தமிழ் மக்கள் இயற்கை வழிபாடாக ஞாயிறு, சந்திரன், கடல், நிலம், மலை, மரம் போன்றவற்றை வழிபட்டுள்ளனர்.

**ஞாயிறு**

ஞாயிற்றை வழிபடும் மரபானது இன்று வரை மக்களிடையே பின்பற்றப்பட்டு வருகின்றது.இன்றைய அறிவியல் உலகிலும் மக்கள் ஞாயிறு குறித்த செய்திகள் பலவற்றை அறிந்து அதன் நன்மை கருதி வழிபடுகின்றனர். ஆனால் சங்க இலக்கியத்தில் மக்கள் ஞாயிற்றை இறையாகவே வழிபட்டனர். உலக இயக்கத்திற்குக் காரணமாக அதனைக் கருதினர். மேலும் ஞாயிறானது பலரும் வணங்கும் வகையில் கடலுள் தோன்றியது என்றுரைப்பதை,

**"முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி**
**ஏமுற விளங்கிய சுடரினும்**
**வாய்மை சான்றநின் சொல்நயந் தோர்க்கே?" (நற்.பா-283:6-8)**

என்ற பாடலடிகளாலும்,

**"தயங்குதிரைப் பெருங்கடல், உலகுதொழத்தோன்றி"(அகம்.பா-263:1)**

என்ற பாடலடியின் வாயிலாகவும் அறியலாகின்றது. இவ்வாறு ஞாயிறானது அன்றைய மக்களின் வாழ்வில் சாதாரண ஆற்றலாகக் கருதப்படாமல் மீஇயல்பாற்றலாகக் கருதப்பட்டதனால் மக்கள் அதனை வழிபட்டனர் எனலாம்.

**பிறை**

சந்திர வழிபாடு இன்றளவும் மக்களிடையே பின்பற்றப்பட்டு வருகிறது. வளர்பிறையில் எந்தவொரு நல்நிகழ்வினையும் தொடங்குவதையும், அமாவாசை நாளில் முன்னோர் வழிபாடு மேற்கொள்வதையும் இன்றும் காண இயலுகிறது. சங்க காலத்திலும் இப்பிறை வழிபாடு மக்களிடையே காணப்பட்டுள்ளமையை,

**"தொழுது காண் பிறையின்ன தோன்றி யாம் நுமக்கு**
**அரியம் ஆகிய காலை "((குறு.பா.5:6-7)**

என்ற பாடலடிகளாலும்,

**"வளை உடைத்தனையது ஆகிப் பலர் தொழச்**
**சேவ் வாய்வானத்து ஐயெனத்தோன்றி**
**இன்னம் பிறந்தன்று பிறையே"(குறு.பா:307:1-3)**

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. சங்க காலத்தில் பிறையை மணமாகாத மகளிரும் சான்றோரும் தொழுதுள்ளனர். ஆகவே 'தொழுது காண் பிறை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கடல்**

இயற்கையில் கடல் என்பது தனித்ததொரு இடம்வகிக்கிறது எனலாம். ஏனெனில் அன்றிலிருந்து இன்று வரை கடலின் சீற்றத்தினைக் கண்டு அச்சமுறாதவர் எவரும் இலர். பண்டைத் தமிழர் கடலை, தெய்வமாக வழிபட்டனர் என்பதை கடலுக்குத் தலைவனாக வருணனைக் குறிப்பிடுவதில் இருந்து அறிய இயலுகின்றது. மேலும், நெய்தல் நில மக்கள் கடலைக் கடவுளாக வழிபட்டுள்ளனர். ஏனெனில் அந்நில மக்களின் வாழ்வாதாரமானது கடலைச் சார்ந்து அமைந்ததால் அவர்கள் கடலுக்கு முதன்மை அளித்து வழிபட்டுள்ளனர் எனலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நெய்தல் நில மகளிர் தழையாடை அணிந்து, முத்துக்களையும் சங்குகளையும் கொண்ட கடல் தெய்வமான வருணனை வழிபட்டதை,

**"அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து,**
**துழைஅணிப் பொலிந்த கோடுஏந்து அல்குல்**
**பழையர் மகளிர் பனித்துறைப் பரவப்**
**பகலோன் மறைந்த அந்தி ஆர்இடை"(அகம்.பா-201:5-8)**

எனும் அகநானூற்று பாடல் அடிகள் வழி அறியலாம்.

**மரம்**

மரத்தில் தெய்வம் உறைவதான நம்பிக்கை மக்களிடையே காலங்காலமாக நிலவுகிறது. சங்க கால மக்கள் இயற்கையுடன் ஒன்றிய வாழ்வினை மேற்கொண்டதால் அவர்கள் இயற்கையை நேசித்தனர்.அதன் விளைவாகவே மரங்களில் தெய்வம் உறைவதாக நம்பினர். நற்றிணைப் பாடல் ஒன்றில் ஊரின் வாயிலில் பலரும் நீருண்ணும் துறையிலே பெருங்கடவுள் தங்கியுறையும் பழைய மரம் இருப்பதாகக் குறிப்பிடுவதை,

**"நெடு வீழ் இட்ட கடவுள் ஆலத்து"(நற்.பா-343:4)**

என்ற பாடலடியின் வாயிலாக அறிய இயலுகின்றது. இதன்வழி மக்கள் ஆலமரத்தினைக் கடவுளாக வழிபட்டதை அறிய முடிகின்றது.

சங்ககால மக்கள் வேப்ப மரத்திலும் தெய்வம் உறைவதாக நம்பினர் .வேப்ப மர வழிபாடு மேற்கொள்ளப்பட்டதை,

**"தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்"(அகம்.பா-309:4)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியமுடிகிறது. இவ்வாறு மக்கள் மரங்களின் பயன் கருதியும், அவற்றைப் பாதுகாக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டும் அவற்றைக் கடவுளாக வழிபட்டனர் எனலாம்.

**அணங்கு**

அணங்கு என்பதனை வருத்தத்தைத் தரக் கூடிய தெய்வமாகவே இலக்கியங்கள் படைத்துக்காட்டுகின்றன. "அணங்கு என்ற புனிதசக்தி மனிதனைச் சரியான வழியில் செலுத்தி அவனை நிறைவுடையவனாக்கும் என்றும் அவன் வழி தவறினால் அச்சக்தி மனிதனது கட்டுப்பாட்டிற்கு உட்படாது அவனுக்கும் அவனைச் சார்ந்த உறவினர்களும் தீங்கினை விளைவிக்கும் என்றும் கூறினர். சான்றாகக் கற்புடைய மனைவி தன் கற்பினைக் காக்காவிட்டால் அணங்கு பேராற்றல் பெற்று அடங்காது அவளது கணவனுக்கோ அல்லது அவனைச் சார்ந்தோர்க்கோ அல்லது அவளது உறவினர்க்கோ பேரிழப்பை உண்டு பண்ணும்"[5]என்று அணங்கு குறித்து விளக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் அச்சம் குறித்த மெய்ப்பாட்டினைக் குறிப்பிடுகையில் அணங்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே" (தொல். மெய்:நூ-8)**

என்ற நூற்பாவில் அணங்கு குறித்து விளக்க முனையும் பேராசிரியர்,"அணங்குதற் தொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும் உருமிசைத் தொடக்கத்தனவும் எனப்படும் என்பார். மேலும் அணங்கு என்பது குறித்து உ.வே.சா அவர்கள் காமநெறியான் உயிர் கொள்ளுந்தெய்வமகள்"[6]என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றின் வாயிலாக அணங்கு என்பது மக்கள் அச்சத்தின் காரணமாக உருவாக்கப்பட்ட ஒரு கற்பனை சக்தி என்பதையும்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மேலும், தவறு செய்தோரை தண்டிக்கும் தெய்வமாக இலக்கியங்களில் குறிப்பிடப்படுவதனையும் அறிய முடிகின்றது.

மேற்குறிப்பிட்ட வருத்தும் தெய்வமாகிய அணங்கானது உறையும் இடமாக நீர்த்துறை மற்றும் மலை குறிப்பிடப்பட்டுள்ளது. அணங்கு நீர்த்துறையில் உறைவதான நம்பிக்கையை

**"துறை எவன் அணங்கும் யாம் உற்ற நோயே?"** **(ஐங்.பா-53:1)**

என்ற பாடலடியின் வாயிலாக அறியலாகின்றது.

**"யாரை யோநிற் றொழுதனம் வினவுவதும்**
**கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்**
**பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ**
**இருங்கழி மருங்கு நிலைபெற் றனையோ"** **(நற்.பா-155:4-7)**

என்ற பாடலடிகளின் வாயிலாக நீர்த்துறையில் அணங்கானது உறைவதாகக் கருதப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. மேலும் மலையிலும் அணங்குஉறைவதான நம்பிக்கையை,

**"அருவி யார்க்கு யணங்குடை நெடுங்கோட்டு**
**ஞாய்க ரினவெயி லுணீஇய வோங்குசினைப்**
**பீலி மஞ்ஞை பெடையோ டாடும்**
**குன்ற நாடன்........."** **(நற்.பா-288:1-4)**

என்றும்,

**"அணங்குடை நெடுவரை யுச்சியின் இழிதரும் உகன**
**கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்"** **(அகம்.பா-22:1-2)**

என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுவதன் வாயிலாக அறிய இயலுகின்றது.

இலக்கியங்களில் அணங்கானது பெண்மையுடன் மட்டுமே இணைத்துப் பேசப்படுகின்றது. பொதுவாக தீய சக்திகளாகக் கருதப்படும் அணங்கு, பேய், சூரரமகளிர், பூதம் போன்ற அனைத்தும் பெண்களாகவே வருணனை செய்யப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

**சூரர மகளிர்**

சூரர மகளிரை வருத்தும் தெய்வமாகவும், மலையில் வாழ்வதாகவும், அழகு மிக்கவர்களாகவும் இலக்கியங்கள் படைத்துக்காட்டியுள்ளன. சூர் என்றால் அச்சம், அச்சம் தரும் தெய்வமகளிராகவே இலக்கியங்கள் காட்டுகின்றன.இவர்களை சிறுதெய்வங்களாகவும் வழிபடும் மரபு இருந்துள்ளது. "சிறு தெய்வங்களை வழிபடும் வழக்கும் அக்காலத்தில் இருந்தது. மலையிலும் நீரிலும் மரங்களிலும் கடவுள் உறைவதாக மக்கள் நம்பினர்"[7]இச்சூரர மகளிர் வரையற மகளிர் என்றும் வழங்கப்பட்டுள்ளனர். மிகுதியும் இவர்களின் இருப்பிடமாக மலையே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

**"வரையரமகளிரின் நிரையுடன் குழீஇ"** **(ஐங்.பா-204.2)**

என்ற பாடலடியாலும்,

**"நேர்மலர் நிறைசுனை உறையுஞ்**
**சூர்மகள் மாதோ என்னுமென் னெஞ்சே"** **(அகம்.பா-198:4-17)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

என்ற பாடலடிகளின் வாயிலாகவும் அறியலாகின்றது. சூரர மகளிர் மலையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பினும் சுனையிலும் வீற்றிருந்ததாக அகநானூற்றுப்பாடல் தெரிவிக்கின்றது. மேலும், இச்சூரரமகளிர் இளம் பெண்களையே அணங்குவதாக அக்காலத்தில் கருதினமையை,

**"கானல் ஞாழற் கவின்பெறு தழையள்**
**வரையர மகளிரி னரியளெம்**
**நிறையரு நெஞ்சங் கொண்டொளித் தோளே"**(ஐங்.பா-191.3-5)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. இவ்வாறு இலக்கியங்களில் சூரரமகளிர் என்போர் அழகு நிறைந்தவராகவும் வருத்தும் தெய்வம் என்ற நிலையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**பேய்**

பேய் பற்றிய சிந்தனையும் மக்களிடையே அச்சத்தின் அடிப்படையிலேயே தோன்றியது எனலாம். நன்மை என்ற ஒன்றிருப்பின் தீமை என்ற ஒன்றும் இருப்பது இயல்பாகும். அதன் அடிப்படையில் தெய்வத்ஹ்திற்கு மறுதலையாக பேய் பற்றிய கருத்தினைக் கொண்டிருந்தனர் எனலாம். "இயற்கையின் ஆற்றலைத் தன் தேவைக்கேற்ப ஆளுகிற வலிமையை மனிதன் பெறவில்லை. இயற்கையின் இயக்கத்திற்குரிய காரணங்களை அவன் பெறவில்லை. இயற்கையின் இயக்கத்திற்குரிய காரணங்களை அவன் ஆய்தறியாத நிலையில் இயற்கையின் ஆற்றலில் பல அம்சங்களை அவன் கற்பனையில் மனித விகாரமாகவும் அமைந்த பேயுருவங்களாகப் படைத்து அவற்றை நம்பினான்"[8] மேலும், பேயின் தோற்றம் குறித்துக் குறிப்பிடுகையில் அழகற்றவையாகவும், மக்களை அச்சமுறுத்தும் தோற்றத்தில் இருப்பதாகவுமே இலக்கியங்ஹ்கள் குறிப்பிடுகின்றன. இத்தகைய பேயின் தோற்றம் உவமை வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை,

**"தூயர் நறியர் நின் பெண்டிர்**
**பேஎய் அனையம் யாம் சேய் பயந்தனமே"** (ஐங்.பா-70:4-5)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய இயலுகின்றது. தலைவி மகப்பேறு பெற்றமையால் அவளது மேனி முடை நாற்றம் வீசியது. அதனால், பரத்தமை மேற்கொண்ட தலைவனுக்கு தான் பேய் போன்று இன்னாத் தோற்றமுற்று விளங்குவதாகத் தலைவி கூறுகின்றாள். இதிலிருந்து பேயின் தோற்றம் குறித்து அறியலாகிறது.

மேலும், குறுந்தொகைத் தலைவி, தலைவனின் பிரிவால் உடல் மெலிவுற அதை அறியாத நற்றாய் வேலனை அழைத்து வெறியாட்டு மேற்கொள்வதை,

**"பேஎய்க் கொளீஇயள் இவள் எனப்படுதல்**
**நோதக் கன்றே........"**(குறு.பா-263:5-6)

என்ற பாடலடிகள் பதிவு செய்துள்ளன. அவ்வேலன் வெறியாட்டு மேற்கொள்ளும் தலைவிக்குப் பேய் அணங்கியதாகக் கூறி வெறியயர்தல் மேற்கொள்ளப்படுவதையும் இதன் வழி அறிய இயலுகின்றது.

குழந்தையை பேய் கொள்ளும் என்ற நம்பிக்கை சங்க மக்களிடம் இருந்தது என்பதை,

**"மாசு இல் கற்பின் மடவோள் குழவி**
**பேஎய் எம்மொடு வந்த"** (நற்.பா-15.7-8)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய இயலுகின்றது. மேலும், பேயானது கூளி என்ற பெயரிலும் அழைக்கப்பட்டிருக்கின்றது. இதனை,

**“கூளிச்சுற்றம் குழீஇயிருந் தாங்கு”(அகம்.பா-233:10)**

என்ற பாடலடியின் வாயிலாக அறிய இயலுகின்றது. தலைவன் வரும் பாலைநிலத்தில் சிறியதும், பெரியதுமான குன்றுகள் பல காணப்படுகின்றன. இக்காட்சியை விளக்க வந்த புலவர், உதியன் சேரல்,தென்புலத்தார் கடனாக உணவிட்ட போது அவற்றை உண்ண சிறியதும், பெரியதுமான கூளிக்கூட்டம் சுற்றிலும் இருந்த காட்சியை அக்குன்றுகளுக்கு உவமையாகப் பயன்படுத்தி இருப்பதன்வழி பேய் பற்றிய செய்தியை குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

மேலும், சங்ககால சமூகம் போர்ச்சமூகம் ஆதலால் பேய்கள் போர்க் களத்தில் இறந்த வீரர்களின் உடல்களை உண்பதான நம்பிக்கை அம்மக்களிடையே நிலவியதை,

**“குடர்கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்” (கலி.பா-101:26)**

என்றும்,

**“உருவெழு கூளியர் உண்டுமகிழ்ந் தாட” (பதி.பா-36:12)**

என்றும் குறிப்பிடப்பட்டதன் வழி அறிய இயலுகின்றது.

மரத்தில் காக்கும் தெய்வம் மட்டுமின்றி, அச்சத்தைத் தரக்கூடிய தெய்வமும் உறையும் என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்பட்டுள்ளது.இதனை,

**“மன்ற மராஅத்த பேம்முதிர் கடவுள்” (குறு.பா-87:1)**

என்ற குறுந்தொகைப் பாடலடியின் வாயிலாக அறிய இயலுகின்றது.

மேலும், பூதத்தை போர்க் களத்தில் காவல் காக்கும் காவல் தெய்வமாக இலக்கியங்கள் சித்திரிப்பதை,

**“பூதம் காப்ப பொலிகளம் தழீஇ”(புறம்.பா-369:17)**

என்ற பாடலடியின் வாயிலாக அறிய இயலுகின்றது. இவ்வாறு மரத்தில் பேய் உறைவதான நம்பிக்கை இன்றும் மக்களிடையே நிலவி வருகின்றது. பூதமானது பேய்களின் ஒரு வகை எனலாம். ஆனால், இவற்றை நன்மை செய்யும் விதமாகவே இலக்கியங்கள் படைத்துக்காட்டியுள்ளன.

**ஐயவி**

சங்க காலத்தில் மகவு ஈன்ற மகளிரை அணங்கும் பேய் வருத்தாமல் இருக்கும் பொருட்டு, வெண்சிறுகடுகு மற்றும் ஐயவியை அரைத்துப் பூசுவர் அல்லது நெருப்பிலிட்டு புகைப்பர். இதனைக் கடிப்பகை என்றும் பேய்ப்பகை என்றும் அழைப்பர். “பேய் தீண்டி வருத்தாவண்ணம் குழந்தைகளின் மயிர் முடியில் நெய்யணிந்து வெண்சிறு கடுகை அப்புதல் மரபு. வெண்சிறு கடுகிற்கு கடிப்பகையென்னும் பெயர் வந்தற்குக் காரணம் இதுவே”[9] இவற்றை பயன்படுத்துவதன் வாயிலாக தீயசக்திகள் அணுகாமல் இருக்கும் என்ற நம்பிக்கையை சங்ககால மக்கள் கொண்டிருந்ததை,

**“ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணி” (நற்.பா-40:7)**

என்ற பாடலடியின் வாயிலாகவும்,

**“நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்” (நற்.பா-370:3)**

என்ற பாடலடியின் வாயிலாகவும் அறியலாகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

புண்பட்ட வீரர்களைப் பேய் நெருங்காதவாறு ஐயவி புகைத்தை புறநானூறு எடுத்தியம்புவதை,

**"தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ"(புறம்.பா-281.1)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய இயலுகின்றது. இத்தகைய முறையானது இன்று வரை மக்களிடையே பின்பற்றப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

**ஊழ்**

ஊழ்வினை என்பது, 'இப்பிறவியில் நாம் செய்யும் நன்மை தீமைகளுக்கு ஏற்ப மறுபிறவியில் நமக்குண்டான பலன் வந்தடையும்' என்ற நம்பிக்கையைக் குறிக்கும். ஆனால் இதனை உண்மை என்பதை அறிந்தோர் இல்லை. இதன் அடிப்படையில் இதனை மீமெய்ம்மை கூறுகளாகக் குறிப்பிடலாம். ஊழ் என்பது பால் என்ற சொல்லால் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் வாழ்வின் உண்மைப்பொருளைச் சுட்டும் மூன்று கருத்துகளைக் குறிப்பிடுகின்றனர். அவற்றில் மூன்றாவதாகக் குறிப்பிடப்படுவது,"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதாகும்.இதன் பொருள் நாம் செய்யும் எச்செயலுக்கும் எதிர்வினை உண்டு என்பது போல அவரரவர் செய்யும் வினையின் பயனை அவரவர் அடைந்தே தீருவர் என்பதாகும்.

தலைவன் வராத நிலையில் தலைவி வருத்தமுறுகின்றாள். அப்பொழுது தோழியிடம் தான் தற்போது வருந்துவதற்குக் காரணம் முற்பிறவியில் செய்த பலனே என்று குறிப்பிடுவதை,

**"யாம்செய் தொல்வினைக் கெவன்பே துற்றனை**
**வருந்தல் வாழி தோழி......................" (நற்.பா-88:1-2)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியலாம். மேலும், சிறுவயதில் இருந்தே சண்டையிட்டுக் கொண்ட தலைவனும் தலைவியும் வளர்ந்த நிலையில் அவ்விருவரும் திருமணம் மேற்கொள்ளும் சூழல் ஏற்பட்டதற்கு ஊழே காரணமாக அமைந்தது என்று குறிப்பிடுவதை,குறுந்தொகை 229 ஆம் பாடல் வழி அறியமுடிகின்றது. வள்ளுவர் தனது குறளில் ஊழுக்கென்று தனி அதிகாரமே வகுத்ததன் வழி ஊழின் மீது மக்கள் கொண்டிருந்த அதீத நம்பிக்கையை அறியலாகின்றது. மேலும் நன்மை ஏற்படின் ஊழினை மக்கள் புகழார். தீமை ஏற்படின் முதலில் அதனையே பழிப்பர் என்பதும் நோக்கத்தக்கது .

**இம்மை மறுமை**

சங்க கால மக்கள் இறப்பிற்கு அப்பால் மறுமை உலகம் உண்டு என்னும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இத்தகைய பிறவி பற்றிய சிந்தனையும் ஊழை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது எனலாம். மனித வாழ்வானது உயிர்களிடத்தில் இரக்கமும், அன்பும் கொள்ளும் போது மறுபிறப்பு எய்தாமல் இப்பிறப்பிலே இன்ப நிலையை அடைய முயற்சி செய்யும். இத்தகைய எண்ணப் போக்குகள் சங்ககாலத்திலிருந்து மக்களிடத்தில் நிலவி வருகின்றன எனலாம்.

ஒருவன் தன்னுடைய வாழ்வில் மறுமைப்பயன் (மறுபிறப்பு) அடைய எண்ணினால் இப்பிறவியில் அறப்பயன் செய்து ஒழுகுதலே சிறந்தது. இப்பிறப்பில் நன்மை செய்து மறுபிறப்பில் இன்பம் பெற முயற்சிப்போனை அறவிலை வணிகன் என்றழைத்தனர். இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**“இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அற விலை வணிகன் ஆய் அலன் பிறரும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்கு பட்டன்று அவன்கைவண் மையே”** (புறம்.பா-134)

என்ற பாடல் சுட்டுகிறது. சங்கப் பாடல்களில் மறுபிறப்பு பற்றி சுட்டப்படுகின்ற இடங்களெல்லாம் அறத்தை மட்டும் வலியுறுத்தவில்லை. அவர்கள் அறத்தை மறுபிறவி நன்மையை எண்ணி வணிகமாய்ச் செய்யவில்லை. அறச் செயல்களைச் செய்வது தான் சான்றோர் கடைப்பிடித்த நெறி என்று உணர்ந்து அறச்செயல்களைச் செய்தனர்.

குறுந்தொகையில் நெய்தல்நில தலைமகன் தலைவியை விட்டுப் பிரிந்து பரத்தையர் மாட்டு போகும் தன்மையில் அவனைக் கண்டு தலைவி, மனம் வருந்தி, தலைவனே இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருவதாயினும் நீயே என் கணவன் ஆகுக. அப்பிறவியிலாவது யான் நின் மனம் ஒத்தவள் ஆவேன் என்று தன்னுடைய ஆற்றாமையை வெளிப்படுத்துகிறாள்.

**“இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகிய எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே”** (குறு.பா-49:4-6)

இப்பாடலடிகளில் மறுபிறப்புச் சிந்தனை மனிதனின் ஆழ்மனதோடு பொருந்தியே வெளிப்பட்டுள்ளது. அறப்பயனின் விளைவாக மறுபிறவியில் நற்பயனை அடைய முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவியதை இதன் வழி அறியமுடிகின்றது.

**தேவருலகம் - நரகம்:**

தேவர் உலகம், நரகம் என்ற நம்பிக்கை மக்களிடம் இன்றளவும் அதிகமாகக் காணப்படுகின்றது. நன்மை செய்தால் தேவர் உலகத்திற்குச் செல்வர். தீமை செய்தால் நகரத்திற்குச் செல்வர் என்ற ஆழ்ந்த நம்பிக்கை பழந்தமிழரிடம் இருந்ததை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண்பெற்று மாண்டுபோனாலும் அவர்கள் தேவர்கள் உலகத்திற்குச் செல்வர் என்றும் அதுதான் அவர்களுக்குப் புகழ் என்றும் மதிக்கப்பட்டது. வடமோதங்கிழார் இதனை,

“**கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்**
**நிரையொடு வந்த உரையான் ஆகி**
**உரிகளை அரவ மானத் தானே**
**அரிது செல் உலகில் சென்றனன் உடம்பே**
**கானச் சிற்றியாற்று அருங்கரைக் கால் உற்று"** (புறம்.பா-260:19-23)

என்ற பாடலடிகளில் குறிப்பிடுகின்றார்.

**நிறைவாக**

இயல்பாற்றல்களாக மனித வாழ்விற்கு அப்பாற்பட்ட தெய்வம், தெய்வம் தொடர்பான நிகழ்வுகள், இயற்கை வழிபாடான ஞாயிறு வழிபாடு, பிறை வழிபாடு, கடல் வழிபாடு, மரவழிபாடு ஆகியவை எட்டுத்தொகை இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனித வாழ்விற்கு அப்பாற்பட்ட அணங்கு, சூரர மகளிர், பேய், ஐயவி போன்றவை குறித்தும். ஊழ், மறுபிறவி, தேவருலகம், நரகம் குறித்த சிந்தனைகளும் சங்க கால மக்களின் மரபுசார்ந்த நம்பிக்கைகளாக இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளமையும்ஆராயப்பட்டுள்ளன.

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

**சான்றெண் விளக்கம்**

1. தமிழ்மொழியகராதி, ப.120
2. முனைவர்காந்தி, மு.நூ., ப.260
3. அ.ஜோஸ்பின்புனிதா, மானிடவியல்நோக்கில்அகத்திணைமரபுகள், ப.214
4. பாக்யமேரி, தமிழர்பண்பாடும்பயன்பாடும், ப.23
5. முனைவர்காந்தி, மு.நூ., ப..270
6. உ.வே.சா.(உ.ஆ), மணிமேகலைமூலமும்அரும்பதவுரையும்ப.78
7. முனைவர்க.காந்தி, மு.நூ., ப.310
8. சு.வித்தியாநந்தன், தமிழர்சால்பு, ப.150
9. உ.வே.சா.(உ.ஆ), மணிமேகலைமூலமும்அரும்பதவுரையும், ப.38.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 03. பட்டினப்பாலையில் வணிகச் செய்திகள்

**திருமதி அ.ஏஞ்சல் ராணி,**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை,
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,
9655212085 - angelrani21102009@gmail.com
*DOI 10.5281/zenodo.17251711.*

**Abstract**

Pattinapalli is one of the Pattupatta texts. In it, the commercial prosperity of the city of Kaveripumpattinam (Poompukar), the capital of the Chola kingdom, is described in detail. Maritime trade, the Yavanas (Romans, Greeks) came and traded. Inland trade, goods came from places like the Highlands, Pandyan, Vadanadu, etc. The prosperity of the market, gold, pearls, jewels, spices, cloth, etc. were sold. The development of trade created the prosperity of the people, the strength of the Chola state, and international relations. In conclusion, this study highlights that Patttinapalli is an important literary source that reveals the importance of trade in the life of ancient Tamils and their global trade relations.

**Keywords:** Pattinapalai, Business, Merchant, Cauverypoompattinam

## முன்னுரை

பண்டைய தமிழர்களின் வரலாற்றுக்குரிய அரிய சான்றுகள் பலவற்றைத் தாங்கி நிற்பதும், பண்டைத் தமிழர்களின் வாழ்வியலையும், வணிகநிலையையும் குறிப்பிடுகினற சங்க இலக்கியங்கள் ஒரு காலக்கண்ணாடி என்றே சொல்ல வேண்டும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான பத்துப் பாட்டுக்களில் ஒன்பதாவது விளங்குவது பட்டினப்பாலை.இது சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கதாநாயகனாக கொண்டு கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.

கரிகால் சோழன் பெருவளத்தான் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கும் , தமிழர்களுக்கும் உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும். புகழ்வாய்ந்த பட்டினப்பாலையில் காணலாகும் வணிகச் செய்திகளை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## வணிகம்:

வணிகம் குறித்து பல்வேறு அகராதிகளும் பல கருத்துகளைத் தருகின்றனர். தமிழ் மொழி அகராதி "செட்டு, வியாபாரம்"[1] என்று விளக்கம் தருகின்றது. அதே போல் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "வியாபாரம்" என்று பொருள் தருகிறது.[2]

மேலும் வணிகர் என்பவரை "செட்டி, துலாராசி, வியாபாரி" என்று தமிழ் மொழி அகராதியும்,[3] வியாபாரம் "செய்பவன், வியாபாரி"[4] என்றும் விளக்கம் தருகிறது.

## விற்பனை தொழில்

காவிரி பூம்பட்டினத்துக் கடற்கரையில் வெள்ளை உப்பை விளைவித்து விலை கூறி விற்றனர். பண்டமாற்று முறையில் நெல்லைப் பெற்றனர். இதனை,

> **வெள்ளை உப்பின் கொள்ளைச் சாற்றி**
> **நெல்லோடு வந்த வல்வாய்ப் பஃறி** (பட்டின.: 29 - 30)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எனும் பாடல் வரிகள் விற்பனைத் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் கள்ளுக்கடைகள் இருந்தன. கள்ளுக்குரிய விலைகள் கொடிகளில் எழுதப்பட்டிருந்தன என்பதனை,

**மணற்குவைஇ மலர் சிதறிப்**
**பலர் புகுமனைப் பலிப்பு தவின்** **(பட்டின.: 178 - 179)**

எனும் வரிகளில் விற்பனை குறித்த சான்றுகள் குறிப்பிடப்படுகின்றன காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் பூக்களை அறிய விலை கொடுத்து வாங்கினர். இதனை,

அருவிலை நறும்பூத் தூஉயத் தெருவில் (பட்டின.: 252)

எனும் வரியானது பூ விற்கும் தொழில் இருந்தது என குறிப்பிடுகின்றது.

**ஏற்றுமதி இறக்குமதி**

காவிரிப்பூம்பட்டினக் கடற்கரை பொருள்களை ஏற்றுவதும் இறக்குவதுமாக நாள் முழுவதும் நடந்து கொண்டே இருக்கும். அளந்து அறியாப் பல பண்டங்கள் குவிக்கப்பட்டிருந்ததையும், அவற்றை அருங்கடிப் பெருங்காப்பினர் காவல் செய்ததையும் பட்டினப்பாலை கவனமாகப் பதிவு செய்துள்ளது. வெளியேறும் பொருட்களுக்கும், சோழநாட்டுக்குள் வரும் பொருள்களுக்கும் சோழனின் புலிச்சின்னம் இலச்சனையாகப் பொறிக்கப்பட்டுள்ளதை நினைக்கும்பொழுது இன்றைய சுங்கத்துறை நடைமுறைகளுக்கு இருந்ததை பட்டினப்பாலையின் மூலம் அறியலாம்.

பொருள்கள் மிகுதியாகக் குவிக்கப்பட்டிருந்ததால் அப்பொருள்களின் குவியலில் மலைகளில் வாழும் வருடைமான்களைப் போல் ஆட்டுக் கிடாய்களும், ஏற்றை நாய்களும் ஏறிக்குதித்து விளையாடும். இவை செல்வப்பெருக்கத்திற்கு காட்டும் உவமையாகும். கார்காலத்தில் கடலின்நீரை முகந்துகொண்டுவந்து முகில்கள் மலையில் பொழிவதும், மலையின்கண் உருவான நீரை ஆறுகள் கடலில் கொண்டுவந்து பரப்பவும் ஒரே நேரத்தில் நிகழ்வதுபோல் பிற நாட்டிலிருந்து கொண்டுவந்து பொருளைக் கரையில் ஏற்றவும், நான்கு நிலங்களிலிருந்தும் கொண்டு வந்த பொருள்களைக் கலத்தில் கொண்டு சேர்க்கவுமான காட்சியைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் சிறப்பாகக் காட்டியுள்ளார். இதனை,

**மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**
**வரையாடு வருடைத் தோற்றம் போலக்**
**கூருகிர் ஞமலிக் கொடுந்தா ளேற்ற**
**ஏழகத் தகரோ டுகளு முன்றிற்** **(பட்டின.: 138 - 141)**

என்ற பாடலடிகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வணிகர்குடி**

புகாரில் வாழ்ந்த வணிகர்கள் தம் குடிக்குப் பழி வராதபடி நேர்மையான முறையிலும் நடுவுநிலையுடனும் வணிகம் செய்தனர். தாம் கொள்ளும் பொருள் மிகையாக இல்லாமலும், கொடுக்கும்பொருள் குறைவுபடாமலும் வழங்கியுள்ளனர். பல பண்டங்களையும் உண்மைவிலைகூறி, தாம் பெறக்கிடந்த ஊதியத்தை வெளிப்படையாகக் கூறி விற்பதும் வாங்குவதுமாக இருந்தனர் என்பதை அறியும்பொழுது பண்டைக்கால வணிகமுறை நமக்குப் புலனாகிறது. காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகம் சிறந்திருந்ததாலும், பலவகைத் தொழில்கள் நடைபெற்றதாலும், கடற்கரைப் பட்டினமாதலாலும் பலமொழி பேசிடும் பலநாட்டு மக்கள் இருந்துள்ளமையையும் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. புகாரில் இருந்த மக்கள் பிறநாட்டுடன் வாணிகத் தொடர்புகொண்டிருந்ததால்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

பிறநாடுகளுக்குச் சென்றனர். அதன் காரணமாகவும், பல்வேறு உலகியல் அறிவு நிரம்பியவர்களாக இருந்ததாலும் “வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்” என்று ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் விதந்தோதினார்.

அயல்நாட்டுத் தொடர்புடைய மாந்தர் பிறமொழி பேசுபவர்களாகவும் இருந்துள்ளனர். அயலகத்தார் வணிகம்பொருட்டுப் புகாரில் இருந்ததால் பன்மொழி பேசுவோர் கலந்த வணிக இடமாக இருந்துள்ளதைப் பட்டினப்பாலை வழியாக அறியமுடிகின்றது.

**பல் ஆயமொடு பதி பழகி,**
**வேறு வேறு உயர்ந்த முது வாய் ஒக்கல்**
**சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு,**
**மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்**
**புலம் பெயர் மாக்கள் கலந்து, இனிது, உறையும்,**
**முட்டாச் சிறப்பின், பட்டினம்** **(பட்டின.: 213-218)**

என்னும் பாடலடிகள் பழங்காலத்தில் பன்னாட்டு வணிகத்தளமாகப் புகார் விளங்கியதை விளக்கும் சான்றாவணமாக உள்ளன. இத்தகு புகழ்பெற்ற நகரையும் அதுகொண்ட நாட்டையும் வலிமை வாய்ந்த அரசன் திருமாவளவன் ஆட்சிசெய்துள்ளான்.

**வணிக செம்மல்கள்**

வணிகர்கள் தம் பொருள்களையும் பிறர் பொருட்களையும் ஒப்ப நினைத்தனர். தான் கொடுக்கும் பண்டத்தின் மதிப்பிற்கு மிகுதியாகப் பொருட்களைக் கொள்ள மாட்டார்கள். கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடுக்கவும் மாட்டார்கள். இலாபத்தை வெளிப்படையாக சொல்லி விற்பார்கள். இம்முறைகளை மேற்கொண்டமையால், பெரும் பொருள் ஈட்டினர் என்ற குறிப்பு இப்பாட்டில் உள்ளது. இதனால் அக்கால வணிகர்கள் நடுவுநிலை தவறாத நல்ல மனமும், பொய் கூறாதவர்களாய், அறநெறி வழுவாது வாழ்ந்தமையை விளக்குகின்றது.

இது வணிக உறவுக்கு உரமூட்டியது. சோழ மண்ணில் நிலவிய சூழ்ச்சியும் சுரண்டலும் அற்ற, பதுக்கலும் பாழ்நெறியும் அற்ற, கரவும் கலப்படமும் அற்ற நேர்மையான வாணிகம் தான் காரணமாக இருந்தது. அங்கிருந்த வணிகர்கள்,

**வாணிக செய்வோர்க்கும் வாணிகம் பேணிப்**
**பிறவும் தம போல் செயின்** **(குறள்: 120)**

என்னும் வள்ளுவரின் நெறிக்கு ஏற்ப, தமமும் பிறவும் ஒப்ப நாடி வாணிகம் செய்தவர்கள்.

**கொள்வதும் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொள்ளாது**
**பல்பண்டம் பகிர்ந்து வீசும்**
**தொல்கொண்டித் துவண்டிருக்கை** **(பட்டின.: 210- 212)**

என வாழும் வணிகச் செம்மல்கள் பணவரவை விட செம்மையான வாழ்வை பெரிதாகக் கருதியவர்கள். இவ்வியல்புகள் பண்டைத் தமிழ் மக்களின் தலைசிறந்த பண்பினை காட்டுவதாகும்.

**பண்டமாற்று முறை**

**பண்டமாற்று முறை தமிழகத்தில் இருந்ததை,**
**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லோடு வந்த வல்வாய் பஃறி** (பட்டின.: 29-30)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற வரிகள் உப்புக்கு பதிலாக நெல்லைப் பெற்றனர் என்பது விளக்குகிறது.

**தமவும் பிறவும் ஒப்பநாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம்**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல் கொண்டி, துவன்று இருக்கை** (பட்டின.:209 - 212)

தான் கொள்ளும் பொருள்களைத் தான் கொடுக்கும் பொருளௌகளுக்கு மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும் வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்பதில்லை.

வணிகருக்கு உரிய விரதம் என, கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பல் பண்டம் பகர்ந்து ஈதல் என நச்சினார்கினியர் குறிப்பிடுகிறார். (தொல்., அகத்திணையியல் 28) தங்களுடைய வரவுக்குரிய லாபத்தை வெளிப்படையாக கூறி வணிகம் செய்வர். இந்நெறியில் அவர்கள் நின்றமையால் வணிகத்தில் சிறந்து செல்வத்தால் மிகுந்து விளங்கினர். வணிகர்களின் வாழ்வு எங்ஙனம் ஏனையோர் வாழ்விற்கு ஆதாரமாய் விளங்குவது என்பதையும் இதன் மூலம் அக்கால தமிழரின் வணிக அறம் சிறப்பு பெற்று விளங்கியதை அறிய முடிகிறது. கடியலூர் உருத்திரங் கண்ணனார், கெடாத நல்ல புகழையுடைய தெய்வங்கள் துணைபுரிந்து பாதுகாப்பதால், வணிக வீதிகளின் செல்வம் அளவிடற்கரியதாயிற்று. மரக்கலங்களில் ஏற்றபட்டுக் கடல் வழியாகக் காற்றின் துணையினால், நிமிர்ந்து செல்லும் கதியையுடைய, குதிரைகள் கொண்டுவரப்பட்டன. கரிய மிளகுப் பொதிகளும், வடமலையாகிய மேரு மலையில் தோன்றிய மாணிக்க மணிகளும், சாம்புநதம் என்னும் பொன்னும், பொதிய மலையில் தோன்றிய சந்தனமும், அகில்கட்டைகளும் கீழ்த் திசைக் கடலில் விளையும் பவளங்களும், கங்கையாற்றைச் சார்ந்த பகுதிகளில் உற்பத்தியாகும் பொருள்களும், காவிரிக்கரைப் பகுதியில் விளையும் பொருள்களும், ஈழ நாட்டின் உணவுப் பொருள்களும், கடார நாட்டில் உண்டாகும் நுகர் பொருள்களும், சீனம் முதலிய பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கருப்பூரம், பன்னீர், குங்குமம் போன்ற பொருள்களும், இவை தவிர பெரிய பல பொருள்களும் நிலத்தின் முதுகு நெளியும்படி, நீர் வழியாகவும், நிலத்தின் வழியாகவும் புகார் நகரத்தில் விற்பனை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டன. (பட்டினப்.184 - 193) அப்பொருள்கள், புகாரின் கடற்பரப்பிலும் கரையிடத்தும் அழிவில்லாமல் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

**வணிகர்களின் அறம்**

1. உழவரின் ஏரில் இரண்டு மாடுகள் பூட்டிய நுகத்தின் நடுவில் இருக்கும் பகலாணி போல நடுவுநிலை கொண்ட நன்னெஞ்சோடு வணிகர்கள் வாணிகம் செய்தனர்.
2. தமக்குப் பழி வந்துவிடுமோ என்னும் அச்சத்தோடு சொன்னசொல் மாறாமல் வாய்மையையே பேசினர்.
3. தாம் கொடுக்கும் பொருளையும், தாம் பிறரிடமிருந்து விலையாக வாங்கும் பொருளையும் ஒத்த நிறையுடையதாகக் கருதினர்.
4. மதிப்புக்கு அதிகமாக வாங்குவதோ, குறையாகக் கொடுப்பதோ அவர்களின் வாழ்க்கையில் இல்லை.

**தொகுப்புரை**

பட்டினப்பாலை எனும் சங்க இலக்கியப் படைப்பில் இடம் பெற்றுள்ள வணிகச் செய்திகள் அக்காலத்தின் பொருளாதார வாழ்க்கையை ஆழமாக வெளிப்படுத்துகின்றன. நகரங்கள் வளர்ச்சியடைந்து, துறைமுகங்கள் செழித்து, கடல் மற்றும் நிலவழி வணிகம்

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

பரவலாக இருந்ததை இவை உணர்த்துகின்றன. அந்நேர மக்களின் வாழ்வாதாரத்திற்கும் சமூக நிலையிற்கும் வணிகம் முதன்மை ஆதாரமாக இருந்ததோடு, வெளிநாடுகளுடனான தொடர்பு மூலம் தமிழ் நாட்டின் பண்பாடு, செல்வாக்கு மற்றும் செழிப்பு உலகளவில் விரிந்தது. வணிகர்களின் உழைப்பு, பொருட்களின் பரிமாற்ற முறை, சந்தைகள், கடல் வழிகள், துறைமுக நகரங்கள் ஆகியவை பட்டினப்பாளையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சங்ககால தமிழர் வாழ்க்கையில் வணிகம் எவ்வளவு முக்கிய பங்கு வகித்தது என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதன் அடிப்படையில், பட்டினப்பாளையில் காணப்படும் வணிகச் செய்திகள் நம் முன்னோர் சமூகத்தின் பொருளாதார முன்னேற்றத்தையும், அக்காலத் தமிழ் நாட்டின் வளமும் செழிப்பும் எவ்வாறு உலகளவில் புகழடைந்தன என்பதையும் சான்றாகக் காட்டப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப. 1246
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ் - ஆங்கிலம் - தமிழ்) ப. 897
3. நா.கதிரைவேற்பிள்ளை, மேலது.
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மேலது.

**துணைநூற் பட்டியல்**

1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை - 600 014, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2003.
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (தமிழ் - ஆங்கிலம் - தமிழ்), பதினொன்றாம் பதிப்பு, மார்ச் - 2006
3. திருக்குறள் எளிய உரை, நாமக்கல் கவிஞர் (உ.ஆ), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 600 014.
4. தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல், மதுரை காமராசர் பல்கலைகழகம், மதுரை, 1994


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 04. நற்றிணையில் புலப்பாட்டு உத்திகள்

**முனைவர் பெ.ஆனந்தி**
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
ananthi-tam@sfrcollege.edu.in - 9659664915
DOI 10.5281/zenodo.17251962.

**Abstract:**

Sangam literatures are a testament to the antiquity and glory of Tamil literature. It is essential for a poet who wants to express an idea to understand the mental feelings of the audience. Techniques are the techniques used by the poet to convey his ideas in a way that stimulates the taste of the audience. This article is organized to explain the role of techniques in the development of meaning in the poem.

**Keywords:** Sangam Literature - Techniques - Ideas - Meanig Of Poem

சங்க இலக்கியங்கள் தமிழர்தம் பழமையையும் பெருமையையும் பறை சாற்றி நிற்பவை. கருத்தினை வெளிப்படுத்த விரும்பும் புலவன் கேட்போரின் மன உணர்வினைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். கேட்போரின் ரசனையைத் தூண்டும் வகையில் புலவன் தன் கருத்துகளை எடுத்துரைக்க கையாளுவதே உத்திகளாகும். நற்றிணையில் பொருட்புலப்பாட்டில் உத்திகளின் பங்கு குறித்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்படுகின்றது.

**சங்க இலக்கிய உத்திகள்:**

தமிழரின் தொன்மையான இலக்கியங்களில் ஒன்றான சங்க இலக்கியத்தில் புலவர்கள் பல்வேறு உத்திகளைப் பின்பற்றியுள்ளனர். சங்க இலக்கியங்களில் கையாளப்பெறும் உத்திகளைக் குறிப்பிடும் பொழுது "குறிப்பு, உள்ளுறை, இறைச்சி என்பன போன்ற பொருண்மை நுட்பங்கள் கருத்துப் புலப்பாட்டு நெறியில் ஆற்றல் வாய்ந்த வெளிப்பாடுகள். மொழியாளுமையும் திணையறிவும் இவ்வகை உத்திகளைக் கையாளத் தூண்டுகின்றன"[1] என்றும் "உள்ளுறை, இறைச்சி என உட்பொருள் பொதிந்த இலக்கிய உத்திகளால் நாடகப் பண்பமைந்த பாத்திரக் கூற்றாக அகப்பாடல்களை அமைத்தனர் சங்கப்புலவர்"[2] என்றும் சொல்லப்படுகின்றது. எனவே சங்க இலக்கியங்கள் யாவற்றிலும் புலவர்கள் தங்களின் தனித்திறனை மெய்ப்பிக்க பொருளைப் புலப்படுத்தும் முறைகளில் பலவகை உத்தி முறைகளைக் கையாண்டமை புலனாகிறது.

டி.எஸ்.எலியட் என்னும் மேலைநாட்டறிஞர் கவிஞர்களை மூன்று வகைகளாகப் பிரித்துப் பார்ப்பது இந்த இடத்தில் நினைக்கத்தக்கது. "உத்திகளை வளர்த்து விரிவாக்குவோர் ஒரு வகையினர். மற்றவர்களின் உத்திகளை பார்த்து அப்படியே நகல் எடுப்போர் மற்றொரு வகையினர். புதிய உத்திகளைத் தாமே புனைந்து உருவாக்குவோர் பிறிதொரு வகையினர்"[3] எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த மூன்று வகையிலான கவிஞர்களும் சங்க கால இலக்கியப் புலவர்களில் காணப்படுகின்றனர். எனவே புலவர்தம் உத்தி முறைகளாலேயே இன்றளவும் இவ்விலக்கியங்கள் புகழ் பெற்று வருகின்றன என்பதை அறியமுடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**நற்றிணையில் உத்தி முறைகள்:**

சங்க இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணை "இலக்கியத்திற்கு வேறு எத்தன்மை இருப்பினும் போதாது. உணர்த்தும் ஆற்றல் இருத்தல் இன்றியமையாதது. உணர்த்துதல் இல்லையேல் அது இலக்கியம் ஆகாது"[4] என்ற மு.வ.வின் கருத்திற்கேற்ப நல்ல உணர்த்துதல் முறைகளைப் பெற்றுத் திகழ்கின்றது. நற்றிணையில் கிடைக்கப் பெறாத 236 ஆம் பாடலும் பாதி கிடைக்கப் பெற்ற 385 ஆம் பாடலையும் தவிர்த்து ஏனைய 398 பாடல்களிலும் பலவகை உத்திகள் கையாளப்பட்டுள்ளன.

**வரலாற்று உத்தி:**

தான் கூறவிருக்கும் கருத்துக்களைக் கேட்போரின் மனத்தையும் எண்ணத்தையும் கவரும் வகையில் அமைந்த உத்தி முறைகளுள் வரலாற்று செய்தி கூறும் உத்தி முறையும் ஒன்றாகும். "நற்றிணை, குறுற்தொகை ஆகியவற்றில் அரசனைப் பற்றிய குறிப்புகள் வருவது மாத்திரம் இல்லாமல் பல இடங்களில் உவமங்களாகவும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன"[5] நற்றிணையில் வரப்பெறும் வரலாற்றுப் பதிவுகள் யாவும் சமூகவியல், காலநிலையியல் ஆய்வுகளுக்குப் பெருந்துணை புரிகின்றன. "நற்றிணையிலேயே ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட இடங்களில் அரசியற் குறிப்புகள் உள்ளன"[6]என்று கார்த்திக்கேசு சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். ஆனால் நற்றிணையில் 43 இடங்களில் (பார்க்க - பின்னிணைப்பு 1) மட்டுமே மன்னர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

**"பூந்தோள் யாப்பின் மிஞிலி, காக்கும்**
**சிறுகோற் சென்னி ஆரேற்றன்ன**
**மாரிவண் மகிழ் ஓரி கொல்லிக்"** **(நற்.265 : 4-7)**

என்ற பாடலில் மூன்று மன்னர்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மிஞிலி, சென்னி, ஓரி ஆகிய மூவர் பற்றியும் கூறி அவர்தம் நாட்டுச் சிறப்பொன்றை தலைவியின் நலத்தோடு தலைவன் உவமைப்படுத்துகிறான். இவ்விடத்தில் வரலாற்று முறை கூறும் உத்தி பொருட்புலப்பாட்டிற்கு உதவி நிற்கின்றது. மக்களிடத்தே அவர்கள் அறிந்திருந்த நாடு, மன்னர்கள், அவர்களின் பெருமைகளை எடுத்துரைத்துப் பின்னர் தம் கருத்தைக் கூறல் சிறந்த உளவியல் தொடர்பான உத்தி முறையாக அமைகிறது.

**கனவு உத்தி:**

கை கூடாமல் உள்ளடக்கி வைத்திருக்கும் ஆசைகள் அனைத்தும் கனவுகளாக வெளிப்படும் என்பது உளவியலார் கருத்து. "புலவர்கள் நாகரிகமாகவும் நுணுக்கமாகவும் உணர்த்த விரும்பிய கருத்துக்களை உயிரினங்களின் கனவு மூலம் புலப்படுத்தியுள்ளனர். இது புலவர்களின் புதுமையான இலக்கிய உத்தியாகக் காணப்படுகின்றது."[7] நற்றிணையிலும்,

**"வெல்போர்ச் சோழர் அழிசிஅம் பெருங்காட்டு**
**நெல்லி அம்புளிச் சுவைக் கனவியா,அங்கு"** **(நற்.87 : 2-4)**

என்ற பாடல் அடிகளில் கனவு உத்தியாக இடம்பெற்றுள்ளது. வௌவாலின் விருப்பத்திற்குரியது, நெல்லிக்கனியின் புளிப்புச் சுவை. ஆனால் அது நனவில் கிடைக்காமல் கனவில் கிடைக்கிறது. இதனால் பயனில்லை. அதுபோல தலைவி கண்ட கனவும் தலைவனோடு இணைவதாக அமைந்தது. அவ்வின்பம் நனவில் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தை வெளிப்படுத்த வௌவாலின் கனவு வழிகோலாக அமைக்கப் பெற்றுள்ளது. மேலும்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"கண்ணினும் கனவினும் காட்டி இந்நோய்**
**என்னினும் கிழவோரின் செய்தனன் இது' எனின்"** (நற்.173:5-7)

என்ற பாடலடிகளிலும் கனவு உத்தி; கையாளப்பட்டுள்ளது. 'அன்னையின் கனவில் வேலன் தோன்றி இந்நோய் என்னால் வந்ததல்ல. மலைக்கிழவோனால் வந்தது என்று கூறலாம் அல்லவா? என்ற தலைவியின் மன எண்ணங்கள் கனவின் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றன. எனவே நற்றிணையில் கனவும் கனவு பற்றிய எண்ணங்களும் பொருள் புலப்பாட்டிற்கு உதவும் உத்தி முறைகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தனக்குத் தானே பேசுதல் உத்தி:**

பாத்திரங்கள் தன்னிடத்தில் தானே பேசுவதாகவும் தன் நெஞ்சோடு பேசுவதாகவும் பல பாடல்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. தலைவி தனக்குத் தானே பேசுவதாய் 7 பாடல்களும் (69, 118, 187, 287, 302, 314, 381) தோழிக்கு 1 பாடலும் (301) நற்றாய்க்கு 4 பாடல்களும் (66, 143, 179, 279) கண்டோருக்கு 2 பாடல்களும் (2, 324) இவ்வகையில் அமையப் பெற்றுள்ளன. இவ்வுத்தியைக் கையாண்டு "ஆண் உணர்ச்சிகளைப் பெண் வாங்கிப் பாடுதலும் பெண் உணர்ச்சிகளை ஆண்வாங்கிப் பாடுதலுமென ஒரு கூடுவிட்டுப் பாயும் வித்தையைப் பாத்திரப் பேச்சாக நிகழ்த்தினர் சங்கப்புலவர்"[8] கேட்போரிடத்தே தன் உள்ளக் கருத்தை முழுமையாகப் பிரதிபலிக்க இவ்வகையிலான தனக்குத் தானே பேசுதல் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

நெஞ்சோடு பேசும் முறையும் இவ்வகை உத்தியுள் அடங்குகின்றது. நற்றிணையில் தலைவன் தன் நெஞ்சோடு பேசியதாக 13 பாடல்கள் (16, 44, 103, 126, 137, 140, 146, 157, 209, 298, 312, 356, 384) அமையப் பெற்றுள்ளன. "தலைவி - தோழி மன உறவு போலத் தலைவன் - பாங்கன் உறவு அமையாமையே தலைவன் நெஞ்சிற்குக் கூறும் கூற்றுகள் மிகைப்பட்டமைக்குக் காரணம்"[9] என்ற ஆ. இராமகிருட்டிணனின் கருத்தும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. எனவே நற்றிணையில் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தன்னிடத்தில் தானே பேசுவதாகவும் நெஞ்சோடு பேசுவதாகவும் படைக்கப்பட்டிருத்தல் வாசகரின் எண்ணத்தைக் கவருவதற்காக அமைக்கப் பட்டிருப்பதை உணரமுடிகிறது.

**புராண உத்தி:**

நற்றிணையில் புராணக் கதை மாந்தர்களை உவமைகளாகக் காட்டிப் பொருட்புலப்பாடு செய்துள்ளனர். "சங்க இலக்கியம் தனி நிலை பாக்களாக அமைந்து உள்ளதால் இதில் உவமைகளாகவும் உத்திகளாகவும் மேற்கோள்களாகவும் புராணமரபுச் செய்திகள் வருகின்றன"[10]

**"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**
**வாலியோன் அன்ன வயங்கு வெள்அருவி"** (நற்.32 : 1-2)

என்ற பாடலடிகளில் திருமால் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. இங்கு திருமால் போன்ற மலை எனவும் பலதேவன் போன்ற வெள்ளருவி எனவும் உவமைப் படுத்தப் புராணம் பயன்பட்டுள்ளது. எனவே கருத்தை தெளிவாக வெளிப்படுத்த விரும்பிய புலவர்கள் உவமைகளாக புராணக் கதைமாந்தர்களைப் பயன்படுத்தி இருப்பது சிறந்த உத்தியாகப் பெறப்படுகிறது.

**உரையாடல் உத்தி:**

உரையாடல் முறையைப் பாடலில் அமைக்கும் போது அது கேட்பவரின் மனதை உற்சாகமடையச் செய்கிறது. உரையாடல் உத்தியைப் பற்றி குறிப்பிடுகையில் "ஒரு கூற்றினுள் பிறிதொரு கூற்றை உட்கொண்டு படைக்கும் நிலை அல்லது ஒரு பாத்திரம்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஒரு கூற்றுள் கொண்டுரைக்கும் கூற்று ஓர் இலக்கிய உத்தியாகச் சங்க இலக்கியப் பாடல்களில் பயின்றுள்ளது"[11] என விளக்கப்பட்டுள்ளது.

**'கேட்போர் உளர்கொல் இல்லைகொல்? போற்று' என**
**'யாணது பசலை' என்றனன்; அதன்எதிர்**
**'நாண் இலை, எலுவ!' என்று வந்திசினே** (நற்.50 : 6-8)

என்ற பாடலடிகளில் தலைவனும் தோழியும் உரையாடுதலையும்,

**செவ்வாய்ப் பாசினம் கடீஇயர் 'கொடிச்சி!**
**அவ்வாய்த் தட்டையொடு அவணை ஆக! ஏன**
**ஏயள்மன் யாயும், நுந்தை வாழியர்**
**அம் மா மேனி நிரை தொடிக் குறுமகள்!**
**சொல்லாயோ; நின் முள் எயிறு உண்கு' என**
**மெல்லிய இனிய கூறலின் யான் அஃது**
**ஒல்லேன் போல உரையாடுவலே!** (நற்.134 : 4-10)

என்று தோழியும், நற்றாயும், தலைவியின் தந்தையும், உரையாடுதலையும் கூறி இதைப் பொருட் புலப்பாட்டு உத்திகளாகப் புலவர்கள் கையாண்டு உள்ளனர். சிறந்த நாடகப்பாங்கு அமையப் பாடல்களைப் பாடி அதன் வழி தாம் கூற வந்த கருத்தை மக்களிடத்தே எளிமையாகப் புலப்படுத்தியுள்ளனர். நற்றிணையில் ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட பாடல்களில் உரையாடல் முறையிலான உத்தியும் நாடகப்பாங்கிலான பாடுபொருள் உத்தியும் கையாளப்பட்டுள்ளன.

**சைகை உத்தி:**

வாய்திறந்து பேசுதலால் மட்டுமன்றி கையாலும் முகத்தாலும் சைகை காட்டியும் (குறிப்புக் காட்டியும்) பொருள் புலப்பாட்டை நிகழ்த்தியமை நற்றிணை வழி அறிய முடிகிறது. "உடலின் அங்கங்களான முகம், கண்கள், உதடு, கைகள் முதலியன உள் மனத்தில் ஒளிந்து கிடக்கும் உணர்வுகளைச் சமிக்ஞைகள் மூலம் வெளிப்படுத்துகின்றன."[12] அவ்வகையில் நற்றிணையில்,

**"துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி**
**கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி**
**வீங்கு சுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்**
**கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்"** (நற்.57 : 3-4)

என்ற பாடலடிகளில் குரங்கு தன் கைகளால் சைகை காட்டி தன் சுற்றத்தாரை அமைதிப்படுத்தி பசுவின் பாலை கவர்ந்துண்ணும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. மந்தியின் சைகை வழியே தலைவனும் பாலையின் வழியில் பயம்கொள்ளாது சென்று பொருளீட்டி வந்து மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து பெறப்படுகிறது. மேலும்,

**"சேரிசேரா வருவோர்க்கு என்றும்**
**அருளால் வேண்டும் அன்பு உடையோய் என**
**கண் இனிதாகக் கோட்டியும் தேரலள்"** (நற்.342 : 4-6)

என்றவிடத்து தோழி தன் முகக் குறிப்பினால் தலைவியை தலைவனோடு இணையுமாறு சுட்டுகிறாள். ஆயினும் தலைவி அதை அலட்சியப்படுத்துகிறாள். இதுவே அவளது


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பரிவுத்துயருக்கு காரணமாக அமைகின்றது. இவ்வாறாக சைகைகளும் முகக் குறிப்புகளும் பொருளினைப் புலப்படுத்தும் உத்திகளாகக் கையாளப்பட்டுள்ளன.

**படிம உத்தி:**

ஒரு கவிதையின் கருத்தினைக் கண்முன்னே காட்சிப்படுத்தும் உத்திமுறையே படிமமாகிறது. இத்தகைய படிம உத்திமுறை நற்றிணையிலும் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக

**"உடும்பு கொல்இ வரிநுணல் அகழ்ந்து**
**நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லு முயல் எறிந்த வேட்டுவன் கவல**
**பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து**
**இருமடைக் கள்ளின் இன் களி செருக்கம்"** **(நற்.59 : 1-5)**

என்ற பாடலடிகளில் முல்லை நில கானவனின் வாழ்க்கையை மிக அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. உடும்பு, தவளை, முயல், ஈசல் என அனைத்தையும் கொண்டுவந்து இல்லத்தில் கொடுத்து, பின் மதுவுண்டு களிக்கும், கானவனின் செய்கையை இப்பாடல் காட்சிப்படுத்துகிறது. "கானவன் போல நானும் பொருளீட்டி திரும்பி வருகிறேன். என்னை எம் இல்லத்தில் விரைந்து சேர்க்க" எனத் தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறிய கருத்தினை இப்படிம உத்தி மிக அழகாகப் புலப்படுத்துகின்றது.

நற்றிணையில் 132, 165, 218, 306, 308, 331, 334, 396 முதலிய பாடல்களிலும் இத்தகைய படிம உத்தி மிக அழகாகக் கையாளப்பட்டுள்ளது.

**வினா - விடை உத்தி:**

கேள்வி கேட்டு, அதற்கு பதில் அளிக்கும் வகையில் அமையப் பெறும் கூற்று, கேட்போரின் கவனத்தை ஈர்க்கும் வல்லமை படைத்தது. "கேட்போரை மயக்குவதற்கு பேசுவோர் அடுக்கடுக்காக வினாக் கணைகளைத் தொடுத்துச் செல்வது, தேவையற்ற அலங்காரச் சொற்களைப் பயன்படுத்துவது போன்றவற்றை போலித் தொடர்பு எனலாம்"[13] எனினும் இந்தப் போலித் தொடர்பும் பொருட்புலப்பாட்டிற்கு உதவுதல் கவனிக்கத் தக்கது. நற்றிணையில்,

**'குவளை குறுநீர் நீர் வேட்டாங்கு**
**நாளும் நாள் உடன் கவவும் தோளே**
**தொல்நிலை வழீஇய நின்தொடி' எனப் பலமாண்** **(நற்.332 : 2-4)**

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன. இதில் தலைவன் தினமும் வந்து உன்னைப் பார்த்துச் செல்கிறார் ஆயினும் உன் தொடி நெகிழ காரணம் என்ன? எனத் தோழி வினவுகிறாள். அதற்கு தலைவி அவன் வருவழி ஏதமே காரணமெனப் பதிலுரைப்பதாக அடுத்துவரும் பாடலடிகள் அமையப் பெறுகின்றன. இவ்ஒரு பாடல் மட்டுமன்றி நற்றிணையில் ஏறத்தாழ 15க்கும் மேற்பட்ட பாடல்களில் (109, 155, 49, 99, 130, 173, 174, 268, 274, 277, 320, 321, 332, 365, 395) இத்தகைய வினா - விடை உத்தி முறைப் பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறாக வினாவுவதும் விடைகூறுவதுமான உத்தி வாசகரின் மனதில் ஆவலை ஏற்படுத்துவதுடன் சிறந்த நாடகப் பாங்குக்குக்கான களத்தையும் ஏற்படுத்துகிறது.

**குறிப்புப் பொருள் உத்தி:**

தான் கூறுவந்த கருத்தினை வெளிப்படையாக உரைக்காமல் குறிப்பாக உய்த்துணரச் செய்யும் உத்தி முறை குறிப்புப் பொருள் உத்தியாகிறது. சங்கப் புலவர்கள், "சொல்ல வந்த


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

செய்தியைக் கூறும்போது எளிமையாகவும் ஆழமாகவும் அதே வேளையில் எவ்வித சமூகச் சிக்கல்களும் இன்றிச் சுதந்திரமாகக் கூற இக்குறியீடுகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்".[14] நற்றிணையில்,

**"நல்நாள் வேங்கையும் மலர்கமா இனி என"** **(நற்.206 : 7)**

என்ற பாடலடியில்; பல குறிப்புப்பொருள் பயின்றுள்ளது. வேங்கை மலரும் காலம் தினை அறுவடைக்கு உகந்த காலம் மற்றும் திருமணத்திற்கு ஏற்ற காலம், தந்தை தினைப்புனம் காக்க செல்லவிடுத்த வேளையில் தாய் கூறும் இம்மொழி தலைவியின் களவை அறிந்து கூறியதா? இனி இற்செறிப்பு நிகழுமா? என்றெல்லாம் பல கேள்விகளைக் கொண்டதாகும். இவ்வாறாக குறிப்புப் பொருள்பட பாடல்களை அமைக்கும் உத்தி முறை நற்றிணையில் அனைத்துப் பாடல்களிலுமே பெரும்பாலும் காணப்படுகின்றன.

**பின்னோக்கு உத்தி:**

முன்னொரு காலத்து நிகழ்ந்த நிகழ்வுகளைப் பின்னொரு காலத்து நினைத்துப் பார்த்தல் பின்னோக்கு உத்தியாகிறது. உட்கூற்று முறையில் ஒரு பாத்திரத்தின் நினைவில் பிறிதொரு பாத்திரத்தின் செயல்களை நினைத்துப் பார்த்தலும் தனது முந்தைய செய்கையை தானே நினைத்துப் பார்த்தலும் இதில் அடங்கும். "முன்னொரு காலத்து நிகழ்வினைப் பிறிதொரு காலத்து எண்ணும் பாங்கில் 'நிகழ்ந்ததை நினைக்கும் உத்தி'யாகவும் உட்கூற்று பொருந்தலாம்"[15] நற்றிணையிலும், ஏறத்தாழ 30 பாடல்களில் இத்தகைய பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது. சான்றாக,

**"அன்றை அனைய ஆகி இன்றும் எம்**
**கண் உளபோலச் சுழலும் மாதோ"** **(நற்.48 :1-2)**

எனத் தோழி தனது பழைய நினைவுகளான, தலைவன் தலைவியை களவு மேற்கொண்டு உடன்போக்கு நிகழ்த்தியதையும் அப்போது மறவரை வென்று, தமர் காண சென்று ஒளிந்து கொண்டமையையும் எடுத்துக் கூறி அவையாவும் இன்றும் தம் கண்முன்னே சுழல்வதாக எடுத்துரைக்கிறாள். இந்தப் பாடலில் வரப்பெறும் பின்னோக்கு உத்தியின் வாயிலாக இத்தகு பாசம் கொண்டவனாக இருந்த நீ இன்று பிரிந்து செல்வதால் உண்டான வருத்தத்திற்குத் தலைவி ஆற்றியிராள் என்ற பொருள் புலப்படுத்தப்படுகிறது.

**முன்னோக்கு உத்தி:**

எதிர்காலம் பற்றிய கருத்துகளைப் புலப்படுத்தும் நெறியை முன்னோக்கு உத்தி எனலாம். இவ்வுத்தி இலக்கிய வாசகருக்கும் எதிர்காலம் பற்றிய ஆர்வத்தைத் தருகின்றது. நற்றிணையில், 81, 132, 134, 169, 317, 362, 365, 373, 393 முதலிய 9 பாடல்களில் இத்தகைய முன்னோக்கு உத்தி இடம் பெற்றுள்ளது. இதில்,

**"விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய**
**முறுவன் இன் நகை காண்கம்!"** **(நற்.81 : 8-9)**

என்ற பாடலில் தலைவன் நாம் நெடுநாள் பிரிந்து இப்போது தலைவியிடத்துச் செல்ல உள்ளோம் நம்மைப் பிரிந்ததால் வருத்தமுற்றிருந்த தலைவி நம்மைக் கண்டவுடன் மகிழ்வோடு விருந்து சமைக்கச் செல்வாள் அல்லவா? எனத் தேர்ப் பாகனிடத்து எதிர்காலம் பற்றிக் கூறியுள்ளான்,

**"உயர் வரை நாட! நீ நயந்தோள் கேண்மை**
**அன்னை அறிகுவள் ஆயின் பனிகலந்து**
**என் ஆகுவகொல் தானே"** **(நற்.317 : 5-7)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எனத் தோழி தலைவனிடம் எதிர்காலம் குறித்து கேள்வி எழுப்பியதும் எண்ணத்தக்கது. இவ்வாறாக எதிர்காலம் பற்றிய நினைவுகளைக் கேள்விகளாகத் தொடுத்து நிகழ்கால வாழ்வை வளமாக்க முயலும் விருப்பம் இத்தகு முன்னோக்கு உத்திகளின் வழி புலனாகிறது.

**உவமை உத்தி:**

தெரிந்த பொருள் கொண்டு தெரியாததை விளக்க உதவுவது உவமையாகும். உவமை ஓர் உத்தியாக அமைந்து பொருளினை புலப்படுத்த உதவுகின்றது. சங்க இலக்கியங்களில் "புலவர் தாம் சொல்ல வேண்டிய கருத்துக்களாகிய நுண்பொருள்களை சில வகை உவமைகளால் சீரிய வகையில் தெளிவுபடுத்துவதையும் காணலாம்."[16] நற்றிணையிலும்,

**"தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம்தேன் போல**
**புரைய மன்ற புரையோர் கேண்மை"** **(நற்.1 : 3-5)**

என்ற புகழ்பெற்ற உவமைகளும்,

'தேய்ப்புரி பழங்கயிற்றினார்' என உவமையால் பெயர்பெற்றப் புலவரையும் காண முடிகின்றது.

**கற்பனை உத்தி**

கற்பனை உத்தி கவிதையின் கருத்திற்கு மேலும் வலுச்சேர்க்கக் கூடியதாகும். கற்பிப்பது கற்பனை. தானாக ஒரு நிகழ்வை எண்ணிப் பார்த்து அதனை கற்பனை செய்து தன் கருத்தோடு பொருந்த உரைப்பது இவ்வகையினதாகும். "இலக்கியப் படைப்பில் படைப்பாளி வழங்க விரும்பும் செய்தி அல்லது அடிக்கருத்தை தவிர ஏனைய அனைத்தும் உத்தி முறையில் உருவாக்கப்பட்டவையே"[17] என்ற ஜெ.பாரதியின் கருத்தும் எண்ணத்தக்கது. அவ்வகையில் நற்றிணையில்,

**தம்மோன் கொடுமை நம்வயின் எற்றி**
**நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது**
**கண்ணீர் அருவியாக**
**அழுமே தோழி அவர் பழம் முதிர் குன்றே** **(நற்.88: 6-9)**

என்ற பாடலடிகளில் தலைவன் வரைவு நீட்டித்தலால் தலைவி வருந்தியமைக் கண்டு தலைவனின் குன்றம் கண்ணீரை அருவியாகச் சிந்துவதாகக் கவிஞர் கற்பனை செய்துள்ளார்.

**பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்**
**கவறு பெயர்த்தன்ன நில்லா வாழ்க்கை இட்டு**
**அகறல் ஓம்புமின் அறிவுடையீர் என**
**கையறத் துறப்போர்க் கழறுவ போல** **(நற். 243: 4-7)**

என்ற பாடலடியிலும் சிறந்த கற்பனை பயின்று வந்துள்ளது. மனைவியை விட்டு பிரியும் கணவர்மார்களுக்கு சோலையில் வாழும் குயில்கள் பொருளின் நிலையாமையை எடுத்துரைப்பதாக இப்பாடலில் கற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக கற்பனையில் எடுத்துரைக்கப்படும் செய்கைகள் யாவும் உண்மையான பொருளினை புலப்படுத்துவதோடு அதற்கு வலுவூட்டவும் செய்கின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**தொகுப்புரை**

நற்றிணையில் இடம் பெற்றுள்ள நானூறு பாடல்களிலும் பலவிதமான உத்திமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. சொல்லினை எடுத்துரைக்கும் முறையில்; சொல்லாடல் உத்திமுறை பொருளைப் புலப்படுத்த உதவுகின்றது. புலவர்கள் தங்களது நாட்டுப்பற்றாலும் , அறிவுத்திறத்தாலும் மன்னர்கள், ஊர்ப் பெயர்கள் போன்ற வரலாற்றுச் செய்திகளையும் உத்திகளாகப் பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர். கனவின் வழி வெளிப்படையாகக் கூற முடியாத கருத்தினைக் கூறும் பொருட்புலப்பாட்டு முறை கையாளப்பட்டுள்ளது. தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல், மழை, தினை, வாடை போன்ற பிறவற்றோடு பேசுதல் முதலான உத்திமுறைகள் வழி நற்றிணையில் பொருட்புலப்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது. ஒருவருக்கொருவர் உரையாடுதல் போன்ற நாடகப் பாங்கில் அமையப் பெறும் பாடல்களும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. கண்முன்னே காட்சிப்படுத்தும் படிம உத்தியும் மறைமுகமாக பொருளை எடுத்துரைக்கும் குறிப்புப் பொருள் உத்தியும் நற்றிணையில் கையாளப்பட்டுள்ளன. வினாக் கணைகளைத் தொடுத்து விடை கூறும் உத்தியும் சைகை வழி கருத்தைப் புலப்படுத்தும் உத்தியும் எதிரெதிராக சிந்திக்கும் முரண் உத்தியும் புலப்பாட்டு நெறிக்குப் பேருதவி புரிகின்றன. முன்னர் நிகழ்ந்தவற்றை சிந்தித்துப் பார்க்கும் பின்னோக்கு உத்தியும் எதிர்காலத்தில் இப்படி நிகழுமோ என எண்ணிப் பார்க்கும் முன்னோக்கு உத்தியும் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. உவமை, தொன்மம், கற்பனை முதலான இன்ன பிற உத்திகளும் நற்றிணையில் இடம்பெற்று பொருட்புலப்பாடிற்கு உதவி புரிந்துள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியக் கொள்கை, ப.477
2. கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியக் கொள்கை, ப.487
3. ந.சுப்புரெட்டியார், பாட்டுத்திறன், ப.358
4. செ.சாரதாம்பாள், சங்கச்செவ்வியல்,ப.173
5. கார்த்திக்கேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், ப.109 - 110
6. கார்த்திக்கேசு சிவத்தம்பி, சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், ப.91
7. ஆய்வுக்கோவை (2002) 4 II, ப.804
8. கு.வெ.பாலசுப்ரமணியன், சங்க இலக்கியக் கொள்கை ப.487
9. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.169
10. செ.சாரதாம்பாள், சங்கச்செவ்வியல்,ப.248
11. இலா.குளோறியா சுந்தரமதி, இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வும், ப.108
12. அசரியா செல்வராஜ், உடலசைவு மொழிகள், ப.24
13. வெ.கிருட்டிணசாமி, தகவல் தொடர்பியல், ப.143
14. ச.மெ.மீனாட்சி சோம சுந்தரம் (ப.ஆ), சங்க இலக்கியக் கட்டுரைகள் (ஐ), ப.149
15. இலா.குளோறியா சுந்தரமதி, இலக்கியக் கல்வியும் பகுப்பாய்வும், ப.110
16. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.397
17. ஜெ.பாரதி, கவிஞர் சிற்பி கவிதைகளில் உத்திகள், ப.127


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 05. மானிடவியல் பார்வையில் பொன்னீலனின் புதிய மொட்டுகள்

**திருமதி சு.வினோதா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 05
srimegha775@gmail.com - 8098224646

DOI 10.5281/zenodo.17252001.

**Abstract**

The Tamil people who lived in Kumari district during the period when it was annexed to the Thirukocchi Kingdom were greatly affected socially. Those involved in the struggle for India's independence were punishable in the Tirukochi government. In this situation, after the country gained independence from the East India Company, the Tirukkotchi government did not want to unite with India and demanded a separate government. As a result, the Tamil people living there protested in the Punnapparai and Vayalar areas against the lack of freedom they received even after the country gained independence. Thousands of lives were lost in this. Following this, the area inhabited by Tamil people was merged with Tamil Nadu. The socio-historical problems faced by the Tamil people in this context have been examined based on Ponnilan's novel 'Pudiya Mottukal'.

**KEYWORDS**: Social Anthropology, Cultural anthropology, Historical Anthropology, Punnapura, Vayalar

## முன்னுரை

மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு நிரந்தர வாழ்க்கைக்காகப் பல்வேறு சமுதாயப் போராட்டங்களை எதிர்கொண்டு வருகின்றன. பெண்கள், குழந்தைகள், ஆண்கள், மேல்குலத்தோர், விளிம்பு நிலை மாந்தர்கள் எனப் பல தரப்பினரும் தங்களது வாழ்வாரத்திற்காகவும், மானத்திற்காகவும், போட்டி மனப்பான்மைக்காக என்று போராடி வருகின்றனர். இப்போராட்டங்கள் மனித வாழ்க்கை முழுவதிலும் நிரம்பக் காணப்படும் வரலாற்றுத் தடங்களாக, தடயங்களாகக் காணக்கிடைக்கின்றன. இத்தகு மனித சமுதாயத்தின் வழித்தடங்களை ஆராய்ந்து அறிந்து அதன் பொதுமையின் அடிப்படையில் உருவான பொருண்மையினை மானிடவியல் துறை ஆராய்ந்து வருகின்றது. ஆராய்ச்சிக்கான தரவுகள் பெரும்பாலும் நேரடிப்பேட்டிகளில் கிடைத்தாலும் சிறுபான்மை அச்சமுதாயம் சார்ந்த இலக்கியப் பதிவகளின் மூலமே கிடைக்கிறது. அத்தகு மானிடவியல் பதிவுகளுள் குமரி மாவட்டத்து மனித சமுதாயத்தைத் தனது படைப்பின்வழி படைத்தக்காட்டிய பொன்னீலனின் படைப்புகள் உரிமைக்காகப் போராடிய குமரி மாவட்டத்து மக்களின் சமூகப்போராட்டங்களை முன்வைக்கின்றன. அவற்றுள் அவரது 'புதிய மொட்டுகள்' ஒரு குறும்புதினமாக இருந்தாலும் குமரி மாவட்ட மக்கள் சுதந்திரப்போராட்ட காலத்தில் எதிர்கொண்ட சிக்கல்களையும் அதன் தொடர்ச்சியாக முதலாளித்தவத்தின் பிடியில் மக்கள் சிக்கிக் கொண்ட நிலையும் அதிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள சுதந்திர ராஜன் கற்றக்கொடுத்த போராட்ட வழிமுறைகளும் புதினத்தின் மையப்பொருளாகின்றன. அதனை மானிடவியல் அடிப்படையில் ஆராய்வது இவ் ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**மானிடவியல் துறை பற்றிய அறிமுகம்**

மனித இனம் புவியியல் காரணிகளால் உடலியல் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் மாற்றம் பெற்றுள்ளது. நிலத்தின் இயல்பிற்கேற்ப மண், நீர், காற்று, அங்கு விளையும் உணவு, விலங்குகள் போன்றவற்றின் இயல்பு மாறுபடும். இம்மாற்றத்தை அறியும் ஆர்வமே மேற்கத்திய ஆய்வாளர்களை உலகம் முழுவதும் பயணம் செய்யச் செய்தது. மேற்கத்திய பழம்பொருள் ஆய்வாளர்களான ஹெரோடாட்டஸ், ஸ்ட்ராபோ, சீசர், சாக்ரடீஸ், பிளேட்டோ உள்ளிட்டோர் உலகம் முழுவதும் பயணம் செய்து அதன் அடிப்படையில் தாங்கள் கண்டறிந்த செய்திகளைப் பதிவு செய்தனர். அப்பதிவகளே மானிடவியலின் தோற்றத்திற்கான முக்கியக் காரணமாகக் கருதப்படுகின்றது.

**பண்பாட்டு மானிடவியல் - சிறு குறிப்பு**

மானிடவியல் துறையின் உட்பிரிவுகளுள் ஒன்று பண்பாட்டு மானிடவியல் . இதனை அமெரிக்க மானிடவியல் என்றும் அழைப்பர். அமெரிக்க மானிடவியலின் தந்தை பிரான்ஸ் பொவாஸ். அமெரிக்காவில் மானிடவியல் துறை வளரத் தொடங்கிய காலத்தில் அமெரிக்கா வாழ் இந்தியர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர். பழங்காலத்தில் சீரும் சிறப்போடும் வாழ்ந்து வந்த அவர்களின் நிலையை அமெரிக்க மானிடவியலார் மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் பண்பாட்டளவில் வீழ்ச்சி அடைவதற்குள் அவர்களின் வாழ்வை மீட்டெடுக்கப் போராடினர். அதன் விளைவாக அவர்களின் தொல் பண்பாடு அராயப்பட்டது. இவ்வாறுஅமெரிக்க இந்தியர்களின் பண்பாடு சார்ந்த அடையாளத்தை ஆராயும் ஆர்வத்தை ஏற்படுத்தித் தனித்துறையாக வளரத் தொடங்கியது பண்பாட்டு மானிடவியல் துறை

**'புதிய மொட்டுகள் புதினத்தில் பண்பாட்டு மானிடவியல்**

பொருள் சார் பண்பாடு, பொருள் சாராப் பண்பாடு என்னும் பண்பாட்டு மானிடவியலின் இரண்டு வகைகளுக்கான தரவுகளும் புதிய மொட்டுகள்' புதினத்தில் நிரம்ப அமைந்து குமரி மாவட்ட மக்களின் பண்பாட்டு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாகச் சுதந்திரப் போராட்ட காலத்தில் குமரி மாவட்ட மக்களின் எண்ணங்கள், நடத்தை முறைகள், பழக்கவழக்கங்கள் போன்ற பண்பாட்டுப் பதிவுகள் புதிய மொட்டுகள்' புதினத்தில் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஊர்த்திருவிழாக்களுக்கு வரியிடும் வழக்கம்**

குமரி மாவட்டத்து ஊர்களில் அம்மனுக்குச் சித்திரை மாதங்களில் விழா எடுக்கப்படுகின்றது. பலியிடப்படும் கிடாக்கள் ஊர் மக்களுக்குப் பங்கு வைத்துக் கொடுக்கப்படுகின்றது. விழாவிற்கான ஏற்பாட்டுச் செலவுகளை மக்களிடம் வாங்கும் வரிப்பணத்தைக் கொண்டு செலவு செய்கின்றனர். வரி கொடுக்க இயலாத மக்களின் வீட்டுக்கதவுகளை வரி பாக்கிக்கு ஈடாக எடுத்துச் செல்வது அவ்வூர் வழக்கமாக இருந்துள்ளது. புதிய மொட்டுகள் புதினத்தின் கதைத்;தலைவன் சுதந்திர ராஜனின் நண்பனின் நண்பன் வரி செலுத்த இயலாத நிலையில் அவரது வீட்டுக்கதவை எடுக்க வந்த ஆட்களிடம் அவர் சண்டையிட்டு ஊரை விட்டு வெளியேறியதாகப் பொன்னீலன் கதை அமைத்துள்ளார்.

**ஆண்கள் கொண்டையிடும் வழக்கம்**

புதிய மொட்டுகள் புதினத்தின் வழி அறியலாகும் குமரி மாவட்ட மக்களின் பண்பாட்டுப்பதிவுகளில் ஆண்கள் கொண்டையிடும் வழக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக்காலங்களில் ஆண்கள் நீளமாக முடி வளர்த்துக் கொள்ளும் முறை பெரும்பாலும் காணப்படுவதில்லை. ஆனால் 1940 களில் நடைபெற்றதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அக்கதைக்களத்தில் ஆணு,கள் சிறுவர் முதல் பெரியூர் வரை நீளமாக முடி வளரத்துக் கொண்டையிட்டுக் கொள்ளும் வழக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. **“எண்ணெய் தேய்ச்சி, தலைவாரி, கொண்டையும் போட்டுக்கிட்டு நாங்க ரெண்டு பேருந்தான் ஒண்ணா பள்ளிக்கொடத்துக்குப் போவோம்”** என்னும் வரிகளும் **“எங்க வகுப்பு வாத்தியார் பாலையா சார் பதினொரு மைல் நடந்து தான் பள்ளிக்கொடத்துக்கு வருவார்… கொண்டைய அவுத்து உதறி அழகாகக் கெட்டுவாரு.”** (பொன்னீலன், புதிய மொட்டுகள், ப.9) என்னும் வரிகளும் குமரி மாவட்டத்து ஆண்களிடம் கூந்தல் வளர்த்துக் கொண்டையிடும் வழக்கம் இருந்துள்ளமையைப் புலப்படுத்துகின்றது.

### தண்டனைகள்

தண்டனைகள் என்பது மனித நடத்தையின் திருத்தத்திற்கான நடவடிக்கைகளுள் குறிப்பிடத்தக்கதாகும். அதிலும் மாணவப்பருவத்தில் .வகுப்பறைகளில் தண்டனைகள் பெறாத மாணவர்களே இருக்க முடியாது. தண்டனைகள் ஆசிரியருக்கு ஆசிரியர் மாறுபடும். 'புதிய மொட்டுகள்' புதினத்தில் சுதந்திரராஜன் செய்யும் குறும்பிற்காக **“கையையும் காலையும் கட்டிச் சுடுமணல்ல உருட்டிருவாரு. மரங்கள்ல இருக்கும் ஒரு விதமான சிவப்புக்கடி எறும்புக் கூடுகள ஒடிச்சிட்டு வரச்சொல்லி அகளக் கொண்டு இவன அடிப்பாரு. கடி பொறுக்க மாட்டாம இவன் சுடுமணல்ல கெடந்து உருளுவான்”** (பொன்னீலன், புதிய மொட்டுகள், ப.9) என்னும் வரிகள் மாணவர்களுக்கான தண்டனையைப் பற்றி எடுத்துரைக்கின்றது. அதுமட்டுமின்றி “பள்ளிக்கூடங்கன்னா கிட்டத்தட்ட சித்திரவதைக் கூடங்கதான். படிக்காதவன வாத்தியாரு எழுத்தாணியால குத்துவாரு. வெரலப் பிடிச்சி தரையில தேய்ப்பாரு. தலகீழாக் கெட்டித் தொங்கவிடுவாரு, கையையுங் காலையுங் கட்டிச் சுடுமணல்ல உருட்டுவாரு. இதுக்காகவே அனேகம் புரு பள்ளிக்கொடத்துக்கு வர மாட்டானுக” என்று பொன்னீலன் 'புதிய மொட்டுகள்' புதினத்தில் மாணவர்கள் பள்ளிகளில் பெறும் தண்டனையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு தவறைத் திருத்துகிறேன் என்று மாணவர்களைச் சித்திரவதைப்படுத்துவதாகவும் சுட்டுகின்றார். இதன் மூலம் அக்காலத்தில் மாணவர்கள் பள்ளிகளில் பெற்ற தண்டனைகள் மிகக் கொடூரமாக அமைந்திருந்தமையை அறிய முடிகின்றது.

### வரலாற்று மானிடவியல் - விளக்கம்

வரலாறு என்பது ஆளும் சமுதாயத்திற்கானது என்ற பொதுவான கருத்துநிலையை வரலாற்று மானிடவியல் மாற்றிக் கட்டமைத்துள்ளது. வரலாற்று மானிடவியல் என்பது சமூகத்தின் விளிம்பு நிலை மாந்தர்களின் வரலாற்றுப்பதிவு என்று வரலாற்று மானிடவியல் அறிஞர்கள் வரலாற்றிற்கும் வரலாற்று மானிடவியலுக்குமான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்துகின்றனர். “விளிம்புநிலை மக்களின் வரலாறு என்பது வரலாற்றின் வரலாறாகவே அமைகிறது. ஒரு சமுதாயத்தின் வரலாறு கீழ்நிலையிலிருந்து மேல்நோக்குப் பார்வையிலான ஆய்வாக அமைகிறது. ஒரு சமுதாயத்தின் வரலாறு கீழ்நிலையிலிருந்து மேல் நோக்கி ஆராயப்படும் போது தான் அதன் உண்மையான வரலாற்றுச் சூழலை அடையாளம் காட்டும் என்பது வரலாற்று மானிடவியல் அறிஞர்களின் கருத்தாகும்” என்று பக்தவத்சல பாரதி வரலாற்று மானிடவியல் ஆய்வு குறித்து விளக்குகின்றார்.

### 'புதிய மொட்டுகள்' புதினத்தில் வரலாற்று மானிடவியல்

விளிம்பு நிலை மக்கள் எதிர்கொண்ட சமுதாய சிக்கல்களின் அடிப்படையில் பதிவு செய்யப்படும் வரலாற்று மானிடவியல் பதிவைச் சமுதாயப்பதிவுகளாய் அமையும் படைப்புகளின்வழி அறியலாம். அந்த வகையில் குமரி மாவட்டத்து மக்களின்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சமுதாயப்பதிவாய் அமைந்துள்ள பொன்னீலனின் புதிய மொட்டுகள்' பதினத்தில் சுதந்திரப் போராட்ட வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. குமரி மாவட்டம் திருவிதாங்கூர் அரசாட்சியின் கீழ் இயங்கி வந்தது. மலையாள தேசத்து மக்களும் குமரி மாவட்டத்து மக்களும் இணைந்து வாழ்ந்து வந்த அப்பகுதியில் தமிழ் மக்கள் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு வந்தனர். இதனால் தமிழ்மக்கள் தமிழ்நாட்டோடு இணைவதற்காகப் போராடி வந்தனர். இந்நிலையில் நாடு சுதந்திரம் அடைந்த போது திருவிதாங்கூர் அரசு இந்தியாவுடன் இணையாமல் தனி நாடு கேட்டது. இக்கோரிக்கைக்கு சர்.சி.பி.ராமசாமி ஐயர் தலைமை வகித்தார். அதற்கு எதிராய்த் தமிழ்மக்கள் வெகுண்டெழுந்து போராடினர். புன்னப்புரை, வயலாறு ஆகிய இடங்களில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்த்தியாகம் செய்தனர்.

**'நாட்டுக்குச் சுதந்திரம் அப்ப கெடைச்சிருக்கல்லே. இப்போதுள்ள கேரளம் அப்போ திருக்கொச்சி அரசாங்கம். மகாராஜா ஆட்சி. சர்.சீப்பி. ராமசாமி ஐயர் திவான். சுதந்திரம்னு சத்தம் போட்டுச் சொன்னாப் போதும் ஜெயில் பொது எடத்தில் நின்னு காந்திக்கீ ஜேன்னு க்தினா போலீசுக்காரன் கழுத்த நெரிச்சிருவான்"** என்னும் வரிகள் நாடு சுதந்திரம் அடைவதற்கு எதிராக இந்திய நாட்டிற்குள் ஒரு பகுதி இயங்கி வந்திருக்கின்றது என்பதும் இந்திய நாட்டோடு இணைய விரும்பாமல் கொச்சி ராஜ்ஜியம் தனி அரசு கேட்டுப் போராடிய நிலையும் கொச்சி அரசிடம் தமிழ்மக்கள் பட்ட சிரமத்தையும் உணர்த்துகின்றன. இவ்வாறு கிழக்கிந்திய கம்பெனியோடு இணையாத பகுதிகள் தனித்தியங்க விரும்பி இந்திய நாட்டிற்குப் புறம்பாய் நின்ற செய்தியையும் அறிய முடிகின்றது.

**சமுதாய மானிடவியல் - சிறு குறிப்பு**

சமுதாய மானிடவியலை ஆங்கிலேய மானிடவியல் என்றும் அழைப்பர். ஆங்கிலேய மானிடவியலின் தந்தை இராபர்ட் கிளிஃப் பிரௌன் ஆவார். ஆங்கிலேயர்கள் குடியேறிய குடியேற்ற நாடுகளில் திணைக்குடிகள் எனப்படும் பழங்குடியினரின் ஆதிக்கம் ஆழ வேரூன்றியிருந்தது. எனவே அவர்களைத் தங்களின் கட்டுக்குள் கொண்டு வர விரும்பிய ஆங்கிலேய அரசு திணைக்குடிகளின் ஒருமைப்பாட்டை ஆராய்ந்தது. சமகாலத்து மக்களின் சமுதாய நிலையை ஆராயும் நோக்கில் சமுதாய மானிடவியலை உருவாக்கினர். **"ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு செயற்பாட்டியல் அணுகுமுறையில் ஆராய இந்நிலை மிகவும் உகந்ததாக இருந்தது." (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.116)** என்று பக்தவத்சல பாரதி சமுதாய மானிடவியல் குறித்துக் கருத்துரைத்துள்ளார்.

**புதிய மொட்டுகள்' புதினத்தில் சமுதாய மானிடவியல் பதிவுகள்**

'புதிய மொட்டுகள்' புதினம் இந்திய நாடு சுதந்திரம் அடையும் காலகட்டத்தில் நிலவிய குமரி மாவட்டத்துச் சமுதாய சூழலைப் பதிவு செய்துள்ளது. அக்காலத்தில் சுதந்திரத்தையும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் அறியாத மக்களாகக் குமரி மாவட்டத்து மக்களைப் பொன்னீலன் படைத்துக்காட்டுகின்றார். பெருமாள் பிள்ளை வாத்தியார் என்னும் பாத்திரம் சுதந்திரத்தின் நன்மைகளை மாணவர்களுக்கு எடுத்துரைக்கின்றார். **"சுதந்திரம் வந்தா நம்ம நாட்டில ஜாதி வித்தியாசம் அழிஞ்சி போகும். எல்லா மனுஷனும் ஒண்ணு போல ஆயிருவான்! பஞ்சமும் நோவும் வறுமையும் துன்பமும் இருக்கவே இருக்காது. எல்லாருக்கும் வேல கெடைக்கும். சந்தோஷமான வாழ்க்கை கெடைக்கும். ஒலகம் சொர்க்கலோகம் போல ஆயிரும்" (பொன்னீலன், புதிய மொட்டுகள், ப.19)** என்னும் வரிகள் குமரி மாவட்ட மக்களுக்கு எது


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கிடைக்கவில்லையோ அதனைச் சுட்டிக்காட்டிச் சுதந்திரம் கிடைத்தால் இழந்தவை எல்லாம் கிடைக்கும் என்று பதிவு செய்திருப்பது புலனாகும்.

**சுதந்திரத்தை விரும்பினால் தண்டனை**

சுதந்திரத்தை சிரும்பும் மக்கள் சொந்த மண்ணிலேயே சொந்த மக்களால் தண்டிக்கப்பட்டிருப்பதைப் பொன்னீலனின் 'புதிய மொட்டுகள்' புதினம் பதிவு செய்துள்ளது. பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் சுதந்திரராஜன் பெருமாள் பிள்ளை வாத்தியாரால் தூண்டப்பட்டுக் 'காந்திக்கு ஜே' சொல்லி ஊர்வலம் நடத்தியமையால் ஊரை விட்டே விரட்டி அடிக்கப்படுகின்றான். பண்ணையார் ஒருவரிடம் கூலி வேலை செய்யும் சுதந்திரராஜனுக்கு நாடு விடுதலை அடைந்ததா என்பதை அறிய ஆவல் ஏற்படுகின்றது. தயக்கத்தோடு பள்ளியில் படிக்கும் பண்ணையாரின் இளைய மகனிடம் கேட்கின்றான். அவனோ "வேலக்காரனுக்கு எதுக்குல சுதந்திரத்தப் பற்றித் தெரியணும்னு செவிட்டுல அடிச்சது போல பதில் சொன்னானாம்" (பொன்னீலன், புதிய மொட்டுகள், ப.26) என்னும் வரிகள் ஏழைகளுக்கு சுதந்திரம் கிடைப்பதை விரும்பாத முதலாளித்துவ சமுதாயமாகக் குமரி மாவட்ட சமுதயம் விளங்குவதைப் பதிவு செய்துள்ளது. நாடு சுதந்திரம் அடைந்தாலும் அடிமைப்பட்டிருந்தாலும் ஏழைகளின் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை இப்பதிவு உணர்த்தகின்றது.

**தொகுப்புரை**

- குமரி மாவட்டத்து ஊர்த்திருவிழாக்கள் மக்களிடம் பெறும் வரிப்பணத்தைக் கொண்டு நடத்தப்படுகிறது.
- வரிப்பணம் செலுத்த இயலாத மக்களின் வீட்டுக்கதவுகள் வரிப்பணத்திற்கு ஈடாக எடுத்துச் செல்லப்படுகின்றது.
- குமரி மாவட்டத்து ஆண் மக்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே கூந்தல் வளர்த்துக் கொண்டை போடும் வழக்கம் நடைமுறையில் இருந்துள்ளது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- குமரி மாவட்டத்துப் பள்ளிகளில் மாணவர்களுக்கான தண்டனைகள் மிகக் கொடூரமாக இருந்துள்ளது.
- சிவப்பு நிற கட்டெறும்பு நிறைந்திருக்கும் மரக்கிளைகளால் மாணவர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.
- சுடுமணலில் மண்டியிடச் செய்வதும் அக்காலத்துப் பள்ளிப்பருவ தண்டனைகளாகப் பின்பற்றப்பட்டுள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய நாடு சுதந்திரம் அடைந்தவுடன் திருக்கொச்சி அரசு இந்தியாவுடன் இணையாத தனி அரசாக விரும்பித் தனி நாடு கேட்க, அதனால் ஏற்படும் பாதிப்பை உணர்ந்த அப்பகுதி தமிழ் மக்கள் அதனை எதிர்த்துப் போராடிய புன்னப்புரை, வயலார் போராட்டம் புதினத்தின் ஒரு பகுதியாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- சுதந்திரத்தைப் பற்றி அறியாத மக்கள் சமுதாயமாக குமரி மாவட்ட மக்கள் சமுதாயம் வாழ்ந்து வந்தமையை புதிய மொட்டுகள் புதினம் தெளிவுறுத்துகின்றது.
- நாடு சுதந்திரம் அடைந்தாலும் அடிமைப்பட்டிருந்தாலும் ஏழைகளின் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை இப்பதிவு உணர்த்துகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 06. சமூகவியல் கோட்பாடு நோக்கில் திருக்குறள்

**பா.பாண்டிச்செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி
*pandiselvi11052002@gmail.com - 9629217397*
DOI 10.5281/zenodo.17252008.

**Abstract:**

Society is a group system formed by individuals. The ways in which humans live by adhering to specific customs, culture, behaviours, and beliefs are also included within the social structure. The method of constructing this society is called sociological theory. In this article, we will discuss in detail the way in which sociological theory is applied in the book of Common Sense.

**KeyWords:** Society - Human Behaviour - Sociological Theory

## முன்னுரை

சமூகம் என்பது மனிர்களால் உருவாக்கப்பட்ட குழு அமைப்பு ஆகும். மனிதர்கள் குறிப்பிட்ட பண்பாடு, கலாச்சாரம், நடத்தைகள், நம்பிக்கைகள் என அனைத்து செயல்முறைகளுக்கும் கட்டுப்பட்டு வாழும் முறைகளும் சமூகக் கட்டமைப்பிற்குள்ளாக அடங்கும். இச்சமூகத்தினை கட்டமைக்கும் முறையினையே சமூகவியல் கோட்பாடு என்பர். அவ்வகையில் பொதுமறை நூலில் சமூகவியல் கோட்பாடு பொருந்தி வரும் முறைக் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

“சமூகவியல் என்பது மனித சமூகம், சமூக உறவுகள், சமூக நடத்தைகள், சமூக அமைப்பு முறை, சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிவியல் நோக்கில் ஆயும் ஓர் இயல் ஆகும்” *(சமூகவியல் வரலாறு)*

## சமூகவியல் கோட்பாடு

மனிதர்களின் பெரும்பாலான செயல்பாடுகள் அச்சமூகத்தில் வாழும் மனிதனுடனே உள்ளன. ஆகையால் சமூகவியலின் முக்கிய ஆய்வுப்பொருளாக சமூகமும் மனிதன் சமூகத்துடன் கொண்டுள்ள தொடர்பினையும் மையமாகக் கொண்டே அமைகிறது.

சமூகவியல் கோட்பாடானது மூன்று முக்கிய வகைகளை மையமாக் கொண்டே அமைகிறது.

அவை,

- செயல்பாட்டுக் கோட்பாடு
- முரண்பாட்டுக் கோட்பாடு
- குறியீட்டு இடைவினையியல்

## கோட்பாட்டு வகை விளக்கங்கள்

### செயல்பாட்டுக் கோட்பாடு (Functionalism)

சமூகத்தில் வாழும் பல்வேறு விதமான உயிரிகள் ஒன்றாக இணைந்து செயல்பட்டு ஓர் குறிப்பிட்ட சீரான சமூகத்தை உருவாக்குகிறது. மேலும் தன்னியல்புகளிலிருந்து மாறாத அதனை சீரான முறையில் இயக்கவும் செய்கிறது.

ஒரு சமூகத்தில் பயணிக்கும் ஒவ்வொரு அமைப்பும் குடும்பம், கல்வி, பொருளாதாரம், போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கின்றன. இவையனைத்தும்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சமூகத்தின் ஒழுங்குமுறைகளை நிலைநிறுத்தவும், சமூகத்தின் மதிப்புகளை வலுப்படுத்தவும் உதவுகிறது.

அவ்வகையில் திருக்குறளில் செயல்பாட்டுமுறைகளானது சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது.

**குடும்ப அமைப்பு**

சமுதாயத்தில் வாழும் மக்கள் அனைவரும் குழுக்களாக அல்லது குடும்பங்களாக வாழ்கின்றனர். அக்குடும்பத்தில் வாழும் மக்கள் பிறருக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காது பொருள்களைச் சேர்த்தும் நேர்மையான முறையில் செயல்பட்டு வருதலையும் காணமுடிகிறது.

**"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகையென்ப வாய்மைக் குடிக்கு".** (குறள் - *953)*

ஒரு குடும்பத்தில் வாழக்கூடிய மக்கள் முகமலர்ச்சி, ஈகைப் பண்பு, இனியசொல், பிறரை இகழ்ந்து கூறாமை போன்ற உயர் பண்புகள் கொண்டு வாழுதல் வேண்டும். அப்பொழுதே இச்சமூகமானது எவ்வித முரண்களும் இன்றி காணப்படும்.

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்" (குறள் - 46)**

குடும்பத்தின் தலைமைப் பொறுப்பினை மேற்கொள்பவன் வேறு தீநெறியில் செல்லாது நன்னெறியில் குடும்பத்தினை வழிநடத்துதல் வேண்டும். அப்போதே இச்சமூகத்தின்கண் வாழும் அனைத்துக் குடும்பங்களும் சீர்த்தன்மையுடன் காணப்படும். இவ்வாறு சமூகத்தில் குடும்பத்தின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ, அந்த அளவிற்கு அக்குடும்பத்தில் வாழும் மக்களின் பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகிறது.

**கல்வி**

அகன்ற இப்பிரபஞ்சத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு பெரும் ஆயுதமாக கையாளுவது கல்வி ஒன்றே ஆகும். கல்வி என்னும் செல்வமே இச்சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தும் ஒன்றாகக் காணப்படுகிறது.

**"தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோருக்குச்**
**சென்றவிட மெல்லாம் சிறப்பு" (மூதுரை - 26)**

அவ்வகையில் திருவள்ளுவர், கல்வியின் பயன் கருதி 'கல்வி' என்னும் ஓர் தனி அதிகாரத்தினையேப் படைத்துள்ளார்.

**"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்" (குறள் - 395)**

செல்வர்முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர் முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்வி கற்றவரே உயர்ந்தவர். அதுபோலவே இச்சமூகத்தில் கல்வி கற்றவரே எங்கும் உயர்ந்து காணப்படுகிறார்.

**"பொருளென்னும் பொய்யாவிளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று". (குறள் - 753)**

'பொருள்' என்னும் நந்தாவிளக்கமானது, தன்னை உடையவர் எண்ணிய தேயங்களுக்கும் சென்று, அவர் பகையாகிய இருளைப் போக்கும் வல்லமை உடையதாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இச்சிறந்த கல்வியறிவினை கையில் ஏந்தி போர் செய்பவனே இச்சமூகத்தில் வெற்றியடைவான்.

**பொருளாதாரம்**

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மக்கள் தொகை வளர்ச்சி பெரும் பங்கின் அளவிற்கு ஏற்ப பொருளாதார வளர்ச்சயும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. நாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி குடும்பத்தின் வளர்ச்சிக்கும் பொருட்செல்வமானது அவசியமாகிறது. அவ்வகையில் எவ்வித தீங்கின்றி நல்வழியில் சேர்க்கும் பொருளைக் கொண்டு வாழும் வாழ்க்கை முறையே இச்சமுதாயத்தில் பெரிதும் போற்றப்படுகிறது.

**"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்குஎண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு."** (குறள் -760)

சிறந்த வழியோடு வந்த பொருளை மிகுதியாகத் தேடிக் கொண்டவர்களுக்கு, எண்ணப்படும் மற்றையவாகிய அறமும் இன்பமும் ஒருங்கே வந்து வாய்க்கும் பொருள்களாகும். தற்பாலத்தினைப் போல எக்காலத்தினும் அறத்தோடு சேர்க்கும் பொருளை ஒருங்கே கொண்டவனுக்கு மற்றவை அனைத்தும் கிடைக்கப்பெறும்.

இவ்வாறு, குடும்பம், கல்வி, பொருளாதாரம் போன்ற மூன்றினையும் மையமாக வைத்தே ஒரு சமூகமானது செயல்படுகிறது. இம்மூன்றில் மக்களின் பங்கானது அறவழியினைச் சேர்ந்ததாகவும் தீநெறியின்றியும் காயப்பட்டது. இச்செயல்பாட்டுமுறையினைக் குறித்தே திருக்குறள் அதிகளவில் எடுத்தியம்புகிறது.

**முரண்பாட்டுக் கோட்பாடு**

மக்கள், குடும்பம், சமுதாயம் என இவையனைத்தும் நிலையானவை அல்ல. அதற்கு மாறாக அதிகாரம் என்பது மட்டுமே வளங்களுக்கான ஒரு நிலையான போராட்ட களமாக அமைகிறது. இச்சமூகத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பங்களும் தங்களது நலன்களைப் பாதுகாக்க இச்சமூகத்தின் அமைப்புகளையே பயன்படுத்திக் கொள்கின்றன. இதன் மூலம் ஒவ்வொருவரும் தங்களது நலனை மட்டும் பார்ப்பதனால் சமூகத்தில் சமத்துவமின்மை என்பது ஏற்படுகிறது. சமத்துவமின்மையால் வர்க்கமோதல், பாலினமோதல், இனமோதல் என பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

**சமூக அமைப்பு**

பரந்த இச்சமூகத்தில் மக்கள் அனைவரும் மதம், இனம் ரீதியாக தங்களுக்குள்ளாகவே பாகுபாடு செய்துக் கொள்கின்றனர். மேலும், பகுத்தறிவு என்னும் எண்ணம் மறைந்து மோதல் எண்ணமானது ஏற்படுகிறது. இதனை மறுக்கும் விதமாக வள்ளுவர்,

**"இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப் படும்"** (குறள் - 698)

எமக்கு இளையவர், எமக்கு இன்னமுறை உடையவர் என்று இகழாமல் அவருடையநிலைக்கு ஏற்றவாறு அமைந்த புகழுடன் பொருந்த நடக்க வேண்டும். இவ்வாறு அவரது சிந்தனைத் திறனுக்கு ஏற்ப ஒரு மனிதனுக்கு மரியாதை தந்தால் இச்சமூகமானது சிக்கல்கள் யாவையும் சந்திக்காது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**"பழுதெண்ணும் மந்திரியின் பக்கததுள் தெவ்வோர்**
**எழுபது கோடி உறும்"** (குறள் - 639)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தவறான வழியை எண்ணிக் கூறுகின்ற அமைச்சனை விட எழுபது கோடி பகைவர் பக்கத்தில் இருந்தாலும் நன்மையாகும். இச்சமுதாயத்தில் மனிதர்களுக்குள்ளாக தவறான எண்ணங்களைப் பரப்புகின்ற மனிதனை ஒழித்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே சமூகமானது எவ்வித முரண்பாடும் இன்றி செயல்படும்.

### குறியீட்டு இடைவினையியல் கோட்பாடு

மக்கள் அல்லது ஒரு தனிமனிதன் தனது அனுபவங்களின் வாயிலாக புவியின் யதார்த்தத்தினை எவ்வாறு உருவாக்குகிறார்கள். மனிதன் தனது வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும், பொருளுக்கும் குறிப்பிட் ஒரு குறியீட்டினை வைத்துக் கொள்கிறான். அதன் வாயிலாக தான் கூற வருகின்ற செய்திகளையும், கருத்துக்களையும் குறியீட்டின் மூலம் கூற எண்ணுகிறான். அவ்வகையில், வள்ளுவர் ஒரு மனிதனின் உருவத்தினை ஒரு பொருளுடன் குறியீடாகக் கூறுகின்றான்.

"குலங்கள், அவற்றிற்குரியகுலக்குறிகள், அக்குலக்குறிகள் தொடர்பான அந்தந்தக் குலங்களின் மக்களிடம் வழங்கும் நம்பிக்கைகள், புராணங்கள் போன்ற வழக்காறுகள் , அவர்கள்இயற்றும்சடங்குமுறைகள், உறவுமுறைகள் போன்ற அனைத்துவகையானக் கூறுகளையும் உட்கொண்டிருக்கும் நிறுவனமே *"Totemism "* அல்லது 'குலக்குறியியல்' எனப்படும்." (குலக்குறிகளும் மீனவர் வழக்காறுகளும்)

**"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து" (குறள் - 667 )**

உருளும் பெரியதேர்க்கு அச்சில் இருந்து தாங்கும் சிறிய அச்சாணியே துணை புரிகின்றன. அதுபோல எத்துணைப் பெரிய செயலாக இருப்பினும் அதன் மூலம் என்பது சிறியது. அவர்களுடைய உருவின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது.

மேலும், மக்களின் முகத்தோற்றத்திற்கு அனிச்ச மலரினை ஒப்புமையிட்டு மறைமுகமாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து" (குறள் - 90)**

அனிச்சம் மலரானது முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும் தன்மைக் கொண்டது. அதுபோல விருந்தினரை வாடிய முகத்துடன் வரவேற்றால் விருந்தினரின் முகமானது அனிச்சமலரினைப் போல வாடக் கூடும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இதன்மூலம் மக்களது உணர்வுகளும் குறியீடுகளின் வாயிலாக வெளிப்படக்கூடும்.

### தொகுப்புரை

- சமூகத்தில் தனிமனிதன் மற்றும் குடும்பத்தின் செயல்பாடு முறைக் குறைத்து விரிவாகக் கண்டோம். சமூகவியல் கோட்பாடு குறித்த கருத்துக்களும், அவற்றின் வகைகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.
- சமூகத்தில் குடும்பம், கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றின் செயல்பாட்டுமுறையும், சமூகத்தின் முரண்பாடு கோட்பாட்டு முறைகளும் குறித்து விரிவாகக் கண்டோம்.
- தனிமனிதன் மற்றும் குடும்பத்தில் வாழும் மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் குறியீட்டு முறைகள் குறித்தும் விரிவாகக் கண்டோம்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 07. நற்றிணைப் பாடல்களில் ஐந்தறிவுச் சொற்புலம் (ஆநிரை)

**ஆய்வாளர்**
**ரா.அஜித்குமார்**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637 401
நாமக்கல் மாவட்டம்

**நெறியாளர்**
**முனைவர் க.அன்பழகன்**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் 637 401
நாமக்கல் மாவட்டம்.

ajajithikumarr@gmail.com - 8760760868

*DOI 10.5281/zenodo.17252024.*

**Abstract**

Continuous studies are being conducted on the Sangam literary corpus that has been collected. Studies on the words morphemes in that corpus are being carried out day by day by linguists and lexicographers with a long-term perspective. Even the Nikandus (Ancient Thesauri in Verbs) in that emerged in the Middle Ages can be considered a research collection. The words of Sangam literary corpus have been written separately and presented as a collection, making it special for Tamil. This Nikandus was a compilation of words in the entire literature, divided by subject. In this way, the aim of this study is to take only the root and group the words into a field based on the biological principles of Tolkappiyar and subdivide them into one field. Tolkappiyar presents the theory of the biological vocabulary through genetics.

## முன்னுரை

தொகையாகக் கிடைத்த சங்க இலக்கியப் பனுவலின்மீது தொடர் ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டு வருகின்றன. அந்தப் பனுவலிலுள்ள சொற்களைக் குறித்த ஆய்வுகள் மொழியியல் அறிஞர்களாலும் அகராதி அறிஞர்களாலும் நாளுக்கு நாள் நீண்ட நோக்குடன் தழையப்பட்டு வருகின்றது. இடைக்காலத்தில் எழுந்த நிகண்டுகள் கூட ஓர் ஆய்வுப் தொகுப்பு எனலாம். சங்க இலக்கியச் சொற்களைத் தனித்தனியாகப் பொருள் எழுதி, அதைத் தொகுதியாக வழங்கித் தமிழுக்குச் சிறப்புச் செய்துள்ளது. நிகண்டானது, ஒட்டுமொத்த இலக்கியங்களில் உள்ள சொற்களைப் பொருள் வாரியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டது. அவ்வகையில் நற்றிணை மட்டும் எடுத்து, சொற்களை தொல்காப்பிய உயிரியல் கோட்பாடுகளின் அடிப்படையில் தொகுத்து ஒரு புலத்திற்குள் அடக்குவது இவ்வாய்வின் நோக்கமாகும். தொல்காப்பியர் உயிர்ச் சொற்புலம் குறித்த கோட்பாட்டை மரபியல் வழியாக எடுத்துரைக்கிறார்.

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**முன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மன்னே**
**நேர்தின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (தொல்.பொருள்.571)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இவ்வாறு ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு என உயிர்களைப் பகுத்துள்ளார். இந்தப் பாகுபாட்டை அடிப்படையாக வைத்து உயிர்களுக்குத் தகுந்தாற்போல் இளமைப்பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்களைப் பகுத்துள்ளார். இதை,

**"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்**
**பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்**
**கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்**
**றொன்பதும் குழவியோ டிளமைப் பெயரே" (தொல்.பொருள்.545)**

என்றிவை எல்லாம் இளமைப் பெயர்களைக் குறித்து வரும் சொற்கள் என்கிறார் தொல்காப்பியர். இதனையடுத்து,

**"எருது ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்**
**சேவும் சேவலும் இரலையும் கலையும்**
**மோத்தையுங் தகரும் உதளும் அப்பரும்**
**போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்**
**யாத்த ஆண்பாற் பெயரென மொழிப" (தொல்.பொருள்.546)**

இவைகள் எல்லாம் ஆண்பாற் பெயர்களால் வரும் சொற்கள் என்கிறார் தொல்காப்பியர். மேலும்,

**"பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்**
**மூடும் நாகுங் கடமையும் அளகும்**
**மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்**
**அந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே" (தொல். பொருள்.547)**

என்ற பெண்பாற் பெயர்களைக் குறித்து வரும் சொற்கள் என்கிறார் தொல்காப்பியர். ஆகவே உயிர்ப் பாகுபாட்டைப் பகுத்த தொல்காப்பியர், ஆண், பெண், இளமை என மூன்றாகப் பகுத்து, அவ்வுயிர்கள் எல்லாம் வெவ்வேறு மாதிரியான பெயர்களின் அடிப்படையில் சொற்கள் வரும் என்று உணர்த்துவதை அறிய முடிகிறது. இதன் அடிப்படையில் நற்றிணைச் சொற்களில் ஆநிரை உயிர்களை மட்டும் ஆய்வுக் களப்பொருளாக எடுத்துக்கொண்டு, அவற்றைத் தொகுத்துப் புலமாக அமைக்கலாம் என்பதனை இவ்வாய்வு வழியே வெளிக்கொணரப்படுகின்றது.

**ஆண்பாற்பெயர்த் தொகுதி**

நற்றிணைப் பாடல்களில் ஐந்தறிவு உயிரான ஆநிரையும் ஒன்று. இதில் ஆண்பால் உயிர்களுக்கு ஏற்றை, எருமைக்கடா என இரண்டுச் சொற்கள் அமைந்துள்ளன. அவை

**ஏற்றை (காளை)**

ஏற்றை என்ற சொல் நற்றிணையில் ஓரிடத்தில் பயன்று வந்துள்ளது.

ஏற்றை - நற்.211:5

**போத்து எருமைக்கடா (ஆன்பாற்பெயர்)**

எருமை - நற்.330:1

மேற்கண்ட ஏற்றையும் எருமையும் ஐந்தறிவுச்சொற்புலம் ஆநிரைகளில் ஆண்பாற்பெயர்த் தொகுதிக்குள் இவ்வாறு தொகுத்துரைக்கலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**பெண்பாற்பெயர்த் தொகுதி**

நற்றிணைச் சொற்களில் ஆநிரைப் பெயர்கள் குறித்து அமைந்தவிடங்களில் பெண்பாலுக்குரிய சொற்களே மிகுதியாக அமைந்துள்ளன. ஆ, ஆமான், ஆயம், ஆன், இனநிரை, சேதா, எருது, எருமை, பகடு, காரான் முதலிய பெயர்கள் வந்துள்ளதைக் கீழ்க்கண்டவற்றில் காணலாம்.

**ஆ (பசு)**

நற்றிணையில் ஆ(பசு) என்ற சொல் ஏழு இடங்களில் பயன்று வந்துள்ளன.

பல்ஆ - நற்.100:8
ஆவின் - நற்.109:8
ஆதின்றென - நற்.179:1
ஆபூண் - நற்.264:8
ஆ - நற்.290:2
ஆபுறம் - நற்.343:3
பல்ஆ - நற்.364:9
ஆபுலம் - நற்.395:8

**ஆமான் (காட்டுப்பசு)**

காட்டுப்பசு குறித்து நற்றிணையில் இரண்டு இடங்களில் வருகின்றன.

ஆமான் - நற்.57:1, 165:1

**ஆயம் (பசுக்கூட்டம்)**

ஆயம் என்கின்ற பசுக்கூடம் குறித்து நற்றிணையில் ஓரிடத்தில் வந்துள்ளன.

ஆயத்து - நற்.37:2

**ஆன் (பசு)**

ஆன் எனும் சொல்லுக்குப் பசு என்ற பொருளுண்டு. இச்சொல் நற்றிணைப் பாடல்களில் நான்கு இடங்களில் பயன்று வந்துள்ளன.

ஓர் ஆன் - நற்.37:2
நல் ஆன் - நற்.69:7
ஆன் - நற்.171:5, 240:8

**இனநிரை**

இனநிரை என்ற சொல் நற்றிணையில் ஓரிடத்தில் பயின்று வந்துள்ளது.

இன நிரை - நற்.291:8

**சேதா (சிவந்த பசு)**

சேதா என்ற சொல் சிவந்த நிறைமுடைய பசு வகை குறிக்கிறது.

சேதா - நற்.213:4, 359:1

**எருது**

எருது என்ற சொல் நற்றிணையில் இரண்டு இடங்களில் பயன்று வந்துள்ளன.

எருது - நற்.125:9, 179:8, 182:2, 271:4, 293:9
நல் எருது - நற்.315:4


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**எருமை**

எருமை என்ற சொல் நற்றிணையில் ஆறு இடங்களில் பயன்று வந்துள்ளன.

எருமை - நற்.60:2, 80:1, 120:1, 260:1, 271:1, 330:1

**பகடு (எருது)**

பகடு - நற்.290:3

**காரான் (எருமை)**

காரான் என்ற சொல் எருமை என்னும் பொருளில், நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.

காரான் - நற்.80:1, 391:4

மேற்கண்டவாறு பகுத்து, தொகையாக்கப்பட்டதை நற்றிணை ஐந்தறிவுச் சொற்புலத்தில் பெண்பாற்பெயர்த் தொகுதிக்குள் வைத்த அடக்கலாம்.

**இளமைப்பெயர்த் தொகுதி**

நற்றிணையில் உயிரினங்கள் குறித்த இளமைப்பெயர்கள் சொற்களின்வழி வந்துள்ளன. இதில் ஆநிரை இளமைப்பெயர்கள் கன்று, எருமைக் கன்று, குழவி என மூன்று பெயர்களில் வந்துள்ளன.

**கன்று (பசுங்கன்று)**

பசுங்கன்று குறித்து நற்றிணையில் ஐந்து இடங்களில் பயன்று வந்துள்ளன.

கன்றொடு - நற்.57:2, நற்.171:5

கன்று - நற்.213:2, 359:3

கன்றுடைப் - நற்.290:2

**எருமைக் கன்று**

எருமைக் கன்று குறித்து ஓரிடத்தில் பயன்று வந்துள்ளன.

கொண்மார் கன்று - நற்.80:2

**(குழவி) இளமைப்பெயர்**

குழவி என்ற சொல் பசுங்கன்று, எருமைக்கன்று என்று பொருள் உணர்த்துகின்றன.

குழவி - நற்.213:4 (பசுங்கன்று)

குழவி - நற்.120:1, 271:1 (எருமைக்கன்று)

மேற்கண்ட கன்று, எருமைக்கன்று, குழவி ஆகிய மூன்றையும் இவ்வாறு பாடல்களின் வழியே பகுத்து, பின் அவைகளை நற்றிணை ஐந்தறிவுச் சொற்புலத்தில் இளமைப்பெயர்த் தொகுதிக்குள் அடக்கித் தொகுக்கலாம்.

இவ்வாறு சங்க இலக்கியத் தொகை நூல்களில் ஒன்றான நற்றிணைப் பாடலிலுள்ள சொற்களை, உயிர்ப்புலம் வழியாக ஆண்பாற்பெயர்த் தொகுதி, பெண்பாற்பெயர்த் தொகுதி, இளமைப்பெயர்த் தொகுதி எனத் தனித்தனியாகத் தொகுக்க முடிகிறது. இந்த முறையைப் பயன்படுத்தி மற்ற சங்க இலக்கியத் தொகை நூல்களில் உள்ள சொற்களையும் தொகுத்து அடக்கலாம்.

**துணை நூற்பட்டியல்**

1. சுப்பிரமணியன், ச.வே., நற்றிணை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.
2. இளம்பூரணனர், தொல்காப்பியப் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 08. தொல்காப்பியத்தில் பெண்கட்டமைப்பு

**திருமதி இர.கிருஷ்ணவேணி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ்
இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.
Krishnaveni-tam@sfrcollege.edu.in
*DOI 10.5281/zenodo.17252045.*

**Abstract:**

Based on cultural development, the human race has been divided into male and female genders. From the Sangam period to the present day, the importance of women has been suppressed. We will see this through the story of Tolkappiyam, the first son of the Tamil woman. The purpose of this article is to study the four female character structures in Tolkappiyam: the heroine, the friend, the nurse, and the companion.

**KeyWords:** Tholkappiyam - Female - Cultural - Tamil Women.

**முன்னுரை:**

பண்பாட்டு வளர்ச்சியின் அடிப்படையில் மனித இனத்தை ஆண் , பெண் என்ற பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. சங்ககாலம் முதல் சமகாலம் வரை பெண்ணிற்கான முக்கியத்துவம் ஒடுக்கப்பட்டுள்ளது எனலாம். இதனையே தமிழன்னையின் முதல் மகனாம் தொல்காப்பியத்தின் வழிக் காண்போம். தொல்காப்பியத்தில் பெண்பாத்திரக் கட்டமைப்புகளாக விளங்கக்கூடிய தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என இந்நால்வரை பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தலைவி:**

அக இலக்கியங்களில் பெரும்பாலும் பெண்ணை மையமிட்டே காட்சிகள் பின்னப்பட்டுள்ளன. அகத்திணை என்னும் வட்டத்திற்கு மையப்புள்ளியாக இருப்பவள் தலைவி. உரிப்பொருளாகிய ஐவகை உணர்வுகளும் தலைவியை மையமாகக் கொண்டவை.

தலைவியின் உணர்வானது மனதால் இணைந்த தலைவனுடன் மணத்தாலும் இணைய விழைகிறாள். எனவே தலைவியின் மன உணர்வுகள் தலைவனை மணப்பதற்கான உணர்வு வெளிப்பாடுகளாகவே பெரும்பாலும் அமைகின்றன. தலைவியை மையமிட்டு அகத்திணை ஒழுக்கம் அமைந்திருப்பினும் , தன்னுடைய மன உணர்வுகளை வெளிப்படையாக உணர்த்துவதற்கான சமூகச்சூழலினை அன்றைய பெண்கள் பெற்றிடவில்லை என்பதை பின்வரும் நிகழ்வுளால் அறியலாம்.

**அறத்தொடு நிற்றல்:**

களவொழுக்கம் என்பது என்னதான் உயர்வாகப் பேசப்பட்டாலும் 'அறத்தாறு ' என்றே பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்பெற்றாலும் , களவொழுக்கத்திலே காதலர்கள் நீண்ட காலம் நீட்டிக்க முடியாது . நீட்டிக்கவும் கூடாது. களவின் முடிவு கற்பு என்னும் வரன்முறையே ஆகும்.

இத்தகைய களவு நெறியை கற்புநெறியாக மாற்ற எண்ணுகிற பெண்ணே முதலில் அறத்தொடு நிற்கிறாள். தலைவி முதலில் தோழியிடமும் , தோழி செவிலிடமும் செவிலி நற்றாயிடமும் அறத்தொடு நிற்கின்றனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மாறாக காதலி கரம்பிடிக்க காதலன் அறத்தொடு நின்றாதாக எந்த இலக்கணமும் சுட்டவில்லை. இதனால் அறத்தொடு நிற்றல் என்பது ஆணிற்கு மட்டும் கூறாது பெண்ணிற்கு மட்டும் கூறுவது எங்ஙனம்?

தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்பது போன்று தலைவி நற்றாயிடம் அறத்தொடு நிற்பதில்லை. அதற்கான சமூகச்சூழலை தலைவி பெற்றிடவில்லை என்பது தெளிவு. மேலும் ,அறத்தொடு நிற்பது பெண்ணிற்குரியதாகவும் ,

**"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மை யான "** **தொல்- 38**

மடலேறுதல் என்பது பெண்ணிற்குரியாதாக சொல்லப்படவில்லை. இந்நூற்பாவினை விளக்கும் இளம்பூரணர் " எல்லாக் குலத்தினிடத்தினும் பெண்பால் மடலேறுதல் இல்லை. பொழிவு பெறு நெறிமை இல்லாமையின் என்பார்.

நீதி நூலாகிய திருக்குறளில் , மடலேறா பெண்டிர் பெருமையாக ,

**"கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்"** **திருக்குறள் - 1137**

என்று மொழிகிறது. பெண் ஆணைப்போல மடலேறாவிடிலும் , தன் களவொழுக்கத்தை நேரடியாக பெற்றோரிடம் கூற இயலாதச் சமூகச்சூழல் புலனாகிறது.

உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலாத சூழலிலே பெண் கட்டுண்டு கிடந்தாள். பெண் என்பவள் தன்மானமிக்கவள் அதனால் அவள் மடலேறுதல் இல்லை என்று சமாதனம் கூற முற்படினும், மடலுறுதல் என்பது பெண் செய்கை இல்லை என்பது தெளிவு.

**ஒத்த நிலை:**

தலைவனும் தலைவியும் ஒத்த நிலையினராய் இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் அடுத்த அடியிலே அடிக்கொடுப்பது போல தலைவன் மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே என மொழிகிறது. இதனால் தலைவன் எல்லா நிலையிலும் மிகுந்து இருக்கலாம் என்று இலக்கண விதியைத் தளர்த்துகிறது.

மேலும்,

**"கிழவி சொல்லின் அவளறி கிளவி"** **தொல்- 297**
**"சொல்லெதிர் மொழிதல் கிழத்திக் கில்லை "** **தொல்- 108**

எனக் கூறுவதிலிருந்து தலைவியை மிக்கோளாக காட்டவில்லை என்பது புலனாகிறது.

**கற்புக்கொள்கை:**

சங்க கால மகளிரின் உயிர்க்கொள்கையாகக் கற்புக்கொள்கை இருந்தது. உயிரைக்காட்டிலும் சிறந்தாக நாணத்தையும் , நாணத்தைக் காட்டிலும் சிறந்தாக கற்பையும் மதித்தனர். இதனையே,

**" உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர்க் காட்சிக் கற்புச்சிறந்த தன்றென "** **தொல்- கள - 23**

என்பர் தொல்காப்பியர். இன்னும் ஒரு படி மேலாக நம் பாட்டன் வள்ளுவன் 'கற்பு என்னும் திண்மை ' என மொழிகிறார் .

**" பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின் "** **திருக்குறள் - 54**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஆண் பரத்தமை ஒழுக்கத்தினை மேற்கொண்டிருப்பினும் பெண் (தலைவி ) அதனைப் பொறுத்துக் கொள்ளும் சமூக பின்புலமும் காணப்படுகின்றது.

பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்வது தவறென்று கருதப்படதக் காலக்கட்டத்தில் , சங்க இலக்கியப் பாடலான புறநானூற்றில் சோழன் நலங்கிள்ளி என்ற மன்னன்,

**"தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்**
**பல்லிருங் கூந்தல் மகளிர்**
**ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே "** புறம் - 73

என மொழிகிறான் . இதனால் அம்மன்னன் தன் மனைவியின் மாட்டுக்கொண்ட அன்பும் , பொதுமகளிரை நாடுவது மானக்குறைவு எனக் கருவதும் இங்கு குறிக்கத்தக்கது.

கற்பு என்னும் தொன்மமே பெண் விடுதலைக்குத் தடையாக அமைகிறது . பெண்ணியவாதிகள் கற்பு என்னும் கண்ணோட்டத்தை இரண்டு வகைகளில் சிந்திக்கின்றனர். ஆண்களைப்போலவே பெண்களும் கட்டுப்பாடற்ற கற்புரிமை பெறுவது ஒருவகையெனில் , பெண் , ஆண் என்ற பாலின பாகுபாடுயின்றி கற்பு என்பது பொதுவாக்கப்பட வேண்டும் என்பதாகும். இதனையே ,

**"கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு**
**கட்சிக்கும் அஃது பொதவில் வைப்போம் "**

**பாரதியார் - கும்மியடிப்பாடல்**

பாரதி , பெண்களை மட்டும் கட்டுப்படுத்தும் கற்பு என்ற பழைய கருத்தை உடைத்து, கற்பு என்பது ஒரு நன்னெறியாக , ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானது என்ற புதிய வரையறையை உருவாக்குகிறார். அகத்திணைப்பாடல்களில் தலைவியின் கூற்று பெரும்பாலும் அச்சஉணர்வின் காரணமாகவும், துயர உணர்வின் காரணமாகவும் அமைகிறது.

**தோழி** :

அகத்திணை மாந்தர்களில் தோழிக்கென தனிச்சிறப்பிடம் உண்டு.

தலைவி - தோழி என்றிரு பாத்திரங்களும் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்துள்ளது.

தலைவி தலைவனை ஊடலில் மட்டுமே இடித்துரைக்கும் உரிமைப் பெற்றவளாகத் திகழ்கிறாள். ஆனால் களவு, கற்பு எனவிரு நிலைகளிலும் தலைவனை இடித்துரைக்கும் நிலையில் நிற்பவள் தோழி. இதனால் தலைவியன் கைக்கோளில் பெரும்பங்கு ஏற்பவள் தோழ என்பது தெரிகிறது.

தலைவியன் களவினை வரைவிற்கு ஆற்றுப்படுத்தும் வரைவு கடாதல் துறை , களவையும் கற்பையும் இணைத்து நிற்கும் அறத்தொடு நிற்றல் துறை , களவு கற்பாக மாறக்கூடிய சூழல் தெளிவில்லாத போது தோன்றும் உடன்போக்குத் துறையென தலைவியின் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு திருப்புமுனைக்கும் தோழியே தலைவியுடன் நிற்கிறாள் , ஆதிக்கம் செலுத்துகிறாள்.

கற்பில் தலைவனைச் செலவழுங்குவித்தலும் , தலைவனைப் பிரிந்த தலைவியைத் தேற்றுதலும் தலைவனுக்கு வாயில் நேர்தல் , வாயில் மறுத்தல் துறைகளிலும் தோழியே முன்னிறுத்தப்படுகிறாள்.

மேலும் வாயில் மறுத்தல் என்னும் துறை பிற்கால இலக்கண நூல்களில் காணப்படாமை நோக்குதற்குரியது . பெண்ணாகப்பட்டவள் (தோழி) உயர்ந்த ஆண்மகனை


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

(தலைவனை) வாயில் மறுப்பதா? என்ற எண்ணம் எழுந்தமையும் , பெண்ணுரிமை மறுக்கப்பட்டமையும் இந்நிலைழமக்கு காரணம் எனலாம்.

அக இலக்கியங்களில் புலவர் கூற்று நேரடியாக அமைவதில்லை. புலவர் தம் கூற்றினைத் தோழியின் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார். எனவே புலவர் நெஞ்சின் வாயாகவே தோழி காணப்படுகிறாள் என்பது வெளிப்படையாகிறது.

தலைவியின் நலனில் அக்கறைக் கொண்டுள்ள தோழியே களவு கற்பு என்றிரு நிலைகளிலும் தலைவனுடன் உரையாடுகிறாள். மாறாக , தலைவனின் நலனில் அக்கறை கொண்ட தலைவனின் நண்பனாகிய பாணன் கற்பு வாழ்க்கையில் மட்டுமே உரையாடுகிறான் . களவு வாழ்க்கையில் அவன் உரையாடுவதில்லை இது நோக்குதற்குரியது.

ஓர் ஆணை களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கைக்கு இழுத்துச் செல்லக்கூடியவாளாக பெண் விளக்குகிறாள். காரணம் பெண்ணை நுகர்வுப் பொருளாக மட்டுமே ஆண் பயன்படுத்திவிடக் கூடாது என்ற பரிதவிக்கும் பெண்ணின் மனம் மறறவருக்கு அறியப்படுவதில்லை.

**செவிலி- நற்றாய் :**

அகத்திணை மாந்தர்களுள் தலைவியின் தாய் நற்றாய் எனவும் , தோழியின் தாய் செவிலி எனவும் அழைக்கப்படும் மரபினைத்

**" தோழி தானே செவிலியது மகளே "** **தொல்- கள** - 127

எனச் சுட்டுவர் தொல்காப்பியர். தோழியும் தலைவியும் கொண்ட உறவின் செறிவைச் செவிலி - நற்றாய் உறவுநிலையிலும் காண முடிகிறது. செவிலியின் மகளாகத் தோழியைத் தொல்காப்பியர் குறிப்பிடினும் , சங்க இலக்கியங்களில் செவிலித்தாய்- தோழி இவர்களுக்கான உறவு நிலையை வற்புறுத்துகின்ற பாடல்கள் காணப்படவில்லை.

தோழியைப் போல செவிலியைப் பற்றியும் தனிப்பட்ட வாழ்க்கை சுட்டப்படவில்லை. மேலும் தொல்காப்பியத்தில் செவிலி - நற்றாய் என இரு சொற்கள் பயன்படுத்தப் படினும் இலக்கியங்களில் அன்னை, தாயார் என்ற பொதுச் சொல்லாலே அழைக்கப்படுகின்றனர்.

**முடிவுரை :**

அறத்தொடு நிற்றல், வரைவுகாடதல் போன்ற துறைகள் ஆண்மகனை களவிலிருந்து கற்புக்கு மாற்ற வேண்டிய சமூகச் சூழலின் காரணமாக பெண்ணே அதனை முன்னெடுக்கிறாள். தலைவனின் நண்பனாகிய பாணன் கற்பு வாழ்க்கையில் மட்டுமே உரையாடுகிறான் . களவு வாழ்க்கையில் அவன் உரையாடுவதில்லை. களவு வாழ்க்கையில் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் சாட்சியும் அடையாளமும் கொண்டதாகக் கற்பு வாழ்க்கை அமைந்தது.

கற்பு என்பது சொல் திறம்பாமை என்று கவி பாடிய கலித்தொகை பிறந்த நாட்டில் கற்பை அந்நியரின் ஆதிக்கத்தால் உடல் சார் மொழியாக மாறியது . சமன்மைச் சமுதாயத்திற்கு அடிப்படையான பெண்சுகந்திரம் என்பது தற்காலம் வரை கிடைக்கப்படாத ஒன்றாகவே அமைந்துள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**பார்வை நூல்கள் :**

1. இளம்பூரணர் உரை - தொல்காப்பியம் - பொருளதிகாரம்
2. பரிமேலழகர் உரை - திருக்குறள்
3. ஆ.இராமகிருஷ்ணன் - அகத்திணை மாந்தர்கள் ஓர் ஆய்வு
4. சரளா இராஜகோபலன் - இலக்கிங்களில் தோழி

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 09. கலித்தொகை காட்டும் நம்பிக்கைகள்

**திருமதி மா.முத்து காயத்ரி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.**
muthugayathri-tam@sfrcollege.edu.in

*DOI 10.5281/zenodo.17252067.*

**Abstract**

Literature is a repository that records and preserves the development and evolution of the time. People and their cultural customs are changing with the change of time. Some people are living forgetting culture. But the fact that culture and customs were highly respected and practiced in the life of our ancient Tamils is realized through the literature that emerged at that time. In this way, the Sangam literature that emerged in the 500th century BC reflects the life of the ancient Tamils. This research article aims to highlight the beliefs of the people as contained in the Kalithokya, one of the Sangam literatures.

**Key Words**: Sangam - Literature - Kalithogai - Cultural

## முன்னுரை

இலக்கியங்கள் காலச்சூழலின் வளர்ச்சிப் பரிணாமத்தை பதிவுசெய்துப் பாதுகாக்கும் பெட்டகமாகும். கால மாற்றத்திற்கேற்ப மக்களும் அவர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் மாறிக்கொண்டு தான் வருகின்றன. சிலர் பண்பாட்டினையே மறந்து வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் நம் பழந்தமிழரின் வாழ்வியலில் பண்பாடு, பழக்கவழக்கங்கள் பெரிதும் மதிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் உணரலாகின்றது. அவ்வகையில் கி.மு.500 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியலைப் பறைச்சாற்றுகின்றன. சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில் இடம்பெற்றுள்ள மக்களின் நம்பிக்கையினை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## பண்பாடு - விளக்கம்

பண்பாடு என்பதற்கு 'பண்படுதல்','சீர்படுத்தல்','திருத்தல்' என்று பொருள் உண்டு. சமூகத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் நல்முறையில் ஒழுங்குப்படுத்துவது 'பண்பாடு' ஆகும். பண்பாட என்பது வாழ்க்கைமுறையாகும். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு பண்பாட்டுக் கலாச்சாரம் உண்டு. **"பண்பாடானது இசை, இலக்கியம், ஓவியம், வாழ்க்கைமுறை, உணவுமுறை, நாடகம், சிற்பம், திரைப்படம் போன்ற மனிதனுடைய கலைப்பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றன."**[1] என்று பண்பாடு குறித்து விளக்கமளிக்கிறார், எட்வார்ட் டெயிலர்.

பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் தங்களின் வாழ்க்கைத் தேவைக்களுக்காக செய்துக் கொள்ளும் அனைத்து வளையானப் பொருட்களும், பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். மக்களின் பொருள் வடிவம் பெறாத கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன பொருள் சாரா பண்பாட்டில் அடங்கும்.

## கலித்தொகைக் காட்டும் நம்பிக்கைகள்

பண்டைய காலத்திலிருந்து மக்களிடம் பலவகையான நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. என்ன நடக்கும் என்று அறியாத நிலையில் மனிதவாழ்வு நம்பிக்கையைப்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பற்றிக் கொள்கிறது. இந்நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு காக்கப்படுகின்றன. **“நம்பிக்கை என்பது பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்”** [2]

கலித்தொகையில் நிமித்தம் தொடர்பான நம்பிக்கை, இறப்பு குறித்த நம்பிக்கை, அறம்சார் நம்பிக்கை, சூளுரை நம்பிக்கை, திருமணம் மற்றும் தெய்வ நம்பிக்கை போன்றன இடம்பெற்றுள்ளன.

**நிமித்தம் தொடர்பான நம்பிக்கை**

நிமித்தம் என்பது நல்லநேரத்தை குறிக்கும். ‘நாளும் கோளும் நலிந்தோர்க்கில்லை’ என்பது பழமொழி என்றாலும், வீட்டில் சுபகாரியங்கள் நடத்துவதற்கு முன் நல்லநாள், நல்லநேரம் பார்க்கும் பழக்கம் நம்மிடையே உண்டு. இப்பழக்கம் பழங்காலம் முதலே இருந்து வருகிறது என்பதற்கு தொல்காப்பியரின் வார்த்தைகளே ஆதாரம். இதனை,

**'மன்னும் நிமித்தம்'**[3] என்றும்,

**“நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்”**[4] என்றும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். கலித்தொகையில் திருமணத்திற்கு நல்லநாள் பார்க்கும் வழக்கம் இடம்பெற்றுள்ளதை, நாள் கோண்மீன் பார்த்தல் **“நாளும் கோளும் மீன் தகைத்தலும் தகைமே”**[5]
என்னும் பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

பெண்களின் இடது கண் துடித்தால் ஏதாவதொரு நல்ல செயல் நடைபெறும் என்ற நம்பிக்கையும் ஒரு நல்ல செயலைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது பல்லி ஒலி எழுப்பினால் அச்செயல் நல்லபடியாக முடியும் என்ற நம்பிக்கையும் சங்க காலத்தில் மக்களிடையே இருந்து வந்தது.

**“புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்**
**பல்லியம் பாங்கு ஒத்து இசைத்தன**
**நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே”**[6]

என்ற கலித்தொகை பாடலடிகள் தலைவனின் வரவை எதிர்ப்பார்த்து காத்திருக்கும் தலைவியின் இடக்கண் துடிப்பதையும் தலைவன் வரவை அறிவிக்கும் அறிகுறியாக பல்லி சப்தமிடுவதையும் ஆயர் ஊதும் குழலோசை தலைவனை வரவைக் கூறுவதையும் தலைவி நன்னிமித்தமாக நம்பி மகிழ்வதைப் புலப்படுத்துகின்றன.மேலும், சிற்றிலில் தாம் இழைக்கும் கூடற்சுழி கூடினாற் பிரிந்திருக்குந் தங்கணவர் விரைவில் வருவார் என்ற நம்பிக்கை மகளிடையே இருந்ததை,

**“கோடுவாய்க் கூடாப் பிறையை பிறிது ஒன்று**
**நாடுவேன் கண்டனென்”**[7] என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது.

**இறப்பு குறித்த நம்பிக்கை**

பேய், பிசாசு பற்றிய நம்பிக்கைகள் மக்களிடையே நீண்ட காலமாக உள்ளது. இயல்பான இறப்பின்றி, இறந்தவர்கள் ஆவியாக மாறிச் சுற்றுவர் என்பது பழங்கால நம்பிக்கை. கலித்தொகையில் குறிஞ்சி நில மக்கள் பிசாசுகளை ஆண், பெண் எனப் பாகுபாடு பிரித்து நம்பிக்கைக் கொண்டிருந்தனர் என்பதை,

**“சிறுமி! நீ - மற்று யான்**
**ஏனைப் பிசாசு அருள் என்னை நலிதரின்**
**இவ் ஊர்ப்பலி நீ பெறாஅமல் கொள்வேன்**
**எனப் பலவும் தாங்காது வாய்பாடி நிற்ப**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**முதுபார்ப்பான் அஞ்சினன் ஆதல் அறிந்து.....”[8]**

என்ற பாடலடியில், சிறுமியே, நீ என் கையில் வந்து அகப்பட்டுக் கொண்டாய். யான், பெண் பிசாசாகிய நின்னை ஒழிந்த ஆண்பாற் பிசாசு. என்னை ஏற்று அருள்க. எனக்கு அருள் செய்யாது வருந்துவாயானால் இவ்வூரில் நீ பலி கொள்ளாவிடாமல் முழுவதும் நானே எடுத்துக் கொள்வேன் என்று பலவாறாக கூறினான் தலைவன். அந்த முது பார்ப்பான் என்னை பிசாசு என்று கருதி அஞ்சினான் என்பதை அறிந்து கொண்டேன் என்று தலைவி தோழியிடம் கூறினாள். தீய குணம், ஒழுக்கம் உடையவன் ஒருவன் இருளில் பெண்ணைக் கண்டு பெண் பிசாசு என்று அஞ்சுவதாகக் காணப்படுகின்றது. எனவே, பிசாசு பற்றிய நம்பிக்கை குறிஞ்சி நிலமக்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. மேலும் கணவனை இழந்த மகளிர் கணவனின் மேலுள்ள காதலால் தானும் இறந்து கணவனுடன் சுவர்க்கத்தில் வாழ நினைப்பதை,

**“என் கணவர் இல்லாவிட்டால், மாட்சிமை பெற்ற மனம்**
**கொண்ட துறவிகள் வேண்டிய**
**வேண்டியாங்கு எய்துவது உண்மையானால்,**
**மாசுபடாத துறக்கத்தில் அவருடன் நான் வாழ்வேன்”[9]**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**அறம்சார் நம்பிக்கை**

அறமே ஆற்றல் என்றும் அறத்தின் மூலம் தான் நல்ல செயல்களை செய்ய முடியும் என்று மக்கள் நம்பினர். நன்மைக்கு, எதிரான செயல்களை செய்பவரது நாட்டில் இயற்கையாக விளையும் பொருள் விளையாது என்ற நம்பிக்கை குறிஞ்சி நில மக்களிடம் காணப்பட்டது.

**“சிறுகுடியீரே, சிறுகுடியீரே!**
**வள்ளி கீழ் விழர் வரைமிசைத் தேன் தொடா!**
**கொல்லை குரல் வாங்கி ஈனா - மலை வாழ்நர்**
**அல்ல புரிந்து ஒழுகலான்"[10]**

என்ற பாடலடியில், சிறுகுடியில் உள்ளீரே, சிறுகுடியில் உள்ளீரே, நம் மலை வாழ்நர் இவள் விருப்பத்தை அறியாது இங்ஙனம் உதவியார்க்குக் கொடுக்க நினையாது, நொதுமலர்க்குக் கொடுக்கத் துணிந்தனர். அறம் அல்லாதவற்றைச் செய்வதினால் இனி, வள்ளிக்கொடியின் கீழ் கிழங்குகள் உண்டாகாது, உயர்ந்த மலைமுகட்டில் தேனீக்கள் தேன்கூடுகளை உருவாக்காது, இதனையும் நீவீர் தினைக்கொல்லையிலே கதிர்கள் வளமாகத் தோன்றாது, காண்பீராக என்று அறம் அல்லாத செயல்களைச் செய்தால் இயற்கையாக நடைபெறும் செயல்கள் நடைபெறாது என்ற நம்பிக்கை குறிஞ்சி நிலமக்களிடையே இருந்துவந்துள்ளதை அறியமுடிகிறது.

மேலும், கல்வி கற்பித்தவன் உள்ளம் வருந்துமாறு செய்பவனும் தான் கற்றதை பிறருக்கு தவறாக கற்பித்து பொருளீட்டுபவனும், வறுமைக் காலத்தில் உதவியவனுக்குத் திரும்ப உதவாதவனும் அழிவான். அவனை அது தாக்காவிட்டாலும் அவன் பெற்றப் பிள்ளைகளைத் தாக்கியேத் தீரும் என்ற அறம்சார் நம்பிக்கையை,

**“கற்பித்தான் நெஞ்சு அழுங்கப் பகர்ந்து உண்ணான்,விச்சைக்கண்**
**தப்பித்தான் பொருளேபோல, தமியவே தேயுமால்,**
**ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்றவன்**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**எச்சத்துள் ஆயினும், அஃது எறியாது விடததே காண்"[11]**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**சூளுரை நம்பிக்கை**

சூளுரைத்தல் என்பதற்கு உறுதிமொழி கொடுத்தல், சபதம் செய்தல் என்றுப் பொருள். இவ்வழக்கம் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுள் ஒன்றாகும். ஒருவர் தாம் கூறும் செயலின் மீது பிறர்க்கு நம்பகத் தன்மை உண்டாக்க சூளுரைத்தல் வழக்கம். மெய் தொட்டும், அரசனடி தொட்டும், திருமாலடி தொட்டும், கடல்நீர் நோக்கியும் சூளுரைச் செய்தல் வழக்கம் இருந்ததை கலித்தொகை,

**"கடம்பூண்டு, ஒருகால் நீ வந்தை உடம்பட்டாள்**
**என்னாமை என் மெய் தொடு"[12]**

என்ற பாடலடியில் தோழியிடம் தலைவி தான் கூறியதைத் தலைவனிடம் கூறாமலிருக்க சத்தியம் செய்யமாறு தோழியிடம் கூறிகின்றாள். சூள் உரைத்தவன் செயல் பொய்யானால் அவன் வாள் நல்லதாக இருப்பினும் அது அவனைத் திருப்பித் தாக்கும் என்று கலித்தொகை சூளுரைத்தலின் வாய்மையினை, **"சூள் வாய்த்த மனத்தவன் வினை பொய்ப்பின மற்று அவன்**

**வாள் வாய்நன்று ஆயினும் அஃது எறியாது விடாதே காண்"[13]** என்ற பாடலடிகள் மூலம் விளக்குகின்றது.

**திருமணம் மற்றும் தெய்வ நம்பிக்கை**

தெய்வ வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருகின்றது. விரைவில் திருமணம் நிகழ வேண்டி தெய்வத்தை வணங்குவர். குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்வதால் குரவைக் கூத்தாடி இறைவனை வழிபட்டனர். பின்வரும் பாடலால் இதனை அறியலாம்.

**"வரை உறை தெய்வம் உவப்ப, உவந்து குரவை தழீஇ யாம் ஆட"[14]**

தைந்நீராடுதல் இளம் பெண்களால் நிகழ்த்தப் பெறும் ஒரு நிகழ்ச்சி. சங்க இலக்கியங்களில் சுட்டப் பெறும் இது, பண்டைத் தமிழரின் பண்பாட்டோடு தொடர்புடையது. மணமாகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கித் தை முழுமதி நாள் வரை அந்த நாளின் காலையில் நீராடி நோன்பிருப்பதனால் நல்ல மணவாளன் கிடைப்பான் என்ற நம்பிக்கை இருந்தது. இதனை,

**"நீவை எயிற்றிவர் நாப்பண், வகை அணிப்பொலிந்து, தையில் நீர்**
**ஆடிய தவம் தலைப்படுவாயோ?"**

**தொகுப்புரை**

கலித்தொகையில் பண்பாட்டு பழக்கவழக்கங்களுள் ஒன்றான நிமித்தம் தொடர்பான நம்பிக்கை, பல்லி ஒலித்தல் சகுனம்,இடக்கண் துடித்தல், ஆவி தொடர்பான நம்பிக்கை, அறம்சார்ந்த செயல்களை செய்தல், சூளுரைத்தல் காட்டும் நம்பிக்கை, தைநீராடல் செயல் போன்ற நம்பிக்கைகள் சங்க மக்களிடையே வழக்கமாக பின்னிப்பிணைந்திருப்பதை உணரலாகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. எட்வார்ட் டெயிலர், பண்பாடும் மானிடவியலும்.
2. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக்.188
3. தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூற்.982:2)
4. தொல்காப்பியம், பொருளதிகாரம்,நூற்.1037:17)

5. கலித்தொகை பாடல்- 5:9
6. கலித்தொகை பாடல் -11:20-22
7. கலித்தொகை பாடல் 142;24-25
8. கலித்தொகை பாடல் - 65:16-20)
9. கலித்தொகை பாடல் 143:45-47
10. கலித்தொகை பாடல் -39:11-14)
11. கலித்தொகை பாடல் 149:4-6
12. கலித்தொகை பாடல் 63:12-13
13. கலித்தொகை பாடல் 149:10-11
14. கலித்தொகை பாடல் 39

## 10. ஆற்றுப்படை இலக்கியத்துள் பல சொல் ஒரு பொருள் தருகின்ற குறிப்பு உரிச்சொற்கள்

## (மிகுதி & அச்சம் - பொருள் தரும் உரிச்சொற்கள்)

**திருமதி மு.பூங்கோதை,**
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
poonkothai-tam@sfrcollege.edu.in - 7010350017
*DOI 10.5281/zenodo.17252084.*

**Abstract :**

Adjectives, in their ability to describe the meaning, also give reference meaning along with music and character. Out of the 120 adjectives mentioned by Tolkappiyar, 96 adjectives are reference adjectives. Tolkappiyar has given more importance to reference adjectives than to music and character adjectives. Among these reference adjectives, the words uru, tava, nani, uru, urum, pem naam, which give the meaning of abundance and fear, are used and changed in the context of Atrupadi.

**Key Words :** Tholkappiyam - Grammar - Adjectives

### முன்னுரை

உரிச்சொற்கள் பொருளை விளக்குகின்ற தன்மையில் இசை, பண்பு ஆகியவற்றோடு குறிப்பு பொருளையும் தருகின்றன. தொல்காப்பியர் சுட்டும் 120 உரிச்சொற்களுள் 96 உரிச்சொற்கள் குறிப்பு உரிச்சொற்கள் ஆகும். இசை மற்றும் பண்பு உரிச்சொற்களை விட குறிப்பு உரிச்சொற்களுக்கே அதிக முக்கியத்துவத்தினை தொல்காப்பியர் கொடுத்திருக்கின்றார். அக்குறிப்பு உரிச்சொற்களுள் மிகுதி மற்றும் அச்சம் பொருளினைத் தரவல்ல உறு, தவ, நனி, உரு, உரும், பேம் நாம் ஆகிய சொற்களின் பொருள் நிலையிலான பயன்பாட்டையும் மாற்றங்களையும் ஆற்றுப்படையில் பொருத்திக் கண்டுணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

### அகராதிகள் தரும் விளக்கம்

தமிழில் தோன்றியுள்ள ஒவ்வொரு சொற்களும் ஏதேனும் ஒரு பொருளையோ, அல்லது பல பொருளையோ குறிப்பதாக உள்ளது. குறிப்பு என்பதற்கு அகராதிகள் பலவாக பல்வேறு விதமாக விளக்கங்களை தருவதனை இங்கு காண்போம்.

குறிப்பு என்பது "நிகழ்ச்சி, செய்தி, பாடம் முதலியவற்றின் அளவான தகவல்களுன் கூடிய சிறுவிவரம், சுருக்கம்; சுருக்கமான சான்று; வெளிப்படையாகவோ நேரடியாகவோ அல்லாமல் சிந்தித்து புரிந்துகொள்ளக் கூடியதாக அல்லது தெரிந்து கொள்ள கூடியதாக இருப்பது"[1] என்று க்ரியா அகராதி விளக்கம் தருகின்றது. இதிலிருந்து விரிவான கருத்து ஒன்றினை சிந்தித்து அறியக் கூடிய குறுகிய வடிவமே குறிப்பு என்பது தெரிகின்றது.

குறிப்பு என்பதற்கு கழகத் தமிழ் அகராதியானது, "அடையாளம், எழுத்துப் பழக்குங் குறிப்பு, ஒருமை, கருத்து, சைகை, நினைப்புக்கு எழுதின எழுத்து, விருப்பம், உள்ளக்கருத்து வெளிப்படையல்லாது"[2] என்றும் விளக்கம் தருகின்றது.

குறிப்புச்சொல் என்பதற்கு "குறிப்பினால் பொருள் உணர்த்துஞ் சொல்" எனவும், குறிப்புரிச்சொல் என்பதற்கு "மனத்தாற் குறித்தறியப்படும் உரிச்சொல்"[3] என்று விளக்கம் தருகின்றது. இதிலிருந்து மனதினால் ஆராய்ந்து பொருளினை உணர்த்த வல்ல சொற்களாக உரிச்சொற்கள் திகழ்வது புலனாகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

குறிப்பு என்பதற்கு நர்மதா அகராதியாததனது "கருத்து, குறிப்புப்பொருள், சைகை"[4] என்று விளக்கம் அளிக்கின்றது.

குறிப்புரிச்சொல் என்பதற்கு "மனத்தாற் குறித்தறியப்படு முரிச்சொல்"[5] என்று விளக்கம் தருகின்றது.

குறிப்பு பற்றி தொல்காப்பியத்திற்கு உரை எழுதின உரையாசிரியர்களின் கருத்து காண்கையில் அதனை குறித்த தெளிவான விளக்கங்கள் பெறப்படுகின்றன. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதின உரையாசிரியர் இளம்பூரணர், சொல்லிற்கு மட்டும் உரை எழுதின சேனாவரையர், மற்றும் நச்சினார்க்கினியர் ஆகியோர் "குறிப்பு" பற்றி கூறியுள்ளனர்.

இளம்பூரணர் குறிப்பு பற்றித் "தோன்றுவனவற்றிற்குத் தத்தங்குறிப்பு சென்றுநிலை மருங்கு"[6] என குறிப்பு உரிச்சொற்களை விளக்கியுள்ளார்

குறிப்பு என்பதை "மனத்தாற் குறித்து உணரப்படுவது"[7] என்று சேனாவரையர் விளக்கம் அளிக்கின்றார். இதனை கொண்டு பார்க்கையில் குறிப்பு என்பது மனத்தால் ஆராய்ந்து பொருள் கொள்ளத் தக்கதொரு சொல் குறிப்புரிச்சொல் என்பது புலனாகின்றது.

நச்சினார்க்கினியர் சேனாவரையர் உரையைச் சார்ந்து "மனத்தாற் குறித்துணரும் பொருண்மைக்கண்ணும்"[8] என குறிப்பு என்பதற்கு பொருள் விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு குறிப்பு பற்றி உரையாசிரியர்கள் தருகின்ற விளக்கங்கள் கருத்து வேறுபாடு இன்றி மனதால் குறித்து உணரப்படும் சொல் குறிப்புரிச்சொல் என்பதை விளக்கி நிற்பதை காணமுடிகின்றது.

**தொல்காப்பியர் சுட்டும் குறிப்பு உரிச்சொற்கள்**

தொல்காப்பியர் உரியியலில் 93 குறிப்பு உரிச்சொற்களை குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் இசை, மற்றும் பண்பு உரிச்சொற்களை விட குறிப்பு உரிச்சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருப்பது புலனாகின்றது. இச்சொற்களை

1. பல சொல் ஒரு பொருள் தருதல்
2. ஒரு சொல் பல பொருள் தருதல்
3. ஒரு சொல் ஒரு பொருள் தருதல்

என்ற நிலையில் ஆற்றுப்படை இலக்கியத்தில் பொருத்தி ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாக அமைகின்றது.

**பலசொல் ஒரு பொருள் தரும் உரிச்சொற்கள்**

ஒரு பொருளைத் தரவல்ல பல குறிப்பு உரிச்சொற்களை தொல்காப்பியர் உரியியலில் சுட்டுகின்றார்.

**மிகுதிப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்**

தொல்காப்பியர் மிகுதிப் பொருளை உணர்த்தும் சொற்களாக உறு, தவ, நனி போன்றவற்றைச் சுட்டுகின்றார். அதனை,

**"அவைதாம்**
**உறுதவ நனியென வரூஉ மூன்றும்**
**மிகுதி செய்யும் பொருள என்ப"[9]**

என்ற நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**உறு**

மிகுதிப் பொருளைத் தருகின்ற உறு என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் மொத்தம் 15 இடங்களில் பயின்று வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | உறுநர்த் தாங்கிய (திரு.,4) | தீவினை போக்குபவன் |
| 2. | செய்வுஉறு திவவின் (திரு..140) | சுற்றுதல் |
| 3. | உறுகுறை மருங்கில் (திரு.,173) | தமக்கு |
| 4. | விசிஉறு பச்சை (பொரு.,5) | போர்த்துதல் |
| 5. | பொதியுறு போர்வை (பொரு.,8) | இணைத்தல் |
| 6. | பலஉறு முத்தின் (பொரு.,28) | சேர்தல் |
| 7. | கதிர் கடாஉறுப்ப (சிறு.,10) | செலுத்துதல் |
| 8. | விரை உறுநறுமலர் (திரு.,188) | மிகுதி |
| 9. | உறுபுலித் துப்பின் (சிறு.,122) | |
| 10. | உறு வெயிற்கு (சிறு.,174) | |
| 11. | காட்டு மாவும் உறுகண் செய்யா (பெரும்.,43) | வருத்தம் |
| 12. | காலுறு (மலை.,117) | ஊடாகச் செல்லுதல் |
| 13. | ஏமுறு ஞாலந் தன்னில் (திரு.163) | உடைய |
| 14. | எஃகுஉறு முள்ளின் (மலை.300) | |
| 15. | பலஉறு திருமணி (மலை.516) | விலை |

தொல்காப்பியர் உறு என்பதற்குத் தருகின்ற மிகுதி என்ற பொருள் மூன்று இடங்களில் மட்டுமே ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. உறுநர் என்ற பெயர்ச் சொல் நிலையில் தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினையை போக்குபவன் என்று பொருள் அளிக்கின்றது. மேலும் வருத்தம், சுற்றுதல், போர்த்துதல், ஊடாகச்செல்லுதல், விலை, போன்ற பொருண்மையிலும் உறு என்ற உரிச்சொல் பயன்பாட்டில் இருந்தமையை ஆற்றுப்படை இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. திருமுருகாற்றுப்படையில் ஏமுறு என்று வருகின்ற பொழுது ஏ மற்றும் உறு ஆகிய இரண்டு உரிச்சொற்கள் இணைந்து வந்துள்ளது. க்ரியா அகராதி உறு என்பதற்கு “ஓர் உணர்ச்சியை அல்லது ஒரு நிலையை அடைதல், பெறுதல் என்னும் பொருளில் குறிப்பிட்ட பெயர்ச்சொற்களோடு இணைந்து வரும் துணை வினை, வினைப்படுத்தும் வினை”[10] என்று விளக்கம் அளிப்பதன் வாயிலாக உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொல்லாக உறு கையாளப்படுவதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

**நனி**

மிகுதிப் பொருளை உணர்த்தும் மற்றொரு உரிச்சொல்லான நனி திருமுருகாற்றுப்படையில் ஒரு இடத்திலும், மலைபடுகடாமில் ஒரு இடத்திலும் பயின்று வந்துள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி (திரு.,286) | மிகுதி |
| 2. | நனி சேய்த்தன்று (மலை.,487) | |

ஆற்றுப்படையிலக்கியத்தில் நனி என்ற உரிச்சொல் தொல்காப்பியர் சுட்டும் மிகுதி என்ற பொருண்மையையே விளக்கிநிற்கின்றது. தொல்காப்பியர் சுட்டும் மிகுதிப் பொருளோடு "நெருக்கம், பெருமை, மிகுதி"11 போன்ற பிற பொருள்களையும் தரவல்லது என்று கழகத் தமிழ் அகராதி பதிவு செய்துள்ளது.

**தவ**

தவ என்ற உரிச்சொல்லானது ஆற்றுப்படையிலக்கியத்தில் குறிப்பாக மலைபடுகடாமில் மட்டும் நான்கு இடங்களில் வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | ஊன்றினர் கழிமின் ஊறு தவப்பலவே (மலை.372) | மிகுதி |
| 2. | புரைதவ உயரிய மழை மருள் பல்தேர் (மலை.377) | |
| 3. | தளிபொழி கானம் தலை தவப்பலவே (மலை.385) | |
| 4. | சுட்டினும் பனிக்கும் கரம்தவப்பலவே (மலை.,398) | |

தொல்காப்பியர் சுட்டின மிகுதி என்ற பொருண்மையை விளக்குவதற்கே தவ என்ற உரிச்சொல் கூத்தராற்றுப்படை இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்காலத்தில் தவ என்றவுடன் காட்டில் முனிவர்கள் மேற்கொண்டுள்ள தவ வாழ்வைச் சுட்டுவதாக இச்சொல் வழக்கில் இருக்கின்றது.

**அச்சப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள்**

அச்சப்பொருளை தரக்கூடிய உரிச்சொற்களாக நான்கினை தொல்காப்பியர் அடையாளப்படுத்துகின்றார். அவைமுறையே,

- உரு
- உரும்
- பேம்
- நாம்

ஆகியவை ஆகும். இதனை,

"உருவுட்காகும்"[12]

"பேம்நாம் உருமென வரூஉங் கிளவி
ஆமுறை மூன்றும் அச்சப் பொருள"[13]

என்ற இரு நூற்பாக்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. அவற்றுள் உரு மற்றும் உரும் ஆகியவை மட்டுமே ஆற்றுப்படையில் பயின்றுவந்துள்ளது. பேம், நாம் ஆகியவை ஆற்றுப்படையில் பயன்படுத்தப்படவில்லை.

**உரு**

உரு ஆற்றுப்படையில் மொத்தம் 32 இடங்களில் பயின்று வந்துள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | உருள் பூந்தண்தார் (திரு.,11) | தேரினைப் போன்ற வடிவம் |
| 2. | உருகெழு செலவின் (திரு.,51) | அச்சம் |
| 3. | முருகு ஆற்றுப்படுத்த உருகெழு (திரு.244) | |
| 4. | முருகற் சீற்றத்து உருகெழு (பொரு.,131) | |
| 5. | பரிசிலர் தாங்கும் உருகெழு (திரு.,273) | |
| 6. | இருபேர் உருவின் (திரு.,57) | வடிவம் |
| 7. | ஐவேறு உருவின் செய்வினை (திரு.,83) | |
| 8. | வேறுபல் உருவில் குறும்பல் (திரு.,282) | |
| 9. | திறல் விளங்கு உருவின் (திரு.,287) | |
| 10. | உருவினர் மானின் (திரு.,128) | |
| 11. | முரண்கொள் உருவின் இரண்டு (திரு.230) | |
| 12. | வேறுபல் உருவின் (பொரு.,108) | |
| 13. | உருவ வான்மதி (சிறு.,251) | |
| 14. | உருக்குறு போர்வை (சிறு.,256) | |
| 15. | கொடு முகத்து உருவையொடு (பெரும்.,153) | |
| 16. | நீல்நிற உருவின் நெடியோன் (பெரும்.,402) | |
| 17. | உருவின் (மலை.,36) | |
| 18. | ஆரம் முழுமுதல் உருட்டி வேரல் (திரு.,) | தள்ளி |
| 19. | விளக்கு அழல் உருவின் (பொரு.,5) | நிறம் |
| 20. | அரக்கு உருக்கு அன்ன (பொரு.,43) | சாயல் |
| 21. | பெடைமயில் உருவின் (பொரு.,47) | |
| 22. | அணங்கு என உருத்த (பொரு.,35) | |
| 23. | உருகுபவை போல் என்பு (பொரு.,78) | தோன்றுதல் (எண்ணம்) |
| 24. | அயில் உருப்பனைய (சிறு.,7) | உருகுதல்<br>வெப்பம் |
| 25. | வெயில் உருப்புற்ற (சிறு.,8) | |
| 26. | உருப்பு அவிர் குரம்பை (சிறு.,174) | |
| 27. | உருப்புறு பசுங்காய்ப் (பெரும்.,307) | |
| 28. | உருக்கி அன்ன பொருத்துறை (பெரும்.,) | |
| 29. | முழுமர உருளி (பெரும்.,47) | |
| 30. | உருட்டிய புதல்வர் (பெரும்.,249) | |
| 31. | உரும்பு இல் சுற்றமோடு (பெரும்.,447) | உருக வைத்தல் |
| 32. | கட்டில் உரும்பு இல் (மலை.,550) | |


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தொல்காப்பியர் சொன்ன அச்சம் என்ற பொருளைத் தருவதோடு கொடுமை, உருட்டுதல், உருகவைத்தல், வெப்பம், வடிவம் போன்ற பிற பொருண்மைகளை தர வேற்று வடிவங்களில் உரு என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் பயன்படுத்தப்;பட்டுள்ளது. கழகத் தமிழ் அகராதியானது உரு என்பதற்கு “வடிவு, செபவுரு, உடல், சிலை, கரு, உரு, நிறம், வடிவழகு, வெப்பம், பெருமை, அச்சம், மேன்மை, அட்டை, மான், அகலம், எலுமிச்சை, நோய், பதுமை, பருமை, பாடல், பெரிது, மரக்கலம், மிகுதி, விக்கிரகம்”[14] போன்ற பல பொருள்களை அளிப்பதிலிருந்து உரு அளிக்கின்ற பிற பொருண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியானது உருவிற்கு “ஒன்றை இன்னது என்று தெரிந்து கொள்வதற்கு உரிய புற அடையாள தோற்றம், புற வடிவ அமைப்பு, உருவம், தாலியில் கோக்கப்படும் தங்கத்தால் ஆன சிறுமணி”[15] என்று விளக்கம் அளிப்பதிலிருந்து ஒன்றினது புற அமைப்பை சுட்டும் சொல்லாக தற்காலத்தில் இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**உரும்**

அச்சப்பொருளைத் தரும் உரும் என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் ஆறு இடங்களில் வந்துள்ளது.

| வ.எண் | வருகையிடம் | பொருள் |
|---|---|---|
| 1. | உரும் இடிமுரசமொடு (திரு.,121) | முழங்குதல் |
| 2. | உரும் இடித்தன்ன (திரு.172) | இடி |
| 3. | உருமுச் சுவல் (சிறு.,80) | |
| 4. | எறிந்து உரும் (சிறு.,266) | |
| 5. | உருமும் உரறாது (பெரும்.,42) | |
| 6. | உருமுரறு கருவிய (மலை.,357) | |

தொல்காப்பியர் கூறின அச்சம் என்ற பொருளைச் சுட்டாமல் இடியைக் குறிக்கவும், இடியைப் போன்று சப்பத்தை குறிக்க முழங்குதல் என்ற பொருண்மையினைக் குறிக்க ஆற்றுப்படையில் உரும் என்ற உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

தொல்காப்பியர் இசை, மற்றும் பண்பு உரிச்சொற்களை விட குறிப்பு உரிச்சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திருப்பது புலனாகின்றது. தொல்காப்பியர் உறு என்பதற்குத் தருகின்ற மிகுதி என்ற பொருள் மூன்று இடங்களில் மட்டுமே ஆற்றுப்படை இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. உறுநர் என்ற பெயர்ச் சொல் நிலையில் தன்னைச் சேர்ந்தவர்களின் தீவினையை போக்குபவன் என்று பொருள் அளிக்கின்றது. மேலும் வருத்தம், சுற்றுதல், போர்த்துதல், ஊடாகச்செல்லுதல், விலை, போன்ற பொருண்மையிலும் உறு என்ற உரிச்சொல் பயன்பாட்டில் இருந்துள்ளமையை ஆற்றுப்படை இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. திருமுருகாற்றுப்படையில் ஏமுறு என்று வருகின்ற பொழுது ஏ மற்றும் உறு ஆகிய இரண்டு உரிச்சொற்கள் இணைந்து வந்துள்ளது. தொல்காப்பியர் சொன்ன அச்சம் என்ற பொருளைத் தருவதோடு கொடுமை, உருட்டுதல், உருகவைத்தல், வெப்பம், வடிவம் போன்ற பிற பொருண்மைகளை தர வேற்று வடிவங்களில் உரு என்ற உரிச்சொல் ஆற்றுப்படையில் பயன்படுத்தப்;பட்டுள்ளது. தொல்காப்பியர் கூறின அச்சம் என்ற பொருளைச் சுட்டாமல் இடியைக் குறிக்கவும், இடியைப் போன்று சப்தத்தை குறிக்க

முழங்குதல் என்ற பொருண்மையினைக் குறிக்க ஆற்றுப்படையில் உரும் என்ற உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.,458
2. கழகத் தமிழ் அகராதி.,ப.,369
3. மேலது.,ப.,369
4. நர்மதாவின் தமிழ் அகராதி.,ப.292
5. மெய்யப்பன் தமிழ் அகராதி.,ப.507
6. ஆ.சிவலிங்கனார் (ப.ஆ).,தொல்காப்பிய உரைவளம்.,சொல்லதிகாரத் உரியியல்.,ப.9
7. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.186
8. ச.வே.சுப்பிரமணியன்.,தொல்காப்பிய உரைவளக்கோவை, சொல்லதிகாரம் உரியியல்.,ப.68
9. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.186
10. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,பக்.222-223
11. கழகத் தமிழ் அகராதி.,ப.,595
12. சேனாவரையர் (உ.ஆ).,தொல்காப்பிய சொல்லதிகாரம்.,ப.187
13. மேலது.,ப.196
14. கழகத்தமிழ்அகராதி.,ப.169
15. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.,ப.205


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 11. சக்கை நாவல் உணர்த்தும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியல்

**திருமதி பெ.சிவசக்தி,**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

**முனைவர் வி.கலாவதி,**
இராஜபாளையம் இராஜீக்கள் கல்லூரி,
இராஜபாளையம்.

DOI 10.5281/zenodo.17252111.

**Abstract:**

Change is the only constant. The world is changing day by day and in a different way. On the one hand, research is increasing to the point of touching the sky. On the other hand, people who sacrifice their lives and labor for food are traveling in opposite directions. In that way, this article is an examination of the lives of the people featured in the novel Chakkai.

**KeyWords** : Chakkai - Novel - Marginal

## முன்னுரை

மாற்றம் ஒன்றே மாறாதது. உலகம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாறிக்கொண்டே இருக்கிறது. ஒருபுறம் விண்ணைத் தொடுகின்ற அளவிற்கு ஆராய்ச்சிகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. மறுபுறம் ஒருவேளை உணவிற்காக தங்களை தங்கள் உயிரை உழைப்பை தியாகம் செய்யும் மக்களுமாக எதிர்எதிர் திசையில் பயணித்துகு; கொண்டிருக்கின்றனர். அந்த வகையில் சக்கை நாவலில் இடம்பெறும் மக்களின் வாழ்வியலை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## சமுதாயம்

மக்கள் கூடி வாழும அமைப்பே சமுதாயம் ஆகும். மக்கள் வாழ்கின்ற இடத்தில் தங்களுக்குத் தேவையான அடிப்படை வி~யங்கள் கிடைக்காத சமயத்தில் அதைத்தேடி வேறு ஒரு இடத்திற்குப் புலம் பெயர்கின்றனர். அவ்வாறு புலம்பெயர்கின்ற போது சில சமூக நியாயத்தை சந்திக்கின்ற சூழல் உருவாகிறது.

**“சமுதாயம் என்பது தனிமனிதர்களின் சங்கம். அதற்கு பலமும் உண்டு பலவீனமும் உண்டு. ஆனால் அது தனிமனிதனின் பலத்தையும் அனுமதிக்காது. பலவீனத்தையும் அனுமதிக்காது.அதுவே சமூக நியாயம்.”**

என்று ஜெயகாந்தன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மனிதன் பிறருடன் கூடி வாழும் பண்பை காக்கையிடமிருந்து கற்றிருக்கலாம் என்பதை வள்ளுவர்,

**“காக்கை கரவா கரைந்திண்ணும் ஆக்கமும்**
**அன்ன நீரார்க்கே உள”1**

என்று குறிப்பிட்டுள்ளார். நன்கு ஆராய்ந்து பார்த்தோமேயானால்,

**“இது நாள் வரையிலான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறேயாகும்.”2**

என்ற கூற்று உண்மையாவது புலனாகும்.

## விளிம்பு நிலை மக்கள்

விவசாயிகள் சேற்றில் கால வைத்தால் தான் மக்கள் சோற்றில் கைவைக்க முடியும். வானம் பார்த்து வாழ்ந்த மக்களை மழை ஏமாற்றுகின்ற போது பிழைப்பிற்கு வழி தேடி வேறொரு புதிய இடத்தை புதிய தொழிலைத் தேடித் தஞ்சமடைகின்றனர். அந்த வகையில்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சொந்த ஊரைவிட்டு ஆறேழு கிலோமீட்டர் தொலைவில் உள்ள கல் குவாரியிருக்கும் இராசாமலையை நோக்கிப் பயணிக்கின்றனர். பெயர் தான் ராசாமலை, சக்கை நாவலில் வரும் மக்கள் வாழ்வதற்காகவே புலம்பெயர்கின்றனர். அதிகார வர்க்கத்தில் இருக்கும் சில சமூகக் காரணிகள் அவர்களின் வாழ்க்கையைப் பறித்துவிடுகிறது. இருப்பினும் ஏதாவது ஒரு சூழலில் தமக்கான வாழ்வை மீட்டெடுக்க முடியுமா என்று போராட முற்படுகின்றனர். ஆனால் நினைத்த வாழ்வும் கிடைக்காமல் கிடைத்த வாழ்வையும் அனுபவிக்க முடியாமல் வாழாமல் போவதே வாழ்க்கையாகிப் போனதை,

**“பாத்தி வெட்டி நாத்தநட்டு வெள்ளாம் செஞ்சோமே....**
**அண்ணன் புள்ள மாண்புள்ள ஒத்துமையா இருந்தோமே...**
**ஊருசனம் மொத்தமும் ஒரு ஒலயில தின்னோமே**
**கேடுகெட்ட பஞ்சம் வந்து திக்குக்கொண்ணா நிக்கோமே....”3**

என்று நாவலில் வரும் கிழவி தங்கள் நிலையை எண்ணிப் புலம்புவதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**கல் உடைக்கும் தொழில்**

கிட்டத்தட்ட ஐம்பது, அறுபது ஆண்டுகளாக ராசாமலை அருகில் உள்ள கல்குவாரியில் கல்உடைக்கும் வேலையைச் செய்கின்றனர். இந்த வேலையைச் செய்கின்றனர். இந்த வேலையைச் செய்வதற்கு முன்பணம் தருகின்றனர். வாரவாரம் கொடுக்கும் உழைப்பிற்கான கூலி என்ற பெயரில் தரும் தொகைக்கு குடும்பமே அடிமையாகி உழைக்க வேண்டிய அவலம் ஏற்படுகிறது. வேகாத வெயிலில் கல்லுடைப்பது, சைஸ்வாரிய பிரிப்பது, வெடிவைப்பது, லாரிகளில் கொட்டுவது கிர~ர் இயந்திரத்தோடு போராடுவது. குழந்தைகளுக்கு கல்வி மறுப்பது, வேலையின் போது எழும் புழுதியின் காரணமாக நோய்தொற்று ஏற்படுவது போன்ற சூழல்களையும் கடந்து செல்கின்றனர்.

இந்த சூழ்நிலையில் மிகவும் துயரமான நிலை என்பது குவாரியின் சொந்தக்காரனைவிட குவாரியை வாடகைக்கு எடுத்து ஆட்களை நிர்வகிக்கும் கொத்துக்காரனின் நடவடிக்கையாகும். இந்த நாவலில் வரும் கொத்துக்காரன் மிகவும் அடாவடித்தனமாக செயல்படுகின்றான். கடிமாக உழைக்கும் மக்களை ஏமாற்றுபவனாக இருக்கிறான். மரகத்தின் அப்பா எவ்வளவு கல்லை உடைக்கிறான் என்பதைக் கல்லில் வரிகையாகக் கோடு போட்டு குறித்து வைத்தாள். ஆனால் மாணிக்கம் கீழே கிடந்த கல்லை ஒதுக்குவது போல மூன்று கோடுகளை அழித்தான்.

**“யோவ்... டைவரு இங்க வாய்யா.... என்னமோ கோடு போட்டு வச்சிருக்காணுங்களாம் இந்த கணக்கு புலிங்க வந்து எண்ணிப் பார்த்து சொல்லு.”4**

என்று ஏளனமாகக் கூறினான்.

**“யோவ் ராசப்பா.... நா வைக்கறதுதான் சட்டம். நா சொல்றதுதான் கணக்கு புரியுதா”5**

என்று மாணிக்கம் கூறியதைக் கேட்ட ராசப்பன் கோபப்பட்டான். ஆனாலும் உழைக்க ஒரு சாதி உறிஞ்சிப் பிழைக்க ஒரு சாதி என்று இருக்கும் நிலையில் ராசப்பனால் எதுவும் கூற முடியவில்லை.

**பாலியல் தொல்லை**

கொத்துக்காரனாக வலம் வரும் மாணிக்கம் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துபவன் குறைந்த கூலி கொடுத்து தொழிலாளர்களைத் துன்பப்படுத்துவதோடு. அங்கு


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வேலைக்கு வரும் பெண்களை பாலியல் துன்பத்திற்கு ஆளாக்குபவன். தான் விரும்புகின்ற பெண் யாராக இருந்தாலும் அடைந்தே தீரவேண்டும் என்ற வெறியோடு செயல்படுபவன்.

**“இதப் பாரு புள்ள…. நீ பெரிய ரதியோ சிறு வயசுக்காரியோ இல்ல…. நான் நினைச்சன்னா நேத்து சமைஞ்ச குட்டிங்ககூட வருவளுங்க…. நா ஆசைப்பட்டவளுங்க அடுத்தவன் பொண்டாட்டின்னா கூட நா கவலைப்படறதில்ல……. ஏன் அவளுங்களே கவலப்படறதில்ல. வெள்ளையும் சௌ;ளையுமா திரிவான்ல கட்சிக்காரன் ரகுபதி…. அவன் புதுமருமவ நேத்திய புள்ள…. அதையும் தொட்டுப்பாத்துட்டேன்ல…. பணத்துக்குச் சொகத்துக்கும் மயங்காதவங்க யாரு…? கல்லு ஒடைக்கிற சிறுக்கி நீ…. நான் பிச்சை போட்டு ஜீவனம் பண்ற ஒனக்கு என்னாடீ அவ்ளோ ஆணவம், வர்ணும்டீ…… நீயே வர்ணும்.”6**

என்று ஆணவத்தோடும் பெண்ணை போகப் பொருளாகவும் பார்க்கும் மாணிக்கம் போன்றோர் சமூகத்தில் இருப்பதையே சக்கை நாவல் புலப்படுத்துகிறது.

**கல்வி மறுக்கப்படல்**

கல்வி அனைவருக்கும் பொதுவானது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடின்றி அனைவரும் கல்வி அவசியமானது. கல்லுடைக்கும் வேலைக்கு வருபவர்கள் வறுமையின் காரணமாக தங்கள் பிள்ளைகளை கூட அழைத்துச் செல்கின்றனர். எந்த செயலும் பழகப் பழகச் சரியாகிவிடும் என்று கருதியும், இயலாமையின் காரணமாகவும் வேலைக்கு அழைத்துச் செல்கின்றனர். சக்கை நாவலில் வரும் சினராசு ராசப்பனின் மகன். கல்லுடைக்கும் வேலைக்குச் சென்ற சின்ராசுவிற்கு கையும் விரலும் காய்ச்சுப் போய் புண்ணாகிப்போனது. மருத்துவர் கொடுத்த மருந்தும் குணப்படுத்தவில்லை. எனவே சின்ராசு வேலைக்குச் செல்ல வேண்டாம். பள்ளிக்கூடத்திறகுச் செல்லட்டும் என்று ராசப்பனின் மனைவி நாகம்மா கூறுகிறாள். ஆனால் மாணிக்கம் எப்படியாவது சின்னராசுவை வேலைக்கு வரவழைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே செயல்படுகின்றான். இங்கு கல்வி என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

**இயந்திரமயமாக்கல்**

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விடியலை நோக்கி கல்லுடைக்கும் வேலையை செய்து கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் உழைப்பைக் கேள்விக்குறியாக்குவது போல தொழில் நுட்பம் தலையெட்டிப் பார்க்கிறது.

குவாரியில் வேலை செய்வோர்களை குறைக்கும் எண்ணத்துடன் முதலாளிகள் புதிதுபுதிதாகத் தொழில்நுட்பத்தைப் புகுத்தத் தொடங்கினர். அதன் விளைவாக ஏற்கனவே வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் வேலையை விட்டு வெளியே செல்லும் அபாயம் ஏற்பட்டது.

**“அந்த ஆளு அந்த மிசினுக்குள்ள ஒக்க பஸ் ஓட்டுறாப்பலதான் ஓட்டுறான். ஆனா ஒரு மிசினு பாறையில் ஓட்டை போடுது. ஒரு மிசினு பாறையை ஒடைச்சுப் போடுது. ஆச்சர்யப்பட்டு போனார்கள் வேடிக்கை பார்த்தவர்கள். சம்மட்டி சத்தம் மறைந்து மி~pன் சத்தம் கேட்கத் துவங்கியது அந்தக் குவாரியில்.”7**

என்ற வரிகள் குவாரியை நம்பி வந்த மக்களின் உடலும், மனமும் சின்னபின்னமாகிப் போனதைக் காட்டுகின்றது.

**முடிவுரை**

- சக்கை நாவல் வாயிலாக புலம்பெயர்த்த விவசாய மக்களின் வாழ்வியலைச் சுற்றி நிகழும் அவலத்தை அறிந்து கொள்ள முடிகிறது.
- உழைப்பவர் ஓர் இனம். அதனால் வரும் இலாபத்தைப் பெற்று உயர்வான வாழ்வு வாழ்பவர் ஓர் இனம் என்பதை அறியமுடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- அடிப்படை உணவிற்காக குடும்பத்தையே அடமானம் வைக்கும் அவலம் வெளிப்படுகிறது.
- கொத்தடிமைகள் வாழ்வில் கல்வி என்பது கானல் நீராகிப் போகிறது.
- அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட தொழில்நுட்பம் மக்கள் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிவிட்ட அவலநிலை தொடர்வதை அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. குறள், 527
2. காரல்மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை, ப.42
3. சக்கை, ப.107
4. மேலது, ப.14
5. மேலது, ப.14
6. மேலது, ப.180
7. மேலது, ப.184


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 12. சமூகப் பார்வையில் அரவாணியம்

**திருமதி மா. மாரீஸ்வரி,**
Reg.No: MKU25PFOL11762, பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
9600031159, - mareeswarimurali@gmail.Com
*DOI 10.5281/zenodo.17252158.*

**Abstract :**

We are witnessing the lives of many who chant "For all life" on stage and in their works, but not even a shadow of those lines is seen in their lives. Beyond the races of men and women, there is also a race called "Aravani" in society. This study is structured to show that this race is ostracized and orphaned by men and women, relatives, family and the entire society.

**Keywords:** Aravani - Ali - Bedi - Social View - Heroic - XY - YY.- xx - Meaningful Others - Afrinai - Pottai - Kosa - Nine. Infamy - Cowards.

**முன்னுரை**:

இயற்கை என்பது நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். அவை மிகவும் சிக்கலானதாகும் யாராலும் புரிந்து கொள்ள முடியாததாகும்.அவ் உயிரினங்களில் மிக உன்னதமான படைப்பாக மனித இனம் உள்ளது. அவ் இனத்தின் ஆண்,பெண் என்னும் இனங்களைத் தாண்டி "அரவாணி" இவ் இனம் பெண்ணைப் போலவும் ஆணைப்போலவும் மனிதர்கள் தான் என்ற புரிதலை இச்சமூகம் பெற்றிருக்கவில்லை. அகம் சார்ந்ததும் புறம் சார்ந்ததும் அரவாணிகளின் பிரச்சனைகளை இச்சமூகம் எவ்வாறு கருதுகின்றனர் என்பதை "சமூகப் பார்வையில் அரவாணி" என்னும் தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பெருகின்றது.

"**அரவாணி**" - **சொல் பொருள்** :

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி " நம் தமிழ் குடி அந்த தமிழ் குடி பேசிய மொழி தமிழ் மொழி. இம்மொழியில் சொற்களால் பல உள்ளன அவற்றுள் பல சொற்கள் பொருள் மாறுபாடு அடைந்தும், பல சொற்கள் வழக்கத்தில் இருந்து அழிந்தும், பல சொற்கள் இன்றும் மக்களால் பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. அந்த அளவில் "அரவாணிகள்" எனக் குறிப்பிடப்படும் ஆணுமில்லாமல் பெண்ணுமில்லாமலும் வாழும் மனிதர்கள் அரவாணி என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளனர் .

ஆண்கள் பெண்போல ஆவது மட்டும் அரவாணி அல்ல, பெண்கள் ஆண்போல ஆவது அரவாணி தான். அரவாணிகள் முற்காலத்தில் ஆண்அலி பெண்அலி என பிரிக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது இருவரையும் அரவாணி என்ற பொதுப் பெயரால் அழைக்கின்றனர்.

**அரவாணி தோன்றும் விதம்**:

மனித சொல்லில் உள்ள 23 இணை குரோமோசோம்களில் கடைசி 23 வது குரோமோசோம் இணையே ஒருவர் ஆணா அல்லது பெண்ணா என்பதை தீர்மானிக்கிறது. பெண்ணின் கருமுட்டை பெண்பால் தன்மையை ஏற்படுத்தக் கூடிய X குரோமோசோம் ஆண் தன்மையை ஏற்படுத்தக்கூடிய Y குரோமோசோம் இரண்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டதாக அமையும் .


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

XX என்ற இணையச் சேர்க்கை பெண்ணாகவும், XY என்ற இணைய சேர்க்கை ஆணாகவும் உருவாகிறது, மரபணு உருவாக்கத்தின் போது ஏற்படும் எதிர்பாராத மாற்றங்களால் "பெண் கருமுட்டையில் X குரோமோசோம் அதிகமாகவோ அல்லது Y குரோமோசோம் அதிகமாகவோ இணைந்து விட்டால் பிறக்கும் குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ இல்லாமல் மூன்றாம் பாலினமாக பிறக்கின்றது" என்று செக்ஸாலஜிஸ்ட் டாக்டர் டி. காமராஜ் கூறுகிறார்.

**அரவாணிகளின் பிற பெயர்கள்**:

உலகத்தில் மனிதர்கள் வாழும் இடங்கள் அனைத்திலும் ஆண், பெண் என்ற இரண்டு பாலுக்கு அப்பாற்பட்ட மூன்றாவது பால் ஒன்று உண்டு. அவை தமிழில் அரவாணி, திருநங்கை, பேடு, அலி, திருநம்பி, ஒன் போது, பொட்டை, மாற்று பாலினம், மசக்கை, கோசா, சக்கா, ஹிஜிரா, கின்னர், கோதி, பாவையா, சனித், ஜோகப்பா, யூனக், குஸ்ரா, நபுஞ்சகன், சண்டி, சண்டன், பேடன், அண்ணகன், கிலீபன், சிகண்டி, பெண்டகன், மலடு, ஈ ஈழன், ஆங்கிலத்தில் **EUNUCH, HERMAPHRODITE, TRANSGENDER, EFFENINATE, IMPOTENT** என்று பல்வேறு பெயர்கள் மூன்றாம் பாலின மக்களை சங்க காலம் முதல் இன்று வரை பல்வேறு பெயர்களைக் கொண்ட அழைக்கின்றனர்.

**இலக்கணத்தில் அரவாணிகள்** :

அறுவகை இலக்கணம் என்னும் நூலைப் படைத்தவர் தண்டபாணி சுவாமிகள் ஆவார். நமது நூலில் "அரவாணிகள் பற்றி ஃ என்ற எழுத்தை அலி எழுத்து "என்கிறார்.

**"அஃது, இஃது, எஃது என்னும் அலிபாற் சுட்டும்**
**உலகம் முழுவதும் ஓத ஒளிர்வன , அவற்றுள்**
**ஆயுதம் நடுவிலா அலி சுட்டு மிகுமே** ".

ஆயுத எழுத்தைப் (ஃ) போன்று அரவாணிகளும் சமூகத்தில் அர்த்த மற்றவர்கள் என்று கூறுகிறார். இதன் மூலம் அன்றைய சமுதாயத்திலிருந்து அரவாணிகள் இழிநிலையில் தான் இருக்கின்றனர் என்பதை அறியலாம். மேலும்

**"ஆண்பால் பெண்பால் உயர்திணை என்பது**
**அலிப்பால் அஃறினை என்பதும் அழகு** "

என்றதன் மூலம் ஆணும், பெண்ணும் உயர்திணை எனவும், அலிகள் அஃறினை எனவும் கூறியுள்ளதால், இச்சமூகத்தில் அரவாணிகளை மனிதர்களாக கூட மதிக்காத நிலை இருந்திருக்கிறது. என்பதை அறியமுடிகிறது.

" **பெண்மைவிட்டு ஆண் அவாவுவபேடு ஆண்பாலும்**
**ஆண்மைவிட்டு அல்லது அவாவுல பெண்பால்**
**இருமையும் அஃறிணை யன்னவும் ஆகும்** "

(**தொல்** - 495)

என்னும் நூற்பா வழி ஆண் தன்மை மிகுந்து இருப்பின் ஆண்பால், பெண் தன்மை மிகுந்திருப்பின் பெண்பால் என்றும். இரண்டு தன்மையும் உடைய அரவாணிகளை அஃறிணை என சமூகம் முன்வைக்கிறது என்பதை மேற்கண்ட இலக்கணத்தின் வாயிலாக அறியப்படுகிறது.

**இலக்கயத்தில் அரவாணிகள்** :

தமிழ் மூதாட்டியாகப் போற்றப்படும் அவ்வையாரின் ஆத்திச்சூடியிலும் அரவாணியின் பிறப்பு ஓர் ஊனமாகவே சித்தரிக்கப்படுகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

" **கூன் குருடு செவி பேடு நீங்கிப் பிறத்தல் அரிது** "

என்று அரவாணியாக பிறப்பவர்கள் மனிதர்கள் இல்லை குறைபாடுடைய மனித பிறவிகள் என்கிறது. இங்ஙனம் அரவாணி பிறப்பு நீக்கப்பட வேண்டிய சமூகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத பிறவிகள் என்கிறது .

நாலடியார் பாடல் 'பிறர் மனைவியை நாடி இன்பத்தை அனுபவித்தவன்', இப்பிறவியல் அரவாணியாகப் பிறந்து கூத்தாடி வயிறு பிழைப்பான் என்கிறது.

"**செம்மையொன்றிச் சிரியா ரினத்தாராய்க்**
**கொம்மை வரிமுலையான் தோள்மரீஇ - உம்மை**
**வலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை**
**அலியாகி ஆடி உண்பார்** ".

(**நாலடியார் - அற** - 85)

என அரவாணிகளை குற்றப் பிரிவுகளாக காட்டியிருப்பதை அறியலாம். இங்ஙனம் இழிந்த பிறவிகளாகவும், தவறு செய்யாதவர்களாகவும் தாழ்ந்த மனிதர்களாகவும், அரவாணிகளைக் காட்டி இருக்கின்றனர். சமூக அமைப்பிலும் இலக்கியப் பதிவுகளிலும் அரவாணிகள் இழிகுணமுள்ளவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

**பாரதியார் பார்வையில் அரவாணிகள்** :

" **வாடி நில்லாதே - மனம்**
**வாடி நில்லாதே - வெறும்**
**பேடியர் ஞானப் பிதற்றல் சொல்லாதே** " ( **ஆர் தரிசனம் ஓர் கனவு** - 24 )

**மேலும்**

" **நல்ல சக்தியற்ற பேடிகளை யேசு** " ( **சிவசக்தி புகழ்** - 4 )

**மேலும்**

" **கிளியே அலிகளுக்கு இன்பமுண்டோ** ? "

( **நடிப்புச் சுதேசிகள் பழித்தறிவுறுத்தல்** - 3)

அரவாணிகளைத் தேடி, அலி என்ற சொற்களால் பயன்படுத்துதியிருக்கும் விதத்தினை பார்க்கின்ற பொழுது அலியால் உள்ள பேடியர் ஞானப்பிதற்றல் என்றும், சக்கியற்ற பேடிகளை ஏது, என்றும் அரவாணிகளை இழிவுபடுத்துவனாகவே அமைந்திருப்பதை காண முடிகிறது.

**திருக்குறளில் அரவாணிகள்** :

அற இலக்கியங்களில் தென்மையானதாகக் கருதப்படும் திருக்குறளில் அரவாணிகளின் வீரத்தைச் சொல்லக்கூடிய இரண்டு குரள்கள் உள்ளன. அவ்விரண்டு குரல்களுமே அரவாணிகளை இழிவு செய்யக் கூடியதாகும்.

"**தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்** ".

( **குறள் - அதிகாரம்** - 62 - 4 )

பேடியானவன் எதிரியை கண்டு நடுங்கி விடுவான். அரவாணிகளுக்கு வீரம் என்ற ஒன்று கிடையாது என்று அவர்களை கோழைகள் என்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**" பகையத்துப் பேடிகை யொள்வா ளவையகத்**
**தஞ்சு மவன்கற்ற நூல் " .**

**( குறள் - அதிகாரம் - 73 - 7 )**

என்கிறது. அதாவது கற்றவர்கள் கூடிய சபையில் பேச அஞ்சுகிறவன் கற்ற நூல் பகைவர் நடுவில் பேடியின் கையிலுள்ள கூறிய வாளை ஒக்கும் என்கிறது . அரவாணிகள் வீரம் இந்த இடத்தில் நகைச்சுவை கூறியதாக சித்தரிக்கப்பட்டிருப்பதை காணலாம் .

**முடிவுரை** :

சமூகத்தின் பார்வையில் இவர்கள் இன்னும் கீழ்மை நிலையில் தான் பார்க்கப்படுகிறார்கள் உடலால் ஆணாக பார்க்கப்பட்டாலும் உள்ளத்தாலும் உணர்வுகளாலும் அவர்கள் பெண்மை உடையவர்களாக அவர்களை தங்களை நேசித்துக் கொள்கிறார்கள். ஆனால் இந்த சமூகம் அவர்களை உழைக்காமல் மற்றவர்களிடம் கையேந்தி பிழைக்கின்றனர் என்று சாடுகின்றனர். ஆனால் அவர்களுக்கு தகுந்த வேலையை ஏற்றுக்கொண்டு செய்ய இச்சமுகம் அவர்களை அனுமதிப்பதில்லை ஆனாலும் இவற்றை எல்லாம் தாண்டி இம் மக்கள் நிறைய துறைகளில் சாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் சமூக கட்டமைப்பில் அவர்களும் மனிதர்கள் தான் என்று அனைவரும் நேசிக்க கற்றுக் கொண்டாலே இவங்களுக்கு ஏற்படும் இன்னல்கள் மறைந்து விடும்

**துணை நூல் பட்டியல்**:

1. **அ.மாணிக்கம்** - திருமந்திரம்
   வர்த்தமானன் பதிப்பகம், தியாகராயநகர்
   சென்னை - 600017
   முதற்பதிப்பு - டிசம்பர் - 2001
2. **மாணிக்கவாசககசுவாமிகள்** - திருவாசகம், அகத்தியர் அருட்பணிமறை
   அம்பாசமுத்திரம்,மு.ப - 1992
3. **வெ.முனிஷ்** - அரவாணிகளின் பன்முக அடையாளங்கள்
   ஜெயம் பதிப்பகம், பேரையூர், மதுரை


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 13. சிற்றிலக்கியக் காலச் சமுதாய மாற்றம்

**முனைவர் திருமதி நா.கவிதா,**
உதவிப்பேராசியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
தி ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி),சிவகாசி.
***DOI 10.5281/zenodo.17258316.***

**Abstract :**

Literature and society are closely related. The social environment and structure change and develop over time. Similarly, literature also has developmental characteristics. The term 'society' is used by literary scholars and the term 'society' by sociologists. The concepts such as class differences, caste and religious conflicts, conflicts, slavery, hegemony, economic inequality and exploitation that emerged in the society in which Chitlikiya emerged can be analyzed in terms of social change trends. Thus, although Chitlikiyas appeared in the Sangam period, the purpose of this research article is to examine the 'social change during the Chitlikiya period', which gained prominence after the 12th century AD.

**KeyWords :** Social Changes - Literature - Middle Literature.

இலக்கியமும் சமுதாயமும் நெருங்கிய தொடர்புடையன. காலந்தோறும் சமுதாயச் சூழலும் அமைப்பும் மாறக் கூடியன, வளர்ச்சி பெறக் கூடியன. அதனைப் போன்றே இலக்கியமும் வளர்நிலைப்பண்புகளைக் கொண்டு திகழ்கின்றது. 'சமுதாயம்' என்னும் சொல்லை இலக்கியவாதிகளும் 'சமூகம்' என்ற சொல்லை சமூகவியல் அறிஞர்களும் கையாள்கின்றனர். சிற்றிலக்கியம் தோன்றிய சமுதாயத்தில் அரங்கேறிய வர்க்க வேறுபாடு, சாதி சமய முரண்பாடுகள், மோதல்கள், அடிமைநிலை, மேலாதிக்கப் போக்கு, பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சுரண்டல் நிலை போன்ற கருத்தாக்கங்களை சமுதாய மாற்றப்போக்குகளில் பகுத்தாய்வு செய்யலாம். அவ்வகையிலே, சங்க காலத்திலேயே சிற்றிலக்கியங்கள் தோன்றினாலும், கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கு பின்பு முதன்மை இடத்தைப் பெற்ற, 'சிற்றிலக்கியக் காலச் சமுதாய மாற்றம்' குறித்து ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## சமுதாய மாற்றங்கள்

சிக்கல்களிலிருந்து விடுபட முயற்சிப்பது உயிர்களின் இயல்பு. பகுத்தறிவு கொண்ட பலவகை மனிதர்களால் உருவாகும் சமுதாயம், தன்னைப் பாதிக்கும் சிக்கல்களினின்று விடுபட முயற்சிகள் மேற்கொள்ளுதல், இயற்கைக்கு மாறுபடாத இயல்பான முயற்சியாகும்.சமுதாயச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் சிற்றிலக்கியங்களில் சமுதாய மாற்றங்கள் சிலவற்றையும் உணர முடிகிறது.

ஒவ்வொரு இலக்கியத்திலும் சமுதாய மாற்றங்கள் படைப்பாளனுடைய சமுதாய உணர்வுக்கு ஏற்ப பதிவு செய்யப்படுவது உண்டு. 'சமுதாய மாற்றம்' என்பதற்கு வாழ்வியற் களஞ்சியம், " சமுதாயத்தில் கல்விநிலை, பொருளாதார நிலை, ஆண் பெண் பாகுபாடு, மக்களின் வயது, பிரிவுகள், தொழில் போன்ற கூறுகள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதிப்பிரிவின் கல்வி நிலைக்கு ஏற்ப அவர்கள் பயன்படுத்தும் மொழியிலும் சில மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம். அது போன்றே ஒரு குழுவின் தொழில் நிலை, பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளுக்கு ஏற்பவும் அவர்களது மொழிப்பயன்பாடு ஓரளவுக்கு மாறி வழங்குவதைக் காணலாம்"[1] என்று வரையறை


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

கூறுகின்றது. எனவே சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் மொழிப்பயன்பாட்டை ஆராய்ந்தால் சமுதாயத்தில் அப்பிரிவின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளலாம்.

மேலும், தி.சு.நடராசன் என்ற இலக்கியத் திறனாய்வாளர், "சமுதாயம் என்பதே அதன் தன்னிலைகளினாலும் புறவயத் தாக்கங்களினாலும் மாறுதலுக்குரியது. இம்மாற்றம் முன்னோக்கி அமைவது, நல்ல இலக்கியம் என்பது சமுதாய மாற்றத்தை உள்வாங்கியிருக்கும்"[2] என்று சமுதாய மாற்றத்தை உள்ளடக்கிய இலக்கியத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகிறார்.

இடைக்காலப் பாண்டியர் ஆட்சி வீழ்ச்சியடைந்து, தமிழகத்தில் அந்நியர் ஆட்சி தொடங்கிய கால கட்டமே சிற்றிலக்கிய காலம். இக்காலத்தில் சமுதாயத்திலும் மக்கள் பின்பற்றும் கல்வி, கலை, பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளிலும் இலக்கிய நடைகளிலும் குறிப்பிடும் அளவு மாற்றங்கள் தோன்றின; அவை படிப்படியாகத் தோன்றின. அவற்றில் சில கருத்துக்கள் மட்டுமே இங்கு விரித்துரைக்கப்பட்டுள்ளன.

**பழக்கவழக்கங்களில் மாற்றம்**

பழக்கவழக்கம் என்பது மனிதன் கற்கும் செயலாகும். இது அவனது வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாக அமைவதாகும். பழக்கமே சமூக வழக்கமாக மாறும் நிலையினை பின்வரும் கூற்று மெய்ப்பிக்கின்றது. "மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன"[3] என்று கூறுவர்.

சிற்றிலக்கியக் கால கட்டத்தில் காணப்பட்ட அயலார் ஆதிக்கத்தின் தாக்கம் பல நிலைகளில் சமுதாயத்தைப் பாதித்ததுடன், மக்களின் வாழ்க்கை நோக்கங்களையும் மாற்றி அமைக்கின்றன. அவ்வகையில் இசுலாமியர்கள், நாயக்கர்கள் வருகையால் அவர் தம் உணவு, உடை முறைகளிலிருந்து பல்வேறு நிகழ்வுகள் தமிழக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதில் ஒன்று வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தும் வழக்கம். இவ்வழக்கம் பண்டை காலம் தொட்டே தமிழக மக்களிடம் இருந்துள்ளது. ஆயினும் இசுலாமியர்களின் வரவால் அத்தர், ஜவ்வாது போன்ற பொருட்களைப் பயன்படுத்தும் முறைமை மிகுதியாகவே பழக்கத்தில் காணப்பட்டது.

சிற்றிலக்கியங்களில் சாமிநாதப்பள்ளு, செய்தக்காதி நொண்டிநாடகம் எனும் நூல்களில் வாசகனைப் பொருள் பயன்பாடுகள் குறிக்கப்பட்டுள்ளன. சாமிநாதப் பள்ளுவில் இளையபள்ளி பயன்படுத்தும் வாசனைப் பொருட்களாக சவ்வாது, மகாப்புனுகு போன்ற பொருட்களைப் பற்றியும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார். இதனை,

**"வாசமிகு.. சவ்வாது, மகாபுனுகுங் கமகமகமவெ,**
**வனமணி மேகலை மருங்கில், கமதாதி விலக"**
**(சாமிநாதப்பள்ளு,செய்யுள் எண்.9)**

என்ற வரிகளில் காணலாம். சவ்வாது, புனுகு போன்ற வாசனைப் பொருட்களை மிகுதியாகப் பயன்படுத்தும் வழக்கம் இசுலாமியர்க்குரியது. அப்பழக்கம் தமிழர் பண்பாட்டில் கலந்து விட்ட முறைமையை இங்கு காணலாம்.

அடுத்ததாக உணவு முறைகளில், அயலவர் ஆதிக்கத்தால் தமிழக மக்களிடம் பல மாற்றங்கள் ஏற்படலாயின. இசுலாமியர்களின் ஆதிக்கம் நிரம்பிய பாளையத்தில் அவர்களுடைய உணவு வழக்கங்கள், நமது மக்களிடம் கலந்துவிட்டன. சுலூபுகான் கூடாரத்திற்குச் சென்ற ஒடுங்காப்புலிக்கு இசுலாமியர்களின் வழக்கப்படி கறிகளும் ரொட்டிகளும் வழங்கப்பட்டமையை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**“கறிகளும் ரொட்டிகளும் அவரவர்**
**கைதோறு மெய்வழக்க செய்தார்களே”**
**(செய்தக்காதி நொண்டிநாடகம், செய்யுள் எண்:97)**

என்னும் பாடலில் காணலாம். இதில் இசுலாமியர்களின் உணவுப்பழக்கத்தைத் தமிழர்கள் பின்பற்றிய நிலையினைக் காண முடிகின்றது.

இக்காலகட்டத்திலே, இசுலாமியர் பயன்படுத்திய ரொட்டி, பிரியாணி போன்ற உணவுப்பெயர்களும் தமிழில் கலந்தன. ‘சீனத்திலிருந்து கப்பலில் வந்திறங்கிய புகையிலையைக் கொஞ்சம் கிள்ளித்தா’ என்று குறத்தி குறி கூறும் பொழுது, கேட்கும் முறையிலும் வாசனைப்புகையிலையை உட்கொள்ளும் வழக்கம் இருந்தமைப் புலப்படுகிறது.

மக்கள் அணியும் உடைகளிலும் நாயக்கர் ஆட்சிகளில் மாற்றம் ஏற்பட்டன. துணிகளை நெய்தல் பொருட்டு, திருமலை நாயக்கர் மதுரையில் ‘சௌராஷ்டிரர்களை’ குடியமர்த்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. தங்களது அன்றாடத் தேவைப் பூர்த்திகளுக்காக, தமிழக மக்களுடன் ஒரு குறிப்பிட்ட இன மக்களையே வாழச் செய்தமை நாயக்கர் காலத்தில் அரங்கேறின.

**கலையின் வளர்ச்சி**

தமிழர் அல்லாத பிறர் தமிழகத்திற்குள் புகுந்து ஆட்சி செய்யத் தொடங்கிய காலத்தில் நிகழ்ந்த கலை மாற்றங்களை பின்வரும் பகுதியில் காணலாம்.

“தெலுங்கு கீர்த்தனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட இக்காலத்திலே, தமிழிசைக் கலையை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்துச் சென்றவர்கள், ‘பாபநாச முதலியார், சீர்காழி அருணாச்சலக் கவிராயர், தில்லை விடங்கர் மாரிமுத்தாப் பிள்ளை, மேலகரம் திரிகூட இராசப்பக் கவிராயர்’ என்போர். இந்நால்வருடைய படைப்புகள் யாவும் தமிழிசைக்கலைக்கு ஆதரவு மங்கிய காலகட்டத்தில், இசைக்கலையை எடுத்து நிறுத்தச் செய்த சிறு முயற்சியின் விளைவே ஆயினும், அந்நியர் ஆதிக்கத்தில் இம் முயற்சி இவர்கள் வசம் நெடுங்காலம் நீடிக்கவில்லை”[4]

என்ற கருத்தாக்கங்கள் சிற்றிலக்கிய கால தமிழ் இசைக்கலை மாற்றங்களையும் வளர்ச்சி நிலையினையும் காட்டுகின்றன.

நாயக்கர்களும் மராட்டியர்களும் இசைக்கலையில் ஈடுபாடு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அவர்தம் ஆட்சியில் தெலுங்கு கீர்த்தனைகள் எத்தகைய வளர்ச்சியினையும் மாற்றங்களையும் பெற்றன என்பதைப் பின்வரும் பகுதிகள் இயம்புகின்றன.

சோழர் காலத்தல் நிலவி வந்த புராண பாடங்களே (கதை சொல்லும் போக்கில் இடையிடையே நாடகப் போக்கில் உரையாடல் விரவி அமைந்த இசைப் பாடல்) கீர்த்தனை நாடகங்களாக உருப்பெற்றன. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற உறுப்புக்களைக் கொண்டு ராகம், தாளம் ஆசிரியராலேயே வகுக்கப்பெற்றுப் பாடப்படும் தெலுங்கு கீர்த்தனைக்கலை பதினெட்டம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றன.

**இனக்கலப்பு**

பண்டு தொட்டு அண்மைக்காலம் வரை தமிழர், தூய ஆரியர், பிராமணர், கிரேக்கர், ரோமர், அராபியர், வடஇந்தியர், தெலுங்கர், மலையாளியர், கன்னடர், சிங்களர், ஐரோப்பியர் ஆகியோருடன் சேர்ந்து வாழ வேண்டிய கட்டாயம் நிகழ்ந்தது. அவ்வகையில் தமிழகத்தில் வாழ்கின்ற கலப்பின மக்கள், சிறுபான்மையாக இருந்தாலும் செல்வாக்குடன் இருக்கிறார்கள். அத்தகையச் செல்வாக்கே தனித்தமிழ்த் சேயம், தமிழ்இனத் தேசியம்

வளர்வதற்கு முட்டுக்கட்டையாக நிற்கின்றன என்று கூறலாம். அவ்வகையில் இனக்கலப்பு நாயக்கர் காலத்தில் காணப்பட்ட முறைமையைப் பின்வரும் வரிகள் இயம்புகின்றன.

"நாயக்கர் கால மன்னர்கள் தெலுங்கு பூமியான விசய நகரத்தில் இருந்து, தமிழகம் போந்து மதுரையை ஆண்டவர்கள். அவர்தம் தாய்மொழி தெலுங்காக இருந்தது. அவர்கள் காலத்தில் தெலுங்கு நாயக்கர்கள், நாயுடுகள், பிராமணர்கள் கூட்டம் கூட்டமாகத் தமிழ்நாடு வந்து வாழ்ந்தனர். நாயக்க மன்னர்கள் அரசியல் நெறி கருதித் தமிழ்ப் பெண்டிரையும் மணந்தனர். இசுலாமியர்களின் படைபெடுப்புக் காலங்களில் கட்டாயத் திருமணங்கள் பல தமிழ் நாட்டில் நிகழ்ந்தன."[5]

என்ற கருத்தக்கள் அயலோர் ஆதிக்கக் காலத்தில் காணப்பட்ட கலப்பின முறைமையினை எடுத்துரைக்கின்றன.

**மொழிக்கலப்பு**

பிறமொழி பேசும் நபர்களின் ஆதிக்கம் மிகுந்த காலத்தில் சோழப்பேரரசும் பாண்டியர்களும் மறுபடியும் ஓங்க முடியவில்லை. போராட்டங்களும் போர்களும் நடைபெற்று நாட்டில் அமைதியைக் குலைத்தன. துதிபாடும் இலக்கியங்கள் எண்ணில் அடங்காமல் அரங்கேறின. தமிழ் மொழி இல்கியத்தில் வேற்று மொழியினை இணைத்துப் பாடுகிற வழக்கமும் ஏற்படலாயின. உதாரணமாக, "செய்தக்காதி நொண்டி நாடகத்தில் அராபி, பாரசீகம், இந்தி மொழிச்சொற்கள் காணப்படுகின்றன. எழுபத்தேழு பாரசீக, இந்தி வார்த்தைகளும், ஐம்பத்து நான்கு அராபிப் பெயர்களும் காணப்படுகின்றன."[6] என்பது மொழியில் ஆராய்ச்சியாளர் கருத்து. இதனை,

**"ஆவுரே கான்சே ஆயெ வென்றார் சாகிபு நான்**
**ஆபலக்கா புலத்தெ ஆயெ வென்றேன்**
**காவுரே கானாவென்றார் ரிது நல்ல**
**கருமமென்றே சென்றரு கிருந்தேன்"**

**(செய்தக்காதி நொண்டிநாடகம், செய்யுள் எண்: 95)**

என்ற பாடல் வரிகளில் காணலாம். இங்கு இடம் பெறும் இந்தி வார்த்தைகள் யாவும், வேற்று மொழி பேசும் நபர்களின் கலப்பினால் தமிழ் மொழியின் சொற களஞ்சியத்தில் (vocabulary) இடம்பெற்ற சூழலைச் சந்தித்த பாங்கினை அறிய முடிகின்றது.

**புலவர்கள் மனதில் உண்டாகிய மாற்றம்**

சமுதாயச் சூழலுடன் ஒரு படைப்பாளன் இசைவற்று நிற்கும் பொழுது இலக்கியத்தின் உள்ளடக்கத்திலும், சமுதாயத்திலும் அவன் கொண்டுள்ள ஆர்வம் முற்றிலும் குறைவதற்கு வாய்ப்பு உண்டு. அதனை நாயக்கர் காலத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலும் காணலாம்.

"அரசு நீதியிலும் சமுதாய பலத்திலும் நம்பிக்கை இழந்த படைப்பாளர்கள், நாயக்கர் கால சமுதாயச் சூழல் பொருட்சிறப்பினை அசட்டை செய்த வெறும் சொல்லலங்கார அணியலங்காரச் செய்யுட்கள் மூலம் தம் வித்துவத் திறனை வெளிக்காட்டினார்கள்."[7] என்பதால் புலவர்கள் மனதில் மாற்றத்தைக் கொணர்ந்த சமுதாயச் சூழலலை அறியலாம்.

வேளாளச் சமுதாயத்தின் பெருமைகளைப் போற்றுவதற்கெனவே ஓர் இலக்கியம் தோன்றியதும் இக்காலச் சூழலே தான். இதில், பிராமணர்களுக்கு ஒப்ப வேளாளர்களைத் தூய்மையானவர்களாகவும், தர்மக் காவலர்களாகப் போற்றவதும் குறிப்பிடத்தக்கது.

அதிலும், "யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் மன்னனுக்குக் கொடுத்துப் பாண்டிய மன்னரின் சிரத்தால் முடி சூட்டுபவர்களாக வேளாளர்களைப் பாண்டிய


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மண்டல சதகம் எடுத்துரைப்பது, அக்காலச் சமுதாயச் சூழலால் நிகழ்ந்த மாற்றங்களை இயம்புகிறது. சதக இலக்கியங்கள் வேளாளர்களைச் சத் சூத்திரர்கள் என்று பெருமையுடன் கூறுகிறது." [8]

மேலும், "கோவிலதிகாரிகளாகவும் நிலவுடைமையாளர்களாகவும் அரசனுக்கு அருகில் இருக்கும் வாய்ப்பு பெற்றவர்களென வேளாளர்களை சோழ மண்டல சதகம் புகழ்பாடுகிறது. இக்கருத்து மற்றைய இலக்கிய இலக்கணங்களில் அறியலாகும் வருணப்பாகுபாடு, சாதி முறைமையின் இறுக்கம் போன்ற தரவுகளுக்கு முரண்பட்டதாகவே உள்ளன. ஆக அக்காலத்திய வேளாள ஆதிக்கத்தையும், பிராமண வேளாள உறவுகளையும், வேளாள - தெலுங்கு அதிகாரிகளின் உறவுகளையும் புரிந்து கொள்ளச் சதக இலக்கியங்களை விரிந்த ஆய்வுக்குட்படுத்த வேண்டும்"[9] என்ற முடிவினை இங்கு கூறலாம்.

சிற்றிலக்கிய சமுதாயச் சூழலில் தோன்றிய புலவர்கள் மனதில், சமூக பொருளாதார மாற்றம் ஏற்படுத்திய தாக்குதலால், தமிழில் பின்வரும் முறைமையுடனே இலக்கியங்கள் ஆக்கம் பெற்றன. கவிதையில் சித்து விளையாட்டுக்கள் செய்வதும், அணி அலங்காரகள் செய்து வேடிக்கை காட்டுவதும் புலவர் பெருமக்களால் வாடிக்கையான வழக்கமாயிற்று. அவர்கள் வாழ்ந்த சூழலில் இதுதான் சாத்தியம் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது.

**தொகுப்புரை**

சிற்றிலக்கிய காலச் சமுதாய மாற்றத்தில் முதன்மையானது எனில் தனித்தமிழர் இனம் என்று இல்லாமல் பல்வேறு வழிகளில் கலப்பு இனங்கள் தோன்றிய மாற்றத்தினைக் குறிப்பிடலாம். உணவு, உடை, கல்வி, கலை போன்றவற்றில் மட்டுமில்லாது படைப்பாளர்களின் உள்ளங்களில் மாற்றங்களை ஏற்படுத்திய கால கட்டம் சிற்றிலக்கிய காலம் என்பதை அறிய முடிகின்றது. இனக்கலப்புகள் அரங்கேறிய சூழலிலே மொழிக்கலப்பும் மிக இயல்பாக அரங்கேறிய முறைமையினை இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன. சிற்றிலக்கிய காலச் பாண்டிய மண்டல சதக நூல்களை மறுவாசிப்பிற்கு உட்படுத்தினால் வருணப்பாகுபாட்டில் காணலாகும் முரண்பட்ட கருத்தாக்கங்களை ஆய்வாளர்கள் ஆயவுலகிற்கு கூறலாம் என்ற கருத்தாக்கமும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

**குறிப்புகள்**

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி. எட்டு, ப. 468.
2. தி.சு.நடராசன், திறனாய்வுக் கலை, ப.65.
3. க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.14.
4. மு.அருணாச்சலம், தமிழ் இசை இலக்கண வரலாறு, ப.406.
5. க.ப.அறவாணன், தமிழர்மேல்நிகழ்ந்தபண்பாட்டுப்படையெடுப்புகள்,ப.174.
6. Sakthi Perumal, origin and Growth of Tamil Drama, P.170.
7. தில்லைநாதன், இலக்கியமும் சமுதாயமும், ப.19.
8. அ.மார்க்ஸ், சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள், ப.25.
9. மே.நூ.,ப.36.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 14. இடைக்காடர் பாடல்களில் சிவதத்துவங்கள் - ஓர் ஆய்வு

**செ.வித்யா** MA.,ADTA.,DGT.,NET
தமிழ்த் துறை, உதவிப் பேராசிரியர்
தி ஸ்டாண்டர் ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
6382378526

*DOI 10.5281/zenodo.17258479.*

**Abstract**

The Siddhar Songs in Tamil literature hold a distinctive place in expressing spiritual, philosophical, and experiential dimensions of life. Among them, the works attributed to the Itai Kadar Siddhar present profound insights into the principles of Saiva Philosophy. This study explores the Saiva concepts embedded in these verses,foucusing on the Siddar's perception of Svia as the Supreme Reality and the ultimate goal of human life as union with Siva. Themes such as the relationship between Pati–Pasu–Pasa(God–Soul–bond),liberation, devotion, yoga, and mystical powers are examined in detail. His songs not only highlight the philosophical depth of Saivism but also reflect the lived experience of the Siddhar tradition, where philosophy and spiritual practice merge seamlessly. Thus, this study emphasizes the significance of Saiva thought in the Itai Kadar Siddhar's songs, underlining their contribution to Tamil Siddhar heritage and to the broader Saiva philosophical discourse.

**Key Words** : Siddhar - Heritage - Liberation - Philosopical Discourse.

## முன்னுரை

மனத்துணிவும் மாசிலா உள்ளமும் கொண்ட சித்தர்கள் தங்களின் வாழ்க்கையை எளிதாக எடுத்துக்கொண்டனர். சாதாரண மனிதர்களுக்கு வாழும் நெறியைப் புலப்படுத்தினர். அவர்களுக்கு ஏற்படும் பிணிகளுக்கு மருந்துகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தினர். சித்தர்களின் வாழ்க்கை முறையை யாவரும் பின்பற்றுவது எளிதானதாகும். அதனால் தான் அவர்களின் கொள்ளைகள் பாமர மக்களை ஈர்த்தன. சித்தர்கள் சிவபெருமானைத் தங்களுடைய முழு முதற்கடவுளாக நினைத்தனர். கடவுள் நெறியிலும் புரட்சிகளை ஏற்படுத்தியவர்கள் சித்தர்கள். சித்தர்கள் தங்களின் பாடல்களில் சிவதத்துவங்களை தந்துள்ளனர். இதன் அடிப்படையில் இடைக்காட்டுச் சித்தரின் பாடலில் உள்ள சிவதத்துவத்தை இவ்ஆய்வுகட்டுரையில் காணலாம்.

## தத்துவம் - பொருள்

தத்துவம் என்பதன் பொருள் “தத்” “துவம்” என்று பிரித்து நோக்கினால் அதன் தன்மை என்பதாகும். தத் என்றால் அது என்று பொருள். துவம் என்பது தன்மை என்பதைக் குறிக்கும் பின்னொட்டு. அதனுடைய தன்மை, அதாவது இந்த உலகின் தன்மை, இதில் வாழுகின்ற வாழ்க்கையின் தன்மை, அதை அனுபவிக்கின்ற நான் என்பதன் தன்மை ஆகிய அனைத்து அதுக்களின் தன்மைகளையும் ஆராய்ந்து அறிந்த கோட்பாடுகளே தத்துவம். தத்துவம் என்றால் உண்மைப் பொருளை உணர்த்துவது. இதனை,

**“சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்**
**மிதா சனியாதிருந்தேன் நின்ற காலம்**
**இதா சனியாதிருந்தேன் மனம் நீங்கி**
**ஊதா சனியாது உடனே உணர்ந்தோமால்.”**1

என்னும் திருமூலர் பாடலில் தத்தவம் என்பதற்கு விளக்கம் சுட்டப்படுகின்றது. இதே தத்துவம் என்பதற்கு வேறு வகைகளிலும் பொருள் காட்டப்படுகிறது. தத் என்றால் அது,

துவம் என்றால் நீ என்று பொருள். ஆக, அதுவே நீ என்று அர்த்தம். இதில் இருந்துதான் வேத மாகவாக்கியமாகிய தத்வமஸீ - 'நீயே அதுவாக இருக்கிறாய் - உருவானது. ஒவ்வொரு நானும் இங்கே நீ என்று சுட்டப்படுகிறது. நீ எதுவாக இருக்கிறாய்? 'இந்த பிரபஞ்சத்தின் ஆதார சக்தி எதுவோ, அதுவாகவே அதன் பகுதியாகவே நீ இருக்கிறாய்' என்பது இதன் பொருள். இந்தியாவில் தோன்றிய எந்தவொரு தத்துவமும் முற்றிலுமாக அழிந்துபோய்விடவில்லை. கண்டிப்பாக, அழிக்கப்படவும் இல்லை. ஆகையால் தான்,

- கடவுளோ ஆன்மாவோ இல்லை என்று கூறும் நாத்திகமான சார்வாகம்
- பொருள்களின் சேர்க்கைதான் உலகம் என்று கூறும் லோகாயதம்
- ஆன்மா உண்டு, ஆண்டவன் இல்லை என்று கூறும் சமணம்
- ஆண்டவனைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் வாழ்வியலை போதிக்கும் பௌத்தம்
- பிரபஞ்சத்தின் தோற்றத்தை ஆராய்ந்து ஆன்மாவை வலியுறுத்தி ஆண்டவனை மறுக்கும் சாக்கியம்
- அணுக்களின் சேர்க்கைதான் உலகம் என்று கூறும் வைசேஷிகம்
- காரண - காரிய வாதங்களை அலசி ஆராயும் நியாயம்
- உடல் - மனக் கட்டுப்பாடுகள், பயிற்சிகள் மூலம் உண்மையை அறிய முயலும் யோகம்
- வேள்விகள் உள்ளிட்ட கடமைகளைச் செய்வதை வலியுறுத்தும் மீமாம்சை
- தத்துவ விசாரணையையும் கடவுளையும் வலியுறுத்தும் வேதாந்தம், அதன் உட்பிரிவுகளான அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம்
- இந்த வேதாந்தத்தில் இருந்து வேறுபட்டு, சிவமே பரம் என்று கூறும் சித்தாந்த சைவம்
- சித்தாந்த சைவத்தோடு முரண்பட்ட பாசுபதம், காளாமுகம், காபாலிகம்
- மந்திர - தந்திர - யந்திர வழிபாட்டை முன்னிறுத்தித் தோன்றிய தாந்திரீகம்
- வழிபடு கடவுளை விரித்துக் கொண்டு எழுந்த சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம்,காணாபத்யம், சௌரம், ஐந்திரம்

என பல்வேறு தத்துவங்கள் இந்தியாவில் பல்கிப் பெருகின, பெருகி வருகின்றன.

**தத்துவ அடிப்படைகள்**

- பதி (இறைவன்)
- பசு (உயிர்)
- பாசம் (மலங்கள்)

ஆகிய மூன்றையும் என்றென்றும் உள்ள நிலைத்த பொருள்களாக ஏற்றுக்கொள்வது சைவசித்தாந்த தத்துவத்தின் அடிப்படையாகும். சைவசித்தாந்தத்தின் படி இம்மூன்றுமே முதலும் முடியும் இல்லாதவை. இதனால் இவை மூன்றையுமே யாரும் படைத்ததில்லை என்கிறது சைவசித்தாந்தம். இதனை,

> **"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்**
> **பதியினைப் போல் பசு பாசம் அனாதி**
> **பதியினைச் சென்று அணுகா பசு பாசம்**
> **பதி அணுகின் பசு பாச நில்லாவே."**[2]


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

திருமூலர் இப்பாடலின் மூலம் மூன்றையும் விளக்குகிறார்.

- இறைவன் - அறிவு வடிவாகவே இருக்கும் இறைவன் எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்திருப்பவன், அளவற்ற வல்லமை பெற்றவன்.
- உயிர் - உயிர்கள் இயல்பாகவே அறிவுள்ளவை ஆனால் மலங்களினால் பிணிக்கப்படும் போது அவற்றின் அறிவு மறைக்கப்படுகின்றது. மலங்களின் பிணிப்பிலிருந்து தாங்களாகவே விடுபடுவதற்கு உயிர்களால் முடியாது. இறைவன் துணையுடனேயே மலங்களின் பிணைப்பிலிருந்து உயிர்கள் விடுபட முடியும்.
- மலங்கள் - மலங்கள் சடப்பொருள்கள். அறிவற்றவை. உயிர்களைப் பிணித்து அவற்றின் அறிவை மறைக்கும். வல்லமை கொண்டவை. இவை இறைவனை அடைய முடியாது.

**சிவ தத்துவம்**

சைவ சித்தாந்தத்தின் படி, மும்மலங்களில் ஒன்றான மாயை, பதியால் இயக்கப்படும் போது, 36 தத்துவங்களும் படிப்படியாகத் தோன்றுகின்றன. இந்த மாயமலமானது, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்று மூன்றாகப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் இருந்து முறையே ஐந்து, ஏழு, இருபத்து நான்கு என மொத்தம் முப்பத்தாறு தத்துவங்கள் தோன்றுகின்றன.

**சுத்தமாயை சிவ தத்துவம்** (5)

**அசுத்தமாயை வித்தியாதத்துவம்** (7)

**பிரகிருதிமாயை ஆன்ம தத்துவம்** (24)

இதில் ஒரு பகுதியாக சுத்தமாயையிலிருந்து தோன்றிய சிவ தத்துவம் ஐந்தை மட்டும் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

**சிவ தத்துவம் ஐந்து**

சிவ தத்துவங்கள் ஐந்து என்று கூறுவார்கள் சைவ நெறியாளர்கள். இடைக்காடரின் பாடலில் சிவ தத்துவம் எம்முறையில் வந்துள்ளது என்பதைக் காண்போம்.

- சுத்த வித்தை
- ஈசுவரம்
- சாதாக்கியம்
- விந்து
- நாதம்

**சுத்த வித்தை**

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுக்கு அடிப்படையான இறைதத்துவம். இதன் போது இறையறிவு முழுமையாகச் செயற்பட, செயல் (கிரியாசக்தி) பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும்.

**“ ஆறா தாரத்தெய் வங்களை நாடு**
**ஆவர்க்கும் மேலான ஆதியைத் தேடு**
**கூறான வட்டஆ னந்தத்திற் கூடு**
**கோசம்ஐந் தும்கண்டு குன்றேறி ஆடு”**

**(இடைக்காடர் பாடல்கள்,பாடல்-27)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்னும் பாடலில் இடைக்காடர் சுத்த வித்தை என்னும் சிவ தத்துவத்தை எடுத்துக் கூறியுள்ளார். அதாவது ஆறு ஆதாரங்களின் அதிதேவதைகளை நாடுங்கள் அவர்களுக்கும் மேலான பிரம்மத்தை தேடுங்கள் இதன் பகுதியான ஆனந்த வட்டத்தில் கூடுங்கள் ஐந்து கோசங்களை உணர்ந்து குற்றமாகிய உச்சந்தலைக்கு மேல் உணர்வால் அறியுங்கள் என்று இதன் மூலம் சிவத்தை வழிபட்டால் இறை சக்தியை பெறலாம் என்று உணர்த்தியுள்ளார்.

**ஈசுவரம்**

மறைத்தற் சக்தியான மகேசுரன். சேயலற்ற நிலையில் இருக்கும் ஆன்மாக்களை மறைத்தலுக்குள்ளாக்கும் செயல்பாடு ஆரம்பமாக, அதனூடே மறைவாக இறையறிவும் இயங்கிக் கொண்டிருக்கும். ஈசுவர தத்துவமானது, ஆன்மாக்களை மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழன்று கொண்டிருக்கச் செய்யும். இதனை இடைக்காடர் பாடலில் முக்தியற்ற நிலை என்று குறிப்பிடுகிறார். இதனை,

**" சொல்லென்னும் நற்பொரு ளாம் - பசுவே**
**சோதியைப் பேற்றாக் கால்**
**இல்லென்று முத்திநி லை - பசுவே**
**எப்பொரு ளுஞ்சொலு மே"**
**(இடைக்காடர் பாடல்கள்,பாடல்-41)**

என்னும் இடைக்காடரின் பாடலில் ஈசுரம் என்னும் சிவ தத்துவம் இடம்பெற்றுள்ளது. கடவுளைப்போற்றும் சொல்லால் அந்தச் சோதியை வணங்காவிட்டால் முத்திநிலை இல்லை என்று நூல்களும் சொல்லும் பசுவே! என்னும் கருத்தின் மூலம் இடைக்காடர் முக்தியற்ற நிலையை கூறுகிறார்.

**சாதாக்கியம்**

சுத்த - வித்தையும் ஈசுவரமும் கலந்தது. அதாவது அறிவும் செயலும் சமமாக இருப்பது. சிவ-சக்தி இணைவால் செயலும் அறியும் சமநிலையில் காணப்படும். இடைக்காடரின் பாடலில் சாதாக்கியம் என்னும் சிவ தத்துவமும் இடம்பெற்றுள்ளது. இதனை,

**"சூரியன் வாள்பட்ட துய்யப னிகெடும்**
**தோற்றம் போல் வெவ்வினை தூள்பட வே**
**நாரிஇ டப்பாகன் தாள்நெஞ்சில் போற்றியே**
**நற்கதி சேர்ந்திடும் கோனா ரே"**
**(இடைக்காடர் பாடல்கள், பாடல்-8)**

இப்பாடலில் சூரியனின் சுடரொளிபட்டு பனிமறையும் தோற்றத்தினைப் போல தீய வினையாவும் தூளாகிட பெண்பாகம் கொண்ட ஈசனை உன் நெஞ்சில் தொழுது வந்தால் நற்கதிவந்து சேரும் கோனாரே! என்று சிவ - சக்தி இணைந்த சாதாக்கியம் என்னும் சிவ தத்துவத்தை கூறியுள்ளார்.

**விந்து**

சக்தி இயங்கிக் கொண்டிருக்கும் கிரியா சக்தி, அந்த இயக்கத்தாலேயே, சிவத்துடன் இணைந்து ஏனைய தத்துவங்களை உருவாக்க ஆரம்பிக்கும் இறைவனின் திருவருட்சக்தியின் நிலை ஆகும். இந்த சிவதத்துவம் இடைக்காடர் சித்தரின் பாடலில் பயின்றுவந்துள்ளது. இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"உலகம்வெ றுத்திடும் பால்கற - மிக**
**ஒக்காளம் ஆகிய பால்கற**
**கலசத்தின் உள்விழப் பால்கற - நிறை**
**கண்டத்தின் உள்விழப் பால்கற"**
**(இடைக்காடர் பாடல்கள், பாடல்-105)**

என்னும் இப்பாடலில் விந்து என்னும் சிவ தத்துவம் இடம்பெற்றுள்ளது.

**நாதம்**

தூய அறிவாலான பரம்பொருளின் முழுமையான நனவிலி நிலை. இதுவே பரசிவ வடிவம் ஆகும். இது சிவாநுபூதி. சிவனோடு ஒன்றுபட்டிருத்தல். இடைக்காடரின் பாடலில் நாதம் என்னும் சிவதத்துவத்தை காணலாம். இதனை,

**"வாக்காதி ஐந்தையும் வாகாய்த்தெ ரிந்தேனே**
**மாயைசம் பந்தங்கள் ஐந்தும்பி ரிந்தேனே**
**நோக்கரு யோகங்கள் ஐந்தும்பு ரிந்தேனே**
**நுவலுமற் றைந்தியோக நோக்கம்ப ரிந்தேனே"**
**(இடைக்காடர் பாடல்கள்,பாடல்-26)**

என்னும் இப்பாடலில் இடைக்காடர் நாதம் என்னும் சிவ தத்துவத்தை கூறியுள்ளார்.

**முடிவுரை**

தத்துவத்தின் பொருள் மற்றும் தத்துவத்தின் அடிப்படையான பதி, பசு, பாசம் போன்றவைகளின் அறிமுகம் வழங்கி சிவனின் ஐந்து தத்துவங்கள் சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், விந்து, நாதம் என்பவை இடைக்காடரின் பாடலுடன் சேர்த்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. திருமூலர், திருமந்திரம், பாடல் 76
2. மேலது, பா.115

**துணைநூற்பட்டியல்**

1. திருமுருகன்.இரா. - சித்தர் பாடல்கள், இடைக்காடர் சித்தர் பாடல்கள் சாகித்திய அகாதெமி, புது தில்லி - 110001.
2. இராமநாதன்.அரு. --- சித்தர் பாடல்கள் பிரேமா பதிப்பகம், சென்னை --24


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 15. நாட்டுப்புறவியல் குறிப்பிடும் மக்களின் வாழ்வியல்

**பி. சந்தனமாரி**
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி),சிவகாசி
Psanthanamari90@gmail.com - 8489748374
*DOI 10.5281/zenodo.17258499.*

**Abstract :**

Folklore is a form of expressing the lifestyle and mental feelings of a particular region's people. This literature is intertwined with the lives of the rural people. This article aims to highlight the realistic lifestyle of the rural people, such as their mental burdens, joys and sorrows, customs, relationships, and marriage rituals, in the songs sung by the rural people.

**Key Words :** Folk Literature - Sorrows - Relationship - Mental Burdens

## முன்னுரை

நாட்டுப்புறவியல் என்பது குறிப்பிட்ட பகுதிசார்ந்த மக்களின் வாழ்வியல் மற்றும் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வடிவமாக காணப்படுகிறது. இவ்விலக்கியம் கிராம மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ளன. கிராமப்புறத்தில் வாழும் மக்கள் பாடும் பாடல்களில் அவர்களின் மனச்சுமை, இன்ப துன்பங்கள், பழக்க வழக்கங்கள், உறவுமுறைகள், திருமண சடங்குகள் போன்ற எதார்த்தமான வாழ்வியலை எடுத்துரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புறப் மக்கள் என்போர் கிராமம் சார்ந்த இடங்களில் வாழ்க்கை முறையினை மேற்கொள்பவர்களாக உள்ளனர். இவ்விடத்தில் வாழும் மக்கள் பாடும் பாடலை நாட்டுப்புற பாடல்கள் என்கிறோம். இப்பாடல்கள் மக்களின் வாழ்க்கையில் நடக்கும் உண்மையான நிகழ்வுகளை எடுத்துரைக்கும் விதமாக அமைகின்றன.

இதனை,

**“பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே**
**அங்கதம் சொல்லு முதுசொல்லோடு அவ்வேழ் நிலைத்தும்”**

என்று தொல்காப்பியர் ஏழு வகையான வனப்புகளுள் காட்டியுள்ளார்.

## குழந்தையின்மையின் புலம்பல்

ஒரு காலத்தில் குழந்தை பேரு இல்லாத பெண்களை “மலடி” என்று இழித்துப் பேசுவதுண்டு. நாட்டுப்புற மக்களில் பெண்கள் திருமணம் ஆகி ஒரு ஆண்டிற்குள் குழந்தைப் பெற்று எடுக்க வேண்டும் என்பது அனைவராலும் எதிர்பார்க்கப்படக்கூடிய சமூக நிலையாக இருந்தது. சமூகத்தில் அவ்வாறு நிகழவில்லை என்றால் அப்பெண்ணை பிற மக்கள் இழிவாக பேசுவார்கள். அவர்களை விட இல்லத்தில் வாழும் தன் கணவன் கூட தன்னை அறிந்து செயல்படவில்லை என்பதை,

**“நான் யாருக்கென்ன தீங்கு செய்தேன் - அரிராமா**
**பத்தினி தான் என்ன செய்வேன்**
**ஈனாத வறடியின்னு இந்த வையகமே**
**என்னைப் பார்த்து ஏசுதையா**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**மலடி மலடி என்று வையத்தார் ஏசாமல்**
**தாய் என்ற பெருமை தனை மனங்குளிர"**

என்னும் பாடல் வரிகளின் மூலம் குழந்தையின்மையால் ஏற்படும் பெண்ணின் மன உணர்வுகளை பறைசாற்றுகின்றன. அவ்வகையில் பெண்ணாகப் பிறந்தாலும் தாயாக வேண்டும் என்பதை சமூகம் நிலைநாட்டுகிறது.

**கற்புநெறி**

நாட்டுப்புற இலக்கியத்தில் பெண்கள் திருமணம் என்பது விரும்பும் ஒரு ஆடவனையோ அல்லது முறைமாமன் மகனையோ சந்தித்து பேசி திருமணம் செய்து கொண்டாலும், தன்னுடைய கற்பு நெறியை பின்பற்றுவதில் கண்ணும் கருத்துமாக வாழ்ந்து கொண்டு செயல்படுகிறார் என்பதை,

**"மண் குடம் கொண்டு**
**மலையோரம் தண்ணிக்குப் போகும்**
**மாமன் மகளே**
**மண்குடம் போனால்**
**மறுகுடம் வாங்கலாம்**
**மானம் போனால் - மாமன் மகனே**
**உலகம் என்ன சொல்லும்"**

என்ற பாடலின் வழி "கற்பு" என்பது ஆண் பெண் என்று இருபான்மைக்கும் உரியதாக இருந்தாலும் அதை பின்பற்றுவது பெண்ணின் கடமை இருக்கின்றனர் என்பதை இக்கால சமூகம் எடுத்துரைக்கின்றது.

**"கற்பு எனப்படுவது சொல் திறப்பாமை"**

என்பது அவ்வையார் வாக்காவும், கற்பு என்பதே திருமணத்துடன் இணைந்தது உன்றும் அக்காலத்தில் கூறப்பட்டன.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது முகம் தெரியாத விருந்தினரை அன்போடு வரவழைத்து அவர்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்து உபசரிப்பு செய்வது விருந்தோம்பலாகும். "விருந்து" என்றால் புதுமை அல்லது வழக்கத்திற்கு வேராக வரும் ஒருவர் எனப் பொருள் ஆகும். கிராமத்தில் வாழும் பெண்கள் அனைவரும் ஒன்று கூடி திருவிழாக்களில் கும்மி அடிக்க செய்கின்றன. அவ்வகையில் நாம் இல்லம் தேடி வரும் விருந்தினர்களுக்கு முறையான விருந்து உபசரிப்பு செய்து அவர்களை வழியனுப்பும் நிகழ்வை,

**"அறிவே நிலவே**
**ஆரொருவாரார் மட்டுமல்ல**
**அப்பாவா மோட்டு மேல**
**என்ன குத்தி சோராக்குவ**
**பச்ச நெல்லு குத்தினால்**
**பாதி நேரம் செல்லும் முன்னே**
**முத்து குத்தி சோராக்கி"**

விருந்தினர் வரும்பொழுது தன்னிடம் இருக்கும் உணவுப் பொருட்களைக் கொண்டு மனங்குளிர உபசரித்து இன்முகத்துடன் உணவளிப்பதே மிகச்சிறந்த ஒன்றாகும். மேற்கூறிய


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பாடல் வரிகளின் வாயிலாக தமிழர்களின் தலைசிறந்த பண்பாடான விருந்தோம்பல் பண்பு காணப்படுகிறது.

**தாலாட்டு**

குழந்தைகளை உறங்குவதற்காக தாய்மார்கள் பாடப்படும் பாட்டு தாலாட்டு ஆகும். தாலாட்டு என்ற தொடரை தாள் + ஆட்டு = தாலாட்டு என்றும் என்றும் கூறுவர். இத்தாலாட்டு பாடுவது என்பது நீண்ட ஒரு கலை போன்றதாகும். ஒரு தாய் தன் குழந்தை வரம் வேண்டியும், அவர்களுக்காக நோன்பு இருந்ததைப் பற்றியுமு் நினைத்து தாலாட்டு பாடுகிறாள் என்பதனை,

**"அள்ளி மிளகுத்தின்னு**
**அறுபது நாள் நோன்பு இருந்து**
**கன்னி சிறையிலிருந்து கண்டெடுத்த குஞ்சரமோ**
**மானத்து மீனும்**
**மேகத்து மின்மொழியோ**
**தாகத்தை தீர்க்க வந்த**
**தங்க இளநீரோ"**

என்று தனது குழந்தையினை மேகம், விண்மீன், போன்றவற்றோடு உவமித்து தாலாட்டு பாடல்கள் பாடுகிறாள். மேற்குறிப்பிட்ட வரிகள் மூலம் தாய் மீண்டும் குழந்தை வரம் வேண்டி பாடச் செய்கிறாள் என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

**முடிவுரை**

நாட்டுப்புற மக்கள் வாழ்க்கை அடிப்படையில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் கையாளுகின்றனர். அம்மக்கள் கள்ளம்கபடம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மக்களின் ஓய்வு நேரங்களில் சில பொழுதுபோக்கிற்காக பாடப்பட்டவையே இந்நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகும். இந்நிலையில் பெண்கள் குழந்தைபேறு அடையாமை, அவர்களின் கற்பு நெறி தவறாமை, குழந்தைக்கான தாலாட்டு பாடல், கும்மியடிக்கும் பெண்களின் நிலை, விருந்தோம்பல் பண்பு ஆகியவை அனைத்தையும் மையக்கருத்தாக வைத்தும் உணர்வுபூர்வமாகவும் நம் மனதில் நிலைத்திருக்கும் தன்மை இந்நாட்டு புற பாடல்களுக்கு உள்ளது. அந்நிலையில் மக்களின் மனதினை வருடும் தன்மையை நாட்டுப்புற பாடல்களும் பெற்றிருக்கின்றது என்பதனை இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறிய முடிகிறோம்.

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 16. தனுஷ்கோடி ராமசாமியின் தோழர் புதினமும் சமூகச் சிந்தனையும்

**பேரா. க.மாரிசெல்வம்,**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.

*DOI 10.5281/zenodo.17258519.*

**Abstract :**

Life is full of struggle. Contradictions are the source of struggle. When the life of the working people is tightened by the ruling class, they erupt into struggles. In the struggle, the rights of the workers rise as a cry of rebellion. Communalist organizations try to create communal thinking in the society. Among them, Dhanushkodi Ramasamy establishes himself as a character on behalf of the working people and raises the war cry. As a result, justice is also seen in the struggle.

**KeyWords :** Dhanushkodi Ramasamy - Communist - Struggle

வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்தது. முரண்பாடுகள் போராட்டத்தின் தோற்றுவாயாகத் திகழ்கின்றன. உழைக்கும் மக்கள் வாழ்க்கை ஆளும் வர்க்கத்தினரால் இறுக்கப்படும் போது போராட்டங்களாக வெடிக்கின்றன. போராட்டத்தில் உழைப்பாளர்களின் உரிமைகள் கலகக்குரலாக எழுகின்றன. பொதுவுடைமை சார்ந்த அமைப்புகள் சமூகத்தில் பொதுவுடைமை சிந்தனையை உருவாக்க முனைகின்றன. அவற்றில் தனுஸ்கோடீ இராமாசமி உழைக்கும் மக்களின் சார்பாக தன்னை பாத்திரமாக நிலைநிறுத்திக் கொண்டு போர்க்குரலை எழுப்புகின்றார். அதன் விளைவாக போராட்டத்தில் நீதிகிடைப்பதையும் காணமுடிகின்றது.

**வர்க்கம்:**

எல்லாமும் எல்லோருக்கும் பொதுவாக இருந்தபொதுவுடைமைச் சமூகத்திற்குபின் உழைக்கும் மக்கள் அடிமைகளாகவும் ஆளும் வர்க்கம் முதலாளித்துவம் நிலப்புரவத்துவம் எனப் பல்வேறு நிலைகளாகவும் சமூகம் பிளவுண்டது. உழைக்கும் பொருளில் தனக்கு கிடைக்க வேண்டிய பங்கினை அடைவதற்கு வெவ்வேறு வழிமுறை இருந்தன. சமூகத்தில் உழைப்புப் பிரிவுஏற்ப்பட்டதன் விளைவாகவர்க்கங்கள் இரண்டாகபிரிந்தன.

1.**முதலாளிவர்க்கம்**
2.**உழைக்கும் வர்க்கம்**

ஆளும் வர்க்கத்தினருடைய வருமானம் பழக்கவழக்கங்கள் மற்றும் அவர்கள் மனப்பங்கு போன்றவை பாட்டாளிமக்கள் மனதில் தோன்றில் எழுகின்றபோது பகை முரண் ஏற்படுகின்றன. பாட்டாளி உழைப்பை தனக்;குச் சொந்தமாக்கிக் கொள்ளவேண்டும் என நினைக்கும் முதலாளி வர்க்க எண்ணத்தின் நிலைப்பாடு வர்க்கமுரண்பாடுகளுக்கு வழிவகுக்கின்றது..

**வர்க்கப் போராட்டம்**

போராட்டத்தின் அடிப்படை முரண்பாடு. ஒவ்வொரு பொருள்களுக்குள்ளும் முரண்பாடு எழுகின்றது. எதிர் எதிர்கூறுகள் முரண்பாடு வலுப்பெறும் போதுபோராட்டம் உருவாகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**துப்பரவுத்தொழிலாளர் போராட்டம்**

தொழிலாளர்கள் ஆண்களும் பெண்களும் சேர்ந்து போராட்டத்தில் ஈடுப்படுகின்றார்கள். உழைக்கும் வர்க்கத்தினரின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்களின் கோரிக்கைகளாக "குப்பைகள் சாக்கடைகள் மலக்குவியல்களில் பணிபுரிகிற தங்களுக்கு காலணிகள் வழங்கவேண்டும். பல ஆண்டுகளாகத் தற்காலிக ஊழியர்களாக உள்ளவர்களை நிரந்தரமாக்க வேண்டும். ஆண்டுக்கணக்கில் காலியாக உள்ள 30 வேலை இடங்களுக்கு உடனே ஆட்களை பணியில் அமர்த்த வேண்டும் தங்களுக்கு குடியிருப்புகள் வேண்டும்" (தோ.ப.162) என்பன அமைவதையும் காணமுடிகின்றது.

பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வென்று பெறுவதற்கு அனைத்து உலகும் இருக்கிறது என்கிறது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை..

> **"உலகத் தொழிலாளர்களே..ஒன்றுசேருங்கள்!**
> **இழப்பதற்குநம்மிடம் …ஒன்றுமில்லை**
> **அடைவதற்குஉள்ளதோ…பொன்னுலகம்!**
> **ஒன்றுபடுவோம்…போராடுவோம்**
> **போராடுவோம்…வெற்றிபெறுவோம்!**
> **புரட்சிஓங்குக!"(தோ.ப.163)**

என்ற தோழர் புதினவரிகள் சுட்டுகின்றன. ஆளும் வர்க்கத்தின் மீது தங்கள் எதிர்ப்பினைக் கோஸங்கள் வழி அழுத்தமாக பதிவுசெய்துள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது.

**போராட்டக் குழு**

முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தினை கையடக்கி சமூகத்தில் தன் இருப்பியலை நிலைநிறுத்த முயலுகின்றது. அந்தவகையில் வர்க்கங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படுகின்றன. உழைக்கும் வர்க்கத்தின் தேவையும் உரிமையும் ஒடுக்கப்படும் போது உழைக்கும் வர்க்கங்கள் ஒன்றுபட்டு சங்கங்களாகின்றன. சங்கங்கள் மேலாதிக்கம் செய்யும் ஆளும் வர்க்கத்தினை எதிர்த்துப் போராடுகின்றன. **"அனைத்திந்திய வங்கி ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அரசுஊழியர் சங்கம் முதுகலைபட்டதாரி ஆசிரியர் கழகம் இன்னும் தொலைவில் பேனர்கள் உயர்கின்றன. தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணிநீப்பு தொழிலாளர் சங்கம் நகரசுத்திதொழிலாளர் சங்கம் என்று பேனர்கள் செல்கின்றன."(தோ.ப.226)**

சமூகம் வேறுபாடுகளைக் கொண்டு இயங்கிவருகின்றது. இதனில் உழைக்கும் வர்க்கத்தினர் ஆளும் வர்க்கத்தினரிடம் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் போராட்டத்தை ஆயுதமாகக் கொண்டு செயல்படுகின்றனர் என்பதனை அறிய முடிகின்றது. எல்லாமும் எல்லாருக்கும் பொது என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மார்க்ஸ் ஏங்கல்ஸ் ஆகியோர் கோஸங்களை எழுப்பினார்கள். அந்த கோஸங்களை உழைக்கும் வர்க்கங்கள் தாங்கள் நடத்தும் போராட்டத்தில் எழுப்புகின்றனர். இதனை

> **"தொழிலாளர்கள் விவசாயிகள் ஒற்றுமை-ஓங்குக!**
> **போராட்டத் தடைச் சட்டத்தைரத்துசெய்!**
> **மத்தியமாநிலஅரசுகளே….**
> **ஜனநாயகஉரிமைகளைப் பறிக்காதீர்கள்!**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**பம்புசெட் மின் கட்டணஉயர்வை- ரத்துசெய்**
**விவசாயப்பொருளுக்கு-நியாயவிலைவழங்கு!**
**கல்விக்கூடங்களை-கொள்ளையிடமாக்காதே!**
**பள்ளித்தலமனைத்தும் -கோயில் செய்குவோம்!**
**வேலைவாய்ப்புக்களை-வியாபாரம் பண்ணாதே!**
**படித்த இளைஞர்களுக்கு-வேலைகொடு**
**வேண்டாம்! வேண்டாம்!-யுத்தங்கள்**
**வேண்டும்! வேண்டும்!-சமாதானம்**
**இனவெறிதன்னை-ஒழித்திடுவோம்**
**ஏகாதிபத்தியம்- ஒழிந்திடுவோம்**
**எல்லா இனமும் ஒன்றாக**
**இணைந்தேவாழ வழி செய்வோம்!"(தோ..ப.229)**

உழைக்கும் வர்க்கம் தங்களது பிரச்சினைகளைப் போராட்டமாக்குகின்றனர் என்பதனை அறியமுடிகின்றது.

**வர்க்கப் போராட்டமும் சதித்திட்டமும்**

தங்களின் உரிமைகளைப் பறிக்கும் ஆளும் வர்க்கத்தினை எதிர்த்து உழைக்கும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுகுரல் எழுப்புகின்றனர். இதனால் ஆத்திரமடைந்த ஆளும் வர்க்கம் போராட்டத்தினை முறியடிக்கும் நோக்கில் குண்டர்களைப் கரிகளும் போராட்டத்தில் இறக்கிவன் முறைகளைத் தூண்டிவிடுகின்றனர். அரசு அதிகாரிகளும் ஆளும் வர்க்கத்திற்கு கைக்கூலிகளாகச் செயல்பட்டு உழைக்கும் மக்களை வஞ்சிக்கின்றனார். ஆளும் வர்க்கத்தினரையும் அரசுஅதிகாரிகளையும் எதிர்த்துகுரல் எழுப்புகின்றனர். இதனை

**"சட்டமாம்…நீதியாம்…வெட்கக்கேடு!**
**சட்டமும் நீதியும்…முதலாளிக்கு**
**குண்டாந்தடியும் துப்பாக்கிக் குண்டும்**
**தொழிலாளிக்கு…!**
**சட்டமாம்…நீதியாம்…வெட்கக்கேடு!**
**(தோ.ப.230)**

ஆளும் வர்க்கத்தினரின் பணபலமும் படைபலமும் தான் ஆட்சிபுரிகின்றன. உழைக்கும் மக்களின் நியாயமான கோரிக்கைளும் உரிமைகளும் சிதைக்கப்படுகின்றன என்பதனை புதினத்தின் வழியாக அறிய முடிகின்றது.

ஓவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஒர் அரசியல் போராட்டத்தில் உள்ளடக்கமாக அமைகின்றது. பொருள்முதல் வாதத்தை அடிநிலையாகக் கொண்டஆளும் வர்க்கத்தினர் உழைப்பாளர்களை நசுக்குகின்றனர். உழைப்பாளர்களின் நியாயமான போராட்டத்தைவன் முறையாகமாற்றதிட்டமிடுகின்றனர். போராட்டக்களத்தில் உழைக்கும் வர்க்கத்தினர் மேல் தவறுஉள்ளதாகக் காட்டுவதற்கு சூழ்ச்சிசெய்கின்றனர். ஆளும் வர்க்கத்தினர் செல்வக் கொழுப்பினால் அரசைக் கைக்கொண்டுள்ளனர்.

**"விவசாயகளும் விவசாயத் தொழிலாளர்களும் வங்கியைக் கொள்ளையடிக்க முயன்றனர். அதை முறியடிக்கும் போராட்டத்தில்; தான் துப்பாக்கிச்சூடு நடத்த**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**வேண்டுயிருந்தது என்று வழக்கு ஜோடிப்பதற்குத்தான்"(தோ.ப.236)** ஆளும் வர்க்கத்தினர் அறிவையும் பணத்தையும் கருவிகளாகப் பயன்படுத்துகின்றனர். அரசு அதிகாரிகளைகைக் கொண்டு வலுவிழக்கச் செய்கின்றனர் என்பதனை அறியமுடிகின்றது.

**போராட்டத்தின் விளைவு**

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் களமாகப் போராட்டம் விளங்குகின்றது. போராட்டங்களில் ஊழியர்களின் அடிப்படைத் தேவைகளும் உரிமைகளும் கோரிக்கைகளாக ஆளும் வர்க்கத்தினரிடம் முன் வைக்கப்படுகிறது. ஆளும் வர்க்கத்தினர் ஊழியர்களின் இருப்பு நிலையை கண்டுகொள்வதில்லை. உழைப்பையும் பொருளாதார முன்னேற்றத்தையும் மட்டுமே குறிக்கோளாக் கொண்டுள்ளனர். ஊழியர்களின் ஒருமித்தகருத்தக்கள் போராட்டத்தில் நலத்திட்டங்களாக உருவெடுகின்றன. இவ்வாறு உழைக்கும் வர்க்கத்தினர் தங்களின் வாழ்வியலுக்காகப் போராட்டத்தில் தீர்வுகாணுகின்றனர். இதனை ஏறக்குறைய பாதிக்கும் மேற்பட்ட கோரிக்கைகளை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது. மாதம் நாற்பதுலட்சம் ரூபாய்க்கு மேல் கொடுக்கல் வாங்கல் உள்ளவங்கிகளில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்க நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. அதன்படிசுமார் 600 ஊழியர்களில் 120 பேர் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். பதவிஉயர்வில் 50 ஊழியர்களிடையே இருந்து பணிமூப்பு அடிப்படையில் தேர்வு செய்யவும் 50 நேரடியாக வெளியிலிருந்து நியமிக்கவும் நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. இவை எல்லாவற்றையும்விட கிராமப்புற வங்கி ஊழியர் சங்கத்தை நிர்வாகம் அங்கீகரித்துள்ளது".(தோ.ப.164) என்று புதினவரிகள் சுட்டுகின்றன.

சமூகத்தின் இயங்குநிலையில் வர்க்க முரண்பாடு உள்ளது. உழைக்கும் வர்க்கத்தினர் போராட்டத்தின் வழியாக சமூகப் பார்வைக்கு உள்ளாகின்றனர். மனிதநேயம் கொண்ட சமூக அமைப்புகள் ஆளும் வர்க்கத்தினரிடம் இருந்து உழைப்பாளர்களுக்கு தன்மையைப் பெற்றுத் தருவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு போராடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை அறியமுடிகின்றது.

பிரஞ்சுப்புரட்சி - சித்திரிப்பு :

'தோழர்' புதினத்தின் கருத்தியல் சார்ந்த மைய உரையாடல் அனைத்தும் 'பழனிமுருகன்' என்ற மார்க்சியச் சிந்தனை கொண்ட இளைஞனுக்கும் பிரான்சு தேசத்தில் இருந்து தொண்டு நோக்கில் வந்துள்ள சிலருக்கும் இடையே நடைபெறுவதாக இருக்கின்றது.உலகிற்கு உண்மைப் போராட்டத்தின் வழியாக உழைக்கும் வர்க்கத்திற்கான உரிமைகளை மீட்டெடுத்த 'தொழிற்புரட்சி'யினைக் கொடையாக வழங்கிய பிரான்சு தேசத்தவர்களுக்கு உழைக்கும் மக்களின் உணர்வுகளைப் புரிய வைக்கும் ஒரு போராளியாகத் தலைமைப் பாத்திரம் சித்திரிக்கப்படுவது வியப்பினை அளிப்பதாக உள்ளது.

அதேவேளையில் பிரான்சு தேசத்துக் கத்தோலிக்கக் கிறித்தவர்கள் உரையாடல்கள் அனைத்தும் தலைமைப் பாத்திரத்தின் செயல்பாடுகளைப் படைப்பாளர் வாசகனுக்கு மெழுகேற்றிக் காட்டப் பயன்படுத்தும் உத்தி முறைகளாகவே கொள்ள முடிகின்றது.ஏனெனில் கிறித்தவப் பிரசங்கங்களின் வழியாக மட்டுமின்றி கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருளாதார வினையூக்கியாகச் செயல்பட முனைகின்றனர்.

அதன்வழி பிரான்சு தேசத்தவர் சேவை எனும் மத பிரசங்க செயல்பாடு என்பது வர்க்கப் பிரிவினை மூலம் ஏற்பட்ட ஆழ்புண்ணிற்காக மேற்பரப்பில் தடவப்படும் மருந்து போன்றதே ஆகும்.ஆனால் தலைமைப் பாத்திரம் கூற்றாக,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

"நாங்கள் எங்கள் மக்களுக்குப் பிச்சையிடுவதையோ சில சீர்திருத்தங்கள் செய்வதையோ விரும்பவில்லை.முழுக்க இந்தச் சமுதாயத்தின் அடிப்படை அமைப்பையே மாற்றி உழைக்கும் மக்களைச் சுரண்டாத சுதந்திரமான ஓர் இனிய உலகை அமைக்கத் திட்டமிடுகிறேன்"ப-28

வருகின்றது. இக்காட்சிச் சித்திரிப்புச் செய்துள்ளதைக் கொண்டு இப்புரையோடிய புண்ணைக் குணப்படுத்துவதற்கு அடிப்படையினையே மாற்ற வேண்டும் என்ற படைப்பாளருடைய உள்ளம் வெளிப்படுவதை உணர முடியும்.

**உளவியல் சித்திரிப்பு :**

கலிங்கமேட்டுப்பட்டியில் பழனிமுருகனும் குமரி ஷபின்னாவும் செல்லும் பொழுது நிகழக் கூடிய காட்சிகள் அனைத்தும் கிராம மக்களுடைய அறியாமையையும், நிறம் குறித்த தனது அடிமைச் சிந்தனையையும் சித்திரிப்பதாகவே உள்ளன.சான்றாக,ஷபின்னாவைப் பார்ப்பதற்காகக் கூடும் கூட்டம் அவர்கள் பேசுகின்ற பேச்சுகள் சிலவற்றைக் கொண்டு இதனை உணரலாம்.

**"எங்கள் கஷ்டங்களெல்லாம் நீங்குறதுக்கு நீங்க ஏதாவது வழி பண்ணுங்க சாமி"ப-34**

**"சாமி நீங்களே திரும்பி வந்து இந்த தேசத்த ஆளுங்க....சாமி....கொடுமைக்காரப் பாவிக ஆட்சியிலே..........ஜனங்க தவியாத் தவிக்குதுக.......நீதியே கிடையாது.....நீங்களே திரும்ப வந்து ஆளுங்க சாமி.....ஒங்களுக்கும் புண்ணியம் உண்டு.எங்க ஜனங்களுக்கும் வயிறாரக் கஞ்சிக் குடிக்க செவனேன்னு காலங் கழிக்குங்க."ப-36**

**"வெள்ளைக்கார நாட்லேருந்து கடலைத் தாண்டிவந்து எங்களுக்கு ஆஸ்பத்திரி கட்டிக் கொடுக்க வந்திருக்குற தர்ம புண்ணியவான்மார்கள்லா......என்று கைக்கூப்பியபடி சொன்னார்கள்"ப-132**

அதேவேளையில் விடுதலை அடையும் முன்பு கிராமச் சூழலில் பயன்படுத்தப்பட்ட குழந்தை பாடல்களில் வெள்ளைக்காரர்கள் பற்றியான நாட்டுப்புறப் பாடல்களைக் குழந்தைகள் இன்றளவும் பாடுவதும் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

**"வாராண்டா..... வாராண்டா.....வெள்ளைக்காரன்**
**வரட்டுந் தாயோளி வெள்ளைக்காரன்"ப-148**

காட்சியமைப்பிலும் அதனை விவரிக்கும் தன்மையிலும் படைப்பாளன் தன்னையறியாமல் தன் ஆழ்மனதில் ஊடாடுகின்ற உணர்வுகளை வெளிப்படுத்திடுவதும் உண்டு. ஆகவே இப்புதினப் படைப்பாளரும் தன்னை அறியாமல் இந்த நிற மோகத்தில் ஆட்பட்டுள்ளதை ஒரு சில காட்சிகளின் வாயிலாக உணர முடிகின்றது.

**"அதற்காக பெண் என்று கூடக் கண்டுகொள்ள முடியாத பெண்ணாகவா இருக்கிறேன்......என்று கேட்டுச் சிரித்தாள்.அவளது வெண்மை நிறமான முகம் வெட்கத்தால் கசங்கி சிவப்பு ஏறிக் கனிந்து விட்டது.**

**கழுத்திற்குக் கீழ் அவளை அவன் பார்க்க.....அவன் பார்ப்பதை அவளும் கவனித்து அவர்கள் இருவர் மட்டும் அர்த்தத்தோடு சிரித்துக் கொண்டனர்."ப-43**

**"எல்லோருக்கும் களைப்பு மேலிட்டது.கொஞ்சம் தாமதித்து நின்றார்கள்.எல்லோரும் தொப்பு தொப்பாக நனைந்திருந்தார்கள்.ப்ரஜீத்து போட்டிருந்த வெள்ளை உடை முழுவதும் நனைந்து உடலோடு ஒட்டிப்போயிருந்தது.உள்பாடி அணியாதிருந்ததால் அவளது மார்பகங்கள் வளமாக மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்தில் உருண்டு திரண்டு சரிந்து முன் தள்ளிக் கொண்டிருந்தது.**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**பழனி கூர்ந்து அவளைக் கவனிப்பதைப் பார்த்த எல்லோரும் ஓ...... எனக் கூச்சலிட்டுச் சிரித்தனர்"ப-156**

இந்த உரையாடல் வாயிலாக முதன்மைப்பாத்திரத்தின் தனித்துவத்தில் சில இந்தியப் பாலியல் சார்ந்த முரண்பாடுகள் சித்திரித்துக் காட்டப்படுவதும் அச்சித்திரிப்பிற்குள் படைப்பாளரும் அடங்குவதும் புலனாகும்.இம்முரண்பாடுகள் நிரம்ப இடங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன.பிரான்சு தேசத்தவரின் பாலியல் உறவுகளைக் கேட்கும் பொழுது வெளிப்படுகின்றது.

**மார்க்சியக் கருத்தாடல்கள் :**

புதினத்தில் பெரும்பான்மையான உரையாடல்கள் மார்க்சியக் கருத்தாடல்களைத் தாங்கியதாகவே அமையப் பெற்றுள்ளன.

பழனிமுருகன்(அடிப்படை மார்க்சியம் கற்பவன்)

ஷபின்னா ங்கொஷெஸ்குவா

((முதலாளித்துவப் பின்னணி கொண்ட சமூக சேவகி) (ஆழ்ந்து பட்ட மார்க்சியவாதி)

மார்க்சியக் கருத்தாடல்கள் இம்மூவரைக் கொண்டே இப்புதினத்தில் அமையப் பெற்று வந்துள்ளன. 'பழனி முருகன்' தலைமைப் பாத்திரமாக அமையப் பெற்றிருப்பினும் ஒரு தேர்ந்த மார்க்சியவாதியாகக் களம் நின்று பிரச்னையைக் கையாளக் கற்றுக் கொடுக்கும் ஒரு ஆசானாக 'ஷ்ஸ்குவா கொஷெ' காட்சிப்படுத்தப்பட்டுள்ளது சிறப்பாகும். அதாவது உள்ளூர் பிரச்னை மட்டுமே கையில் எடுத்துக் கொண்டு தன்னைச் சிறந்த மார்க்சியவாதியாகக் காட்டிக் கொள்ள விரும்பும் 'பழனிமுருகன்' இடையே,உலக நடப்பியலையும் சர்வதேச சிக்கலையும் தன் விரல் நுனியில் பேசும் 'ஷ்ஸ்குவா கொஷெ' சிறப்பான பாத்திரப் படைப்பு ஆகும்.

**"அவர்களோடு இரவு பகலாகப் பழகி,உண்டு,உறங்கி,குளித்து வேலை செய்யும் பொழுது தற்செயலாக இந்த கட்சிக் கார்டைப் பார்த்துவிட்டால் கூட இவருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமே.......என்று பழனிக்கு வியப்புத் தாளவில்லை.**

**என்ன தோழரே.....இவ்வளவு வியப்படைகிறீர்கள்.....உலகம் முழுமைக்கும் விடுதலை கிடைக்கும் வரை நாம் தந்திரங்களையும் தலைமறைவு வாழ்க்கையும் மேற்கொள்ளத் தானே வேண்டும்"ப-238**

**"பேச்சின் போக்கில் பழனியைப் பற்றிய அவருடைய கருத்தைக் கூறினார்.பழநி கட்சிக்கு வந்து ஓரிரு ஆண்டுகள் தானிருக்க வேண்டும்.வெளியில் நான்கு ஐந்து ஆண்டுகள் அனுதாபியாக இருந்திருக்கலாம் என்றார்."ப-239**

மேற்கண்ட இந்த உரையாடல்கள் 'ஷ்ஸ்குவா கொஷெ'வினுடைய கருத்தாழமிக்க மார்க்சியக் கருத்தாடல்களைப் புதினத்தின் மேற்தளத்தில் வைக்காமல் நுட்பமாகப் புதினத்தை வாசிக்கும் வாசகனுக்கு விருந்தாக்கும் நோக்கில் படைப்பாளர் வைத்துள்ளமைச் சிறப்பிற்குரியதாகும்.

இதேபோன்று 'ஷபின்னா' என்ற மேற்தட்டு வர்க்கத்தின் கண்மூடித்தனமான சமூகப் பார்வையினைச் சீர்படுத்தும் முகமாக அமையப் பெற்ற உரையாடல் முழுமையும் மார்க்சியக் கருத்தாடல்களைக் கொண்டவையாகும்.

**"நான் கம்யூனிஸ்ட்டுகளைக் கடுமையாக வெறுக்கிறேன். ஏவு, இரக்கமற்றவர்கள், கொலை கொள்ளைகளுக்கு அஞ்சாதவர்கள். அழகுணர்சி அற்றவர்கள். கலாட்டா பேர்வழிகள்......உலகின் அமைதியைக் கெருப்பவர்கள்.....என்று ஆத்திரத்தோடு கூச்சலிட்டாள்"ப-49**

இப்படிக் காம்ரேட்டுகளை முதலில் வெறுக்கும் ‘ஷபின்னா’ இப்புதினத்தின் இறுதியில் உதிக்கும் ஒரே வார்த்தை எதுவெனின்,

**“கா......ம்.........ரே.......ட்.............”ப-298**

என்பதாகும். அந்தளவிற்கு மார்க்சிய உரையாடல்களும்,அதன்வழி நின்ற போராட்டங்களும் மார்க்சியவாதிகளின் மீதான தவறான பார்வையினை மாற்றியவைகளாகக் காட்சியமைக்கப்பட்டு உள்ளது சிறப்புடையதாகும்.

**புதினத்தில் மார்க்சியச் சிந்தனைப் பதிவுகள் :**

புதினத்தில் மார்க்சியச் சிந்தனைப் பதிவுகள் மட்டுமின்றி இந்திய அளவிலான மிகப் பெரிய சிக்கலான சாதியச் சிக்கலும்,சாதியம் மீதான மேலைநாட்டாரின் பார்வையையும்,மொழி குறித்தப் பார்வையும் மிகச் சரியாகப் பதிவு செய்யப் பட்டுள்ளமை சிறப்பாகும்.

சாதியச் சிந்தனை : ‘ஹரிஜன்’ என்ற சொல்லாடல் மீதான மீள்பார்வை

“ஹரிஜனங்கள் கடவுளின் குழந்தைகள் என்றால் மற்ற்வர்கள் எல்லாம் கடவுளின் குழந்தைகள் இலாது மரக் கட்டைகளின் குழந்தைகளா?மற்றவர்கள் எல்லாம் மனிதர்களின் குழந்தைகள்,ஹரிஜனங்கள் மட்டும் கடவுளின் குழந்தைகள் என்று குறிப்பிடுவதாலேயே ஹரிஜனங்கள் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று ஆகிவிடுகிறது இல்லையா?........”ப-140

மொழிச் சிந்தனை : ‘ஒரு மொழி’ என்ற குறுகியப் பார்வை எதிர்ப்பு

“ஹோ...... என்ன கொடுமை...... எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது........ வறுமை,அறியாமை,அழுக்கு,நோய்கள்,அடிமைத்தளங்கள் நிறந்த இந்த நாட்டிலே அவற்றைப் போக்க முயற்சிக்காது மொழியைப் பிராதப்படுத்தி அரசியலா?....என்னால் நம்பவே முடியவில்லையே...?”ப-234

**முடிவுரை**

உழைப்புப் பிரிவினால் வர்க்கங்கள் ஏற்பட்டன. உழைக்கும் வர்க்கம் ஆளும் வர்க்கத்திற்கு என்றும் அடிமைப்பட்டுகிடந்தன. உழைப்பு சுரண்டலும் வர்க்க முரண்பாடுகளும் போராட்டங்களுக்கு வித்திட்டன. சுரண்டும் வர்க்கத்தை எதிர்த்து உழைக்கும் மக்கள் போராட்டகுரல்களை எழுப்பிதங்களுக்கான உரிமைகளை பெறுகின்றனர். ஆளும் வர்க்கத்தினர் உழைக்கும் மக்களை ஏமாற்றி அவர்களுக்கச் செய்யும் நலத்திட்டங்கள் அனைத்தையும் சுரண்டுவதைப் புதினம் உணர்த்துகிறது. அரசுஊழியர்கள் தங்களின் உழைப்புக்கு ஏற்றஊதியம் நிரந்தரப் பணிகுறித்தும் போராடிஉரிமைகளைப் பெறுவதையும் காணமுடிகின்றது.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 17. சங்க இலக்கியத்தில் திருமணம்

**முனைவர் அ.தனலட்சுமி**,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீ எஸ்.ஆர்.என்.எம். கல்லூரி, சாத்தூர்.
***DOI 10.5281/zenodo.17258548.***

## முன்னுரை

பழங்காலம் தொட்டு இன்றைய காலம் வரை குடும்ப அமைப்பு உருவாவதற்கு திருமணமே அடிப்படைக் காரணியாக அமைகின்றது. சங்க காலம் முதல் இன்று வரை குடும்பம் என்ற அமைப்பு வழக்கத்தில் இருந்து வருகின்றது. இதன் அமைப்பில் மாற்றம் எதுவும் இல்லை. ஆனால் திருமண சடங்கு முறைகளில் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்தவாறு உள்ளது. இத்திருமண முறையினையும், அவற்றினால் உண்டாகும் உறவுமுறைகளையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## திருமணம்

திருமணம் என்பது இரண்டு மனங்களின் ஒன்றிணைவு ஆகும். இது ஓர் ஆணும், பெண்ணும், கணவன்-மனைவியாக இணைவதற்கான ஒப்பந்தம் எனப்படுகின்றது. இத்தகைய திருமணம் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளபட்டும், ஏற்றுக்கொள்ளப்படாமலும் நடந்துள்ளது. திருமணம் பெற்றோர்கள் அனுமதித்தும், அனுமதிக்காமலும் நடைபெற்றுள்ளது. அவற்றை தொல்காப்பியர்

**"வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று**
**ஆயிரண் டென்ப வரைதல் ஆறே"**(1)

என்ற நூற்பாவின் மூலம் திருமணம் நடைபெற்ற விதத்தை உணர்த்துகின்றார். மணம் என்றால் கூடுதல் என்று பொருள்படும். இதன் வேர்ச்சொல் மண் என்றும் அழைக்கப்படுகின்றது. மண்ணுதல் என்ற சொல்லிற்கு கழுவுதல், தொங்குதல், கலத்தல், கூடுதல், அழகு பெறுதல், மணத்தல், இணைதல் என பல பொருள்கள் வழங்கப்படுவதாக சொற்பொருள் அகராதிகள் கூறுகின்றன. கலத்தல், கூடுதல் என்ற சொற்கள் இணைதல் என்ற பொதுவான விளக்கத்தைத் தருகின்றது. இணைதல் என்ற அடிப்படையிலேயே மணம் என்ற சொல்லினை பண்டைத் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர். மங்கல நிகழ்வாதலால் திரு என்னும் அடையைச் சேர்த்து திருமணம் என்று வழங்கியுள்ளனர்.

திருமணம் என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி 'தெய்வீகக் கூட்டம்' எனப் பொருள் தருகிறது. இன்றைய தமிழ்ச் சமூகத்தில் பெரும்பாலான இடங்களில் திருமணத்தைக் 'கல்யாணம்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். இச்சொல்லாட்சி பழந்தமிழ் இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. திருமணம் என்ற சொல் பழந்தமிழர்களிடையே பல்வேறு பெயர்களில் வழக்கில் இருந்துள்ளமையினைச் சங்கப் பாடல்களும் பறைச்சாற்றுகின்றன.

**"வதுவை யயர விரும்புதி நீயே"** (2)

**"தொன்றியல் மரபின் மன்றலயர"**(3)

**"மணம்புகு வைகல் ஆகலொன்றோ"**(4)

என்கிற பாடலடிகள் சங்க இலக்கியங்களில் சுட்டப்பட்டுள்ள திருமணம் என்ற சொல்லாட்சி குறித்து விளக்குகிறது. திருமணம் என்ற சொல்லிற்கு சங்க காலத்திலும், சங்க மருவியகாலத்திலும் கல்யாணம், கலியாணம், மணம், திருமணம், வதுவை, மன்றல்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வரைவு என பல்வேறு பெயர்கள் வழங்கிவந்துள்ளன என்பதை மேற்கானும் பாடலடிகளின்த மூலம் அறியமுடிகின்றது.

**நல்ல நாள் பார்த்தல்**

சங்கத் தமிழர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் அம்மக்களின் திருமணமுறையும் இயற்கையோடு இணைந்ததாகவும், எளிமையானதாகவும் இருந்துள்ளது. கணித நூல் முறைப்படி சந்திரனும், ரோகிணியும் இணையும் நாளில் திருமணம் செய்தால் அவர்கள் வாழ்வு சிறந்ததாக இருக்கும் என்று நம்பியுள்ளனர். அதனால் திருமணத்திற்கு ரோகிணியை சிறந்த நாளாகக் கருதியிருக்கின்றனர். இந்த வழக்கத்தையே இன்றைய மக்களும் கடைபிடித்து வருகின்றனர் "நாள்கேட்டுத் தாழாது வந்தால்"(5) என்ற பாடலடியின் மூலம் நல்ல நாள் பார்த்து வந்தால் இந்த பெண்ணைத் திருமணம் செய்யலாம் என்று கூறிய வழக்கினை கணிமேதாவியார் எடுத்துரைக்கின்றார். மேலும் திணைமாலை நூற்றைம்பதிலும் இச்செய்தியினை அறியலாம். "நாள் ஆய்ந்து வரைதல் அறம்" (6)என்ற பாடலின் வழி விளக்கப்பட்டுள்ளது.

திருமணம் என்பது ஒரு கன்னிப் பெண்ணின் கழுத்தில் மாலை சூட்டி, அவளை ஊரும் உறவும் அறியும் விதமாக தன்னுடைய வாழ்க்கைத் துணைவியாக ஒருவன் ஏற்றுக் கொள்ளுகின்ற சடங்கு முறை ஆகும். ஊரார் அறிய நல்ல நாள் பார்த்து பறை (மணப்பறை) போன்ற மங்கள வாத்தியங்கள் முழங்க திருமண நாளை முடிவு செய்கின்றனர். இத்தகைய செய்தியினை தமிழ் இலக்கியங்கள் உணர்த்துவதை,

**"பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்**
**கல்யாணம் செய்து கடிபுக்க**"(7)

என்ற பாடல் அடிகளின் வழி அறியமுடிகின்றது.

சிலப்பதிகாரத்திலும் கோவலன், கண்ணகியின் திருமணம் பெரியோர்கள் கூடி நல்ல நாள் பார்த்து நிகழ்ந்த நிகழ்வானது சிலம்பிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**"அவரை**
**இருபெருங் குரவரும், ஒருபெரு நாளால்,**
**மணஅணி காண மகிழ்ந்தனர்;**"(8)

என்ற பாடலடிகள் கோவலன் கண்ணகியின் திருமண நிகழ்வினை உணர்த்துகின்றது. திருமணத்தின் போது மாங்கல்யம் (மணஅணி) சூட்டிய நிகழ்வினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**பொருத்தம் பார்த்தல்**

ஆணும், பெண்ணும் மனமொத்து இணைந்து குடும்ப வாழ்வில் ஈடுபடப் போகும் நிலையை உலகிற்கு அறிவிப்பதே திருமணம் எனப்படுகிறது. திருமணம் நடத்துவதற்கு முன்பு தலைவனுக்கும் தலைவிக்கும் பொருந்தங்கள் உள்ளதா என்று ஆராய்கின்றனர். பொருத்தம் இருந்தால் மட்டுமே திருமணம் செய்கின்றனர். பொருத்தங்கள் இன்றி திருமணம் செய்தால் அவர்களின் வாழ்வு ஒரு சுமையாக அமையும் என்பதை உணர்ந்த மக்கள் திருமணத்திற்கு முன்பு பொருத்தம் பார்க்கும் வழக்கத்தினைக் கடைபிடித்துள்ளனர். இதனைத் தொல்காப்பியர் பத்துப் பொருத்தங்கள் என்று கூறியுள்ளார். அவை

**"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோடு**
------------------------------------------------------------------
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.**"(9)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகின்றது. இப்பொழுதும் பொருத்தம் பார்க்கும் வழக்கம் மக்களிடையே இருக்கின்றது. பண்டைக் காலத்தில் பார்க்கும் பொருத்தங்கள் குணங்களை அடியொற்றி இருந்தன. இன்றும் பொருத்தம் பார்த்தல் என்பது காலக்கணிதர்கள் நட்சத்திரங்களை அடியொற்றி பார்க்கின்றனர். அவை, தினப்பொருத்தம், கணப்பொருத்தம், மாகேந்திரப்பொருத்தம், ஸ்திரீ தீர்க்கம், யோனிப் பொருத்தம், இராசிப் பொருத்தம், இராசி அதிபதி பொருத்தம், வசியப் பொருத்தம், ரஜ்ஜிப் பொருத்தம், வேதைப் பொருத்தம், நாடிப் பொருத்தம், விருட்சப் பொருத்;தம் என்பதாகும். இப்பன்னிரெண்டு பொருத்தங்களையும் பார்த்த பின்பே திருமணம் முடிக்கின்றனர். ஆனால் அவை எல்லாம் கற்பு வாழ்விற்கு மட்டும் பொருந்துவதாக உள்ளது. காதல் மணத்திற்கு இப்பொருத்தம் பார்க்கம் வழக்கம் காணப்படுவதில்லை என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**திருமணம் நிகழுமிடம்**

சங்க காலத்தில் திருமணம் பெண் வீட்டிலும், ஆண் வீட்டிலும் நடந்துள்ளன என்ற செய்திகள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. பெற்றோர் சம்மதிக்காத போது உடன்போக்கு நிகழ்வதுண்டு. தலைவனும், தலைவியும் உடன்போக்குச் சென்று மீண்டு வரும் பொழுது தலைவியின் தாய், தலைவனின் தாயிடம் சென்று சிலம்புகழிதல் நோன்பு உங்கள் வீட்டில் நடந்தது. வதுவைச் சடங்காவது எங்கள் வீட்டில் நடக்க வேண்டும் என்று கேட்கும் விதமாக ஐங்குறு நூற்றில் ஒரு பாடல் அமைந்துள்ளது. இதனை,

**“நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,**
**எம்மனை வதுவை நல்மணம் கழிக**”(10)

என்ற பாடல் வரிகளின் வாயிலாக உணரலாம். தலைவியின் வீட்டில் தலைவிக்குத் திருமண ஏற்பாடுகள் செய்கின்றனர். திருமண ஏற்பாடுகள் செய்யும் நிகழ்வு கலித்தொகையில் இடம்பெற்றுள்ளதை,

**“சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு**
----------------------------------------------------------------------
**வரிமணல் முன்துறைச் சிற்றில் புனைந்த**”(11)

என்ற பாடல்களின் வாயிலாக உணரலாம். தலைவியின் வீட்டார் வீட்டு முற்றத்தில் மணல் பரப்பிச் சுவர்களுக்குச் செம்மண் பூசிப் பெண் எருமையின் கொம்பை வைத்து வழிபாடு செய்த திருமண முறை மேற்கூறிய பாடலின் வாயிலாக உணர்த்தப்பட்டுள்ளது.

சங்க காலம் முதல் இன்று வரை திருமணம் தலைவன் வீட்டில் நிகழ்வதே பெரும்பான்மை. ஒரு சில நேரங்களில் தலைவியின் இல்லத்திலும் நிகழ்வது உண்டு. இன்றைய காலத்தில் தலைவன் வீட்டிலும் இன்றி, தலைவியின் வீட்டிலும் இன்றி திருமணங்கள் பொதுவான இடங்களில் நிகழ்கின்றன. மக்களின் வசதிகளுக்கு ஏற்பத் திருமணங்கள் கோவில்களிலும், மண்டபங்களிலும் நடக்கின்றன. காலச் சூழலுக்கு ஏற்ப திருமணம் நடைபெறும் இடங்களின் சூழலிலும் மாற்றம் மடைந்துள்ளன.

**திருமணச் சடங்குகள்**

திருமணத்தின் போது பல சடங்கு முறைகள் நிகழ்கின்றன. சங்க இலக்கியத்தில் நடைபெற்ற திருமணச்சடங்குமுறை,

**“நேரிடை முன்கை பற்றி நுமர்தர**
**நாடறிய நன்மணம் அயர்கம்**”(12)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எனவரும் பாடலடிகளின் வாயிலாக உரைக்கப்பட்டுள்ளது. சங்கப் பாடல்களில் திருமணச் சடங்குமுறைகளைக் கூறுகின்ற தனிப்பாடல்கள் இல்லை என்றாலும், அகநானூற்றில் 86வது பாடலும், 136வது பாடலும் திருமணச்சடங்குகளை எடுத்துரைக்கின்றன. இவையும் திருமண சடங்குமுறைகளை உரைப்பதற்காக எழுதப்பட்டவில்லை. தலைவியை விடுத்து தலைவன் பரத்தையிடம் சென்று வருகின்றான். அப்படிச் சென்று வரும் பொழுது தோழி வாயில் மறுக்கின்றாள். அவள் வாயில் மறுத்த நிலையில் தலைவன் திருமண நாளன்று தலைவி எவ்வாறு இருந்தாள் என்று நினைவு கூறுவதாக அமைந்துள்ளது. அவன் நினைவு கூறுமிடத்தில் திருமணத்தில் எவ்வித சடங்குகள் எல்லாம் நடந்தது என்பதை அறிய முடிகின்றது.

ஊர் கூடி திருமணம் நடக்கும் பொழுது அவர்களுக்கு உழுந்த வடையுடன் விருந்து படைத்துள்ளனர். பந்தற்கால் நட்டு, பந்தல் போட்டுள்ளனர். அப்பந்தலின் கீழ் புதுமணல் பரப்பி உள்ளனர். மனையில் விளக்கு ஏற்றி வைத்து, மாலைகளைத் தொங்கவிடுகின்றனர். வைகறைப் பொழுதில் முழு நிலவு நாளன்று திருமணம் செய்கின்றனர். முழு நிலவு என்பது பௌர்ணமி தினத்தினைக் குறிக்கின்றனர்.

நீரினைத் தலையில் வைத்து நிறைகுடத்தினைச் சுமந்து கொண்டு சுமங்கலிப் பெண்;கள் மணமகளின் முன்பு சென்றுள்ளனர். அவர்களுக்கு பின்னர் புதுப்பானை ஏந்திய பெண்டிர் அவர்களைப் பின்தொடர்ந்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது. மணமகளை அழைத்துச் செல்லும் பொழுது ஒரு வித ஆரவாரத்துடன் அழைத்துச் சென்றுள்ளனர். இன்றும் மணப்பெண்ணை அழைத்துச் செல்லும் பொழுது மாப்பிள்ளை வீட்டாற் குலவை இட்டு அழைத்துச் செல்கின்றனர். இந்த குலவை இடுதலும், ஆராவாரம் செய்தலும் மங்கல நிகழ்வு நடக்கும் பொழுது ஏதேனும் அபசகுன ஒலிகள் காதில் கேட்க்கக் கூடாது என்பதற்காக எழுப்பப்படும் ஒலி என்பதையும் அறியமுடிகின்றது.

மகனை ஈன்ற வரிவயிறு உடைய தாயும், தாலி அணிந்த மங்கல மகளிர் நான்கு பேரும் கூடிநின்று திருமணத்தை நடத்தி வைக்கின்றனர். ஈரமான பூக்களையும், நெல்லையும் தலையில் போட்டு, நீர் தெளித்து வாழ்த்துகின்றனர் என்பதை

**“உழுந்து தலைப்பெய்த கொழுங்களிமிதவை**

**……………………………………**

**பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**

**வதுவை நல்மணம் கழிந்த பின்றை**”(13)

என்ற பாடலடிகளின் மூலம் பண்டைத் தமிழர்களின் திருமணச்சடங்குகளை அறியமுடிகின்றது. மேலும் குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும், இளவேனிற் காலத்தில் திருமணம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

“**…. வேங்கை விரிவு இடம் நோக்கி**

**வீங்கு இறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே…**”(14)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம். இவ்வாறு திருமணச்சடங்குகள் பல்வேறு மாற்றங்களுடன் மக்களிடையே நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறியமுடிகின்றது.

**திருமணமுறைகள்**

திருமணம் பல்வேறு முறைகளில் நடைபெற்றாலும் அதனை களவு கற்பு என்ற இரண்டு நிலைகளில் அடக்கிவிடுகின்றனர். கற்பு என்று சொல்லப்படுவது களவு வாழ்க்கையிலிருந்து இல்லற வாழ்வு அமையத் திருமணச் சடங்குகள் நடத்தப் படுவதாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தலைவியைப் பெறக் கூடிய தலைவன், அவளைக் கொடுத்தற்கு தகுதியுடையோர் கொடுக்க திருமணம் செய்து கொண்டான்.

**"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குஉரி மரபின்; கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குஉரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே."**(15)

என்ற நூற்பாவின் வழி பெற்றோர்கள் மனம் உவந்து கொடுக்க திருமணம் நடந்த செய்தியினை அறியமுடிகின்றது. சங்க காலத்தில் களவு வாழ்க்கை அதிகமாக பேசப்பட்டாலும் கற்பு வாழ்க்கைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அனைவரும் அறியும் வண்ணம் திருமணம் நடத்தியுள்ளனர். தொல்காப்பியர் கூறும் எட்டு வகைத் திருமணங்களின் அடிப்படையில் தமிழர்கள் திருமணங்களை நிகழ்த்தியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ளமுடிகின்றது.

**முடிவுரை**

தமிழரின் பண்பாடு, கலாச்சாரம் உலக அளவில் போற்றப்படுவதற்கு அவர்கள் கடைபிடித்த தனிமனித இல்லற ஒழுக்கமே அடிப்படை எனலாம். இல்லறம் என்பது திருமணத்தின் மூலமே உருவாகின்றது. திருமணத்தில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை. ஆனால் திருமணம் நடைபெறும் விதத்தில் தான் சிற்சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. தொல். கள. நூ-1086
2. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - பத்து
3. ஐங். பா. 61: 5
4. அகம். 112 : 16
5. கருவாச்சிக் காவியம் ப-58
6. திணைமாலை நூற். பா. 46
7. திணைமாலை நூற். பா. 52
8. நாலடி. பா. 86
9. ஜெயக்காந்தன்,பாரீஸ்க்குப் போ, ப.265
10. தொல். பொருள். மெய். நூ. 25
11. தமிழ் இலக்கணப் பேரகராதி ப.25
12. ஐங். பா. 399
13. கலி. பா. 114: 11-15
14. குறிஞ்சி. பா.அ. 231-232
15. தொல்.பொருள். கற்பு. 3


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 18. நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாடு

**முனைவர் ச. திவ்யபாரதி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் 5.
divyajaganathan8@gmail.com
*DOI 10.5281/zenodo.17258564.*

**Abstract**

Folk literature is characterized by its truthfulness and simplicity. Folk songs are direct and straightforward, without elaborate descriptions. What makes folk literature unique is its ability to categorize childhood into ten distinct phases. Lullabies sung by mothers and relatives serve as a means to express family pride. Folk songs come in various forms, including children's songs, love songs, occupational songs, lamentations, and multifaceted songs. These songs are rich in meaning and based on human life, capturing various life events with melody and rhythm. Thus, folk songs act as a mirror reflecting people's lives, making them a vital part of cultural heritage.

**Key words:** Folk Literature - Special Characteristics of Folk Songs - Scholars' Opinions - Lullaby - Work Songs - Love Songs - Lament Songs - Multifaceted Songs

## முன்னுரை

நாட்டுப்புறங்களில் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்பப்பாடல்கள் ஆகும். இவ்வகை பாடல்கள் மனித மனத்தின் கண்ணாடியாக விளங்குகிறது. மனிதன் பிறந்தது முதல் அவனுடைய இறப்புவரை பல்வேறு நிகழ்வுகளில் பலநிலைகளில் வாழ்க்கையை கடந்து செல்கிறான். இந்த ஒவ்வொரு நிகழ்வும் அவனுடைய பருவநிலைகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை பிரதிபலிக்கக்கூடியதாக அமைகிறது . மனித நாகரிகத்தின் முதலில் தோன்றிய "இலக்கியம்" என்ற வகைப்பாட்டிற்குள் நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறபாடல்கள் என கிராமப்புறங்களின் பின்னணியை பளிச்சிடச் செய்கின்றன. எந்த ஒரு முன்னேற்பாடும், பயிற்சியும் ஏற்படுத்திக் கொள்ளாமல் செவ்வனே அமையும் இலக்கியம் நாட்டுப்புற இலக்கியம் ஆகும். பெரும்பாலும் வாய்மொழிப் பாடல்களாக அமைகின்ற நாட்டுப்புற பாடல்கள் சந்தநயம் மிக்கவை. கருத்துச்செறிவு கொண்டவை. மேலும், இலக்கிய நயம் வாய்ந்தவை. நாட்டுப்புறபாடல்கள் ஒவ்வொன்றும் கேட்போரை ஈர்க்கும் வகையில் மெட்டுக் கட்டிபாடும் தகைமை கொண்டது. அவ்வகையில் குழந்தை பிறந்தது முதல் இறப்பு வரை பாடப்படும் தாலாட்டு பாடல்கள், விளையாட்டு பாடல்கள், சிறுவர் பாடல்கள், காதல் பாடல்கள், உழவர் பாடல்கள், ஒப்பாரி பாடல்கள் என்ற வகையில் நாட்டுப்புறபாடல்களின் வகைப்பாட்டை விளக்கும் வகையில் நாட்டுப்புற பாடல்களின் வகைப்பாடு என்னும் தலைப்பில் சு.சக்திவேல் அவர்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## நாட்டுப்புறப் பாடல்கள் வகைப்பாடு

மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கில் நாட்டுப்புறப் பாடல்கள் பலநிலைகளாக பகுக்கப்படுகின்றன. இப்பகுப்பாய்வின் நுண்தன்மையை பொறுத்து ஆய்வும் சிறப்படைகிறது. அவ்வகையில் மரியா லீச், பௌரா, கீமத் பீக்காக் போன்ற பலர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவ்வரிசையில் மு.அருணாசலம், கி.வா.ஜகன்நாதன் போன்றோரின் கண்ணோட்டத்தில் ஒருவகை வகைப்பாடும், சு.சண்முகசுந்தரம், ஆறு ராமநாதன் சு.சக்திவேல் போன்றோர் வேறுவகை வகைப்பாடாகவும் வகைப்படுத்துகின்றனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**டாக்டர் சுசக்திவேல் அவர்களின் வகைப்பாடு**

நாட்டுப்புறக் கலைகளையும் பாடல்களையும் ஒருவட்டத்திற்குள் அடக்கிவிட முடியாது. ஏனெனில், இவை உள்ளத்தின் உணர்ச்சி எண்ணத்தின் எழுச்சி. இவற்றுள் நாட்டுப்புறப் பாடல்கள் மனித நிஜத்தை வெளிப்படுத்தும் கற்பனையின் ஊற்று. இத்தகைய நாட்டுப்புற பாடல்கள் குறித்து பல அறிஞர்கள் ஆய்வு மேற்கொண்டபோதிலும் டாக்டர் சுசக்திவேல் அவர்களின் வகைப்பாடு எளிய மற்றும் தெளிவான வகைபாடாக விளங்குகிறது. அவை,

- தாலாட்டுப்பாடல்கள்
- குழந்தைபாடல்கள்
- காதல்பாடல்கள்
- தொழில்பாடல்கள்
- கொண்டாட்டப்பாடல்கள்
- பக்திபாடல்கள்
- ஒப்பாரிபாடல்கள்
- பன்மலர்பாடல்கள்

என எட்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இவை மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்படுபவை.

**தாலாட்டு பாடல்கள்**

தாலாட்டு பாடல்கள் என்பது குழந்தைகளை தூங்க வைப்பதற்கு பாடப்படும் பாடல்வகை ஆகும். தால் + ஆட்டு = தாலாட்டு. தால் என்பது நாக்கு. நாவினை அசைத்து பாடுவதால் இவ்வகை பாடல்கள் தாலாட்டுப் பாடல்கள் என்ற சிறப்பினை பெற்றது. பொதுவாகவே குழந்தைகளுக்கு பெரியவர்களின் தன்மைகளையும் செயல்களையும் உள்வாங்கிக் கொள்ளும் தன்மை அதிகம். அதிலும் தாயின் சிந்தனைகளை உள்வாங்கும் திறன் குழந்தைகளுக்கு பன்மடங்கு அதிகமாக இருக்கும் . தாய் தன் பிறந்த வீட்டின் பெருமைகளையும், தாய்மாமன் முறையின் சிறப்புகளையும் தனது குழந்தைக்கு பதியவைக்கும் முயற்சியும் இவ்வகை பாடல்களில் வெற்றி பெறுகிறது. சான்றாக,

**"ஆராரோ ஆரிரரோ .....**
**அத்தை அடிச்சாளோ அல்லிப்பூ செண்டாலே**
**மாமன் அடிச்சானோ மல்லிப்பூ செண்டாலே**
**யார் அடிச்சு நீஅழுத...**
**என்கண்மணியே கண்ணுறங்கு"... (தாலாட்டு பாடல்கள் தொகுப்பு)**

என்ற தாலாட்டு பாடல் வரிகள் இங்கு சான்றாக அமைகின்றன. இதேபோன்று பக்தி இலக்கியத்திலும் பல தாலாட்டு பாடல்களை காணமுடியும். சான்றாக, வைணவ இலக்கியம் இங்கு சுட்டிக்காட்டப்பெற்றதாய் விளங்குகிறது. பெரியாழ்வார் தனது திருமொழியில் மூன்றாம் திருமொழி தாலாட்டுப் பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றுள்

**'மாணிக்கம் கட்டி வைரம் இடைகட்டி**
**ஆணிபொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி உனக்கு பிரம்மன் விடுதந்தான்**
**மாணிக்கூறலனே தாளேலோ.**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**வையம் அளந்தானே தாளேலோ.' பெரியாழ்வார்-திருமொழி 1-3-1**

என்ற பாடல் இங்கு நினைவு கூறத்தக்கது. பெரியாழ்வார் தன்னை யசோதையாக பாவித்துக் கொண்டு குழந்தை கண்ணனை தூங்கவைப்பதற்காகப் பாடிய தாலாட்டு முதல் பாசுரமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**குழந்தை பாடல்கள்**

எவ்வித கவலையும் ஆட்கொள்ளாமல் தனது கள்ளங்கபடமற்ற பேச்சால் அனைவரையும் தன்வசம் ஆக்கிக்கொள்ளும் பருவம் குழந்தைப்பருவம். இத்தகைய குழந்தைப் பருவத்தில் பாடும் பாடல்கள் குழந்தைப் பாடல்கள் ஆகும். குழந்தை பாடல்கள் இருவகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

- ❖ குழந்தைகளுக்காக பிறர்பாடுவது
- ❖ குழந்தைகள் தாமாகவே பாடிகொள்வது.

**'அமிர்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்' குறள் 64**

என்ற குறளில் பெற்றோர் தமது குழந்தையின் சிறு கைகளாலே அளாவப்பெற்ற எளிமையான கூழ் ஆனாலும் அது பெற்றோருக்கு அமிழ்தினும் இனியது என்ற குழந்தைப் பருவ பெருமைகளை நமக்கு உணர்த்துகின்றார் வள்ளுவர். குழந்தைகள் தத்தித் தவழ்ந்து நடமாடும் வயது வரை குழந்தைகளுக்காக பெற்றோர்களும் உறவினர்களும் பாடல்கள் பாடுவர். அக்குழந்தைகள் நடைபழகி பின் வளர்ந்து ஓடியாடி விளையாடுகின்ற பொழுது விளையாட்டு பாடல்களாக தாமே பாடிகொள்வர். இவை பெரும்பாலும் வாய்வழி கற்பனையாக வெளிப்படும் உன்னத வகையை சார்ந்தவையாகும். சான்றாக,

**'ஒரு குடம் தண்ணி எடுத்து ஒரே பூ பூத்ததாம்**
**இரண்டு குடம் தண்ணி எடுத்து இரண்டே பூ பூத்ததாம்'**
**-குழந்தை பாடல்கள் தொகுப்பு**

என்ற பாடல் அனைவருமே மறக்க முடியாத குழந்தை பருவ விளையாட்டு பாடல்களாக அமைகிறது.

**காதல் பாடல்கள்**

மனிதன் தன் இளமைப்பருவத்தில் மனதில் எழும் காதலை வெளிப்படுத்தும் விதமாக அமைந்த பாடல்கள் காதல் பாடல்கள் ஆகும். சங்க இலக்கியத்தில் காணப்படும் களவு, கற்பு என்ற அமைப்பு முறைகளை நாட்டுப்புற பாடல்களிலும் காணமுடிகிறது. தனது அன்பு காதலியை வருணித்து தேர் பாட வரும் படி ஆசையுடன் காதலன் அழைக்கிறான். இதனை,

**'அன்ன நடைஅழகி**
**அலங்கார உடையழகி**
**பின்னல் நடைஅழகி செல்லம்மா**
**புறப்படமா வேறுபார்க்க..**
**என்று பாடுகிறான். அதற்கு அவள்**
**மதன வடிவழகா**
**மாமோக சொல்லழகா**
**வண்ண உருவழகா**

**என் ஆசை மச்சான்**
**வரமாட்டேன்வேறுபார்க்க..'**

**நாட்டுப்புற இயல் ஆய்வு சக்திவேல்**

என்ற வரிகள் விளக்குகின்றன. பாரதியாரின் காதல் பாடல்களில்,

**'காதலடி நீஎனக்கு காந்தமடி நான் உனக்கு**
**வேதமடி நீ எனக்கு விந்தையடி நான் உனக்கு**
**போதமுற்று போதினிலே பொங்கி இருவந்த தீஞ்சுவையோ கண்ணம்மா'**

**பாரதியார்**

**காதல் பாடல்கள்**

என்ற வரிகள் காதலை மிகப்பாங்காக வெளிப்படுத்துவதாக அமைகிறது.

**தொழிற் பாடல்கள்**

மனிதனின் வளர்ச்சித் தன்மையை வெளிப்படுத்துவதாக தொழில்கள் அமைகின்றன. மேன்மையுறச் செய்யும் தொழில்களின் வரிசையில் நாட்டுப்புற மக்களின் பிரதானமாக இருக்கும் பாடல்கள் உழவுப்பாடல்கள் ஆகும். வயல்களில் வேலை செய்யும் மக்கள் தங்களுடைய களைப்பை போக்கிக் கொள்வதற்காக களை எடுத்தல், நாற்று நடுதல், விதை விதைத்தல், அறுவடை செய்தல், ஏர் உழவுதல் போன்ற பல நிலைகளில் இவ்வகைப் பாடல்கள் பாடுவர். பொதுவாகவே நாட்டுப்புற பாடல்கள் கிராமிய மணம் நிறைந்ததாக இருக்கும். அதிலும் தொழிற்பாடல்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறைமையை நமக்கு வெளிப்படுத்துவதாக அமைகிறது. தொழிற்பாடல்களில் தொழிலாளர்களின் குமுறல்கள் மற்றும் அவர்களின் இன்ப துன்பங்கள் யாவும் வெளிப்படையாகின்றன. இத்தகைய நாட்டப்பறப் பாடல்களை,

**'தொழிற்பாடல்கள் ஏலோலங்கடி பாட்டு, திட்டு லங்கடிபாட்டு, தெம்மாங்கு பாட்டு, ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் வழங்குவர்'**

**நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் -பக்கம்** 52

என்ற குறிப்பும் இங்கு சிந்தனைக்குரியது. உழவுத் தொழில் பாடல்களுக்கு சிறந்த சான்றாக,

**'கொத்துமல்லி பூ பூக்க கொடிகொண்டால் காய்காய்க்க**
**கொத்துக் கொத்தாய் நெல் விளையும் சீமைஇது**
**நம்ம குறை தீர்க்கும் பொன் விளையும் பூமியிது'**

**- அ மருதகாசி**

என்ற பாடல் அமைகிறது. நாட்டின் வளத்தையும் பூமியின் செழுமையையும் கூறும் போது அதனோடு இயற்கையின் சாரத்தையும் கொண்டு விளங்குவதாக மேற்கண்ட வரிகள் அமைந்துள்ளன. படகுகாரன் பாடல்கள், மீனவ பாடல்கள் போன்றவற்றில் 'ஏலேலோ ஐலசா' என்ற இசை ஏற்றம் அமைந்திருக்கும். நடுக்கடலிலே படகினை செலுத்தும் போது அதன் களைப்போ நேரத்தின் மீது சலிப்புத் தன்மையோ ஏற்படாமல் இருப்பதற்காக அங்கு உள்ளவர்களுள் ஒருவர் பாட மீதமுள்ளவர்கள் **ஏலேலோ ஐலசா ஐலசா** என்று ராகம் அமைத்து மெட்டுக்கட்டி பாடுவார்கள். இதில் சொல் கையாளும் இலக்கணமும், இசைகோர்வை அமைக்க வேண்டும் என்ற கட்டாயமும் எழுவதில்லை.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**கொண்டாட்ட பாடல்கள்**

மக்கள் திருவிழாக்கள், கலைகள், சடங்கு நிகழ்வுகள் போன்றவற்றில் தன்னை மறந்து தன் கவலைகளை தொலைத்து இன்பமாக கழிக்கின்றனர். ஆடல் பாடல் போன்ற நிலைகளில் மனிதன் புத்துணர்ச்சி அடைகிறான். திருமணம் சார்ந்து சடங்குகள், கோயில் திருவிழாக்கள், விழாக்கால சிறப்புகள் போன்றவற்றில் கொண்டாட்ட பாடல்கள் நம் பண்பாடும் கலாச்சாரம் பரிசளிக்கின்றது. பருவமடைந்த பொண்ணுக்கு சடங்கு செய்தல் பொருட்டு நடைபெறும் விழாக்களில் கும்மியடி பாடல்கள் சிறப்பிடம் பெறுகிறது.

**‘கும்மியடி நல்லா கும்மியடி அம்மா**
**குனிஞ்சு நல்லா கும்மியடி**
**குளக்கரை ஓரத்திலே பொண்ணு**
**குந்திஇருக்காநல்லாகும்மியடி**
**பக்கத்திலே நின்று பயத்தை நீக்கி**
**பணிந்து குனிந்து கும்மியடி’**

**நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் - பக்கம்** 56

இவ்வாறாக பலரும் கலந்து ஆடக் கூடிய கும்மிபாடல்கள். பொதுவாகவே நாட்டுப்புற பாடல்களுக்கு எதிர்பார்த்து அமைதல் என்பது சிறப்பான ஒன்று. இவ்வகை பாடல்கள் எவ்வித ஆரவாரமும் இன்றி மனம் ஒன்றில் நிலையின் பாடுவதாகும்.

**பக்தி பாடல்கள்**

வழிபாடு என்பது மனதை அமைதி அடையச் செய்வது புறத்தூய்மை மற்றும் அகத்தூய்மையால் அறிவு தெளிவாகின்றது. மனிதன் இயற்கையின் நிகழ்வுகளான சீற்றங்கள் மற்றும் மரணம் போன்றவற்றிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள தனக்கு மீறிய சக்தியை கடவுளாக வழிபடுகிறான். இதுவே பக்திநிலை ஆகும். இயற்கையின் சீற்றத்தை கண்டு அஞ்சிய மனிதன் தனக்கு நல்ல பாதுகாப்பாக விளங்கும் கடவுளை நோக்கி பக்தி பாடல்கள் பாடுகின்றான். அப்பாட்டிற்கு ஏற்பாடுகின்றான். இம்முறையை கிராமப்புற மக்களிடம் பரவலாக காணமுடிகின்றது. வழிபாட்டில் பெருந்தெய்ப வழிபாடு சிறுதெய்வ வழிபாடு என்ற நிலைகளை காணமுடிகிறது. இவற்றுள் குலதெய்வ வழிபாடும், ஊர் தெய்வ வழிபாடும் சிறுதெய்வ வழிபாட்டின் வகையில் அடங்கும். இதனை விளக்கும் விதமாக,

**‘அரியின்னு பாய்விரிச்சி**
**அச்சுதான்னு பேர்சொல்லி**
**கிருஷ்ணான்னு படுத்தவர்க்கு**
**கேட்டில்லை ஒருநாளும்**
**கோவிந்தான்னு படுத்தவர்க்கு**
**குறைவில்லை ஒருநாளும்’**

**நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் - பக்கம்** 59

என்ற பாடல் வரிகள் இடம்பெற்றுள்ளன.

**ஒப்பாரி பாடல்கள்**

உயிர் பிரிந்த பின்னர் பிரிந்த உயிரின் இழப்பை தாங்க முடியாமல் சுற்றமும் நட்பும் பாடும் பாட்டு ஒப்பாரி பாடல்களின் வகையாகும். இவ்வகை பாடலில் உயிர் பிரிந்த சடலம்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உயிரோடு இயல்பு வாழ்க்கை வாழ்ந்த போது அவன் செய்த சிறப்புகளை குறித்து அவனை இழந்த தருணத்தில் பாடுவது ஒப்பாரி பாடல்கள் ஆகும். "ஒப்பு + ஆரி" என்பதே ஒப்பாரி என்றானது என்பர். ஒப்பு என்பது ஒப்புமைப்படுதல் என்பதாகும். அசைவற்று உயிர் பிரிந்த நிலையில் இருக்கும் சடலம் உயிரோடு இருந்த காலங்களில் புரிந்த அறச் செயல்களை நடைமுறை வாழ்க்கையோடு ஒப்பிட்டு பாடப்படுவதாகும். பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதியாகும். பிறப்பை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளும் மனதிற்கு இறப்பினை ஏற்றுக் கொள்ளும் சக்தி அற்றதாய் உடைத்து விடுகிறது. அவ்வகையில் இறந்தவரின் புண்ணிய செயல்களை ஊரார்க்கு பறைசாற்றும் விதமாக ஒப்பாரிபாடல்கள் அமைகின்றன. இத்தகைய ஒப்பாரிப் பாடல்களை தொல்காப்பியர்,

**‘இளிவே இழவே அசைவே வறுமையென**
**விளியில் கொள்கை அழுகை நான்கே’**

**தொல்காப்பியம் - பொருளதிகாரம்**

பெரும்பாலும் பெண்களின் சோக உணர்ச்சிகளே ஒப்பாரி பாடல்களாக வெளிப்படுகின்றன. இதற்குச் சான்றாக,

**"அள்ளி கொடுக்க வேண்டாம்**
**அரண்மனையில் பாகம் வேண்டாம்"**

**நாட்டுப்புற இயல் ஆய்வு சு.சக்திவேல் - பக்கம் 63**

என்ற வேதனை நிறைந்த ஒப்பாரி பாடல் அமைகிறது. சங்க இலக்கியங்களிலும் ஒப்பாரி பாடல்களின் தாக்கம் மிளிர்வதை காணமுடிகிறது. பாரி மன்னன் இறந்த பிறகு அவனுடைய மகன்கள் மனம் நொந்து

**" அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின்**
**எந்தையும் உடையமையும் குன்றும் பிறர்கொள்ளார்**
**இற்றைத் திங்கள் வெண்ணிலவின்**
**வென்று எரிமுரசின் வேந்தர்எம்**
**மூன்றும் கொண்டார்யம் எந்தையும்இளமே!"**

**- புறநானூறு பாடல் 112**

என்று பாடுவதாக புறநானூற்று பாடல் அமைகிறது. ஒரு மாதத்திற்கு முன்பு இதே நிலவின் ஒளியில் என் தந்தையும் எமது பரம்பு மறையும் எம்முடன் இருந்தனர் ஆனால் இம்மாதம் அதே நிலவெளியில் என் தந்தையும் எம்முடன் இல்லை பரமமழையும் எம்முடன் இல்லை என்று வேதனையுடன் பாடும் பாடல் வரிகள் இங்கு நிறைவுகூறுகின்றது.

**பன்மலர் பாடல்கள்:**

நாட்டுப்புற பாடல்களின் தனித்தன்மைகளையும், மனவெளிப்பாட்டை காட்டும் முறையையும் கொண்டு தாலாட்டு பாடல்கள், சிறுவர் பாடல்கள் , காதல் பாடல்கள், தொழிற்பாடல்கள், பக்திபாடல்கள், ஒப்பாரி பாடல்கள், என பல வகைப்பாட்டின் அடிப்படையில் வகைமைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் ஒரே பாடலில் ஒன்றுக்கும் மேற்பட்ட தகைகளை அமைந்திருந்தால் அது பன்மலர் பாடல்கள் என்ற தனித்துவம் பெறுகிறது.

**முடிவுரை:**

மனித மனதின் வெளிப்பாடாகவும், நாட்டுப்புறங்களின் உயிரோட்டமாகவும் விளங்கக் கூடிய நாட்டுப்புற பாடல்கள் குழந்தை பருவத்தினை விளக்கும் வகையில்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தாலாட்டு, சிறுவர்கள் விளையாடும் பொழுது பாடக்கூடிய விளையாட்டுப் பாடல்கள் உட்பட சிறுவர் பாடல்கள், இளமைப்பருவத்தின் மொத்த அன்புடைய தலைவன் தலைவியின் காதலை வெளிப்படுத்தும் காதல்பாடல்கள், நாட்டின் முதுகெலும்பாக விளங்கக் கூடிய வேளாண்மை சார்ந்த உழவுபாடல்கள், மீனவபாடல்கள், வண்டிபாடல்கள் போன்ற தொழிற்பாடல்கள், இறைத்தன்மைக்கும் மனிதத் தன்மைக்குமான நெருக்கத்தை அதிகரிக்கும் பக்திபாடல்கள், கயிறு நிலையில் பாடக்கூடிய ஒப்பாரி பாடல்கள் மற்றும் பன்முக பாடல்கள் என்ற பன்முக பரிணாமங்களில் நாட்டுப்புறப் பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் நாட்டுப்புற பாடல்கள் நாட்டுப்புற வாழ்வியலை விளக்கும் கண்ணாடியாகவும் திகழ்கின்றன.

# 19. மணிமேகலை : குரலற்றவர்களின் குரல்

**முனைவர் சோ.ஹரிபாண்டிராஜன்**,
உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
*DOI 10.5281/zenodo.17258578.*

**Abstract :**

In Tamil literature, voices that should be heard about sexual abuse and caste oppression are scattered. Many voices that should be rebelled against are also stagnant as the groans of the voiceless. While the voice of gender equality is resounding in this century, feminist voices in the epic period are faltering. Despite this, people like Kannagi Madhavi rose up during a period of suppression and oppression. In this way, this article has been examined in the context of expressing the voice of the voiceless in the epic 'Manimekalai'.

**KeyWords:** Literature - Kappiyam - Manimegalai - Kannagi -Madhavi

தமிழ் இலக்கியங்களில் பாலியல் மீறல் குறித்தும் சாதிய அடக்குமுறைகள் குறித்தும் ஒலிக்க வேண்டிய குரல்கள் சிதறிக்கிடக்கின்றன. அதனூடே கலகமாக்கப்பட வேண்டிய எத்தனையோ குரல்கள் குரலற்றவர்களின் முனகல்களாகத் தேங்கியும் கிடக்கின்றன. ஆண்பெண் சமத்துவம் என்ற குரல் இந்நூற்றாண்டில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் காப்பியக் காலங்களில் பெண்ணியக் குரல்கள் தடுமாற்றத்துடன் நிற்கின்றன. இதனையும் மீறி கண்ணகி மாதவி போன்றோர் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்த காலக்கட்டத்தில் எழுச்சிப் பெற்றவர்கள். அந்தவகையில் 'மணிமேகலை காப்பியத்தில் இருக்கின்ற குரலற்றவர்களின் குரலினை வெளிப்படுத்தும் பொருண்மையில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

மணிமேகலையில் வெளிப்படும் குரல்களுக்கு பின்னணிக் காரணங்களான ஒடுக்கப்பட்டவர்களின் குரல்கள் மிஞ்சியும் விஞ்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகு நிலைமைக்கு ஏது என்ன?

**1.மேல்தட்டு மக்களிடமிருந்து எழும் தாக்குதல்கள்**
**2.சமதளப் போராட்டங்கள்**
**3.அடித்தள மக்கள் சந்திக்கும் ஒடுக்குதல்கள்**

எனத் தெரியலாம். இவை அலர் (பழித்துரைத்தல்)துறத்தல் ஒதுங்கிப்போதல் தன்னை அழிக்க முற்படுதல் என்ற வடிவங்களில் இக்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.இதனை

**1.சமூக ஒடுக்குதல்கள்**
**2.பாலியல் தாக்குதல்கள்**
**3.சாதிய துரத்தல்கள்**
**4.சமய புறக்கணித்தல்கள்**

எனக் காணலாம்.

**சமூக ஒடுக்குதல்கள்**

வுரலாற்றின் பக்கங்களில் காலங்காலமாக நிறைவேறிக் ;கொண்டேயிருக்கின்றன. தமக்கென உருவாக்கப்பட்ட ஒவ்வொரு சமூக சட்டத்திட்டங்கள் மறு;றும் ஒழுங்குமுறைகள் தனிநபராலோ அல்லது கூட்டத்தினரால் புறக்கணிக்கப்படும் போதோ


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மீறப்படும் போதோ அச்சமூகம் அவர்கள் மீது மேற்கொள்ளும செயல் திறன்களே சமூக ஒடுக்குதல்கள்.

'கணவனை இழந்தவர்க்குக் காட்டுவது இல்' என்று பெண் சமூகத்தின் மீது அன்றைய சமூகம் செலுத்திய ஒடுக்குதல்கள் கோப்பெருந்தேவி போன்றோர் ஏற்றுக்கொண்டனர்.இது 'கற்பு' எனும் கட்டுக்குள் சிறைவைக்கப்படுகிறது. கணவனை இழந்த கற்புடைய மூவரை மணிமேகலைச் சுட்டுகிறது.

**1.தலையாயவர் - கணவன் இறந்ததும் உயிர்த்துறப்பவர்**

**2.இடையாயவர் -ஈமத்தீப் புகுந்து உயிர்விடுபவர்**

**3.கடையாயவர் - கைமை நோன்பு கொள்வோர்**

இம்முறைகளை மீறுவோர் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகின்றனர்.

பரத்தமையினர் தத்தம் செயல்திரியின் இந்நிலைமைக்கு உள்ளாகின்றனர்.

சித்திராபதியானவள் தீவகசாந்தி விழாவில் மாதவி தன் மகள் மாதவியோடு கலந்து கொள்ள வராமையால் தோழி வயந்தமாலையினை அழைத்து 'பயங்கெழு மாநகர் அலரெடுத் துரை'எனகிறாள் இங்கு 'அலர்' என்பது போராட்'டமாகவே வருகிறது.இதிலிருந்து தப்பிக்க சமதளத்தில் இருக்கும் மாதவி சித்திராபதியால் ஒடுக்கப்படுகிறாள்.

| | |
|---|---|
| ஊரார் | அலர் |
| சித்திராபதி | கலக்கம் |
| மாதவி | ஒடுக்குதல் |

சமதளத்தில் நடைபெறுவதாயின் ஒரு கூட்டத்தின் ஒட்டுமொத்தத் தாக்குதல்.

**'நற்றவம் புரிந்தது நாணுடைத் தென்றே**
**அலகின் மூதூர் ஆன்றவ ரல்லது**
**புலர்தொகு புரைக்கும் பண்பில் வாய்மொழி**
**நயம்பா டில்லை நாணுடைத்து' (ஊரலர் உரைத்த காதை 33-36)**

தென்னகரின் ஆன்றோர்கள் அல்லாமலும் மற்றும் பலரும் தம்முள் இணைந்து உன்னைப் பழித்து உரைக்கின்றனர் என்கிறாள் வயந்தமாலை மாதவியிடம். பரத்தையர் மீதான தாக்குதல்கள் மாதவியின் வடிவில் கலகக்குரலாக எழுந்து தனியொருவளாக சந்திக்கிறாள்.மாதவி புரட்சிகரமான பெண்ணாக எழுந்து சமூக மாற்றத்திற்கு அடிக்கல் நாட்டுகிறாள்.

**பாலியல் தாக்குதல்கள்**

காமத்தை எதிர்கொள்ளாமலே அதனைக் கடந்திருக்க வேண்டிய மணிமேகலை ஏன் உதயகுமாரனிடத்தில் காதல் கொண்டாள். காப்பிய ஆசிரியனுக்கு விடைசொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. 'மந்திரம் கொடுத்த காதை' இதற்குப் பதில் சொல்கிறது. சென்ற பிறவியில் அசோதர நாட்டு மன்னன் இரவிவன்மன் அமுதபதி இணையருக்குப் பிறந்த பெண் இலக்குமி. அவளே இந்தப் பிறவியில் மணிமேகலையாகப் பிறந்துள்ளாள். இலக்குமியின் கணவனாக இருந்தவன் இராகுலன். அவன் மன்னன் அத்திபதி நீலபதி இணையருக்குப் பிறந்தவன். அந்தப் பிறவியில் இராகுலனைத் திட்டிவிடம் என்னும் பாம்பு கொன்றுவிட இலக்குமி அவனோடு தீக்குளித்து இறந்து போனாள். இந்த இலக்குமி இராகுலன் இணையரே இப்பிறவியில் மணிமேகலை உதயகுமாரனாகப் பிறந்துள்ளார்கள் என்ற செய்தியை பீடிகை கண்டு பழம் பிறந்துணர்ந்தும் மணிமேகலா தெய்வம் உரைத்தும் தெரிந்துகொண்டாள் மணிமேகலை. மேலும்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**உவவன மருங்கில் உன்பால் தோன்றிய**
**உதய குமரன் அவன்உன் இராகுலன்**
**ஆங்குஅவன் அன்றியும் அவன்பால் உள்ளம்**
**நீங்காத் தன்மை நினக்கும்உண்டு ஆகலின்**

**கந்த சாலியின் கழிபெரு வித்துஓர்**
**வெந்துஉகு வெங்களர் வீழ்வது போன்மென**
**அறத்தின் வித்துஆங்கு ஆகிய உன்னைஓர்**
**திறப்படற்கு ஏதுவா சேயிழை! செய்தேன்** **(10: 42-49)**

உவவனத்தில் காமத்தோடு உன்னைநாடி வந்த உதயகுமாரனே உன்னுடைய முற்பிறப்புக் கணவனாகிய இராகுலன். அதனால்தான் அவன் உன்னை விரும்பியதோடு மட்டுமல்லாமல் நீயும் அவனிடத்தில் நீங்காத விருப்பம் கொண்டாய். உன் உள்ளத்தில் தோன்றிய அக்காமம், கந்தசாலி என்னும் நெல்லின் மிகச்சிறந்த வித்து வெந்து உருகுகின்ற உப்பு நிலத்தில் வீழ்வதைப் போன்றது என்று கருதி அறத்தின் வித்தாகிய உன்னைச் சரியான நிலைக்கு ஆற்றுப்படுத்தவே இத்தீவிற்குக் கொண்டுவந்தேன் என்று மணிமேகலா தெய்வம் மணிமேகலையிடம் உரைத்தது.இக்காப்பியத்தில் சங்கிலித்தொடர்போல காணப்படுகிறது. தொடர் தாக்குதல்கள் சித்திராபதியால் மாற்று வழிகளில் தரப்படுகிறது.

| | |
|---|---|
| சித்திராபதி | அலர் அச்சம் |
| உதயகுமரன் | மேல்தட்டு அடக்குமுறை |
| மணிமேகலை | எதிர்ப்புக் குரல் |

மேல்தட்டு தாக்குதல்களுக்கு சமதள நபர் முனைப்பெடுக்கிறார்.

மணிமேகலையின் தோற்றத்தினைக் கண்டு மக்கள் அழகமைந்த தோற்றத்தினையுடைய இவளை தவநெறிப்படுத்திய தாயோ மிக கொடியவள் தாயின் தன்மைக்குத் தகுதியாகாதவள் என மனம் நொந்தனர்.பளிங்கு மண்டபத்திலே நின்ற அவள் உருவம் தவ உருவம் ஆகும்.பயந்து நிற்;கும் அவளை உதயகுமரன்

**'கற்பு தானிலாள் நற்றவ உணர்விலாள்**
**வருணக் காப்பிலாள் பொருள் விலையாட்டி**

**(மணிமேகலா தெயவம் வந்து தோன்றிய காதை 86-87)**

கற்பு இல்லாதவள்..நல்ல தவ உணர்வு இல்லாதவள்..வருணத்து வகையிலேயும் தனக்கொரு காவல் அற்றவள்.பொருளுக்குத் தன் இன்பத்தை விலைப்படுத்துபவள். என்ற முரட்டுத்தனமான பழிச்சொற்கள் கூறப்படுகின்றன.

ஆணாதிக்கத்திற்குப் பயந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடும் அடித்தட்டு மக்களின் தொனிகள் இன்னும்; ஓங்கி எழாமல் போகின்றன.+கடவுளே வந்து அறிவுரைக் கூறினாலும் ஏற்றுக்கொள்ளாத அதிகாரவர்க்கம் இந்நூற்றாண்டிலும் கண்கூடு. இளவரசனிடம் மணிமேகலா தெய்வம்

**'....... மன்னவன் மகனே!**
**கோனிலை திரிந்திடின் கோணிலை திரியும்**
**கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூறும்'**

என்று மணிமேகலையின் மேல் நீ வைத்த விருப்பத்தினை கைவிடுவாயாக என உரைத்த பின்பும் காதலை சுமந்து பின் செல்கிறான்.

சுமதளத்தில ;இருக்கும் மாதவியை சிதிதிராபதியானவள் அழைத்து வரச்செல்லும் காட்சி

**'…… நெஞ்சுபுகை உயிர்த்து**
**வஞ்சக் கிளவி மாண்பொடு தேர்ந்து**
**குறுவியர் பொடித்து கோலவாண் முகத்தள்**
**செறிவளை நல்லார் சிலர்புறஞ் சூழக்**
**கடுந்தேர் வீதி காலிற் போகி**
**இளங்கோ வேந்தன் இருப்பிடம் குறுகி -'**

நாடக கணிகையர் சூழ்ந்துவர தேர வீதியிலே காற்றைப ;போன்ற வேகத்தில் உதயகுமரன் இருப்பிடம் சென்று மேல்தட்டு அடக்குதல்களுக்கு காரணமாகின்றாள்.

மணிமேகலையை வஞ்சித்து வருத்த புறப்பட்டாள் அரசி;..தன் அறிவு நிலை வேறுபட்டு இந்த அகநகர் பக்கமெல்லாம் இவளை அடிக்கும்படியான கோலத்தினை நான் செய்வேன் என்று பித்தேற்றுவதற்கான மருநடதினை ஊட்ட முயற்சிக்கிறாள். இளைஞன் மூலம் பொய்யுரைப் பரப்பச் செய்கிறாள். இங்கனம் தனிநபர் மேல்மட்டத்தாரால் பலதாக்குதல்களுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில ஒடுக்கப்பட்ட குரலினைக் காணலாம்.

கௌசிகனின் ஒரே மகள் சுதமதி. விழாக் காண வந்தவள் மாருத வேகன் என்னும் விஞ்சையன் தனியாக மலர் வனத்திலே அச்சமின்றி நின்ற சுதமதியினை எடுத்துப்ேபாய் தன் வயப்படுத்தி ஊர்த் தெரியாத நடு ஊரிலே(தெரு) விட்டுச் சென்றான். இந்த அடித்தடடு அபலைப் பெண் யாரிடம் எப்படிப் புலம்புவாள்.ஒடுக்கப்பட்ட இப்பெண் திக்குத்திணறி கேட்பாரற்று நின்ற நிலைமை பரிதாபத்திற்குரியதன்றோ? பிழை மணம் எய்தியவள் சமண பள்ளியில் போய் தங்கிய இவளின் குரல் பாலியல் ஒடுககுதலானது.

**சாதியத் துரத்தல்கள்**

சமூக புரட்சியில் ஈடுபட்டவன் ஆபுத்திரன. ;இவன் .பசுவின் துயரத்தினைக் கண்ட மனுநீதிசோழன்.

**'வெரூஉப்பகை அஞ்சி வெய்த்துயிர்த்தும் புலம்பிக்**
**கோலைநவில் வேட்டுவர் கொடுமரம் ; அஞ்சி**
**வுலையிடைப் பட்ட மானே போன்றாங்கு**
**அஞ்சிநின்று அழைக்கும் ஆத்துயர் கண்டு**
**நெஞ்சுநடுக்குற்று நெடுங்கணீர் உகுத்துக்--**

**(ஆபுத்திரன் திறன் அறிவித்த காதை 30-34)**

வேடனின் வில்லிற்குப் பயந்து ஓடி வலையில் அகப்பட்டுத் துடிக்கும் மானைப் போன்று அச்சத்தோடு நின்று கதறும் பசுவின் துயரத்தினைத ;துடைக்கும் சிறுவனுக்குத் தரப்படும் தண்டனை 'ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான்'என வளர்த்த தந்தையால் வெளியேற்றப்படுகிறான். சமூகமோ இவன் யாகப் பசுவை கவர்ந்த கள்வன் என்று சொல்லி அவன் பிச்சைப் பாத்திரத்தில் சோறிடாமல் கல்லைப் போட்டனர்..ஒடுக்கும் குரல்கள் ஓங்கி ஊரை விட்டே சென்றான்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**சமயப் புறக்கணித்தல்கள்**

ஒடுக்கப்பட்ட ஆபுத்திரனை இந்திரனும் தொல்லைக் ;குள்ளாக்குகிறார். நெடிது பரந்;த நிலவுலகம் எங்கும் அளவின்றி எய்திய வெள்ளப் பெருக்கினாலே பல்வகை வளங்களும் சுரப்பதாக என மேகங்களை ஏவினான். நாடு செழிப்பானது. அம்பலத்தை விட்டு வெளியேறி உண்போர் உளரோ? எனக் கேட்டும் விசாரிப்பவர் யாருமின்றி ஒடுங்கிய குரலினைச் சுமந்து

**'திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள**
**ஒரு தனி வரூஉம் பெருமகன் போலத்**

**(பாத்திர மரபு கூறிய காதை 70-71)**

தனது சிறந்த செல்வத்தினைப் பெருங்கடலானது கவர்ந்து கொள்ள ஒற்றைத் தனியனாக வந்து கொண்டிருக்கும் செல்வனைப் போல சென்று கொண்டிருந்தன.

**முடிவுரை :**

இவை கலகக்குரல்களாக எழுச்சிப் பெற காரணங்களானவை. மாதவி மணிமேகலை சுதமதி ஆபுத்திரன் போன்றோர் தத்தம் சந்தித்த போராட்டங்களான ஒடுக்குதல்கள் தாக்குதல்கள்-துரத்தல்கள் புறக்கணிப்புகள் என்று தனிமனித சமூகப் பார்வையில் எடுத்தியம்பப்பட்டன.

**துணைமை நின்றவை :**


- மணிமேகலை, ந.மு.வேங்கடசாமி நாட்டார் & ஔவை சு.துரைச்சாமிப் பிள்ளை, சாரதா பதிப்பகம், திருச்சி.
- ஒடுக்கப்பட்டவர்கள், விடுதலையின் வடிவங்கள், ஃபிரான்ஸ் ஃபனான்(மூலம்), வி. நட்ராஜ்(மொ.பெ), விடியல் பதிப்பகம், சென்னை.



http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 20. அகநானூற்றுக் கவிதையியலில் இறைமை

**முனைவர் ப.கலைவாணி,**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோவை-18.

DOI 10.5281/zenodo.17258593.

**Abstract :**

The nature worship methods found in Sangam literature were the initial stage of ancestor worship. These nature worship methods have developed over time. In ancient times, Murugan was worshipped as a Tamil god. We can know the worship of Murugan through 'Velaan Veriyaattu'. To resolve the change in the mane of a love-struck heroine, a program called Velan Veriyaattu is performed and Murugan is worshipped. According to nature worship, Seyon Murugan became the god of Kurinji.

**Key Words :** Worship - Sangam Poet - Tamil Poem - Agananooru - Kurinji

## முன்னுரை :-

சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற இயற்கை வழிபாட்டு முறைகளே முன்னோர் வழிபாட்டின் தொடக்க நிலையாக அமைந்திருந்தது. இவ்வியற்கை வழிபாட்டு முறைகள் காலந்தோறும் வளர்ச்சியடைந்து வந்துள்ளன. முற்காலத்தில் தமிழ்க்கடவுளாய் முருகனை வழிபட்டனர். முருகன் வழிபாட்டினை 'வேலன் வெறியாட்டு' மூலம் நாம் அறியலாம். காதல் வயப்பட்ட தலைவியின் மேனி மாற்றத்தினைத் தீர்க்க வேலன் வெறியாட்டு என்ற மாற்றத்தினைத் தீர்க்க வேலன் வெறியாட்டு என்ற நிகழ்ச்சியை நடத்தி முருகனை வழிபடுவர்.இயற்கை வழிபாட்டின் படி சேயோன் முருகன் குறிஞ்சிக்கடவுள் ஆனான்.

## குறிஞ்சிக்கடவுள்

மனித இனம் முதன்முதலில் தோன்றிய இடம் குறிஞ்சி நிலமாகும். ஆகவே முதன்முதலில் மக்கள் குறிஞ்சி நிலத்திலேயே தெய்வ வழிபாடு தொடங்கினார்கள். உருவ வழிபாட்டில் தொன்மையானதும் முருகன் வழிபாடாகும். முருகன் குறிஞ்சி நிலக்கடவுள் மலையும் மலை சர்ந்த இடங்களின் கடவுள் முருகன் அதனால் முருகனை 'குறிஞ்சிக்கிழவன்' 'மலைகிழவோன்' என்று தமிழ்நூல்கள் கூறுகின்றன.

முருகு என்ற சொல்லுக்கு அழியாத அழகும் குன்றாத இனிமையும், இயற்கை மணமும், எல்லாப் பொருளிலும் கடவுள் தன்மை உண்டு என பல பொருட்கள் உண்டு.

**"கடியுடை வியல்நகர் காவல் கண்ணி**
**முருகு என வேலன் தரூஉம்**
**பவருமாகப் பயந்தன்றால் நமக்கே"**

**அகம்- பா. எண். 232.**

என்ற வரிகளாலும்,

**"உருகெழு சிறப்பின் முருகுமனைத் தழீஇக்**
**கடம்பும் கணனும் பாடி நுடங்குடி"**

**அகம் - பா.எண்.138.**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற வரிகளாலும் வேலன் வெறியாட்டு என்ற முறையில்பண்டைத் தமிழ்மக்கள் முருகனை அதிகமாக வழிபட்டு தெய்வ விழாக்கள் நடத்தி வந்துள்ளனர். இதில் ' முருகு என்னும் சொல் முருகனை குறித்தது.

**முருகன் வழிபாடு:**

சூரபத்மாவினை அழித்த ஒளிவிடும் நெடு வேலினை உடையவன் முருகப்பெருமான். அவன் சினம் மிகுந்தவன். அச்சினம் தணிந்து அருளுடையவனாகக் கோயில் கொண்டிருக்கும் தட்பம் வாய்ந்தது திருப்பரங்குன்றம்.

**"புரிக்கணத்தன்ன நாய் தொடர் விட்டு**
**முருகன் அன்ன சீற்றத்துக் கருந்திறல்"**

**அகம்.பா. எண்- 68.**

கடல் அலைகள் மோதுகின்ற கோயிலில் வீற்றிருப்பவன் முருகப் பெருமான். அப்பெருமானைப் போற்றினால் தலைவியின் துயரம் தணியும் என நினைத்து வெறியாடும் களம் அமைக்கப்பட்டது. வேலினை நிறுத்தி பூக்களால் அலங்கரித்து வேலனின் புகழைப் பாடி மகிழ்ந்தனர்.

**"படியோர்த் தேய்த்த பல்புகழ் தடக்கை**
**நெடுவேள் பேணத் தணிடுவள் இவள் என"**

**அகம். பா.எண்- 22.**

**வேலன் -பூசாரி:**

முருகனுடைய பூசாரியான 'வேலன்' முருகனின் ஆயுதமான வேலைத்தாங்கி ஆடுவதால் வேலன் எனப்பெயர் பெற்றான். முருகனை அழைத்து அவன் புகழைப் பாடிக் கொண்டு வரும் போதே அவன் ஒருவகையான அருளுக்குள்ளாகிறான். 'முருகு' அவன் மேல் வந்ததாக கருதப்படுகிறது. அந்நிலையில் அவன் வேலைக் கையில் தாங்கி அருளோடு ஆடுகிறான் இறுதியில் முருகனுக்கு படையல் இட்டு வணங்குகிறான். முருகனுடைய பூசாரியான வேலன் நடத்தும் 'அருளாடல்' வெறியயர்தல், வெறியாடல், வெறியாட்டு எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. 'வெறி' என்னும் சொல் 'மணம்' என்ற பொருளில் பழந்தமிழில் குறிக்கப்பட்டுள்ளது.

இதனை தொல்காப்பியம்,

**"வெறியறு சிறப்பின் செவ்வாய் வேலன்"**

என்று குறித்துள்ளது.

பெண்ணை பெற்றவர்களின் வேண்டு கோளை ஏற்றுக் கொண்ட வேலன் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்கிறான். பெண்ணின் வீட்டு முற்றத்தில் வெறியாடும் களம் அமைக்கப்படுகிறது. பின் வெறியாடுதல் நடக்கின்றது.

**"மெய்ம்மலி உவகையன் அந்நிலைகண்டு**
**முருகு என உணர்ந்து முகமன் கூறி**
**உருவச் செந்தினை நீரோடு தூவி தூஉய்"**

**அகம். பா.எண் - 272.**

**வெறியாட்டு:**

தமிழரின் வழிபாட்டு முறையில் மிகவும் பழமையானது 'வெறியாட்டு' என்பதாகும். மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்து உருவானதே இது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

இதனை ஆவேசம் என்றும் கூறுவர். இன்றும் கோயில் பூசாரிகள் சாமியாடி வருகின்றனர். இடுக்கண் அனைத்திற்கும் முருகனே காரணம் என்றும் மகளின் மெலிவுக்கு காரணமும் அதுவே என்றும் கூறுவர்.

**"கமழ் இதழ் வெறிஅயர் வியன்களம் கடுக்கும்**
**பெருவரை நண்ணிய சார லானே"**

**அகம் - பா. எண்-182.**

முதுமை வாய்ந்தவரும். பொய்கூறிலில் வல்லவருமான கட்டுவிச்சியான பெண்டிர்கள். அரிசியைப் பரப்பி வைத்துக்கொண்டு இது முருகனது செயலால் வந்த வருத்தம் என்று கூறினாள். வேலன் வெறியாட்டு அயரும் களத்தில் வேலனை அன்னை வணங்கினாள். என் மகளின் அழகானது முன்நாள் போல சிறப்புற அமைய வேண்டும் என வேண்டினாள்.

**"பெண்போழ் கடம்பொடு குடிஇன்சீர்**
**ஐது அமை பாணி இரீஇ கைபெயரா**
**செல்வன் பெரும் பெயர் ஏத்தி வேலன்**
**வெறியயர் வியன்களம் பொற்ப"**

**அகம். பா.எண்- 98.**

மணமாகாத சில கன்னிப் பெண்களைச் 'சூர் அணங்கு' தீண்டி துன்புறுத்துவதாக பழந்தமிழ் மக்கள் நம்பினர் பெண் ஒருத்தி ஆண்மகன் மேல் காதல் கொள்ளும்போது அவளுடைய உடலில் சில மாற்றங்கள் உண்டாகிறது. இதனை அறியாத பெண்ணின் தாய் வேலனை அழைக்கின்றனர்.

**படைத்தல்:**

வேலன் வேடம் புனைந்தோன் வெறியாட்டு அயர்கின்ற நேரத்தில் முருகனை நினைத்து வழிபாட்டு விரும்பியதைப் படைத்து வழிபட்டனர். மலையில் விளைகின்ற செந்நெல், வெண்ணெய் இவற்றால் பொரி பொரித்து படைத்து வழிபட்டனர்.

**"அரியா வேலற் றரீஇ அன்னை**
**வெறி அயர் வியர்களம் பொலிய ஏத்தி**
**மறிஉயிர் வழங்கா அளவை சென்று யாம்"**

**அகம். பா. எண் - 242.**

பெண்ணின் தாய் தன் மகளின் மேனி பொலிவு அற்றதை நினைத்து வருந்தி இது தெய்வக் குற்றம் எனக் கருதி கள்ளும் காந்தள் பூக்களையும், வெள்ளாட்டுக் கிடாயும் வைத்துப் படையளிட்டு வணங்கினாள்.

**"கள்ளும் கண்ணியும் கையுறையாக**
**நிலைக் கோட்டு வெள்ளை நாள் செவிக் கிடாஅய்**
**நிலைத் துறைக் கடவுட்டு உளப்பட ஓச்சித்**
**தணி மருங்கு அறியாள், யாய் அழ**
**மணி மருள் மேனி பொன்னிறம் கொளலே."**

தான் கலந்து கொள்ளும் போரில் தன்பக்கம் வெற்றி பெற விளைந்த வீரன் ஒருவன் தீயை வளர்த்தான். தனதுபக்க வெற்றிக்காக அத்தீயில் விழுந்து உயிர் நீத்தான். உயிர் பலி கொடுத்து தெய்வத்தை வழிபாடு செய்யும் வழக்கம் சங்க காலத்தில் இருந்துவந்தது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"உயிர்பலி பெறூஉம் உருகழு தெய்வம்**
**புனை இருங் கதுப்பின் நீ கடுத் தோள்வயின்**
**அனையேன் ஆயின் அணங்குக."**

**அகம். பா.எண் - 166.**

**நடுகல்:**

நடுகல்லில் வீரனுடைய பெயர் எழுதப்பட்டு அணிமயிற்பீலி சூட்டப்பட்டது. தம் நிரைகளைக் கவர்ந்து சென்ற கள்வர்களிடமிருந்து அவற்றை மீட்பதற்காக விரைவாகச் சென்று அவருடன் போரினைச் செய்து வெற்றி பெற்றவர்கள் பெயரும் நடுகல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

**"நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்**
**பெயரும் பீடும் எழுதி யதர் தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"**

**அகம் .பா.எண் - 67.**

இக்கற்கள் பலவாக நடப்பட்ட இடத்தில் வேலை ஊன்றி வைத்துள்ள காட்சி கிடுகுப்படையை வைத்த பகைப்புலம் போலத் தோன்றும்.

**"நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்**
**நிரல் நிலை நடுகற் பொருத்தி இமையாது."**

**அகம். பா.எண் - 387.**

நடுகல்லை வீரர்கள் மஞ்சள் நீரிட்டு கழுவினர். பின் அதில் கரந்தைப்பூவை சூடி வணங்கினர்.

**"பிடிமடிந் தன்ன குறும் பொறை மருங்கிப்**
**நட்ட போலும் நடாஅ நெடுங்கல்"**

**அகம். பா.எண் 269.**

நடுகல்லுக்கு மஞ்சள் நீரால் கழுவி மயிற்தோகை வைத்து வழிபட்டுள்ளதைக் கொண்டு முருக வழிபாட்டினை அறியலாம்.

**முடிவுரை:**

நூறாயிரம் சூரியன்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவம் கொண்டவன் முருகன். முருகனை வணங்கினால் எல்லாக் கடவுளையும் வணங்கி அடையும் பயன்களை எல்லாம் நாம் ஒருங்கே பெறலாம். மகனுக்குச் செய்யும் சிறப்பால், தந்தை தாயாகிய சிவபெருமானும், உமாதேவியும் தம்பியைப் போற்றுதலால் சகோதரனாகிய விநாயகரும், மருமகனை வழிபடுதலால் மாமனாகிய திருமாலும் தலைவனை வணங்குதலால் தேவரும், முனிவரும் மகிழ்ச்சி அடைவார்கள் எனவே முருக வழிபாடு மிக்க சிறப்புடையது. முருகனை அடைந்தால் துன்பத்தை அழப்பான் முருகனை நாம் தினம் வழிபட்டால் என்றும் குறையாத பெரும் செல்வத்தைப் பெறுவார்கள். அவர்களை எத்தகைய துன்பமும் அணுகாது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 21. பழந்தமிழரும் சைவமும்

**முனைவர் ஜெ.குணசீலி,**
உதவிப்பேராசிரியர், மொழித்துறை,
பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர்.
*DOI 10.5281/zenodo.17258605.*

**Abstract :**

It is customary to begin the historical period of the ancient Tamil country with the Sangam period. The Sangam period is calculated to be from the 10th century BC to the 2nd century AD. The literature that emerged during this period is considered as Sangam literature. Sangam literature is divided into Ettutogi and Patuppattu. Shiva worship is widely discussed in these two types of literature. Only specific information about the Saiva worship events shown in these literatures is indicated here.

**KeyWords :** Ancient Tamil - Sangam Literature - Saivam - Worship

## முன்னுரை

பழந்தமிழ் நாட்டின் வரலாற்றுக் காலத்தைச் சங்க காலத்திலிருந்து தொடங்குவது வழக்கம். சங்க காலம் என்பது கி.மு. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை எனக் கணக்கிடுவர். இக்காலக் கட்டங்களில் தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியம் எனப் போற்றுவர். சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவாகும். இவ்விருவகை இலக்கியங்களில் சிவ வழிபாடு பரவலாகப் பேசப் பெறுகிறது. அவ்விலக்கியங்கள் காட்டும் சைவ வழிபாட்டு நிகழ்வுகளில் குறிப்பிட்ட செய்திகள் மட்டும் இங்கே சுட்டிக் காட்டப் பெறுகின்றன.

## எட்டுத்தொகை நூல்களில் சைவ வழிபாடு

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுக்குள் தலைமையானது சிவ வழிபாடு ஆகும். சிவ வழிபாடு கொற்றவையாகிய வனதுர்க்கை, சினந்து அழிக்கும் காளி, அருள், வழங்கும் மலைமகள் ஆகிய 3 சக்திகளோடு நெற்றிக் கண்ணனாகிய சிவ பெருமானோடு பிரிவின்றிக் கூறப்பட்டுள்ளது. சிவபெருமான் சிவன் என்ற சொல்லால் குறிக்கப் பெறாது பிற சொற்களாலே குறிக்கப் பெறுகிறான். அதாவது சங்க இலக்கியத்தில் சிவன் என்ற சொல்லே இல்லை என்று சொல்லலாம். அதற்குப் பதிலாக ஆதிரையான், ஆலமர், செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈரஞ்சடை, அந்தண்ன, காலக் கடவுள் தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறான். எனவே சக்தியாகிய பெண் தெய்வங்களுடனும், தன் திருமேனிக்கு உரிய பெயர்களுடனும் சங்க இலக்கியங்களில் சிவபெருமான் இடம் பெற்றுள்ளான். வழிபாட்டில் அவனுக்கென்று தனியே கோயில் அமைத்து வழிபடும் வழக்கமும், ஊருக்கு நடுவே மன்றங்கள் அமைத்து வழிபடும் வழக்கமும் இருந்தமை சங்க இலக்கியங்களில் தெரிகின்றது.

மேலும், சிவனைப் பற்றிப் பெருமையாகப் பேசும் எட்டுத்தொகை நூல்கள் அவனுடைய திருமேனியைப் பற்றிய செய்திகளைப் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. அவற்றில் ஒருசிலவற்றைக் காண்போம். எட்டுத் தொகை நூல்களுள் ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, என்னும் நான்கு தொகை நூல்களில் அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவபெருமானைப் பற்றியனவே ஆகும். இப்பாடல்களில் சிவபெருமானுடைய வடிவங்கள் சிறப்பாகப் பேசப் பெறுகின்றன. ஐங்குறுநூற்றில்;


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உமாதேவியை ஒருபாகத்தில் கொண்ட நீலநிறம் வாய்ந்த திருமேனியை உடையவன் என்ற செய்தி கடவுள் வாழ்த்துப் பாடலில் அமைந்துள்ளது. அகநானூற்றுப்ப பாடலில் 'செவ்வான் அன்ன மேனி; என்றும், நெற்றியில் இமையாத கண்ணை உடையவன்' என்றும் கூறப் பெறுகிறது. புறநானூற்றுப் பாடலில் திருமுடியில் கொன்றை மாலை அணிந்தவன், கழுத்தில் கருப்பு நிறத்தை உடையவன் என்று குறிக்கப்பெறுகிறது.

இவ்வாறு உருவ வழிபாடுகளைக் கூறுவதோடு சிவபெருமானுடைய புராணச் செய்திகளும் எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. வானிடத்தில் பறந்து திரியும் இயல்புடைய பொன், வெள்ளி, இரும்பு மதில்களைக் கொண்ட நகரங்கள் மூன்றில் வாழ்ந்த அரக்கர்களைச் சிவபெருமான் தன் சிரிப்பினால் எரித்தான் என்பது புராண வரலாறு ஆகும். இச்செய்தி பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.

**மூவகை ஆரெயில் ஓர் ஆழல் அம்பின் முளிய**
**மாதிரம் அழல எய்து, அமரர் வேள்விப்**
**பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்**

**(பரி 5, 25-27)**

அதுபோலக் கலித்தொகையில் "எயில் எய்யப் பிறந்த எரிபோல" (கலி-150) என்ற செய்தி இடம் பெற்றள்ளது. சிவ பெருமான் கங்கையைச் சடையில் வைத்திருப்பதை எட்டுத்தொகை நூல்களில் காண முடிகிறது.

**தணிவுறத் தாங்கிய தனிநிலைச் சலதாரி**
**மணிமிடற் றண்ணல் - (பரி. 9, 6-7)**

ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சிவபெருமான் அறம் உரைத்த செய்தியை,

**ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்**

**(கலி - 81)**

**ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்**

**(புற - 198)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. இதுபோலக் கயிலைக் கடவுள் என்றும் இராவணனை அடக்கியவன் என்றும், பிறை அணிந்தவன் என்றும், உமையொரு பாகத்தவன் என்றும் குறிப்பிட்டு அவ்வரலாறுகளையும் எட்டுத்தொகை நூல்கள் கூறுகின்றன.

சிவபெருமானுக்குத் திருவாதிரை நாள் சிறப்புடையதாகக் கருதப்பட்டது. அத்திருநாளில் சிவபெருமானுக்கு விழாக்கள் எடுத்தல் பற்றியும் எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. அதிலும் மார்கழித் திருவாதிரை நாள் சிறப்புடைய திருநாளாகக் கருதப்பட்டது. இதனைப் பரிபாடலின் 11ஆம் பாடல் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. மழைக்காலத்தின் கடைசிப் பகுதியாகிய மார்கழி மாதத்தில் சந்திரன் முழுதாக நிறைந்துள்ள திருவாதிரை நாளில் சிவபெருமானுக்குத் திருவிழாவைத் தொடங்கி நடத்தினார்கள் என்ற செய்தி அப்பாடலில் இடம் பெற்றுள்ளது.

சிவபெருமானுக்கு வேள்வித் தீ வழிபாடு இன்றியமையாதது என்பதையும் அதனைச் செய்தவர்கள் அவிர்சடை முனிவர்கள் என்பதையும் எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன.

**கடுந்தெறற் செந்தீ வேட்டுப்**
**புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனெ. (புறம் - 251)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

சிவபெருமானின் ஒரு வடிவாக அமைந்த முருகனின் வழிபாட்டில் சிவ வழிபாட்டு முறைகள் பல காணப்படுகின்றன. வெறியாட்டு வழிபாடு நடத்தினால் காதலர்களின் எண்ணங்கள் நிறைவேறும் என்பது சங்க இலக்கிய மரபாகத் தெரிகிறது.

அகநானூறு 96ஆவது பாடலில் வேலன் வெறியாட்டு நிகழ்ச்சிகள் முழுமையாகக் காட்டப் பெற்றுள்ளன. நற்றிணையின் 34ஆம் பாட்டில்,

**கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி**
**வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்**
**கடவு ளாயினும் ஆக**
**மடவை மன்ற வாழிய முருகே** (பா-34)

என்ற முருகனுக்கு எடுக்கப் பெற்ற வெறியாடல் குறிக்கப் பெறுகிறது. முருக வழிபாடு இவ்வாறு கூறப்பெற்றாலும் சிவபெருமானின் மூத்த பிள்ளையாகிய யானைமுகப் பிள்ளையாரின் வழிபாடுகள் சங்கச் செய்திகளில் இடம் பெறவில்லை. ஆனால் அதே நேரத்தில் சிவனுக்குரிய பெண் தெய்வமாகிய உமையவள், வீரத்திற்குரிய தெய்வமாகக் கருதப் பட்டுக் கொற்றவையாக வணங்கப் பெற்றமை குறிப்பிடத்தககது. பரிபாடலில் கொற்றவை பற்றிக் கூறப்பட்டுள்ள பாடலை அதற்குச் சான்றாகக் காட்டலாம்.

இவ்வாறு எட்டுத் தொகை நூல்களில் சிவபெருமானைப் பற்றிய செய்திகளும் வழிபாட்டு முறைமைகளும் இடம் பெற்றுச் சிவவழிபாட்டின் தொன்மையைப் புலப்படுத்துகின்றன.

### பத்துப்பாட்டு நூல்களில் சைவ வழிபாடு

பத்துப்பாட்டில் சிவனைப் பற்றிய செய்திகளும், வழிபாட்டு முறைகளும் இடம் பெற்றுள்ளன. பத்துப்பாட்டின் முதலாவது பாட்டான திருமுருகாற்றுப்படை சைவ சமய வழிபாட்ழன் தொன்மையை எடுத்துக் காட்டும் பாடலாகும். சைவ சமய வழிபாட்டின் ஒரு பகுதியாக முருக வழிபாடு இருந்தமையை அப்பாடல் பெருமையாக எடுத்துக்காட்டுகிறது. முருகனின் வடிவம் பற்றியும், அவனுடைய கரங்கள் பற்றியும் கூறப்படுகின்ற செய்திகள் தொல் பழங்காலத்தில் சைவ சமய வழிபாட்டில் சிறப்பிடம் பெற்ற உருவ வழிபாட்டு முறையைக் கூறுவதாகும். மேலும் முருகன் இருக்கும் இடங்களாகப் படை வீடுகள் குறிக்கப் பெற்றிருப்பதும் சிறப்புடையதாகும். முருகன் குன்றுதோறும் ஆடுகின்றவன் என்பதை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில், "குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே" என்று குறிப்பிடுகின்றார்.

திருமுருகாற்றுப்படையில் மக்கள் ஒன்றுகூடி முருகனின் திருத்தலங்களில் செய்கின்ற வழிபாட்டு முறைகள் சிறப்பாகக் காட்டப் பெற்றுள்ளன. முருகப் பெருமானுடைய வரலாறுகள் அதாவது மாமரமாய் நின்ற சூரனைத் தடிந்தது போன்றவை சிறப்பாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. எனவே தொல் பழங்காலத்தில் சிவ வழிபாடு என்று நினைக்கிற பொழுது பத்துப்பாட்டில் அமைந்த திருமுருகாற்றுப் படை சிறப்புப் பெறுவதை உணரலாம். அப்பாட்டின் மூலம் முருக வழிபாடாம் சிவ வழிபாட்டுத் தொன்மை எடுத்துக் கூறப்பெறுகிறது.

மற்ற பாடல்களில் சிவ வழிபாட்டின் தொன்மைகள் பலவாறு காணப் பெறுகின்றன. எட்டுத் தொகைப் பகுதியில் கூறப்பட்டவை போன்று சிவபிரானின் புராணச் செய்திகள் இவற்றிலும் இடம் பெற்றுள்ளன.

சிறுபாணாற்றுப்படையில், "**ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த ...... ஆர்வ நன்மொழி**" (அடி 97-99) என்று ஆலமர்ச் செல்வர் நிலை குறிக்கப் பெற்றுள்ளது. மதுரைக்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காஞ்சியில் சிவபெருமானுக்கு எடுக்கப் பெற்ற வேள்வி பற்றிய செய்தி. **“நல்வேள்வித் துறைபோகிய”** (760) என்றும் பாண்டிய நாட்டில் 7 நாட்கள் சிவபெருமானுக்கு விழா எடுக்கப்பெற்றசெய்தி,

**கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி**

**ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே** (427-428)

என்றும் குறிக்கப்பெறுகின்றன. அதுபோலப் பெரும்பாணாற்றுப்படை மற்றும் பட்டினப்பாலையில் அவிர்சடை முனிவர் சிவபெருமானுக்குரிய வேள்வியை நடத்தினர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. சிவனை வழிபடுபவர்கள் துவராடை உடுத்தி முக்கோலினைக் கொண்டிருந்தனர் என்பதை முல்லைப்பாட்டு.

**கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்**

**முக்கோல் அசைநிலை கடுப்ப** (36-37)

என்று குறிப்பிடுகின்றது. இவ்வாறு சிவ வழிபாட்டின் தொன்மையைப் பத்துப்பாட்டில் இடம் பெற்ற பாடல்களும் வரையறுத்துக் காட்டுகின்றன எனலாம்.

## தொல்காப்பியத்தில் சைவ வழிபாடு

இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்புதல்’ என்ற மரபுக்கே;றபச் சங்க இலக்கியங்கள் அல்லது முற்பட்ட இலக்கியங்கள் கொண்டு தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூல் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்திலும் தெய்வ வழிபாட்டுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதில் காணப்பெறும் சிவவழிபாட்டுச் செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம். அவ்விலக்கண நூல் கூறுகின்ற முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள், என்ற மூன்று பொருள்களில் கருப்பொருளில் தெய்வம் இடம்பெற்றுள்ளது. தெய்வ நம்பிக்கையை அது காட்டுகிறது. அவ் இலக்கண நூல் நிலங்களை ஐவகையாகப் பிரித்து அந்நிலங்களுக்குரிய தெய்வங்களையும் குறிப்பிடுகிறது. ‘மாயோன் மேய காடுறை உலகமும்’ என்று தொடங்கும் சூத்தரத்தின் மூலம் அத்தெய்வங்கள் உணர்த்தப் பெறுகின்றன. குறி ஞ்சிக்குரிய தெய்வமாக முருகன்-செவ்வேள் என்று குறிக்கப் பெற்றுச் சைவ வழிபாடு இடம் பெறுகிறது. எனவே தொல்காப்பியர் காலத்தில் சிவ வழிபாடு இருந்தமை புலப்படுகிறது. மேலும் சமய வழிபாட்டின் கொள்கையான விதிக் (ஊழ்) கொள்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டமை தெரிய வருகிறது. “ஒன்றே வேறெ என்றிரு பால்வயின்” என்று தொடங்குகின்ற தொல்காப்பியச் சூத்திரம் இதற்கு எடுத்துக்காட்டாகும். ‘பால்வரை தெய்வம்’ என்றும் ‘வழிபடு தெய்வம் என்றும் தெய்வங்கள் அவ்விலக்கண நூலில் குறிக்கப் பெறுகின்றன. தெய்வ வழிபாட்டின் அங்கமாகிய விரிச்சி (குறி கேட்டல்) வெறியாட்டு எடுத்தல், கழங்குகளை எறிந்து சகுனம் பார்த்தல் ஆகியவையும் அவ்விலக்கண நூலில் கூறப்பட்டுள்ளன. அரசியல் வாழ்வில் தெய்வ வழிபாடு சிறப்பிடம் பெற்றது என்பதைக் “கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே” என்ற சூத்திரப்பகுதி வலியுறுத்தும், சமயக் கொள்கையாகிய நிலையாமை பற்றி புறத்திணையில் காஞ்சித்திணை வலியுறுத்துகிறது. இவ்வாறு சமய வழிபாட்டின் தொன்மையையும், சைவ வழிபாட்டின் ஒரு பகுதியாகிய முருக வழிபாட்டின் சிறப்பையும், சமய நம்பிக்கைகளையும், தொல்காப்பியம் கூறுகிறது எனலாம்.

## திருக்குறளில் சைவ வழிபாடு

சங்க இலக்கியக் காலம் சார்ந்த திருக்குறளில் ஒரு குறிப்பிட்ட கடவுள் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை என்றாலும் சமய நெறிமுறைகளும், தத்துவ உண்மைகளும் இடம் பெற்றிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. “ஆதி பகவன் முதற்றே உலகு”

என்ற தொடர் கடவுள் உண்மையைப் புலப்படுத்தும், கடவுள் வாழ்த்தில் அமைந்த 10 பாடல்களும் தெய்வ நம்பிக்கையை வலியுறுத்தும். "இருள்சேர் இருவினை" (குறள் எண். 5) என்ற தொடர் வினைக் கொள்கையின் சிறப்பை எடுத்துக்காட்டும் "பிறவிக் பெருங்கடல்"(10) என்பது மறுபிறப்பு உண்மையை வெளிப்படுத்தும் "எண்குணத்தான்" என்பது இறைவன் எண்ணற்ற - அளவில்லாத குணங்களை உடையவன் என்பதை உணர்த்தும்.

திருக்குறளில் "உலகு இயற்றிறயான" (1062) என்ற தொடர் உலகத்தைப் படைத்த முதல்வனாம் கடவுள் உண்டு என்பதை வலியுறுத்தும். கடவுளுக்குரிய சொல்லாகிய 'இறை' என்ற சொல் திருக்குறளில் கையாளப் பெற்றிருப்பது கடவுட் கொள்கையை நிலைநாட்டும். அதுபோலப் "பற்றுக பற்றற்றான் பற்றினை" (350) என்ற தொடர் சிவ தத்துவ உணர்வை வெளிக்காட்டும் "மெய்யுணர்வு" (354) என்ற சொல் இறையுணர்ச்சி உடைய பெரியோரை நினைவுபடுத்தும்.

"சார்;புணர்ந்து சார்புகெட ஒழுகின்"(359) என்ற தொடர் சிவ தத்துவக் கொள்கையைத் தெளிவுற உணர்த்தும். ஆகூழ், போகூழ், என்ற தொடர்கள் (371) விதிக் கொள்கையை வலியுறுத்தும். "வகுத்தான் வகுத்த வகை" (377) என்ற தொடர் இறைக் கொள்கையை வலியுறுத்தும். ஊழ் என்னும் அதிகாரம் சிவ தத்துவக் கொள்கையை வலியுறுத்தும் அதிகாரமாகும். இவ்வாறு திருக்குறளில் சமயம் சார்ந்த வாழ்வியல் முறைகள் சுட்டிக் காட்டப் பெற்றுத் தொல் பழந்தமிழ்நாட்டு வழிபாட்டு முறை உணர்த்தப் பெறுகிறது.

**முடிவுரை**

- இவ்வாறு சங்க இலக்கியங்களில் சைவ வழிபாட்டின் தன்மைகள் பலவாறாகக் கண்டறியப்பட்டுள்ளது.
- சங்ககாலப்புலவர்கள்கடவுளைப்பற்றிப்பாடியபாடல்கள்அக்காலத்தில்சைவம்எந்தநிலையில்இருந்ததுஎன்பதைஅறியஉதவுகிறது.
- சங்கம்மருவியகாலத்தில், திருக்குறள்போன்றசட்டநூல்கள்வாழ்வாங்குவாழும்வகைகளைவிளக்கின.
- தனிநாயகஅடிகள்தமிழ்மொழியைஇரக்கத்தின்மொழியாக (பக்திமொழி) கருதினார், இதுசைவத்தின்முக்கியத்துவத்தைக்காட்டுகிறது.

**துணைமை நின்றவை**


- சங்க இலக்கியம்(தொகுதி), நியூ செஞ்சுரி புத்தக நிலையம், அம்பத்தூர் சென்னை.
- திருக்குறள், உமா பதிப்பகம், சென்னை.

# 22. சித்தர்களும் சமூகக் குரல்களும்

**முனைவர் மு.ஜீனதாஸ்,**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.17270702.

**Abstract :**

Siddha songs have a special place in the history of Tamil literature. In Tamil, the word 'Sidhu' means 'play of grace'. This is referred to as 'Aalalavaiulai' in English. There are countless people who have attained this state. Among them, 18 Siddhas are considered to be prominent. They are also said to have attained the state of God by dividing them into Pathi and Ettum.

**KeyWords :** Siddha - Tamil Literature - Play Of Grace

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் பாடல்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. தமிழில் 'சித்து' என்ற சொல்லுக்கு 'அருள் விளையாட்டு' என்று பொருள். இதனை ஆங்கிலத்தில் ஆலளவைஉளைஅ என்று குறிப்பிடுவர். இந்நிலையை அடைந்தவர்கள் எண்ணற்றோர். அவர்களில் 18 சித்தர்கள் முதன்மைத்துவம் பெறுகின்றனர். அவர்களைப் பதி - எட்டும் எனப் பிரித்து இறைநிலையை எட்டியவர்கள் எனக் கூறுவதும் உண்டு.

## சித்தர்களின் அமைப்பு

சித்தத்தை வென்றவர்கள் சித்தர்கள் என்றும் சித்தி அடைந்தவர்கள் சித்தர்கள் என்றும் சித்து என்னும் பேறறிவினைப் பெற்றவர்கள் சித்தர்கள் என்றும் சிவபெருமானைச் சித்தனாகக் கொண்டு சமயச்சார்பற்ற நிலையில் நின்று பாடிய யோகிகள் சித்தர்கள் என்றும் போற்றப்படுகின்றார்கள்

பக்தர் சித்தர் இருவரும் இறையுணர்வோடு வாழ்கின்றனர். இருப்பினும் இருவர்க்கும் இடையே உள்ள நுண்ணிய வேறுபாடு உண்டு. கடவுளைக் காண முயல்கின்றவர்களைப் பக்தர் என்றும் கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தெ.பொ.மீ அவர்கள் குறிப்பிடுகின்றார்.

சித்தர் சாகாநிலையைப் பெற்றவர்கள் என்றும், அழியாத உடம்பைப் பெற்றவர்கள் என்றும், உடலை அழிந்து போகாமல் பாதுகாத்துக் கொள்ளும் வழியை அடைந்தவர்கள் என்றும், தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பில் புகுந்து நடமாடும் சக்தி படைத்தவர்கள் என்றும், இதனைக் கூடுவிட்டுக் கூடுப் பாய்தல் என்றும் பல்வேறு கதைகள் இருக்கின்றன. சித்தர்களுக்கு எத்தகையக் கட்டுப்பாடும் ஈன்றி, எதைப்பற்றியும் கவலைப்படாமல் திரிபவனைச் 'சித்தன் போக்கு சிவன் போக்கு' எனத் திரிகிறான் என்பது உலக வழக்கு. இதன்வழி சித்தர்கள் எத்தகைய இயல்பு கொண்டவர்கள் என்பதை அறியலாம். மேலும்,

**சித்தன்காண் சித்திச் சரத்தான் காண்**
**சித்தனே திரு விழி மிழலையுள் அத்தனே**

என வரும் தேவாரப் பாடல்களில் சிவபெருமானுக்குச் 'சித்தன்' என்னும் பெயர் உண்டு

**சித்தர் சிவத்தைக் கண்பவர் சீருடன்**
**சுத்தா சுத்தத்துடன் தோய்ந்தும் தோயாதவர்**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**முத்தர் அம்முத்திக்குக் முலத்தர் முலத்துச்**
**சித்தர் கதாசிவத் தன்மையர் தாமன்றே**

எனவரும் திருமந்திரப் பாடல் சித்தர்களின் இயல்பைச் சொல்லி விளக்குகிறது.

**சித்தர்கள் இயல்புத் தன்மை**

சித்தர்கள் பல்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் குறிப்பாக மலைகளைத் தம் இருப்பிடமாகக் கொண்டு பாறைகளில் இயற்கையாய் கொண்டு அமைந்த குகைகளில் தங்கிப் புதர்களின் நடுவே இளைப்பாறி வந்துள்ளனர். மரங்களில் குடில்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர்.

**தன்னையறியும் ஞானம்**

சித்தர்கள் மெய்வுணர்வு உடைய ஆன்மாவைத் தன் உள்ளுணர்வாக அறிந்து ஞானத்தில் மட்டும் முக்தியை அடைய முடியும். ஞானம் இல்லாத வழிகள் முக்தியை அடையாது.

'ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை' எனக் கூறுகிறது. சித்தர்கள் தன்னை அறிந்த நிலையில் ஆன்மா நிலையைத் தானே தனக்குக் கொடுத்துத் தலைவனாய்த் திகழ்ந்து நிற்கும் வாக்கு என்றார் திருமூலர்.

**சமூக உணர்வு**

சித்தர் பாடல்கள் எடுத்தோமாயின் முதலில் அனைவரது நினைவுக்கும் வருவது அவர்கள் பாடல்களில் வெளிப்படும் சமூக உணர்வே ஆகும். 'சமூகத்தில் கண் மூடிய பழக்க வழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும் கொண்டு அமையும் செயல்களையும் போலிச் சடங்குகளை நெஞ்சுரத் தோடு நேர்மைத் திறத் தோடும் கடுமையாகச் சாடியவர்கள்' என்று க.கைலாசபதி சித்தர்களைக் 'கிளர்ச்சியாளர்கள்' எனக் கூறுகின்றார்.

**'ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே**
**சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது ஏக்காலம்'**

என்று பத்திரகிரியார் கூறுகிறார்.

**சாதிக் கொடுமை**

இன்றைய சமுதாயத்தைச் சீர்குலைத்து போராடும் கொடுமைகளுள் தலையானது சாதி. ஒற்றுமையாக இருக்கக்கூடிய மக்களைப் பிரித்து வேடிக்கைப் பார்த்து சமுதாயத்தைப் பிரிப்பது சாதி. எனவே இந்த கொடுமையான சமுதாயத்தை ஒழிக்க விரும்புகின்றவர்கள் சித்தர்கள் அவர்கள்,

**சாதியாவது ஏதடா காபம் திரண்ட நீரலோ**
**பூதவாசல் ஒன்றலோ பூதம் ஐந்தும் ஒன்றலோ**
**காதில்வாளி காரைகம்பி பாடசம் பொன் ஒன்றலோ**
**சாதிவேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே**

என்று கூறுகிறார் சிவவாக்கியார். இதை போன்று சாதிகளை எதிர்த்து போராடும் தன்மையை நாம் அந்த சாதிகளை ஒழித்து நாட்டினைக்காப்போம்.

**சாதிப்பிரிவினிலே தீயை முட்டுபோம்**

என்று பாம்பாட்டிச் சித்தர் கூறுகிறார்.

ஒவ்வொரு பிரிவாகக் கொண்ட இந்தச் சாதிக் கொடுமையை ஒரு ஏக்கமாகக் கொண்டு அதை ஒழித்துக் கொள்ள வேண்டும் என முழங்குகிறார்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே**
**சாதிவகை இல்லாமல் சந்திப்பது எக்காலம்**

இதைப் போன்று சமுதாயத்தில் உள்ள சாதி ஏற்றத்தாழ்வை வன்மையான கொடுமைகளைச் சாடுகின்றார் சிவவாக்கியார்.

சாதிகளையும் சமய வாழிபாடுகளையும் பேசுவதற்க்கு பெரிய வீரம் ஒன்றும் தேவையில்லை. ஆனால் சித்தர்களின் காலத்தில் இந்தக் சமூகவுணர்வைத் தூண்டுவதற்காக மனத்தில் அளவு கடந்த வீரம் தேவைப்பட்டது. ஆனால் சித்தர்களின் சாதனை எளிமையானதாக அல்ல பெரும் சமுதாயப்புரட்சிகளின் ஈடுபாடாகும் என்றார் சிவவாக்கியார்

**பறச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா**
**இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ**
**பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ?**
**பறைச்சியும் பணத்தியும் பகுத்துபாடும் உம்முளே**

என்று சமுதாயத்தின் அறிவு நிலையை உணர்ச்சியின் வாயிலாக கொண்டு தூண்டுகிறார்.

சித்தர்களின் நிலையாமைத் தத்துவ நெறிகள்

சித்தர் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு தத்துவ நெறிகளைப் பின்பற்றி மக்களின் சமுதாய விழிப்புணர்வு தத்துவத்தை நிலையாமையாகக் கொண்டு சித்தர்களின் கருத்தினை மனத்தில் ஒரு எளிய சொற்களில் நிலையாமை தத்துவத்தின் காரணத்தை ஒவ்வொரு சித்தர்கள் கருத்தைக் குறிப்பிட்டுயள்ளனர்

**நந்தவனத்திலோர் ஆண்டி அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்**
**கொண்டு வந்தானொரு தோண்டி மெத்துக்**
**கூத்தாடிக் கூத்தாடிக் போட்டுடைத் தாண்டி**

என்று தன் மக்களின் அறியாமையைச் சுட்டி நிலையாமையை மையமாகக் கொண்டு தத்துவங்களின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். இதைப் போன்று சித்தர்கள் கூறும் நிலையாமையின் நோக்கமாக மக்களின் மனதில் உள்ள உடலின் மீதான போகத்தை உடைத்து நிலையாமையைத் தத்துவத்தோடு குறிப்பிடுகிறார்.

**உடம்பார் அழியின் உயிரார் அழிவார்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே**

என்று திருமூலர் உடம்பின் நிலையாமையினையும் உடம்பைப் பேணிக் கொள்ள இன்றியமையாததையும் புலப்படுத்திப் பாடியுள்ளார். ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஒரு திறன் மிக்க சிந்தனை உயிராகக் கொண்டு மனத்தின் இன்றியமையாத நன்மையாகச் சித்தரின் நற்செயல்களாக நிலையாமை அமையும்

**ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றும் பெற்ற**
**பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளும்**
**சிருஞ் சதமல்ல செல்வம் சதமல்ல தேசத்திலே**
**யாருஞ் சதமல்ல நின்தான் சதம்கச்சி ஏகம்பனே**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்றும் பட்டினத்தார் தன் இன்றியமையாத நற்செயல்களை நிலையாமை கருத்தாகக் கொண்டு சித்தர்களின் இளமை நிலையாமைத் தந்திரமாகச் செயல்படும் ஆனால் இந்த உலகில் நிலையில்லாத நற்செயல்களின் மூலம் நிலைநாட்டி சான்றோர் என குறிப்பிடுகின்றச் சித்தர்கள் நிலையாத பொருள் மீது கொண்ட அன்பை நீக்கி நிலையான இறைவனின் அன்பை பெற்று ஒவ்வொரு நிலையாமைத் தத்துவத்தை அடைய வேண்டும் என்பர்;.

**மனச் சிந்தனை**

சித்தர்கள் ஒவ்வொரும் சமுதாய உணர்வு மிக்கவர்கள் பாடலின் தனி மனித மேம்பாட்டிற்கான சமுதாய மேம்பாட்டினை வழிகாட்டியாக அமைத்தனர். மனிதனின் மனச் சிந்தனை கலந்த துன்பங்களையும் மகிழ்ச்சிகளையும் அலைக்கழிக்கும் ஒவ்வொரு ஆசைகள், காமம் போன்ற நற்செயல்கள் இவை ஒவ்வொன்றும் குற்றங்களை மனதில் இருந்து நீக்கி நல்ல வழியில் முன்னேற்றத்தின் வழியாக கொண்டு சித்தர்கள் பாடியுள்ளனர்.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**

என்று வள்ளுவர் அவரது மன வழிகளில் பின்பற்றி அறிவு கலந்த சிந்தனை அறிவினைக் கொண்டு செயல்தபடுத்தினால் மனதில் வாழும் திறமையான முறைகளின் நிலையாமையாக கொண்டு அமையும் சிந்தனை திறனை வெளிபடுத்த வேண்டும் என்றார்.

**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டா**
**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா**
**மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா**
**மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே**

என்று அகத்தியர் மனச்சிந்தனையை நெறிகளாக அறிவுறுத்துகின்றார். ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் வாழ முக்கியமான ஒன்று மனம் தான். அதனை ஒருமைப்படுத்தி நல்ல சிந்தனை கலந்த வழியில் பின்பற்றினால் இவ்வுலகில் மந்திரம் தேவையில்லை. உன் மன ஒற்றுமை தான் தேவை என்பர்.

**ஆசை பென்னுள் செருப்பின் மேல் அடியை வைத்தே**
**ஆங்கார முட்காட்டை அளவே மிதித்தே**
**காசையெனுள் துர்க்குணத்தில் கனலைக் கொளுத்திக்**
**காலா காலங் கடந்தோம் என்று ஆடுபாம்பே**

என்று பத்திரதிரியார் கூறுகின்றார். தன் மனதில் அலைபாய்ந்து கொண்டு இருக்கும் மனதை ஒரு அழகான வழியாக நெறிமுறையில் முன் வைத்து

**மனதை ஒரு வில்லாக்கி வான் நெறியை நாணாக்கி**
**என தறிவை அம்பாக்கி எய்வது இனி எக்காலம்**

என்று கூறி மனதை ஒரு வில்லாகவும் தம் சிந்தனையை ஒரு அம்பாக மாற்றி ஒரு திட்டவட்டமான இன்றியமையாதச் செயல்திறனை அமைத்து அடையாலம் கொள்ள வேண்டும்.

மனத்தை தூய்மையாக செம்மையாக வைத்து சித்தர்கள் மக்களின் மனதில் ஒருமைப்படுத்தி கொள்ள பல வழி வகைகளைக் கொண்டு ஆழ்ந்த கருத்தினையும் சிந்தனையும் கூறியுள்ளனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

**முடிவுரை**

சித்தர்களின் பல வகையான கருத்துக்களைக் கொண்டு மெய்ஞானம் உண்டாக்கி அறிவின் சிந்தனைக் கருத்தாகக் கொண்டு ஒவ்வொரு பாடலின் கருத்தை ஒரு உணர்ச்சியின் வாயிலாகக் கொண்டு பல உணர்வு கலந்த அன்றாட வாழ்வின் சிந்தனைப் பற்றியும் ஞானம் உடையவர்களாகச் சித்தர்கள் உள்ளனர். அதைப் போன்று பல இலக்கிய, இலக்கணத் தந்திரங்களின் முறையாகவும் கொண்டு சித்தர்கள் பெரும் குண்டலினி சக்தியாகப் போற்றப்படுகின்றனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 23. பதினெண்கீழ்க்கணக்கில் மழைசார் பதிவுகள்

**முனைவர் ச.மீனாட்சி,**
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
meenakshis-tam@sfrcollege.edu.in
*DOI 10.5281/zenodo.17270710.*

**Abstract :**

It is a repository of the eightfold virtue that emerged during the dark ages when various kings ruled. The sky was a feast of eight fruits in the life of the ancient Tamils who were in harmony with nature. The various events occurring in the sky such as rain, sun, darkness, light, rainbows, sounds, and vibrations captivated the eyes of the ancient Tamils. In the era when there were no telescopes, the ancient Tamils were interested in observing events that could occur at a distance. With these, the poets recorded celestial thoughts in the literature they created, both figuratively and implicitly. The purpose of this research article is to explain the records of the rain that shine here and there in the literature, like the stars that shine here and there in the sky.

**KeyWords :** Rain - Ethics - Literature - Sky - Vibrations

### முன்னுரை

பல்வேறு மன்னர்கள் ஆட்சி செய்த இருண்ட காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு அறத்தை போதிக்கும் களஞ்சியமாகும். இயற்கையோடு இயைந்த பழந்தமிழனின் வாழ்வில் வான் ஒரு எட்டாக்கனியாகிய விருந்தாகும். மழை, வெயில், இருள், ஒளி, வானவில், முழக்கங்கள், அதிர்வுகள் என்று வானில் நிகழும் பல்வேறான நிகழ்வுகள் பண்டைத் தமிழனின் கண்களைக் கவர்ந்தன. தொலைநோக்கு கருவிகள் இல்லாத காலத்திலே தொலைவில் நிகழக் கூடிய செயல்களை கவனிப்பதில் ஆர்வமானன் பண்டைத்தமிழன். இவற்றால் தான் படைக்கின்ற இலக்கியங்களில் உவமையாகவும், உள்ளுறையாகவும் புலவர்கள் வான்சார் சிந்தனைகளை பதிவிட்டனர். இத்தகைய கண்டுபிடிப்புகள் இலக்கியங்களில் ஆங்காங்கே வானில் ஒளிரும் விண்மீனைப் போல பாடல்களில் ஆங்காங்கே ஒளிர்கின்ற மழை சார் பதிவுகளைப் பற்றி எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### மழைசார் பதிவுகள்

வானைப் பார்த்து பயிரிட்ட பழந்தமிழனின் நுட்பமான வானியல் திறன் அளவிடற்கரியது. கருவிகளின் துணையோடு இன்றைய வானிலை அறிஞர்கள் புயல் மையம் கொண்ட இடத்தினையும், மழை பொழியும் நேரத்தினையும், எவ்வெவ் பகுதிகளில் மழை பொழியும் என்பதனையும் கணக்கிடுகின்றனர். பண்டைத்தமிழன் வான்முழக்கத்தின் அளவினையும், இடியோசையின் அதிர்வினையும் கொண்டு மழைபொழியும் பொழியாது என்ற கருத்துக்களை பதிவு செய்கின்றான். மழை பொழிந்த பின் மழை பொழிந்த அளவினையும் அளவீட்டுள்ளான் என்றே உரைக்கலாம். இன்றைய வானியலாளர்களுக்கு பழந்தமிழனின் வான்சார் சிந்தனையே முன்னோடியாக திகழ்கின்றது. மழை பொழிவிற்கு முன்பு மேகத்தில் நிகழும் அசைவுகள், அதிர்வுகள் ஆகியவற்றினைக் கொண்டு மழைப்பொழிவு நிகழப் போகின்றது என்பதனை அறிந்துள்ள பண்டைத்தமிழன் பதினெண்கீழ்க்கணக்கில் பதிவு செய்துள்ள மழைசார் பதிவுகளை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- மேகம்
- மின்னல்
- இடி
- மழைபொழிதல்
- ஆலங்கட்டி மழை
- மழைநீர்
- வானவில்

என்ற முறைகளில் பகுக்கலாம்.

**மேகம்**

மே என்றால் மேல் அல்லது மேலே என்று பொருள். கம் என்றால் வெண்மை என்று பொருள் அல்லது நீர் என்று பொருள். எனவே மேகம் என்பது வானில் தென்படும் நீர்நிறை மண்டலம் என்று பொருள்படுகின்றது. சூரிய வெப்பத்தினால் நீர்நிலைகள், நிலம், தாவரம் ஆகியவற்றின் பரப்பில் உள்ள நீர் ஆவியாகி வளி மண்டலத்தினுள் செல்வதன் விளைவாகவே மேகமானது தோன்றுகின்றது. பல பனித்துளிகள் ஒன்றாகச் சேரும் போது மேகமாக உருக்கொள்கிறது. செறிவானதும் ஆழமானதுமான மேகங்கள் கண்ணுக்குப் புலப்படும் அலைநீளம் கொண்ட ஒளிக்கற்றைகளைத் தெறிக்கும் தன்மை வாய்ந்தவை. இக்காரணத்தினால் மேகங்களின் மேற்பக்கம் வெண்மையாகத் தோற்றம் அளிக்கிறது. மேகத்தின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கையில் உட்புறத்தில் வெண்மை குன்றி அதன் கீழ்ப்புறம் கருமையாக மாறி மழைப்பொழிவை ஏற்படுத்துகின்றன. மேகங்களின் பல்வேறான பெயர்களை பிங்கல நிகண்டு,

“மேகம், சீதம், விசும்பு, வான், விண், முகில்
கொண்மூ, மஞ்சு, கொண்டல், மை, மழை,
எழிலி, கார், குயின், கந்தரம், விண்டு,
மங்குன், மால், செல், கனமும் வரையார்”[1]

என்ற நூற்பாவில் சுட்டுகின்றது. இன்றைய வானியலாளர்கள் மேகத்தின் பல்வேறான அமைப்பினைக் கொண்டு மேலடுக்கு முகில்களை கீற்று, கீற்றுத்திரள், கீற்றுப்படை என்றும் நடுத்தர முகில்களை உயர்திரள், உயர்படை என்றும் தாழ்வான முகில்களை படை முகில், திரள் படை என்றும் செங்குத்தாக உருவாகும் மேகத்தினை திரள்முகில், கார்திரள், கார்படை என்றும் வகைப்படுத்துகின்றனர். இதேபோல் பண்டைத்தமிழன் மேகத்தினை கார் மேகம், கரு மேகம், நீல மேகம், வெண் மேகம், மேகமூட்டம், காள மேகம் என்றெல்லாம் பகுக்கின்றனர். நீருண்ட மேகம் நீலமேகம் என்றும் நீரைப் பொழியவிருக்கும் மேகம் கார் மேகம் என்று மேகத்தின் இயல்பினை அறிந்து பெயர் சூட்டிய பண்டைத் தமிழனின் அறிவுத்திறன் நுட்பமானது. அழகுற வானில் கூடிய மேகம் கலைந்து மழையாகப் பொழியும் முறையினை,

“.........யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.28:2-4)

என்ற பாடலடிகளால் அறியலாம். இம் என்றும் இமூம் என்ற ஒலியுடன் மேகம் முழங்குகின்ற முறையினை,

“.......கிம்மெனப்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பெய்ய எழிலி முழங்குந் திசையெல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து” (இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.392:2-4)

“.........விழுமென
முங்கின் மழையி னதிரு மதிராப்போர்ச்
சேங்கண்மா லட்ட களத்து” (ந.மு.வே,களவழி,பா.அடிகள்.11:2-5)

என்ற பாடலடிகளால் அறியலாம். மேகத்தின் அசைவினை கார் நாற்பது,

“கடாஅவுக பாகதேர் காரோடக் கண்டே.....”
(ந.மு.வே,கார்,பா.அடிகள்.32:1)

என்ற பாடலடியில் சுட்டுகின்றன. மேகம் கருக்கொண்ட முறையினை,

“விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்
பெருவிறல் வானம் பெருவரை சேருங்
கருவணி காலங் குறித்தார்......” (ந.மு.வே,கார்,பா.அடிகள்.34:1-3)

“கருங்கடல் மேய்ந்த கமஞ்சு லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்.....” (ந.மு.வே,கார்,பா.அடிகள்.37:1-2)

என்ற பாடலடிச் சுட்டுகின்றது. குளிர்ந்த கடல்நீரை மிகுதியாக உண்டு கருக்கொண்டு கார்மேகமாகிய முறையினை அறிய முடிகின்றது. மேகம் கருக்கொண்டு கார் மேகமாக உருமாறும் முறையினை விஞ்ஞானக் களஞ்சியம், “நீராவி மேலே செல்லச் செல்ல குளிர்ந்துகொண்டே போகிறது. குளிர்ச்சியடைந்த நீராவி தான் நமக்கு மேகமாகத் தோன்றுகிறது. குளிர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க சாதாரண மேகம் இருண்ட கார் மேகமாக மாறுகிறது.”[2] என்ற முறையில் குறிப்பிடுகின்றது. இக்கருத்தினையே இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. கடலில் புகும் மேகத்தினை ‘கொண்மூ’ என்று திணைமாலை நூற்றைம்பது சுட்டுவதை,

“கருங்கடன் மாந்திய வெண்டலைக் கொண்மூ
விருங்கடன்மா கொன்றான்வேன் மின்னிப் - பொருங்கட
றன்போன் முழங்கித் தளவங் குரந்தனைய....”
(அ.நடராசப்பிள்ளை,தி.மா.நூ,பா.அடிகள்.93:1-3)

என்ற பாடலடியால் அறியலாம். கருவிகளின் உதவியின்றியே மேகங்களின் தன்மையினைப் பொருட்டு பல்வேறு பெயர்களைச் சூட்டிய பழந்தமிழனின் வாழ்வில் வானம் ஒரு முக்கிய பங்காற்றியுள்ளது என்பது புலனாகின்றது.

**மின்னல்**

திரண்டுள்ள கார் மேகங்களுக்கு இடையே ஏற்படும் மிகப்பெரிய தீப்பொறி போன்ற மின்பொறிக் கீற்றலே மின்னல். நொடிப்பொழுதில் தோன்றி மறைவதே மின்னலாகும். மேகத்தில் மேல் பரப்பில் நேர் மின்னூட்டத்தைக் கொண்ட சிறிய நீர்த்திவலைகளும் அடிமட்டத்தில் எதிர் மின்னூட்டத்தைக் கொண்ட பெரிய நீர்த்துளிகளும் பனிப்படிகங்களாக அமையும் போது இவற்றிற்கிடையேயுள்ள கவர்ச்சி விசை காரணமாக மின் இறக்கம் ஏற்பட்டுத் தோன்றும் மின்பொறித் தொடர்ச்சியே மின்னலாகும். இம்மின்னல் கண்ணைப் பறிக்கும் ஒளி வீச்சோடு, கோடுகளால் வானில் கிளைத்து நொடிப்பொழுதில் தோன்றி மறைகின்றது. மின்னலின் வகைகளை விக்கிப்பீடியா, “புவி, மின்னல், முகில், மின்னல்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

வளி மின்னல்"[3] என்று வகைப்படுத்துகின்றது. மின்னல் நொடிப்பொழுதில் தோன்றி மறையும் என்பதனை,

**"…..எல்லில்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி**
**மருங்கறக் கெட்டு விடும்"**

**(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.8:2-4)**

என்ற பாடலடிகளால் அறியலாம். அறியாமையால் மிளிரும் செல்வமானது நொடிப்பொழுதில் தோன்றும் மின்னலுக்கு உவமையானது. மின்னலின் ஒளித்திறனை கார்நாற்பது,

**"…..பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல**
**எச்சாரு மின்னு மழை"**

**(ந.மு.வே,கார்,பா.அடிகள்.7:3-4)**

**"….வேந்தர்**
**களிறெறி வாளரவம் போலக்கண் வெளவி**
**ஒளிறுபு மின்னு மழை"**

**(ந.மு.வே,கார்,பா.அடிகள்.13:2-4)**

என்ற பாடலடிகளில் விளக்குகின்றது. வேள்வித் தீப்போன்று மின்னல் ஒளி வீசுகின்ற முறையினை அறிய முடிகின்றது. சில நேரங்களில் மின்னலின் ஒளி பூமியில் வாழும் மனிதனையும் தாக்குகின்றன. மின்னலாகக் கோடுகள் பல தோன்றினாலும் நன்மையும் உண்டாகின்றது என்பதனை அன்னிதாமசு தன் நூலில், "மின்னலால் உண்டாகும் வெப்பத்தால் காற்றிலிருந்து நைட்ரஜன் வாயு பிரிக்கப்படுகிறது. இது மழை நீரில் கரைந்து மண்ணில் விழுவதால் மண் வளம் பெருகி நீடிக்கிறது. மழைக்குப் பின் பசும்புல் செழுமையாகத் தளிர்ப்பதற்கு இது காரணமாகும்."[4] என்றவாறு குறிப்பிடுகின்றார். மழை பொழிவிற்கான அறிகுறியாக மின்னல் சுட்டப்படும் முறையினை திணைமாலை நூற்றைம்பது,

**"படுந்தடங்கட் பல்பணைபோல் வான்முழங்க மேலுங்**
**கொடுந்தடங்கட் கூற்றுமின் னாக…"**

(அ.நடராசப்பிள்ளை,திணை.மா.நூற்,பா.அடிகள்.115:1-2)

என்ற பாடலடிகளில் விளக்குகின்றது. வானில் மேகங்கள் இடி இடித்து மின்னல் மின்னுவதைக் கண்ட தலைவி வருந்துகின்றாள். மழை பொழிய போவதை அறிந்த தலைவி பருவம் வந்தும் தலைவன் வரவில்லை என்று வருந்துகின்ற பாங்கினை அறிய முடிகின்றது. மின்னலின் ஒளி மட்டுமின்றி அதனது உருவத்தினையும் திணைமொழி ஐம்பது,

**"ஓங்க லிறுவரைமேற் காந்தள் கடிகவினப்**
**பாம்பென வோடி யுரமிடிப்பக் கண்டிரங்கும்….."**

**(அ.நடராசப்பிள்ளை,திணை.மொ.ஐம்பது,பா.அடிகள்.3:1-2)**

என்ற பாடலடிகளில் சுட்டுகின்றது. பாம்பு போன்று மின்னல் உருவாகின்ற முறையினை அறிய முடிகின்றது. பெரும்பான்மை மின்னலும் இடியும் ஒன்றன் பின் ஒன்றாக உருவாகும். இதனையே இலக்கியங்கள்,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"மின்னு முழக்கு மிடியுமற் றின்ன**
**கொலைப்படை சாலப் பரப்பிய முல்லை**
**முகைவென்ற பல்லினாய்!......."**

**(அ.நடராசப்பிள்ளை,ஐந்.ஐம்,பா.அடிகள்.3:1-3)**

**"...பெருகா**
**வொருங்குவான் மின்னோ டுருமுடைத்தாய்ப் பெய்வா**
**னெருங்குவான் போல நெகிழ்ந்து"**

**(அ.நடராசப்பிள்ளை,ஐந்.ஐம்,பா.அடிகள்.41:2-4)**

என்ற பாடலடிகளில் விளக்குகின்றது. வானில் நொடிப்பொழுது மின்னும் மின்னலினையும் பழந்தமிழன் உற்றுநோக்கியுள்ளான் என்பதனை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

**இடி**

மின்னலின் விளைவே இடி. மின்னல் காற்றின் ஊடே மிக குறுகிய பாதையில் செல்லும் போது காற்றின் வெப்பநிலை மிக உயர்வதால் காற்று திடீரென விரிவடைந்து முன்னும் பின்னும் அதிர்வதன் காரணமாக எழுகின்ற ஒலியே இடியாகும். மின்னலும் இடியும் ஒரே நேரத்தில் தோன்றினாலும் மின்னலே முதலில் நம் கண்களுக்குத் தெரியும். சிறிது நேரம் கழித்தே இடியோசையினை நம்மால் கேட்க முடியும். இந்திரனின் வச்சிராயுதம் இடியாக அமைகிறது என்ற புராண நம்பிக்கையும் நம் பண்டைத் தமிழனிடம் உள்ளது. இருப்பினும் பழந்தமிழன் இடியின் ஒலியினை அளவிட மறக்கவில்லை. இடியின் ஒலியினை அளவிடும் முறையினை,

**"கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்**
**இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்...."**

**(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.100:1-2)**

**"....பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்**
**கூட்டாரை யட்ட களத்து"** **(ந.மு.வே,களவழி,பா.அடிகள்.22:5-6)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றது. முரசின் ஒலியினைப் போன்றும் ஒரு யோசனை தூரம் அளவிற்கு இடியின் ஓசை கேட்கிறது என்று பதிவாகியுள்ளது. ஒரு யோசனை தூரத்தின் அளவினை சிந்தாமணி, "யோசனையென்பது நாற்காத எல்லை" (சிந்.8:13) என்ற முறையில் சுட்டுகின்றது. ஒரு காத தூரம் என்பது 71꞉2 நாழிகை ஆகும். நான்கு காத தூரம் என்பது ஏறக்குறைய 30 நாழிகையினைச் சுட்டுகிறது என்பதனை அறியலாம். இடியின் அளவீட்டை அறிவதோடு அதனது அதிர்வெண்ணையும் இலக்கியங்கள்,

**"விரிநிற நாகம் விடருள தேனும்**
**உருமின் கடுஞ்சினஞ் சேணின்றும் உட்கும்"**

**(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்.164:1-2)**

**"அதிர்குர லேறோ டலைகடன் மாந்தி**
**முதிர்மணி நாக மனுங்க முழங்கிக்**
**கதிர்மறை மாலை கனைபெய றாழப்"**

**(அ.நடராசப்பிள்ளை,திணை.மொ.ஐம்பது,பா.அடிகள்.28:1-3)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

என்ற முறைகளில் சுட்டுகின்றது. இடியின் ஓசைக்கு பூமியின் வெடிப்புக்குள் இருக்கும் பாம்புகள் அச்சப்படும் முறையினை அறிய முடிகின்றது. பாம்பின் அச்ச உணர்வே இடி இடிக்கும் அதிர்வெண்ணைச் சுட்டுகின்றது. தற்காலத்தில் "அமெரிக்க நிறுவனமான எர்த்டாட்நெட் என்னும் தொழில்நுட்பத்தைக் கொண்டு துல்லியமாக எந்த இடத்தை இடிதாக்கப் போகிறது என்பதனை 45 நிமிடம் முன்னதாகவே கணிக்க முடியும்."[5] என்பதனை ஆசாம் மாநில உள்துறை செயலாளரும் மேலாண்மை ஆணையத்தின் முதன்மை செயல் அதிகாரியுமான மு.ச.மணிவண்ணன் சுட்டுகின்றார். இடியோசனையினை அளவிடும் பழந்தமிழனின் இலக்கியப் பாடல்களே இன்றைய வானியலாளர்களுக்கு முன்னோடி என்பதனை அறிய முடிகின்றது.

**மழை பொழிதல்**

உலகில் இன்றியமையா இடத்தினைப் பெறுவது நீர். இந்நீரினை நாம் மழையினாலே பெறுகின்றோம். கோள்களின் செயற்பாட்டாலோ அல்லது இயற்கைச் சூழல் காரணமாகவோ சில நேரங்களில் பருவ மாற்றங்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புண்டு. எனவே மழையினால் சில நேரங்களில் வளமும் அதீத மழையினால் தீங்கும் நேரிடுகின்றது. இயற்கை நிகழ்வான மழையினை பெய்விப்பாரும் தடுத்து நிறுத்துவோரும் இவ்வுலகில் இல்லை என்பதனை,

**"…..மாரி**
**வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்**
**சிறப்பின் தணிப்பாரும் இல்"**

**(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்**.104:2-4)

என்ற பாடலடியால் அறியலாம். சில நேரங்களில் மழையானது பொழியாது துன்புறுத்தவும் சில நேரங்களில் பொழிந்து மக்களை நல்வழிப்படுத்தவும் செய்யும் என்பதனை,

**"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே**
**எடுப்பதூஉம் எல்லாம் மழை"**

**(பரிமேலழகர்,திருக்குறள்**.15)

என்ற குறளால் அறியலாம். மழை பொழிவானது உயர்ந்தோர் நட்பு போல் சிறப்பானது என்பதனை நாலடி,

**"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்**
**மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி**
**வறந்தக்காற் போலுமே வாலருவி நாட……!"**

**(இளவழகனார்,நாலடி,பா.அடிகள்**.232:1-3)

என்ற பாடலடிகளில் விரித்துரைக்கின்றது. மழைப்பொழிவினால் நிலத்தடி நீர் பெருகும் முறையினை வள்ளுவர்,

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு"**

**(பரிமேலழகர்,திருக்குறள்**.737)

என்ற குறளில் வெளிப்படுத்துகின்றார். மழை நீரே உலக வாழ்வின் உயிர் நீராகும். மழைப்பொழிவால் நாடு செழிப்படையும் முறையினையும் இயற்கையின் தன்மையினையும் புலவர்கள் பாடல்களில் அழகுற பதிவு செய்துள்ளனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**ஆலங்கட்டி மழை**

திட நிலையில் வானிலிருந்து பொழியும் மழைப்பொழிவே ஆலங்கட்டி மழையாகும். இத்திட நிலையானது பனிக்கட்டிகள் பந்துகளாகவோ அல்லது ஒழுங்கற்ற உருண்டைகளாகவோ இருக்கும். இடி மேகங்களிலே ஆலங்கட்டி மழையானது உருவாகின்றது. அளவில் பெரிதான ஆலங்கட்டிகள் மிக விரைவாகவே கீழே விழுகின்றன. முல்லை நிலப்பகுதிகளில் ஆலங்கட்டி மழை பொழியும் முறையினை கார்நாற்பது,

**"…..வளிபோழ்ந்**
**தயிர்மணற் றண்புறவி னாலி - புரள**
**உருமிடி வான மிழிய…"**

(ந.மு.வே,கார்,பா.அடிகள்.3:1-3)

**"கண்டிரண் முத்தங் கடுப்பப் புறவெல்லாங்**
**தண்டுளி யாலி புரளப் புயல்கான்று**
**கொண்டெழில் வானமுங் கொண்டன்….."**

(ந.மு.வே,கார்,பா.அடிகள்.23:1-3)

என்ற பாடலடிகளில் விளக்குகின்றது. முல்லை நிலத்தில் ஆலங்கட்டிகளும் முத்துப்போன்ற நீர்த்துளிகளும் விரவும் வகையில் மழை பொழிந்த முறையினை அறிய முடிகின்றது. எனவே ஆலங்கட்டி மழையானது பனிக்கட்டியோடு நீர்த்திவலைகளும் கலந்து விழுகின்ற மழையாகும் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. தற்காலத்தில் வானிலை செயற்கைக் கோள்களின் மூலமும் வானிலை ரேடார் ஒளிப்படங்களிலிருந்தும் ஆலங்கட்டி மழை பெய்ய வாய்ப்புள்ள மேகங்களை கண்டறியலாம். மனிதர்களுக்கும் சொத்துக்களுக்கும் குறிப்பாக பயிர் வகைகளுக்கும் சேதம் விளைவிக்கின்ற அளவிலான ஆலங்கட்டி மழைக்கான முன்னறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. இதனால் ஆலங்கட்டி மழையால் ஏற்படுகின்ற பாதிப்பானது குறைகின்றது.

**வானவில்**

சூரியனுக்கு எதிர்திசையில் காலை மற்றும் மாலை வேளையில் வானவில் தோன்றுகின்றது. ஆங்கிலத்தில் இதனை VIBGYOR என்று குறிப்பிடுவர். அன்னிதாமசு வானவில்லிற்கான விளக்கத்தினை, "கதிரவனின் ஒளி ஆகாய மண்டலத்திலுள்ள நீர்த்துளி வழியாகக் கடக்கும் போது நிற மாலை உருவாகி எதிர்பக்கத்திலுள்ள முகிலில் பட்டுத் தெரிவதே வானவில்"[6] என்ற முறையில் குறிப்பிடுகின்றார். சில வேளைகளில் வானவில் ஒன்றன் மேல் ஒன்றாய் இரண்டும் மூன்றும் காணப்படுவதுண்டு. வானவில் இலக்கியங்களில் 'வில்' என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. மேகங்கள் கடல் நீரைப் பருகி வானில் இடி இடித்து மழைபொழிவதோடு வானவில் தோன்றுகின்ற முறையினை,

**"ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை**
**யிந்துருவின் மாந்தி யிருங்கொண்மூ - முந்துரவி**
**னென்றால் உருமுடைத்தாய்ப் பெய்வான்போற்…."**

**(அ.நடராசப்பிள்ளை,திணை.மா.நூற்றைம்பது,பா.அடிகள்.104:1-3)**

என்ற பாடலடி விளக்குகின்றது. இதே போல் கார்காலத்தில் மாலைப்பொழுதில் வானவில் தோன்றி பருவத்தைச் சுட்டும் முறையினை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"......வின்று**
**வழங்கிய வந்தன்று மாலையாங் காண**
**முழங்கிவிற் கோலிற்று வான்"**

**(அ.நடராசப்பிள்ளை,ஐந்.எழு,பா.அடிகள்.22:2-4)**

என்ற பாடலடி விளக்குகின்றது. மழைகாலத்திற்கும் வானவில்லுக்கும் தொடர்புண்டு என்பதனை அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

- இயற்கையின் சீற்றத்தைக் கண்டு மனிதன் அச்சப்பட்டதின் விளைவாகவே ஐம்பூதங்களையும் இறைவனாக வழிபடத் தொடங்கினான்.
- ஐம்பூதங்களின் கலப்பே உலகம் என்பதனை இலக்கியப்பாடல்கள் பறைசாற்றுகின்றது.
- தொலைநோக்கு கருவிகள் இல்லாத போதும் வானில் நிகழும் மழை, வெயில், இருள், ஒளி, வானவில், முழக்கங்கள், அதிர்வுகள் ஆகியவற்றின் இயக்கங்களைத் துல்லியமாகக் கணித்திருக்கும் பண்டையத் தமிழர்களின் நுண்மாண்நுழைப்புலத் திறனானது வெளிக்கொணரப்படுகின்றது.
- வானம் பார்த்து விதைத்த பழந்தமிழனின் வான்பொருட்கள் பற்றிய திறமே இன்றைய வானியல் ஆராய்ச்சிக்கு முன்னோடி என்பதனை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. பிங்கல முனிவர்,பிங்கல நிகண்டு,ப.23
2. ர.சண்முகம்,விஞ்ஞானக்களஞ்சியம்,ப.99
3. ta.m.wikipedia.org\kpd;dy;23.2.2023
4. அன்னிதாமசு, தமிழியல், ப.56
5. BBC News June.5,2020
6. அன்னிதாசு, தமிழியல்,ப.58


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 24. சங்ககால ஔவையின் படைப்பாக்க ஆளுமை

**முனைவர் சி.க.கோவிந்தராஜ்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை
பி.எஸ்.வி பொறியியல் மற்றும்
தொழில்நுட்பக் கல்லூரி, கிருஷ்ணகிரி.
govindck96@gmail.com
DOI 10.5281/zenodo.17270718.

**Abstract :**

Creative personality is common to both men and women. However, women are not involved in the creative field to the extent that men are involved in the creative field. When comparing the number of male creators to the number of female creators in Sangam literature, only 10 percent of women are involved in the creative field. The patriarchal society has also been a reason for the low creative contribution of women. In the research world, two types of perspectives are followed in identifying the personality of creators. The first type is identifying the personality of the creator through his work, and the second type is identifying the personality of the creator through his works. The first type requires an understanding of the creator, and the second type requires an understanding of his works. In this article, only the second type is followed. In this article, only the poems of the poet are taken for study.

**KeyWords :** Sangam Period - Avvai - Personality

படைப்பாக்க ஆளுமை என்பது ஆண், பெண் இருவருக்கும் பொதுவாக இருக்கின்றது. எனினும் ஆண்கள் படைப்பாக்கத் துறையில் ஈடுப்பட்ட அளவிற்;கு பெண்கள் ஈடுப்படவில்லை. சங்க இலக்கிய ஆண் படைப்பாளர்களின் எண்ணிக்கையோடு பெண் படைப்பாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது 10 விழுக்காடு மட்டுமே பெண்கள் படைப்பாக்க துறையில் ஈடுப்பட்டுள்ளனர். பெண்களின் குறைவான படைப்பாக்க பங்களிப்பிற்கு ஆணாதிக்க சமூகமும் ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. ஆய்வுலகில் படைப்பாளர்களின் ஆளுமையை

இனங்கானுதலில் இருவகையான நோக்கு நிலைகள் பின்பற்றப்படுகின்றன. படைப்பாளனின் ஆளுமையை அவரது படைப்பின் வழியாக இனங்கானுதல் முதல்வகை, அவரது படைப்புகளைக் கொண்டு படைப்பாளனின் ஆளுமையை,

இனங்கானுதல் இரண்டாவது வகை. முதல்வகைக்குப் படைப்பாளன் பற்றிய புரிதல் வேண்டும், இரண்டாவது வகைக்கு அவனது படைப்புகள் பற்றியான புரிதல் வேண்டும். இக்கட்டுரையில் இரண்டாவது வகையே பின்பற்றப்படுகின்றது.இக்கட்டுரையில் ஔவையின் அகப்பாடல்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

**படைப்பாக்க ஆளுமை:**

ஒரு படைப்பாளன் தன்னை முழுமையாக விலக்கிக்கொண்டு ஓர் இலக்கியத்தைப் படைக்க முடியாது. இப்படைப்பாக்கத்தில் தன்னை அறியாமலே கூட இடம் பெற்று விடுதல் உண்டு. இப்படைப்பாக்க தாக்கம் எல்லா வகையான இலக்கியங்களுக்கும் பொருத்தமானதாக இருக்கின்றது. சங்; கால ஔவை அகம், புறம் என்ற இரு திணைகளிலும் பாடல்கள் பாடியுள்ளார். 26 அகப்பாடல்களும், 33புறப்பாடல்களும் சங்க இலக்கிய தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் தம்முடைய உள்ளுணர்வுகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் தம் பாடல்களில் பதிவு செய்துள்ளார். இந்த நேரடி


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மறைமுகத் தண்ணுணர்வு வெளிப்பாடுதான் அவர்களது ஆளுமையை அடையாளம் காண்பதற்கு அடிப்படையாக அமைகின்றது.

ஔவையின் பாடல்களில் சோக உணர்வு, ஆற்றாமை பற்றியான பதிவு, பெண்மை சார் பதிவு போன்றவை காணப்படுகின்றன. இப்பதிவுகள் எல்லாம் அவரின் தண்ணுனர்வுகள் போன்றே வெளிப்பட்டுள்ளன. படைப்பாளன் தங்களது உணர்வுகளை தாங்கள் படைக்கும் பாத்திரங்களின் மீது ஏற்றிக் கூறுவது மரபாக இருக்கின்றது. அவ்வாறே ஔவையும் தலைவன், தலைவி தம் பாத்தரமாகக்கொண்டு தம் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். பெண்பாற் புலவர்களில் அதிகமாக பாடல்களை பாடியவர் ஔவை. அதுமட்டுமின்றி ஆண் புலவர்களுக்கு இணையாக பேசப்படுபவர். தன்னுடைய காம நோயை ஆற்றிக்கொள்ள முடியாத தலைவியின் செயல்பாட்டை,

**“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல் எனக் கூவுவேன் கோல்?**
**அலமரல் அசைவளி அலைப்ப, என்**
**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே”** (குறு:28)

இரவு வேளையில் தனித்திருக்கும் பெண், தன்னுடைய காமத்தின் உணர்வுகளை தாங்கிட இயலாமல் முட்டுவேனோ, தாக்குவேனோ, குரலேடுத்துக் கூவுவேனோ தென்றல் காற்று காதல் நோயின் கொடுமையை அறியாமல் என்னை அலைக்கழிக்கின்றது, அதனை அறியாமல் ஊரும் உறங்குகின்றது இந்த ஊரார்க்கு என் நிலைமையை எப்படி கூறுவேன் என்கிறார். இவையெல்லாம் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட அச்சம், மடம், நாணம் தாண்டிய உணர்வு வெளிப்பாடாக அப்பாடல் அமைந்துள்ளது. அது மட்டுமில்லாமல் காதல் பற்றியான தம் பாடல்களில் பெண்கள் தங்களுடைய காதலையும், காமத்தையும் வெளிப்படையாகக் கூறக்கூடாது என்பது சங்க மரபாக இருந்திருக்கின்றது. இதை ஆண்கள் பின்பற்றியுள்ள நிலையில் ஔவை இம்மரபை துணிச்சலுடன் மீறியுள்ளார்.

இது ஆண் மரபு வழிப்பட்ட காதல் போக்கினை சிதைத்துள்ளது. காதலையும், காமத்தையும் வெளிப்படையாக கூறியதுடன், அவ்வுணர்களினால் வேதனையடையும் பெண் உறுப்புக்களின் அவலத்தினையும் கவித்துவத்துடன் பதிவாக்கியுள்ளார்.

**“தலைவரம்பு அறியாத் தகையால் வாடையோடு**
**முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை**
**அசைவுடைத் நெஞ்சத்து உயவுத்திரன் நீடி**
**ஊரோர் எடுத்த அம்பல் அம்பினை**
**ஆராக் காதல் அவிர் தளிர் பிலப்பிப்**
**புலவர் புகழ்ந்த நாண்இல் பெருமரம்**
**நில வரை எல்லாம் நிழற்சி**
**அலர் அரும்பு ஊழ்ப்பவும் வாரா தோரே”** (அகம்:273)

இப்பாடலில் ஔவை தன் அக உணர்வை அதாவது காதலின் படிநிலையை ஒரு மரத்தின் வளர்ச்சியோடு ஒப்பிட்டுள்ளார். தலைவன் தலைவியை பிரிந்து சென்;றதனால் என் நெஞ்சம் என்னும் நிலத்தில் நோய் என்ற செடி முளைத்தது, பின்னர் அது துன்பம் என்ற செடியாக வளர்ந்தது, அச்செடி அம்பல் என்ற கிளை விட்டது, அக்கிளை காதல் என்ற தளிர் விட்டது. இவ்வாறு வளர்ந்து அது இப்போது நாணம் என்ற பண்பு நீங்கி காதல் மரமாக


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நிற்பதோடு அம்மரம் அலர் என்ற மலரையும் சொரிகின்றது என்று பாடல் அமைந்துள்ளது. இதில் அவரின் அக உணர்வு மட்டுமின்றி புலமைத் திறமும் வெளிப்பட்டு நிற்பதைக் காண முடிகின்றது.

**"மேய் புகுவு அன்ன கைகவர் முயக்கம்" (அகம்:11-11)**

உடலில் உடல் புகுந்து ஈருடல், ஓருடல் எனக் காட்சி அளிக்கும் உயிரும் ஒன்றே உடலும் ஒன்றே என உணர்ச்சியின் பேரெல்லையைச் சுட்டிக் காட்டுகிறார்.

**"வான்தோய் வற்றே, காமம்**
**சான்றோர் அல்லர், யாம்மரீ இயோரே" (குறு:102)**

எனது காமநோயோ மிகவும் வருத்தமடைய செய்கின்றது. இவ்வாறு நான் வருந்தக் காரணமான தலைவன் உண்மையில் நோக்க அவன் சான்றோனல்லன், அவன் சான்றோனாக இருந்தால் என்னை இப்படி வருத்தம் கொள்ளச் செய்து, அன்பில்லாதவனாக பிரிந்து செல்வாரா? எனத் தலைவி உரைப்பதாக உள்ளது. ஔவையும் ஒரு பெண் என்பதால் பெண்ணின் மனநிலை தாமும் அறிந்தவளாகவே தம் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**"நீர்கால் யாத்த நிரைஇதழ்க் குவளை**
**கோடை ஒற்றினும் வாடா தாகும்**
**கானமும் இனியஆம், நும்மொடு வரினே" (குறு:388)**

அழகிய வரிசையா அமைந்த, இதழ்களை அமைந்த குவளை மலரானது நீரைத் தன்னடியில் தேக்கி வைத்துக்கொள்ளும் அதனால் அது வாடாது. அதுபோல நான் உம்முடன் வருவேனானால் அப்பாலை நிலம் தலைவிக்கு மிகவும் இனிமையாக இருக்கும். "தலைவனை விட்டு நான் பிரிந்து இருப்பது கோடை வெயிலையும்,சுடும் மணலையும்விட கொடுமையாக உள்ளது" என்கிறாள்.

**"வெந்திறல் கருவளி பொங்கர்ப் போந்தென**
**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை, அருஞ்சுரம் என்பநம்**
**முலையிடை முனிநர் சென்ற ஆறே" ((குறு:39)**

இப்பாடலில் ஔவையார் ஆண்களின் காமத்தை தூண்டும் பகுதியாக „நம் முலைகளிடையே துயிலுதலை வெறுத்தவர்" என்று பெண் உறுப்பை வெளிப்படையாக கூறுகின்றார்.

**"பேய் கண்ட கனவின் பல்மான்**
**நுண்ணிதின் இயைந்;த காமம்" (அகம்:303)**

அகத்தே ஒளிந்திருக்கும் காமத்தினை வெளிப்படுத்தும் பதிவுகளாக இவ்வரிகள் உள்ளன.

இலக்கிய படைப்பாளர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அதன் கூறுகளை வைத்துக்கொண்டு ஆணின் படைப்பா பெண்ணின் படைப்பா என்பதை அறிந்துக்கொள்ளலாம். இலக்கிய படைப்பாளன் ஆணாக இருந்தால் ஆண் சார்ந்த கூறுகளும், பெண்ணாக இருந்தால் பெண்சார்ந்த கூறுகளும் அவர்களது படைப்பில் இடம்பெற்றுவிடுவது அவர்களின் இயல்பாக இருக்கின்றது. பொது இலக்கிய வரையறையை ஏற்றுக் கொண்டு இலக்கியம் படைத்தாலும், இவ்வாறான சார்ப்புத் தன்மைத் தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. இவ்வாறான பதிவுகள் ஆணா? பெண்ணா? என்பதை

அடையாளம் காண்பதற்குஉதவுகின்றன. இது ஔவையின் பதிவுகளில் காணக்கிடக்கின்றது. ஆணாதிக்க சூழலில் இருந்த ஔவை தம்முடைய காதலையும், காமத்தையும் வெளிப்படையாக பதிவுசெய்துள்ளார். இது பெண்ணினத்திற்கான ஆதரவு குரலாக இருக்கின்றது.

இலக்கியத்திற்கு இலக்கணம் வரையறுத்த தொல்காப்பியர் காதலின் தொடக்க நிலையான கைக்கிளையை ஆணுக்குரியதாக மட்டுமே படைத்துள்ளார். பெண்பாற் கைக்கிளையை அவர் சொல்லவில்லை, பெண் தன் காதலை, காதல் உணர்வுகளை வெளிப்படையாக கூறக்கூடாது என்ற ஆணாதிக்க அடக்குமுறையின் காரணமாகவே பெண்பாற் கைக்கிளையை தொல்காப்பியர் வரையறுக்கவில்லை எனலாம். ஆனால் ஔவையார் கைக்கிளையை பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.அடக்கி ஒடுக்கப்பட்ட பெண் சமூகம் அவ்வடக்கு முறைக்கு எதிராக ஔவையார் குரல்கொடுத்துள்ளார் என்பதை இப்பாடல் பதிவுகள் காட்டுகின்றன.

இன்று நவினப் பெண் கவிஞர்கள் பயன்படுத்தும் முலை, அல்குல் போன்ற சொற்களை ஔவையார் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஔவையார் பல பாடல்களில் ஆணின் பிரிவை முன்னிலைப்படுத்தியுள்ளார். பெண்ணின் ஆற்றாமை மனநிலையும், சோக உணர்வும் அப்பாடல்களில் பதிவாகியுள்ளன. பெண் என்பவள் மென்மையானவள், நாணம் மிகுந்தவள் என்ற மரபினைச் சிதைத்து மனத்தடைகளற்ற வெளிப்பாட்டின் மூலம் பெண்களின் காதலையும், காமத்தையும் அழகான கவிதை வரிகளாக பதிவாக்கியுள்ளார்.

ஔவை தம் பாடலில் ஆணின் காமம் ஓரிடத்தில் மட்டுமே குவிந்திருக்கிறது.ஆனால் பெண்ணின் காமமானது அவள் உடல் முழுக்கப் பரவிக்கிடக்கின்றது என்ற செய்தியை

**"மலையுடை அருஞ் சுர மென்பநம்**
**முலையிடை முணிநர் சென்ற வாழே"** (குறு: 39)

முலையானது காம உணர்வின் தோற்றுவாயாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பெண் தன் முலைகளிடையே துயிலுதலை வெறுத்தவர் சென்ற வழியானது வெம்மையும், வலிமையும் மிக்க காற்று வீசும் பாலைச் சுரவழி என்று குறிப்பிடுவதிலிருந்து இன்ப வெம்மை அளிக்கும் முலையானது பிரிந்து போனவரைச் சார்தே இன்பம் பெற வேண்டிய நிலையினை ஆற்றாமையோடு பதிவுசெய்துள்ளார்

**நிறைவாக**

"ஔவையின் அகப்பாடல்களை நோக்கும்பொழுது, துணியோடு கூடிய மரபு மீறல்" என்று படைப்பாக்க ஆளுமை அவரிடம் வெளிப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. காதல் உணர்வுகளை வெளிப்படையாகப் பேசுதல், ஆற்றாமை பற்றியான பதிவு போன்றவை மேற்கண்ட கருத்தை உறுதிசெய்கின்றது. இத்துணிவு கல்வி சார்ந்ததாக இருந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 25. பழந்தமிழிலக்கியங்களில் வேளாண்மை

**முனைவர் ப.மீனாட்சி**,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
*DOI 10.5281/zenodo.17270729.*

**Abstract :**

Ancient Tamil literatures describe the lifestyle of ancient Tamils in a variety of ways. Literatures continuously make every event of society a reality like a shadow. These literatures have acquired various dimensions according to the needs of the times. Moral literatures indicate that those who have learned the ways of life should strive to live in the way of morality. This study aims to reveal the nature of not only emphasizing morality but also containing scientific facts through eighteen books. Furthermore, the aim of this study is to reveal the way in which ancient Tamil writers had versatile knowledge.

**Key Words :** Ancient Tamil literature - Lifestyle - Scientific Methods

பழந்தமிழ் இலக்கியங்கள் பண்டைக்காலத் தமிழர்களது வாழ்வியலை வகைமையுடன் எடுத்துரைக்கின்றன. சமூகத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் நிழல்போல் தொடர்ந்து நிஜமாக்கித் தருபவை இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு பரிமாணங்களைப் பெற்றிருக்கின்றன. வாழ்வியல் முறைமைகளைக் கற்றுக்கொண்டவர்கள் அறத்தின் வழி வாழ முற்பட வேண்டுமென்பதை அற இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. அறத்தை மட்டும் வலியுறுத்தவில்லை அறிவியல் சார் உண்மைகளையும் கொண்டிக்கும் தன்மையினை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் வழி வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகிறது.மேலும் பழந்தமிழ் படைப்பாளர்கள் பல்துறை அறிவு பெற்றிருக்கும் பாங்கினையும் வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

### இலக்கணிகள் சுட்டும் வேளாண்மையியல்

எழுத்துக்களின் புணர்ச்சிக்கு இலக்கணம் வகுத்ததோடு அறிவியல் வளர்ச்சிக்கும் அடித்தளமிடுவதனை,

**"வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும் "[1]**
**"வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தும் "[2]**

என்னும் நூற்பாவின் வழி அறியலாம். மேலும் ,

**"ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியும்"[3]**

பருவநிலை மாற்றத்தால் உழவர்கள் உழவுத்தொழில் செய்த இடத்தில் மறவர்கள் போர்த்தொழிலும் புரிகின்றனர் என்பதை இந்நூற்பா எடுத்துரைக்கின்றது.

### வேளாளர்கள்

நிலத்தினை உழுது பண்படுத்துகின்றவர்களை வேளாளர்கள் என்று சங்கத்தமிழர்கள் அழைத்தனர். வேள் +ஆள் என்ற போது மண்ணை ஆளுதல் என்ற பொருளில் வழங்கினர். தொல்காப்பியர் இவர்களை வேளாண்மாந்தர்கள் எனச் சுட்டுவதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"வேளாண் மாந்தர்க்குழு தூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"4**

என்னும் நூற்பாவின் வாயிலாக அறிலாம்.வேளாளர் என்ற சொல்லிற்கு சேந்தன் திவாகரம் **"பின்னவர் சதுர்த்தர் காராளர் விளைஞர் சூத்திரர் வளமையோர் வேளாளர் மண்மகள் புதல்வர் தொழிலோர் வண்களமர் உழவர் வாழ்நர்"**5 எனப் பல்வேறு பொருள்களைக் குறிப்பிடுகின்றது.

**பழந்தமிழரின் அறிவியல் அறிவும் வேளாண்மையும்**

குறிஞ்சி நிலம் தொடங்கி மனிதன் தனக்கான உணவுத் தேடலில் அந்தந்த நிலத்தின் தன்மைக்கேற்ப பயிர்செய்து உணவுத் தேவையைப் பூர்த்திசெய்தான். நிரந்தரக் குடியுரிமை என்பது உழவுத் தொழிலின் வழி அடைய முற்படும் பொழுது நாகரிகம் அடையத் தொடங்கினான். அந்நாகரிக வளர்ச்சி என்பது மரபு சார் வேளாண் நுட்பங்களை அவனுக்கு கற்றுத் தந்தது. அதன் வழி மரபவழிப்பட்ட வேளாண்மையியலின் நடைமுறைகளை முனைவர் க.துரையரசன் **"உழுதல் சமன்செய்தல் விதைத்தல் நடுதல் நீர்ப்பாசனம் எருவிடுதல் களையெடுத்தல் பயிர்பாதுகாப்பு அறுவடை தூய்மைசெய்தல்"**[6] என்ற முறைகளில் பட்டியலிடுகிறார்.

**உழுதல்**

மரபுசார் வேளாண் நுட்பங்களில் முதன்மையும் முக்கியத்துவமும் பெறுவது உழுதல் முறையாகும். மண்ணின் தன்மையை பக்குவப்படுத்தி விளைச்சல் நிலமாக்குவதே உழுதலாகும். இவ்வுழுதல் நிகழ்விற்கு உழுகருவிகளையும் காளைமாடுகளையும் பயன்படுத்தியுள்ளனர். ஒரு பலம் புழுதி கால் பலம் புழுதியாகும் வரை நிலத்தினை காயவிடவேண்டும் என்பதை

**"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்"**[7]

சூரியனின் கதிர்வீச்சு பழுதியின் ஊடாகச் சென்று வெப்பமூட்டும் பொழுது எருப்போட வேண்டாத அளவிற்கு வளமைபெறும் என்பதனை இக்குறளில் எடுத்துரைக்கின்றார்.

நிலத்தின் தன்மைக்கு ஏற்ப எருவிடுதல் களையெடுத்தல் நீர்பாய்ச்சுதல் காவல்புரிதல் என உழவனுக்குரிய பணிகளாக

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு "**[8]

என வள்ளுவர் உழவு பற்றிய அறிவியல் உண்மையினை சுட்டிக்காட்டுகின்றார். பிள்ளையின் முகக்குறிப்பு கண்டு தாய் அவள் உள்ளத்தினை அறிதல் போன்று நிலக்கிழான் நிலத்தினைக் கண்டவிடத்து அதன் இயல்பினை அறிந்துகொள்வான் என்பதனை

**"......... அகல்நீர்ப்**
**புலத்தியல்பு புக்கான் உரைக்கும்"**[9]

என்னும் நான்மணிக்கடிகைப்பாடல் உரைக்கின்றது.நிலமானது ஈரத்தன்மையில் இருக்கும் போது உழதல் சிறப்பு என்பதையும் அவ்விதம் நிலம் உழுவதற்கு ஏற்புடையதாக இருக்கும் போது எருதில்லாது இருத்தல் துன்பம் என்பதனை இன்னாநாற்பது சுட்டிக்காட்டுகின்றது .

**" எருதில் உழவர்க்கு போ(கு) ஈரம் இன்னா"**[10]

இதன் வழி நிலத்தினை உழுவதற்கு வலிமையான எருது தேவை என்பது புலனாகின்றது. பயிரிடுவதற்கு நிலத்தின் தன்மையினை அறிதலோடு அதனை


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

உழுவதற்கான கருவியினையும் தேர்வதில் நுட்பமான அறிவுத்திறன் தேவையாகும். உழுதலினை சேற்று உழவு புழுதி உழவு என்னும் இருவகை உழுதல் வகையினை பதினெண்கீழ்க்கணக்கின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**"நீர் ஊறிய புழுதி மண்ணில் காற்று வீசும் போது காற்றிலிருக்கும் நைட்ரஜன் மண்ணால் உறிஞ்சப்படுகிறது. இதனை நைட்ரஜனேற்றல் என்கிறார்கள்"**[11]. இவ்வறிவியல் உண்மையினை அன்றே பதிவுசெய்திருக்கின்றனர்.

**சமன் செய்தல்**

நிலத்தின் கீழ் உள்ள மண் மேலாகவும் மேல் உள்ள மண் கீழாகவும் உழு கருவி கொண்டோ அல்லது காளை மாட்டினைக் கொண்டோ உழப்பட்ட நிலத்தினை பயிரிடுவதற்கு ஏற்ப மட்டப்படுத்துதலே சமன் செய்தலாகும். இதனை பரம்படித்தல் என்றும் சுட்டுவர்.

**"நிலத்தை சமப்படுத்தும் போது மரப்பலகைக்கு மாற்றாக வாழை மரத்தை பயன்படுத்தும் முறையும் உள்ளது. இதனை வாழை இழுத்தல் என்கின்றனர்"**[12] இக்கருத்தினை குமாரி அவர்கள் தம் கட்டுரையில் கூறியுள்ளார். நிலத்தினை சமன் செய்தலுக்கு கூலி கொடுக்கும் தன்மையினை பழமொழி நானூறு

**"வரம்பு இல் பெருமை தருமே பரம்பூரி**
**என்றும் பதக்கு ஏழ் வரும்"**[13]

பரம்படித்தலுக்குக் கூலியாக ஒரு மரக்கால் நெல் கிடைக்கும் என்பதனைப் பதிவுசெய்துள்ளது. தற்காலத்தில் ஏர் பூட்டி உழுதலும் நடைபெறுகிறது.

**விதைத்தல்**

நிலத்தினைப் பக்குவப்படுத்தி விதைத்தல் என்பதே உழவுத்தொழின் சிறப்பாகும். ஆரோக்கியமான விதையின் மூலமே அளவிடற்கரிய விளைச்சலினை பெறமுடியும் என்பதனை

**"செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றும் அச்**
**செந்நெல்லே ஆகி விளைதலால் - அந்நெல்**
**வயல் நிறையக் காய்க்கம் வளவயல் ஊர"**[14]

செந்நெல் என்பது உயர்ரக நெல்வகையாகும் . இந்நெல் விதையாகும் பொழுது வயலில் நெல்விளைச்சல் செழுமையாக இருக்குமென்பதை மேற்கூறப்பட்ட நாலடியார் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட விதையினை விதைக்கும் முறையினையும் இலக்கியங்கள் கற்றுத் தருகின்றன.

**"தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்**
**தூற்றின்கண் தூவிய வித்து"**[15]

என்ற வரிகள் விதையினைத் தூவி விதைக்கின்ற முறையினை விளக்குகின்றது. தற்போது விதைதெளி எந்திரங்கள் பயன் படுத்தப்படுகின்றது. விதைக்காமலும் பயிர் விளைச்சல் உண்டு. அதாவது காற்றின் மூலமாகவும் பறவை மற்றும் விலங்குகளின் கழிவுகளின் எச்சங்களாலும் இயற்கை முறையில் விதை பரவல் உண்டு என்பதை

**"விதையாமை நாறுவ வித்துள மேதைக்**
**குரையாமை செல்லு முணர்வு"**[16]

என்னும் சிறுபஞ்சமூலப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

திருவிழாக்காலங்களில் முளைப்பாரி இடுதல் நிகழ்வும் எதிர்காலவியல் சிந்தனையையே பதிவுசெய்துள்ளது. பக்குவமான நிலத்தில் விதைக்கப்படும் விதையானது செழித்து முளைத்திடும் என்பதனை நான்மணிக்கடிகை

**“…………………… வித்தின்**
**முளைக்குழாம் நீருண்டேல் உண்டாம்”[17]**

சரியான அளவு நீர் இருப்பின் விதைத்த விதை எதிர்பார்த்த விளைச்சலை கொடுக்கும் என்கின்றது. நீரின் அளவு அதிகமானல் விதைத்த விதையும் பயனற்றுப் போகும் என்பதனை,

**“ ……………………. பாத்தி**
**விதைத்தாலும் நாறாத வித்து உள பேதைக்கு**
**உரைத்தாலும் தோன்றாத உணர்வு”[18]**

நீர்ப்பரப்பு ஆழ்ந்து இருப்பின் விதைகள் மூழ்கி முளைத்தல் இன்றி கெட்டுவிடும் நிகழ்வினை உணர்த்துகின்றது. இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வியலைக் கொண்டிருப்பவர்கள் நம் தமிழர்கள். பயிர்விளைச்சலில் எத்தகைய கவனம் செலுத்தினரோ அதைவிட அதிகமாக விதை சேமிப்பில் கவனம் செலுத்தினர். தனக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் எதிர்காலத் தேவையின் பொருட்டு விதையினை சேமித்து வைத்தனர். இதனை

**“விதைக்குற் றுண்ணா விழுப்பம் மிகவினிதே”[19]**

விதைக்கென சேமித்து வைத்திருந்தவற்றை குற்றி உண்ணாத தன்மை இன்பமுடையதாகும் என்ற பதிவின் வழி விதையினைச் சேமித்து வைக்கும் பழக்கம் இருப்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**நீர்ப்பாசனம்**

மனிதன் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்கின்றான் எனில் அவன் குருதி நிறைவினைப் பொறுத்ததே அதைப்போல் பயிர் விளைச்சல் என்பது நீர்பாசனத்தைப் பொறுத்ததே. உணவின்றி மனிதனது வளர்ச்சி இல்லை நீரின்றி பயிர் விளைச்சல் இராது. ஆகையால் மழையின் வழி நீர்வளம் பெறும் பொழுது அதனை அணைகட்டி சேமித்து உழவுத்தொழிலுக்கு பயன்படுத்தலாம் என்பதனைத் தொல்காப்பியர்

**“வருவிசைப் புனலைக் கற்சிறை போல**
**ஒருவன் தாங்கிய பெருமையானும்”[20]**

என்ற நூற்பாவில் சுட்டுகின்றார். முளையிட்ட விதைகளின் தன்மையறிந்து நீர்பாயச்சுதல் வேண்டுமென்பதை

**“நீரான்வீ றெய்தும் விளைநிலம்”[21]**

என்னும் நாண்மணிக்கடிகை பாடல் வழி அறிந்து கொள்ளலாம். மேலும் உழவுத்தொழிலில் சொட்டுநீர் பாசனம் தெளிப்புநீர் பாசனம் என இரு வித நீர்ப்பாசன முறையினை திருவள்ளுவர்

**“உணர்வது உடையார்முன் சொல்லால் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்செறிந்து அற்று”[22]**

என்னும் குறள் வழி வெளிப்படுத்துகின்றார்.மேலும்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

**“கடையாயர் நட்பில் கமுகனையர் ஏனை**
**இடையாயர் தெங்கின் அனையர்-தலையாயார்**
**எண்ணரும் பெண்ணை போன்(று) *இட்டஞான்றிட்டதே*** “[23]

கமுகிற்கு நாள்தோறும் நீர் இறைப்பது முதலிய அதிக பராமரிப்பு தேவைப்படுகிறது என்பதும், தென்னைக்கு அது வளரும் வரை நீர் இறைத்தால்தான் வளர்ந்தபின் பயன் தரும் என்பதும், பனைமரமோ வித்திட்ட பிறகு குறைந்த நன்மையைச் செய்தாலுங்கூட அது பெரும்பயனைத் தரும் என்பதும் பயிரின் தன்மைக்கு ஏற்ப நீர்பாய்ச்ச வேண்டுமென்பதை நாலடியார் அறிவுறுத்துகிறது.

**எருவிடுதல்**

உணவு ஆரோக்கியமானதாக இருப்பின் மனித வளர்ச்சி ஆரோக்கியமானதாக இருக்கும். அதனைப் போல் பயிர் ஆரோக்கியமாக வளர வேண்டுமானால் எருவிடுதல் அவசியத் தேவையாகும்.இதனைத் தொல்காப்பியர்,

**“எருவும் செருவும் அம்மொடு சிவணித்”**[24]

என்னும் நூற்பா வழி விளக்குகிறார். இயற்கை உரமானது மண்வளம் காப்பதிலும் விளைச்சலைப் பெருக்குவதிலும் பெரும்பங்குவகிக்கின்றன.

**“வேளாண்மையியல் பசுந்தழை உரங்கள் தொழுவங்கள் போன்றவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது . கால்நடை சாணத்தின் மூலம் உயிரினவாயு தயாரிப்பது பற்றியும் அதனுடைய முக்கியத்துவம் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்து நிலம் மாசுபாடு தவிர்க்கப்படுகிறது.”**[25] என பி.ஜான்சி அவர்கள் குறிப்பிடுகின்றார். நிலத்தின் தன்மைக்கேற்ப நெல்விளையும் என்பதனை,

**“நில நலத்தால் நந்திய நெல்லே போல் தம்தம்**
**குல நலத்தால் ஆகுவர் சான்றோர் கல நலத்தைத்”**[26]

என்னும் நாலடியார் பாடல் இயற்கை வளங்கள் நிலத்தின் தன்மையை வளப்படுத்துவதனை எடுத்துரைக்கின்றது.

**“ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
**நீராக நீளும் நோய்”**[27]

என்னும் குறள் வழி நிலத்தின் வளமை எருவிடுதலில் சிறப்படையுமென்பதை சுட்டிக்காட்டுகின்றார்.

**களையெடுத்தல்**

நல்ல பயிர்கள் செழிப்பாக வளர வேண்டுமானால் அதன் வளர்ச்சியை தடைபடுத்துகின்ற களையினைக் களைதல் வேண்டும்.

**“------------------- பிணிபயிரின்**
**புல்லன்னர் புல்லறிவின் ஆடவர் - கல்லன்னர்**
**வல்லென்ற நெஞ்சத்தவர்”**[28]

பயிரின் விளைச்சல் என்பது இடையிடையே வளர்ந்து வரும் புல்லின் வளர்ச்சியால் பாழ்படும் அதனை முறையாகக் களைய முற்படுதல் வேண்டுமென்பதை விளம்பி நாகனார் மிக அழகாக மேற்கூறிய பாடலின் வழி எடுத்துரைக்கின்றார்.

**“கொலையில் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்”**[29]


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்னும் குறள் வழி வேந்தனது செயல்பாடுகளை மட்டுமின்றி பயிர் விளைச்சலுக்கு களைகள் களையப்படல் வேண்டுமெனச் சுட்டுகின்றார்.

**தினைப்புனம்காத்தல்**

உழவன் அல்லும் பகலும் உழைத்து உருவாக்கிய பயிரினைப் பாதுகாத்தல் என்பது குழந்தைப்பேற்றிற்குச் சமமானதாகும். ஒரு குழந்தை கருக்கொண்டது முதல் முழுமை பெறும் வரை படிப்படியாக பராமரித்தல் போன்று பயிரினையும் பராமரித்தல் வேண்டும். தினைக்கதிர்கள் முற்றிய நாட்களில் அதனை கிளி போன்ற பறவையினங்களிடமிருந்து காத்தலே தினை புனம் காத்தலாகும். இதனைத் திரிகடுகம்

**“------------ பைங்கூழ்**
**விளைவின் கண் போற்றான் உழவு”[30]**

என்னும் பாடலின் வழி அறியலாம். பயிரினைக் காக்கும் பொருட்டு பரண் அமைக்கும் பாங்கினை திணைமாலை நூற்றைம்பதில்

**“வருக்கை வளமலையுள் மாதரும் யானும்**
**இருக்கை இதண்மேலேம் ஆகப் பருக்கைக்”[31]**

என்னும் பாடல் வழி தோழியும் தலைவியும் பரண் அமைத்து பயிர்களைக் காத்த நிகழ்வினை அறிந்து கொள்ள முடிகிறது.

**அறுவடை**

உழவன் தன் உழைப்பின் வடிவமாக பயிர் முற்றிய உடன் அறுவடை செய்கின்றான். உழவன் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பர். அறுவடை நாளினை விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

**“பழனம் படிந்த படுகோட்டு எருமை**
**கழனி வினைஞர்க்கு எறிந்த பறைகோட்டு**
**உரன் அழிந்து ஓடும் ஒலிபுனல் ஊரன்”[32]**

என்னும் திணைமொழி ஐம்பது பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

- மனித வாழ்வியலுக்குத் தேவையான அறக்கருத்துக்களை எடுத்துரைத்த பதினெண்கீழ்க்கணக்கில் பொதிந்திருக்கும் வேளாண்நுட்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.
- பருவம்கண்டு பயிர்செய்யும் முறையினையும் நிலத்தினை பக்குவப்படுத்துகின்ற முறைமைகளையும் அறிந்து கொள்ள முடிகிறது.
- பழந்தமிழ் படைப்பாளர்கள் புலமைத்திறத்தில் பல்துறை அறிவின் நுண்மாண் நுழைப் புலத்திறத்தினை அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநூற்பட்டியல்**

1. இராசமாணிக்கம் பிள்ளை மா, பழமொழிநானூறு, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை.
2. இளங்குமரனார் இரா,திருக்கறள், பாவாணர் அறக்கட்டளை வெளியீடு,புதுக்கோட்டை 2006
3. *இளம்பூரணர்,தொல்.*பொருளதிகாரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி 1964.
4. *இளம்பூரணர்,தொல்.*எழுத்ததிகாரம்,சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,திருநெல்வேலி 1964.

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 26. கோபல்ல கிராமம் புதினத்தில் பெண்களும் மாற்றங்களும்

**முனைவர் இரா.டயாணா,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எ.கா.த.தர்மராஜா பெண்கள் கல்லூரி, இராஜபாளையம்.
*DOI 10.5281/zenodo.17270736.*

**Abstract :**

This article examines the migration situation of a particular community of people from the village of Gopala through a historical lens. The aim of this article is to describe the various changes that women have undergone in historical times.

**Keywords :** Change, Wash, History, Migration, Agriculture, Kallikadu.

**முன்னுரை:**

ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று தனித்தனி இயல்புகளை வகுத்துக் கொண்டு சிறு சிறு கூட்டங்களாக வாழத் தொடங்கிய போதே சமுதாயம் உருவாகத் தொடங்கிற்று. அவ்வகையில் கட்டபொம்மு காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆந்திராவிலிருந்து பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்து தமிழ்நாட்டில் குருமலைச் சரிவுகளில் குடியேறிய கம்மவாரின் வரலாற்றை நாட்டுமக்களின் கண்ணோட்டத்துடன் காண்பது இந்நாவல். பெண்களின் பெருமையைப் பேசுவதோடு அவர்களால் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி ஆராய்வதும் மக்கள் அம்மாற்றங்களை ஏற்றுக் கொண்டு வாழ்ந்த வாழ்வியலைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் மையமாக அமைந்துள்ளது.

**பெண் பாத்திரப்படைப்பு:-**

ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு இனத்திற்கும், ஒவ்வொரு மதத்திற்கும், சாதிக்கும் தனித்தனியான கலாச்சாரம், பண்பாடுகள், கோட்பாடுகள் இருந்துவருகின்றன. அவை அனைத்தும் அறிவியல் ரீதயாகவோ, நாகரீக ரீதியாகவோ கேலிக்குறியதாக அல்லது ஏற்க முடியாததாக இருக்கும். ஆனால் அவற்றையே தம் சமுதாயத்தின் நம்பிக்கையாகவும், மரபாகவும், தங்கள் இனக்கட்டுக்கோப்புடன் வழிநடத்தும் ஆயுதமாகவும் அவரவர் கருதி வருகின்றனர். ஆனால் கி.ரா வின் பார்வை புதிது எண்ணம் புதிது அவர்தம் கோட்பாடு புதிது என்பதை இந்நாவல் நமக்குப் புலப்படுத்துகின்றது. பெண் பற்றிய சிந்தணையில் கி.ரா அவர்களின் பார்வை இன்னும் புதுமையாக அமைந்துள்ளது. என்பதில் ஐயமில்லை. என்னதான் தாய்வழிச் சமூகத்தை மையமாகக் கொண்டு கதைக் களம் அமைக்கப்பட்டிருந்தாலும் பெண்களுக்கு அதிகளவில் முக்கியத்துவம் தந்த ஆசிரியரைப் பாராட்டியே ஆக வேண்டும்.

**மங்கத்தாயாரு:-**

மங்கத்தாயாரு என்னும் 137 வயது முதிர்ந்த பெண்ணை முக்கியமான கதாப்பாத்திரமாகப் படைத்துள்ளார். ஒரு படைப்பாளன் தன் எண்ண ஓட்டத்தை கதாப்பாத்திரத்தின் வாயிலாக வெளியிட முடியும் என்பதை மங்கத்தாயாரு அம்மாள் வழியாக வெளிப்படுத்துகிறார். ஒரு சிறந்த கதை சொல்லியாக படைத்துள்ளது சிறப்பு

**“வீட்டின் நீண்ட திண்ணையை ஒட்டி ஆள் உயரத்துக்கு இருக்கும் நான்கு ஜன்னல்கள் வடக்குக் கடைசி ஜன்னல் வழியாகப் பார்த்தால் ஒரு தனியறையில் பனைநார்க்கட்டிலில் ரொம்பவும் வயசான ஒரு பெரியம்மாள் இருப்பது தெரியும். எலும்பும் தோலுமாய் நீண்ட மூக்குடன் இருக்கும் அந்த உருவத்தைப் பார்க்கும் போது**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**ரோமத்தையெல்லாம் இழந்துவிட்ட ரொம்ப வயதான ஒரு கழுகின் ஞாபகம் வரும். அந்தப் பூட்டியின் பெயர் மங்கத்தாயாரு அம்மாள் அவளுக்கு வயது நூற்றி முப்பத்தி ஏழு வயதாகிறது"1**

என்ற கூற்றின் மூலம் அறியலாகிறது. தனது ஒன்பதாவது வயதில் நிகழ்ந்த நிகழ்வுகளை சிறிது மிகைப்படுத்திக் கூறினாலும் ஒரு சமூகத்தாரின் புலம்பெயர்வு நிகழ்வுகளை மங்கத்தாயாரு அடுத்தடுத்தாக கூறி வருவது நாவலின் ஓட்டத்திற்கு துடுப்பாக அமைகிறது. என்பதில் ஐயமில்லை.

**மங்கம்மாள்:-**

பெண்ணை அவமானம் அல்லது கொலை செய்பவனுக்கு ஈவு இரக்கமின்றி தண்டனை வழங்குவதிலிருந்து பெண்களுக்கு கொடுக்கப்பட்ட மதிப்பு புலப்படுகிறது. ஒரு பெண் கதாப்பாத்திரத்தைக் கொண்டு அநேக கதாப்பாத்திரங்களை அறிமுகம் செய்கிறார். கி.ரா அவளது கொலை வழக்கினை விசாரிக்கும் பஞ்சாயத்தில் அநேக பாத்திரங்களையும் அவர்களின் சிறப்பு மற்றும் குணங்களையும் வெளியிடுகின்றார். மங்கம்மாள் என்ற பெண்ணைக் கொல்வதற்கு முன் வேட்டைக்காரனாக இருந்தவன் கொலை செய்து தண்டனை அனுபவித்தபின் இது ஒரு பெண்ணால் நிகழும் மாற்றம் என்பது உண்மை.

**"அந்தப் பெண் வேகமாகத் தண்ணீர் குடிக்க வந்து கொண்டிருந்தாள். அவள் வருவதையே ஒருவன் வைத்தகண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் அவனும் ஒரு வேட்டைக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தான் அங்கே"2**

என்னும் வரிகளில் வேட்டைக்காரனாக சித்தரிக்கப்படுகிறான். பின் கழுவனாகப் பார்க்கப்படுகிறான். இறுதியில் தெய்வமாகவே எண்ணப்படுகிறான். ஒரு பெண்ணால் மனிதன் தெய்வமாக உயர்த்தப்படும் நிலையினை ஆசிரியர் சுட்டிச் செல்கிறார்.

கழுவன் இறந்தவுடன் குழந்தைகள் பார்க்கின்றனர். அவ்வாறு பார்த்த குழந்தைகளுக்கு காய்ச்சலில் விழுகின்றனர் கழுவனுக்கு நேர்ந்து கொள்கின்றனர்.

**"தங்கள் பெண் குழந்தைகளுக்கு கம்மாளச்சி (மங்கம்மாள்) என்றும் ஆண் குழந்தை பிறந்தால் கழுவன் என்றும் பெயர் சூட்டுகிறார்கள்."3**

ஒரு மனிதனை தெய்வநிலைக்கு மாற்றும் வல்லமை பெண்ணுக்கு உண்டு என்ற செய்தி பெறப்படுகிறது.

சென்னாதேவி:-

ஒரு பெண்ணால் ஒரு சமூகத்தின் வாழ்விடம் மட்டுமன்றி வரலாற்றையும் புரட்டிப் போட முடியும் என்பதற்கு சென்னா தேவி கதாப்பாத்திரம் நல்லதொரு எடுத்துக்காட்டு. அழகிகளுள் அப்படியொரு அழகியாக வருணிக்கப்படுகிறாள்.

**சென்னாதேவி இருக்குமிடத்தில் அவளுக்கு அருகே அவளைச் சுற்றி ஒரு பிரகாசம் குடி கொண்டிருக்கும். அவள் நிறை பௌர்ணமி அன்று பிறந்ததினாலோ எண்ணமோ அப்படியொரு சோபை அவளுடைய முகத்தில்."4**

**"அவளுடைய அழகு பக்கத்துக் கிராமங்களுக்கு மட்டுமில்லை வெகு தூரம் பிரபல்யம் அடைந்தது அந்தப் பிரபல்யமே அவளுக்கு வினையாக முடிந்தது.5**

என்று மங்கத்தாயரு அம்மாள் கூறுவதலிருந்து சென்னாதேவி அழகு புலப்படுகிறது.

அவளது அழகே அச்சமூகத்திற்கு வினையாக முடிந்தது. துலுக்க ராஜாவுடனான திருமணத்தை விரும்பாது இரவோடிரவாக தப்பித்தோம் பிழைத்தோமென்று கால் போன போக்கில் நடந்து ஏதோ தெய்வச் செயலில் ஒரு மலையடிவாரத்தை வாழிடமாகக் கொண்டு வாழ்கின்றனர்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எத்தணையோ மகிழ்ச்சியிலும் இன்பத்திலும் எண்ணவோட்டத்திலும் வாழ்ந்தவர்கள் ஒரு நாடோடிகள் போல ஓடச் செய்தது சென்னாவின் அழகுதான். தங்கள் சொந்த தேசமான ஆந்திராவிலிருந்து கம்மவார் மட்டுமல்லாது பல்வேறு ஜாதியினரும்இ பல்வேறு காரணங்களால் புலம்பெயரக் காரணமாயின.

இதேபோல் தான் துளசி என்ற பெண்ணின் கதையும் என்பதிலிருந்து பெண்ணின் அழகு அல்லது ஒரு பெண்ணால் ஒரு சமூகமும் அம்மக்களின் வரலாறும் மாற்றியமையப்பட்டது என்பதில் ஐயமில்லை.

**பாட்டி:-**

மானுடத்தின் உயர் வளர்ச்சிக்கு உயிர் பிணைப்பாகத் திகழ்வது பெண்ணினம் ஆகும். பெண்களின் மென்மைகள் மட்டுமல்ல மேன்மைகளையும் எடுத்தியம்புவது முறையானதொன்றாகும். தொல்காப்பியர் மகளிரின் இயல்புகளாக இயம்புவன,

**அச்சமும் நாணும் மடனும்முந் துறந்து**

**நிச்சமும் பெண்பாற் குரிய (தொல்-1045)**

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**

**அறிவும் அருமையும் பெண்பா லான (தொல்-1155)7**

என்கிறார். பேண்களின் பண்புகளாக தொல்காப்பியர் சுட்டும் இப்பண்புகள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகும். இதில் அச்சம் அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுதலும் நாணம் என்பது பெண் தன்மையோடு பொருந்தாதவற்றிலிருந்து ஒதுங்கி வாழ்தலும் என்பதாகும். முடன் என்பது அறிந்தும் அறியாதவராக இருக்க வேண்டிய இடத்தில் இருத்தல் செறிவு என்பது, அடக்கம் நிறைவு என்பது அமைதி. செம்மை என்பது மனங்கோடாமை, செப்பு என்பது சொல்லுதல் அறிவு என்பது நன்மை, தீமை பயப்பன கண்டு துணிதல் அருமை என்பது உள்ளக் கருத்து அறிதல் என்று விளக்கமளிக்கின்றனர் உரையாசிரியர்.

கி.ரா வின் கோபல்ல கிராமத்தில் மங்கத்தாயாரம்மாளின் பாட்டியான கதாப்பாத்திரம், தொல்காப்பியர் சுட்டிய அத்துணை இயல்புகளையும் ஒருங்கே உடையவராகத் தென்படுகிறார்.

துலுக்க ராஜாவிடம் சென்னா தேவியுடன் குடும்பமே அகப்பட்ட இடத்து அச்சத்துடனும், நாணத்துடனும், மடனும், காணப்படுபவர். தப்பியோடி தங்களுக்கென ஒரு இருப்பிடத்தைக் கட்டமைக்கும் போது அடக்கத்துடனும், அமைதியுடனும், கூற வேண்டிய சொற்களை மட்டுமே கூறி நன்மை தீமை ஏற்படும் இடங்களைச் சுட்டிக் காட்டி மக்களையும் ஏன் ஆண்களையே தன் சொல் சரி என்று உணர வைக்கும் சாமர்த்தியசாலியாகத் தென்படுகிறார்.

**காட்டை அழிப்பதில் பாட்டியின் பங்கு:-**

அடர்;ந்த முட்கள் நிறைந்த கள்ளிக் காட்டினை அழித்து விவசாய நிலமாக்குவது என்பது முடியாத செயல். அனைவரும் சோர்வுற்ற வேளையில் பாட்டிதான் கைதேர்ந்த பொறியாளர் போல செயல்படுகிறார்.

**“அதாவது நமக்கு இப்பொழுது தேவைப்படும் நிலப்பகுதியுள்ள காட்டை மாற்ற காட்டிலிருந்து தனிமைப் படுத்திவிடுவது என்று சொல்லி பாட்டி தரையில் தன் விரல் கொண்டு கீச்சி ஒரு படம் வரைந்து காட்டினாள்.**

**முதலில் விஸ்தாரமான ஒரு சதுரக்கட்டம் வரைந்தாள். ‘இது மொத்தமான காடு’ என்று அதைக் காட்டிச் சொன்னாள். எல்லோரும் சரி என்று ஒப்புக் கொண்டார்கள்.”8**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற ஆசிரியரின் கூற்றிலிருந்து ஒரு பெண்ணின் ஆலோசனைக்கு சொற்களுக்கு அவளது கருத்துக்களுக்கு அனைவரும் மதிப்பளித்தனர். என்பது தெரியலாகிறது.

மேலும் ஒரு பெண்ணின் ஆலாசனையே முக்கியக் காரணமாக அமைந்தது என்பதை அறியலாம்.

**பாட்டியும் காட்டுப்பசுவும்:-**

வயது முதிந்நதவர்களின்அனுபவம் இளையோர்க்ககு தித்திக்கும் தேனாய் இனிக்க வேண்டும். அதுபோலவே இப்புதினத்தில் பாட்டி எனும் கதாப்பாத்திரத்தின் மூலம் காட்டுப்பசுவினை கையகப்படுத்தும் கலையையைக் கற்றுக் கொண்டனர். கட்டுக்குள் நிற்காத காட்டுப்பசுவையும் தன் குணத்தை மாற்றி வளர்ப்புப் பசுவாக்கும் மாற்றம் பாட்டியால் கூறப்பட்ட ஆலோசனையே காரணமாக அமைந்தது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை எனலாம். சகதிக்குள் கிடந்த காட்டுப்பசுவினை வெளிக் கொணர இளவட்டங்கள் போராடுகின்றனர். ஆவர்களுக்கு ஆலோசனை கூறும் விதமாக,

**“பிள்ளைகளே, மூக்கணியினால் மாட்டை அமைக்க முடியாது. இது காட்டு மாடு. அந்த நிலையிலேயே அதைவைத்துக் கொண்டு அதற்கு மூக்கைக் குத்தி மூக்கணாங்கயிறு பூட்டிவிடுங்கள்”9** என்று கூறியதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

**விக்டோரியா மகாராணி:-**

ராஜாங்கம் இல்லாத காலத்தில் நவாப்புக்கும் கம்பெனிக்குமாக அரசியல் அதிகாரம் கைமாறிக் கொண்டிருந்த காலம் மன்னர்களின் கீழ் வாழ விரும்பாத மக்கள் விக்டோரியா மகாராணியை ராணிமங்கமாவுடன் ஒப்பிட்டு அவரது (விக்டோரியா) ஆட்சியின் கீழ் வாழ மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

**முடிவுரை:-**

பெண் என்றால் அச்சத்துடனும் ஆண்களுக்கு அடிமையாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணியிருந்த காலத்தில் பெண்களால் மாற்றங்களைக் கொணர முடியும். என்ற கருத்தினை வலியுறுத்துவதாய் அமைந்திருக்கிறது கோபல்ல கிராமம் புதினம். கி.ரா வின் பெண் பற்றிய சிந்தணை மற்ற ஆண்களின் மத்தியில் புதிய வரவேற்பு பெற்றது என்றே இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**அடிக்குறிப்பு:-**

1. கோபல்ல கிராமம் கி.ராஜநாராயணன் ப.எண்.38
2. மேலது ப.எண.23
3. மேலது ப.எண்.140
4. மேலது ப.எண். 41
5. மேலது ப.எண். 41
6. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணார் உரை நூற்பா எண். 1045
7. மேலது நூற்பா.எண்.1155
8. கோபல்ல கிராமம் கி.ராஜநாராயணன் ப.எண்.92
9. மேலது ப.எண். 96


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 27. மதுரைக்காஞ்சியில் வணிகம்

**முனைவர் ஜெ. அமுதா**
துறைத்தலைவர், தமிழியல்துறை,
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி),சிவகாசி
7639547646
*DOI 10.5281/zenodo.17270743.*

**Abstract :**

Maduraikanchi is one of the Patuppattu books in Sangam literature. Its author is Mangudi Marudhanar. This book consists of 782 verses. It is a book that describes the beauty and prosperity of Madurai, the capital of the Pandya kingdom. The city of Madurai is also called Kudal Mahanagar. The purpose of this article is to examine the news related to trade in Kudal Nagar in Maduraikanchi.

**KeyWords :** Sangam Literature - Maduraikkaanji - Mangudi Marudhanar - Pandiyas' Kingdom

## முன்னுரை

சங்ககால இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. இதன் ஆசிரியர் மாங்குடி மருதனார் ஆவார். இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரையின் அழகையும் வளத்தையும் கூறுகின்ற நூலாகும். மதுரை மாநகரம் கூடல் மாநகர் என்றழைக்கப்படுகிறது. இம்மதுரைக்காஞ்சியில் கூடல் நகரில் வணிகம் வார்ந்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## வணிகர்

உலகில் முதன்மைத் தொழிலாக திகழ்கின்ற வேளாண்மை தொழிலால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் மட்டுமல்லாது ஏனைய பொருட்களையும் விற்கக் கூடியவர் வணிகர் ஆவார். இவ்வணிகரைப் பற்றி தொல்காப்பியர்

**“வைசிகன் பெருமை வாணிக வாழ்க்கை1”**

என்ற நூற்பா மூலம் உணர்த்தியுள்ளார். மதுரைக்காஞ்சி

**“சிறந்த தேயத்துப் பண்ணியம்” (மது.கா.அடி -506)**

என்ற அடிகள் மூலம் பண்டம், பண்ணியம் என்ற சொற்களில் வாணிபப் பொருள்கள் அழைத்தமையை அறிய முடிகிறது.

**“ வணிகம் செய்வோருக்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமப்போல் செயின்”2**

பிறர் பொருளை தம்பொருள் போல் போற்றிச் செய்தல் வேண்டும். அச்செயலே வணிகம் செய்வோருக்குரிய நல்ல முறை ஆகும்.

வுணிகம் என்ற சொல்லுக்கு தமிழ்மொழி அகராதி “செட்டு, வியாபாரம்3” எனப் பொருள் தருகிறது.

## வணிகத் தொழில்

மக்களால் செய்யப்படும் அறுவகைத் தொழில்களில் உழவும் வாணிகமும் தலைசிறந்தனவாக உள்ளன. சங்க காலத்தில் மேற்கூறிய தொழில்கள் சிறந்து விளங்கின.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**“இரு வகையான் இசை சான்ற**
**சிறு குடிப் பெருந் தொழுவர்**
**குடி கெழீஇய நானில வரொடு” (மதுரைக்காஞ்சி, அடிகள், 121-123)**

என்ற அடிகள் சுட்டுகின்றன.

மதுரையில் நிலங்களிலும் நீர்களிலும் கிடைக்கும் பொருட்களையும் பிற இடங்களில் இருந்து கிடைக்கும் பொருட்களையும் விற்பனை செய்தனர். இனிப்பு சுவை உள்ளே இருக்கும்படி செய்யப்பட்ட பலவகை உணவு, பூத்தட்டில் வைக்கப்பட்ட பூ, பல வகையாக விரித்து வைக்கப்பட்ட மலர்மாலை, நவமணிகள், பொன் சந்தனம், கற்பூரம் ஆகியவற்றை புழுகிலும் பனி நீரிலும் நனைய வைத்து இடிக்கப்படும் சுண்ணம். இச்சுண்ணம் மலர்தாது போன்று நுண்மை உடையது. உடலுக்கு அழகைத் தரும். கருங்காலி மரத்தை சீவி ஊற வைத்து காய்ச்சிய இனிமை தரும் செங்களி, இனிய தன்மையுடைய பாக்கு, நீண்ட கொடியில் கிடைத்த வெற்றிலை, சங்கினை சுட்டு எடுத்த சுண்ணாம்பு ஆகியவற்றை மாளிகையின் நிழலில் விற்றனர். இதனை கீழ்க்;கண்ட பாடல் அடிகள் உணர்த்துகின்றன

**“பலவகை விரித்த எதிர்பூங் கோதையர்**
**மலர் தொகுபு இடித்த தாது உகு சுண்ணத்தார்**
**தகை செய் தீம்சேற்று இன்;நீர்ப் பசுங்காய்**
**நீடு கொடி குலையினர்கோடு சுடு நூற்றினர்”**

**(மதுரைக்காஞ்சி, அடி 398.401)**

**முது பெண்டிர் விற்கும் பொருட்கள்**

மதுரைக்காஞ்சியில் மதுரையில் அழகிய பாத்திரங்களில் கண்டார் விரும்பும் வடிவை உடைய தின்பண்டங்கள்; மணமுடைய மலர்களை ஏந்தி வீடுகள் தோறும் உலவுவர். காதலன் காதலி விரும்பும் பொருட்களை ஏந்தி நறுமணம் கமழும் பூக்களுடன் வீடு தோறும் போய் விற்பர். வணிகர் பெருவணிகள் சிறு வணிகர் என்று பல பிரிவினர் மதுரை காஞ்சில் காட்டப்பட்டுள்ளன சிறு வணிகர் என்ற நிலையில் வீடு தூரம் சென்று பூ பண்ணியம் முதலானவற்றை விற்று பெண்கள் வருவதை காணலாம் இதனை

**“கையை மெலிதின்**
**கடல்நரும் பூவோடு மனை மனை மருக”**

என்ற நிலையில் மெல்ல நடந்து கைதட்டி அழைத்து கற்காத மக்களோடு கலந்து ஒவ்வொரு வீடாகச் சென்று பொருள் விற்றுக் கொண்டிருந்தனர். வெற்றிலை, சுண்ணம் ஆகிய பொருட்கள் விற்கும்போது அவ்வழியே போர்ப்படை ஒன்று செல்கிறது. அப்போது அவர்கள் அஞ்சி தங்கள் கடைகளை சுருக்கிப் பின் விரித்து வைத்த நிலை சுட்டப்பட்டுள்ளது.

**பண்டமாற்று வணிகம்**

அரசனுடைய அரண்மனையைச் சுற்றிலும் உள்ள நான்கு பெரிய தெருக்களும் வணிகம் நடைபெறும் இடமாக இருந்தது. இல்லத்தில் இருந்து பல வகையான பண்டங்களும், உணவுப் பொருட்களும் மலை, நிலம், நீர் ஆகிய இடங்களில் இருந்து தோன்றிய பலவாறாக வேறுபட்ட அழகுடைய மணி, முத்து போன்ற முதலியவற்றை பண்டமாற்றாக பெற்று அயல் நாட்டிலிருந்து கொண்டு வந்த பண்டங்களை விற்கும் வணிகர் தெரு உள்ளன. என்பதை கீழ்க்கண்ட அடிகள் சுட்டுகின்றன


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**“மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்**
**பல்வேறு திருமணி முத்தமோடு பொன் கொண்டு**
**சிறந்த தேயத்தும் பண்ணியும் பகர்நரும்” (மதுரைக்காஞ்சி,அடி. - 504-506)**

வாணிகர் அறநூலோர் தமக்குக் கூறிய இல்லறத்தில் ஒழுகுபவர். இல்லத்திலிருக்கும் பலவகையான பண்டங்களுடன் உணவுப்பொருட்களும் காணப்படும். தாங்கள் வாழுமிடங்களைச் சுற்றி விளைந்த பொருட்களைக் கொடுத்து பண்டமாற்றாகப் பெற்று அயல் நாட்டிலிருந்து கொண்டு வந்த பண்டங்களை விற்கும் வணிகர் தெரு.

அங்காடி

பொருள்களை வாங்குபவர்களுக்குகப் புரியும் வகையில் பகல்பொழுதில் இருக்கின்ற அங்காடி நாளங்காடி ஆகும். இரவுப்பொழுதில் இருக்கும் அங்காடி அல்லங்காடி என அழைத்தனர். வாணிபப் பொருளகளை விற்பனை செய்த நிலையினையும் மக்கள் பொருளினை வாங்கும் சூழலை கீழ்க்கண்ட பாடலடிகள்

**“ஆடுவதுன்று விழவின் ஆடார்த்தன்றே**
**மாடம் நெங்கிய மலிபுகழ்க் கடல்**
**நாளங்காடி நனந்தலைக் கம்பலை” (மது.கா, அடி. 428-430)**

எனவும்

**பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்கற**
**அல் அங்காடி அழிதரு கம்பலை” (மது.கா. அடி.543-544)**

என்ற பாடலடிகள் வழி பல பறவைகளின் ஓசை பேல இரவில் விற்பனையின் ஓசை இருந்தமையை காண முடிகிறது. மேகங்கள் முகக்க முகக்க குறைவுபடாமலும் ஆறுகள் பாய்வதனால் மிகைபடாமலும் கரையை மோதி உலிக்கும் கடல். அக்கடல் போன்று பலரும் வந்து கொள்ளக் கொள்ளக் குறையாமல் பலரும் மேன்மேலும் கொண்டுவரக் கொண்டு வர மிகாமலும் உள்ள நாளங்காடி அஃது எப்போதும் பண்டங்களால் நிறைந்து காணப்படும். மதுரை நகர மக்கள் நாளங்காடியில் பொருளை வாங்க வாங்க குறைவுபடாத பொருள்களை உடையதாக காணப்பட்டது. வணிகர்கள் மேலும் பொருள்களை கொண்டு வந்தனர்.

**விற்கப்படும் பொருட்கள்**

அறநெறிப் பிழையாது பண்டங்களை வணிகர்கள் விற்பர். கடலில் கிடைத்த சங்கினை அறுத்து வளையல் செய்பவர்கள், அழகிய மணிகளை துளைவிடுபவர்கள், பொன்னை கல்லில் உரசி தரம் பார்ப்போர், கச்சுளை முடிப்பவர்கள், செப்புப் பொருட்களை எடையிட்டு வாங்குபவர்கள், சிறிதும் பெரிதுமான மடித்த துணிகளை அவற்றை நெய்து வந்த பொருட்களையும் வணிகர்கள் விற்பனை செய்கிறார்கள்.

பொன்னை அணிகலனாகச் செய்து தருபவர் ஆடை விற்பவர் .செம்பை நிறுத்து வாங்குபவர் . மலர்களையும் சாந்தினையும் நன்கு தேர்ந்தெடுத்து விற்பவர்கள் .பலவகைத் தொழில்களையும் ஒப்புமை காட்டி ஓவியம் வரையும் கூர்மையான அறிவு உடைய ஓவியர். பிற தொழில் செய்வோர் புடவைகளை கொண்டு விரித்து சிறியோரும் பெரியோரும் ஆகிய நெய்தல் தொழில் செய்வோர் என எல்லோரும் கூடி நான்கு வேறுபட்ட தெருக்கள் தோறும் ஒருவர் காலுடன் ஒருவர் நெருங்கி நின்றனர் இதனை

**“சிறியதும் பெரியரும் கம்மியர் குழீஇ**
**நாள் வேறு தெருவிலும் காலுற நிற்றர” (மதுரைக்காஞ்சி, அடி -; 520 -522)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**இறக்குமதி ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள்**

வெளிநாட்டவர் இங்கு வந்து வணிகம் செய்யும்போது பல வகையான மொழிகளைப் பேசினர். அதனால் அவ்வோசை பறவைகளின் ஓசை போல் இருந்தது. அகன்ற இடத்தை உடைய யவனர் முதலிய நாட்டில் இருந்து வந்து வணிகம் செய்பவர்கள் மரக்கலங்களில் கொண்டுவரப்பட்ட பலவகைப் பொருட்களை இறக்குமதி செய்தனர். அயல்நாட்டு வாணிகர் இங்கு செய்த அணிகலன்களை வாங்கி பெற்று செல்லுதல் காணப்பட்டது. மரக்கலங்களில் ஏந்தி வந்து இறங்கும் பட்டினத்தில் வாங்கும் ஓசை அணிகலன்களை விலை பேசி வாங்கும் போது உண்டாகும் ஒசை மதுரையில் செய்யப்படும் அணிகலன்களை வாங்கிக் கொள்பவர்கள் மேலும் அணிகலன்களை வாங்கும் பொருட்டு திந்தனர். இதனை

**“பல்வேறு பண்டம் இழிதரும் பட்டினத்து**
**ஒல்லென் இமிழ்; இசைமான கல்லெண**
**நனந்தலை வினைஞர் கலம் கொண்டு மறுக”**

**(மதுரைக்காஞ்சி,அடி; - 507 -509)**

பிற நாட்டு மரக்கலங்களில் தாங்கள் கொண்டு வந்த பொருட்களை இறக்குவதாலும் இந்நாட்டு பொருட்களை பிற நாட்டு மரக்கலங்களில் ஏற்றுவதனாலும் இடைவெளி இல்லாத நிகழ்வின் ஓசை ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மதுரை மாநகரில் பண்டங்களுக்கு விலை கூறும் பெரிய கடையை அடைத்து மங்கையர் உறங்குதல். நல்ல வரிகளை உடைய தேன்கூடு போன்ற அடைகளையும் கற்கண்ட்டை சூடேற்றி கிடைத்த பர்குடன் பருப்பும் தேங்காயும் கூட்டி உள்ளே வைத்து பிடித்த கொழுக்கட்டை, இனிய பாவுடன் செய்த அப்பமும் விற்றதை கீழ்க்கண்ட அடிகள் வழி காணலாம்.

**“நொடை நவில் நெடுங் கடையடைத்து மடமதர்**
**ஒள்இழை மகளிர் பள்ளி அயர**
**நல்வரி இறால் குறையும் மெல்லடை**
**அயிர் உருப்பு உற்ற ஆடு அமை விசயம்**
**கவவொடு பிடித்த வகை அமை மோதகம்” (மதுரைக்காஞ்சி,அடி -621- 624)**

பொருட்களை விற்பவர் பலவகையான பொருட்களை உடைய கடைகளை மெழுகினா.; கள் விற்பவர் கள்ளுக்கு விலை கூறியமையை கீழ்க்கண்ட அடிகள் சுட்டுகின்றன.

பல்வேறு பண்ணிய கடை மெழுக்கு உறுப்ப
கள்ளோர் கலி நொடை நுவல” (மதுரைக்காஞ்சி, அடி - 661,662)

**முடிவுரை**

விற்பனை செய்யப்படும் பொருட்களை பண்ணியம் என அழைத்துள்ளனர். அங்காடியை நாளங்காடி, அல்லங்காடி என பாகுபடுத்தப்பட்டிருந்ததைச் சித்தரிக்கிறது. உணவுப்பொருட்கள், நறுமணப்பொருட்கள், மலர், மாலை, வெற்றிலை, அடை, மோதகம், அப்பம் போன்ற பொருட்களையும், விலையுயர்ந்த பொருட்களையும் நிலம், நீர், மலை ஆகியவற்றில் கிடைத்த பொருட்களையும் வணிகர்கள் விற்பனை செய்துள்ளனர். பெண்கள் வீடு வரை சென்று பொருட்களைக் கொடுத்தமையையும் அறியமுடிகிறது. பண்டமாற்று முறை இருந்தமைக்குச் சான்றளிக்கிறது. வுணிகர்கள் அறநெறியைப் பின்பற்றியுள்ளதையும்

அரசனுடைய அரண்மனைச் சுற்றியுள்ள நாற்பெருந்தெருக்களும் ஆரவாரம் மிகுந்து காணப்படுவதற்கு வணிகமே முதன்மைக் காணமாகும் என்பதைக் காண முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1.முனைவர் சுபாஸ்சந்திர போஸ், தொல்,பொருள்.நூ -1562

2.எம். நாராயண வேலுப்பிள்ளை, திருக்குறள் - எண். 120

3.நா. கதிரைவேற்பிள்ளை - தமிழ்மொழி அகராதி, ப.1246

**துணைநூற்பட்டியல்**

1. நா. கதிரைவேற்பிள்ளை,தமிழ்மொழி அகராதி,சாரதா பதிப்பகம், சென்னை. முதல்பதிப்பு 2003
2. முனைவர் சுபாஸ்சந்திர போஸ், - தொல்காப்பியம்,பொருளதிகாரம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. எம். நாராயண வேலுப்பிள்ளை திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 28. பழந்தமிழரின் நீர் அறிவியல்

**(Water Science)**

**முனைவர் மா.பத்ம பிரியா,**
உதவிப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழ்ஆய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்னம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
DOI 10.5281/zenodo.17275476.

**Abstract:**

In Thiruvalluvar's description of the earth as a fortress, water, known as Mani Neer, takes the first place. In the structure of Neer Aran, Nilavaran, Malayayaran, and Kataran, water has the first place of importance. Therefore, the ancient Tamils accepted that nature was superior to them and preserved and protected the natural state of nature. They did not try to conquer and dominate the naturally rich water and land. They lived by protecting the soil and water resources. Moreover, as experts in water science, they knew the need for water and protected it.

**Key Words :** Ancient Tamil - Tamilar - Science - Water - Political

## முன்னுரை

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண் (திருக்குறள்.742)**

பூமிக்கு அரணாக திருவள்ளுவர் கூறுவதில் மணிநீர் என்று நீர்வளமே முதலிடம் வகிக்கின்றது. நீர்அரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்ற கட்டமைவில் நீர் முதலிடத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆதலால், பழந்தமிழர்கள் இயற்கை தன்னைவிட மேலானது என்று ஒப்புக்கொண்டு இயற்கையின் இயல்புநிலையைப் பேணிப் பாதுகாத்துள்ளனர். இயற்கை வளமான நீர் மற்றும் நிலத்தை ஆளுமை செய்து வெற்றி கொள்ள முயலவில்லை. மண்வளம் பாதுகாத்தும், நீர்வளம் பாதுகாத்தும் வாழ்ந்துள்ளனர். மேலும், நீர் அறிவியல் தெரிந்தவர்களாக நீரின் அவசியத்தை அறிந்து பாதுகாத்துள்ளனர்.

## நீர் - அகராதி மற்றும் அறிவியல் விளக்கம்

பழந்தமிழர் ஐந்திணையடிப்படையில் பாகுபடுத்திய வாழ்வியலில் நீரின் முக்கியத்துவம் பாடப்பட்டுள்ளது. பூமியில் உள்ள உயிரினங்களின் உயிர் வாழ்தலுக்கு நீர் ஆதாரமாகும். “தண்ணீர் மனித வாழ்வின் ஆதாரம் ஆகும். மழையாகப் பெய்வதும், ஆற்றில் ஓடுவதும், குளத்தில் இருப்பதும், கடலாக இருப்பதும், ஒரு கலத்தில் இருந்து ஒரு கலத்தில் ஊற்றக்கூடியதும் ஆன நிறமற்ற பொருள். உயிர்வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருள். இதன் வேதி வாய்பாடு இரண்டு ஹைட்ரஜன் அணுக்களும் ஓர் ஆக்சிசனும் சேர்ந்தது: H2O. பல பொருள்களைக் கரைக்ககூடியபொருள். நிலவுலகின் பரப்பளவில் ஏறாத்தாழ 2/3 மடங்கு நீரால் (கடல் நீரால்) சூழ்ந்தது. நீரில் ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிசன் 2:1 என்ற கனஅளவு சதவீதத்தில் உள்ளது. நீர் ஓர் சர்வ கரைப்பான்.” (தமிழ் விக்சனரி) என்று நீரின் அறிவியல் தன்மையை அகராதி விளக்குகின்றது.

“மேகங்களிலிருந்து மழையாக இறங்கும் திரவம். நீரோடைகள், ஏரிகள் மற்றும் கடல்களை உருவாக்குகிறது.மேலும் அனைத்து உயிரினங்களின் முக்கிய அங்கமாகும். மேலும் அது தூய்மையானது மணமற்ற, சுவையற்ற, மிகவும் சிறிதளவு அமுக்கக்கூடிய ஹைட்ரஜன் $H_2O$ திரவ ஆக்சைடாக இருக்கும்போது, அது தடிமனான அடுக்குகளில் நீல நிறத்தில் தோன்றும். 0°C இல் உறைந்து 100°C இல் கொதிக்கும், 4°C இல் அதிகபட்ச


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

அடர்த்தி மற்றும் அதிக குறிப்பிட்ட வெப்பத்தைக் கொண்டிருக்கும், ஹைட்ரஜன் மற்றும் ஹைட்ராக்சில் அயனிகளாக பலவீனமாக அயனியாக்கம் செய்யப்படுகிறது, மேலும் இது மின்சாரத்தின் மோசமான கடத்தி மற்றும் ஒரு நல்ல கரைப்பானாகும்.ஒரு இயற்கை கனிம நீர் .” (வெப்ஸ்டர் அகராதி) என்று நீரின்அறிவியல் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

நீர்க்கோளம் (Hydrosphere) என்பது பூமியில் உள்ள நீராதாரங்களைக் குறிப்பது ஆகும். பூமி மற்றும் அதற்கு மேலே, கீழே காணப்படும் அனைத்து நீர்நிலைகளையும் குறிக்கிறது. பெருங்கடல் (Ocean,) கடல் (Sea), ஏரி (Lake), ஆறு (River), குட்டை (Pond), நிலத்தடிநீர் (Underground Water) ஆகியன. இவையனைத்தும் நீராதாரவகையில்அடங்கும். நீரின் மேன்மையை உணர்ந்த வள்ளுவர்,

**“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு.” (திருக்குறள்.20)**

என்கிறார். இயற்கை வளங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தவிர்க்க இயலாத ஒன்றாகவும் நீர் விளங்குகிறது. “நீர்க்கோளம் என்பது, நமது கோளில் அடங்கியுள்ள முழு நீர்ப்பரப்பினையும் குறிக்கும். பூமியின் மேற்பரப்பில் உள்ள நீர், நிலத்தடி நீர் மற்றும் காற்றில் கலந்துள்ள நீர் ஆகிய அனைத்தும் நீர்க்கோளத்தில் அடங்கும். எனவே, ஒரு கோளின் நீர்க்கோளமானது நீர், நீராவி அல்லது திடநிலையில் பனிக்கட்டி வடிவில் இருக்கும்.நீர்க்கோளமானது ஏறக்குறைய 71% பூமியில் சூழ்ந்துள்ளது. இதில் நீர் நீர்மவடிவிலும், உறைந்த வடிவிலும் காணப்படுகிறது. 97% உப்பு நீராகவும் மீதமுள்ள 3% நீர் நிலத்தடியிலும், ஏரிகள், ஆறுகள் மற்றும் பனிப்பாறைகளாகவும் பனியாறுகளாவும் காணப்படுகிறது.நீர்க்கோளத்தின் முக்கியத்துவம், நமது அன்றாட வாழ்வில் நீரின் தேவை மிகுதியாக உள்ளது. பருக, குளிக்க, சமைக்க போன்ற பல அன்றாட நடவடிக்கைகளுக்கு நீர் தேவைப்படுகிறது. விலங்குகள் மற்றும் தாவரங்கள் உயிர்வாழ நீர் தேவை. நீர் இல்லாவிடில், நீர் ஆவியாகி மேகங்களாக உருவாக முடியாது. அதனால் மழை இருக்காது.”(பிரைன் கார்ட்,சமூகஅறிவியல்) என்று நீரின் முக்கியத்துவம் அறிவியலாளர்களால் போற்றப்பட்டுள்ளது.

**நீரின் சுழற்சி பற்றிய சூழலியலறிவு**

பூமிக்குத் தேவையான தண்ணீர் நீரியல் சுழற்சி மூலம் கிடைக்கின்றது என்பது அறிவியல் உண்மையாகும். “இந்த நீரியல் சுழற்சியில், நீராவி குளிர்ந்து மேகமாக மாறுகிறது. காற்று இம்மேகங்களை எடுத்துச் சென்று உலகம் முழுவதும் நீராவியைப் பரவச்செய்கிறது. மேகங்களால் ஈரப்பதத்தை தாங்கிக் கொள்ள முடியாத போது அது மழை அல்லது பனிவடிவில் விடுவிக்கப்படுகிறது. இந்நீர் நிலத்தினடியில் ஊடுருவிச்சென்று தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கிறது அல்லது நேரடியாக ஏரிகள், ஓடைகள் மற்றும் ஆறுகளில் கலக்கிறது.” (சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.24) இத்தகைய நீரியல் சுழற்சி அறிவினைப் பழந்தமிழர் பெற்றிருந்தனர். நற்றிணை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், கார்நாற்பது ஆகிய பழந்தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

**“குணகடல் முகந்து, குடக்குபு ஏர்பு இருளி,**
**மண்திணி ஞாலம் விளங்க, கம்மியர்**
**செம்பு சொரி பானையின் மின்னி, எவ்வாயும்**
**தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி” (நற்.153:1-4)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

'கதிரவன் கடல் நீரை முகந்து மழை பொழிதல்' என்னும் அறிவியல் நிகழ்வு நற்றிணையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**"கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி**
**குடமலை யாகத்துக் கொள்ளப்(பு) இறைக்கும்"** (**கார்நாற்பது**, **பாடல்**.33)

என்ற பாடற்குறிப்புகள், கடல்நீர் மேகமாக மாறி, மேற்குமலையில் மழையைத் தந்த செய்தியைத் தெரிவிக்கிறது.

**"பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,**
**கோடுகொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"**
**((முல்லை.**4-5)

பனிக்கடலைப் பருகிய பின் வலமாக சூழ்ந்த மேகம் மழையாக பொழிகிறது என அறியப்படுகிறது.

**"நிறையிரும் பெளவம் குறைபட முகந்து கொண்டு,**
**அகல் இரு வானத்து வீசுவளி கலாலின்"**
**(குறிஞ்சி.**47-48)

குறிஞ்சிப்பாட்டு கடல்நீரை மேகம் முகந்து எடுக்கும் அறிவியல் நிகழ்வை காட்சிப்படுத்தியுள்ளது.

**"திரையிரும் பனிப்பெளவம் செவ்விதா அறமுகந்து,**
**உரஉரும் உடன்று ஆர்ப்ப, ஊர்பொறை கொள்ளாது"**
**(பரி.**7:1-2)

பரிபாடலும் நீரை முகக்கும் நிகழ்வுடன் மழையானது இடியுடன் பொழியும் நீரியல் சுழற்சியை நீர் அறிவியலுடன் சான்று பகர்கின்றது.

**மழை வளம்**

நீர்பெருக்கம் பூமியை வளப்படுத்துகின்றது. உயிர்களுக்கும், பயிர்களுக்கும் தேவையான திரவப்பொருள் மழை. மழை, மண் குளிர பெய்தால் பயிர் நன்கு விளையும் என்று அநானூறு சுட்டுகின்றது.

**"மண்கண் குளிர்ப்ப, வீசித் தண் பெயல்**
**பயன்நிலம் குழைய வீசிப் பெயல் முனிந்து"** (**அகம்**.23)

'பயன்நிலம் குழைய' என்று மழையின் மாண்பு பேசப்பட்டுள்ளது. மழை நீர்ப் பெருக்கம், கடலில் சென்றடைகின்றது. ஆறும் கடலும் கலக்கும் சூழலியல் நிலைப்பாடு மலைபடுகடாமில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**"தூர்மலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்,**
**மீமிசை நல்யாறு கடல் படர்ந்தா அங்கு"** (**மலை**.51-52)

நீர் வளம் உயிரிப்பன்மையத்தின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் ஆதாரமாகின்றது. நல்ல ஆறு கடலில் கலப்பதாக மலைபடுகடாம் சுட்டுவது மாசற்ற நீராகும். இன்றைய நிலைப்பாட்டில் கழிநீர் தான் கடலில் கலக்கின்றது. "கடந்த அரை நூற்றாண்டில் மனித இனம் நீர் நிலைகளை ஆச்சரியப்படுத்தும் அளவில் மாசுபடுத்தியுள்ளது. மூன்றாம் உலகநாடுகளில் உருவாக்கப்படுகிற கழிவுநீர் எந்த சுத்திகரிப்பும் இல்லாமல் ஆறுகளிலோ, ஓடைகளிலோ அல்லது கடல்களிலோ விடப்படுகிறது." (சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.24) சங்கப்பாக்கள் உண்ணுதற்கு ஏற்ற நீர்நிலைகள் என்றே சான்றளிக்கின்றன.

**“உண்துறை மகளிர் இரிய, குண்டுநீர்**
**வாளை பிறழும் ஊரற்கு”**

**(நற்.மரு**.310:3-4)

மாசற்ற நீர்வளத்தால் உண்டான மீன்வளம் நற்றிணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பில்”** **(குறுந்**.52:1)

மாசற்ற நீர்வளத்தால் ‘களிறு’ மகிழ்வு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**“விலங்கு மலைக்கவாஅன் கரும்புநடு பாத்தியன்ன**
**பெருங்களிற்று அடிவழி நிலைஇய நீரே”**

**(குறுந்**.262)

மேற்கண்ட பாடலடிகள் நீர்வளத்தால் விலங்கினம் மகிழ்வடைவதைச் சுட்டுகின்றன.

**நீர்மாசு பற்றிய பதிவுகள்**

நீர்மாசடைவது உயிரின வாழ்விற்குக் கேடு பயப்பன என்பதனை பழந்தமிழர்கள் உணர்ந்திருந்தனர். இந்த நூற்றாண்டில் நீர் சுகாதாரமின்மை அச்சுறுத்தும் அபாயமாகும். “சுத்தமில்லாத குடிநீரினால் வருடத்திற்கு 2 கோடிப்பேர் உலகம் முழுக்க இறந்து போவதாக உலகளாவிய சுகாதார அமைப்பு தெரிவிக்கின்றது.” (சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.24)பழந்தமிழ் இலக்கியத்தில் சுகாதாரமற்ற நீர் குறித்தப் பதிவுகளை மாசு குறித்த விழிப்புணர்வாக கருதலாம்.

**“படுசுடர் அடைந்த பகுவாய் நெடுவரை**
**முரம்புசேர் சிறுகுடி, பரந்த மாலை,**
**புலம்பு கூட்டுண்ணும் புல்லென மன்றத்து**
**கல்லுடைப் படுவில் கலுழி தந்து,**
**நிறைபெயல் அறியாக் குறைத்து ஊண் அல்லில்”** **(நற்**.33)

நற்றிணைப் பாடல், கற்குழிகளில் தேங்கியிருக்கும் கலங்கல் நீர் அங்குள்ள மக்களுக்கு குடிநீராகப் பயன்பட்டதைக் குறிப்பிடுகின்றது.

**“நீர்நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து**
**பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்று”** **(அகம்**.18)

அகநானூறு பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கவை. நீர்மாசு, நீரின் தன்மையை மாற்றும் என்பது அப்பாடலின் வெளிப்படை. குறிஞ்சி நிலத்தின் காட்டாறு மாசடைந்து நிறம் மாறுபட்டுள்ளது.

தூய்மையற்ற நீர்த்துறையை உண்ணுதற்குப் பயன்படுத்தியதை புறநானூறு பதிவுசெய்துள்ளது.

**“சேறொடுபட்ட சிறுமைத் தாயினும்**
**உண்ணீர்”** **(புறம்**.204)

முற்றிலும் மாசடைந்த நீர் உண்ணுவதற்கு உதவாது. 21ஆம்நூற்றாண்டில் நீர்நிலைகள் இந்நிலையில் தான் உள்ளன. “இந்தியாவில் 75 சதவீத ஆறுகள் மற்றும் ஏரிகள் அவைகளைக் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்த முடியாத வகையில் மாசுபட்டுள்ளன.” (சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.25)

சுற்றுச்சூழல் மாசுடையும் தொடக்க நிலைப் பதிவுகளாக மேற்கண்டவைகளை உணரலாம். விலங்குகளும் கலங்கிய நீரை உண்டதை புறநானூறு பதிவுசெய்துள்ளது.

**"களிறு பொரக் கலங்கு.......**
**அரிதுண் கூவல்"** (புறம்.306:1-2)

உவர் நீரை மனம் வெதும்பிய நிலையில் தலைவி உண்டதை அகநானூறு பாலைதிணைப்பாடல் பதிவுசெய்துள்ளது.

**"வெயில்தின வருந்திய, நீடுமருப்பு ஒருத்தல்,**
**பிணர்அழி பெருங்கை புரண்ட கூவல்**
**தெண்கண் உவரிக் குறைக்குட முகவை,**
**அறனிலாளன் தோண்ட, வெய்து உயிர்த்து,**
**பிறைநுதல் வியர்ப்ப, உண்டனள் கொல்லோ"**

(அகம்.207)

மாசுபட்ட குடிநீர் தீமை பயக்கும் என்பதனை பழந்தமிழர்கள் உணர்ந்துள்ளனர். மாசு பற்றிய அறிவு பழந்தமிழருக்கு இருந்துள்ளதையே மேற்கண்ட பாடல்கள் சான்று பகர்கின்றன.

**நீர்மாசு போக்குதல்**

நிலத்தால் திரிந்துபோன நீரின் சுவையை மேம்படுத்த தமிழர்கள் நெல்லிக் கனியினைப் பயன்படுத்தினர். கிணற்றுநீர் உவராக இருப்பின் அதனுள் நெல்லி வேரினை இட்டனர். ஊரணியின் கரைகளில் நெல்லி மரத்தை வளர்த்தனர். நீரைத் தூய்மைப்படுத்திப் பருகியுள்ளனர். இயற்கை சுவையேற்றுத்திறன் இன்று இல்லை. "இன்று நீரைச் சுத்தப்படுத்த இராசாயன வேதிப்பொருள்கள் பயன்படுத்தப் படுகின்றன. படிகாரம், குளோரின் போன்றவை இவற்றுள் அடங்கும். பொட்டாசியப் படிகளும் மருத்துவத்தின் புண்களை ஆற்றவும், காகிதத் தொழிலிலும் நீரைச் சுத்தமாக்கவும், பெட்ரோலியத்தின் நாற்றத்தை அகற்றவும் பயன்படுகிறது...." (கலைக்களஞ்சியம், தொகுதி6, ப. 533.) செயற்கையான நீர்சுவையூட்டல் ஆபத்து தான்.

செம்மண் நிலத்தில் ஊறிய நீரைச் சிறிய பானையில் வைத்து தெளிந்த நீரைப்பிரித்துப் பயன்படுத்தியுள்ளனர்.

**"பூவிற் படுவில் கூவல் தோண்டிய**
**செங்கண் சில்நீர் பெய்த சீறில்**
**முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி**
**யாம் கஃடு உண்டென, வறிது மாசு இன்று"** (புறம்.319:1-4)

என்ற அடிகள் விளக்குகின்றன. மண்ணால் கலங்கிய நீரைத் தூய்மை செய்யவேண்டித் தேற்றா வித்தினை இட்டுள்ளர். அவ்விதை நீரைத் தெளிவாக்கியுள்ளது. அதன் பின் பயன்படுத்தியுள்ளனர்.

**"கலம்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்**
**கலங்கிய நீர்போல் தளிந்து"** (கலி.142:62-63)

நீர் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு சுட்டப்படுகின்றது. கூதிர் காலத்தே இளையோரும், முதியோரும் இடத்தின்கண் உள்ள தண்ணீரைப் பருகாமல், தூபமூட்டியிலுள்ள நெருப்பின் வெம்மையினால் ஆக்கிய வெந்நீரைப் பருகியுள்ளனர். இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"கல்லென துவலை தூவலின், யாவரும்**
**தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்,**
**பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர"** **(நெடுநல்.64-67)**

என்ற பாடலடிகள் விரித்துரைக்கின்றன. பழங்காலத்தில் நீர் சுகாதரத்திற்கு இயற்கை முறைகளை கையாண்டுள்ளனர். தற்போது தண்ணீரைச் சுத்தம் செய்து வழங்குவதாகப் பல வியாபார நிறுவனங்கள் விளம்பரம் செய்தாலும், பெரும்பாலும் அவை கெடுதலையே செய்கின்றன. "நிலத்தடி நீரையெடுத்து அதனை 'ரிவர்ஸ் ஒஸ்மாசிஸ்' என்ற முறையின் கீழ் சுத்திகரிக்கும்போது இயற்கையாகத் தண்ணீரில் இருக்கும் அனைத்துத் தாது உப்புகளும் பிரிக்கப்பட்டு தண்ணீரின் இயற்கையான சுவை குறைந்துவிடுகின்றது. சுவை குறைந்த தண்ணீரைச் சுவையாக்குவதற்காக 'ஓசோனைஸ்' செய்து சுவையேற்றுகின்றார். இந்த 'ஓசோனைஸ்' செய்யப்பட்ட தண்ணீரைத் தொடர்ந்து பயன்படுத்தினால் பற்கள், எலும்புகள் பொடிந்துப்போகும் எனவும், உறுதித்தன்மை குறைந்துபோகும் எனவும் மருத்துவர்கள் கூறுகிறார்கள்" (வசந்தராணி, பாட்டில் தண்ணீர் தொடரும் அபாயம், ப.7.)நீர் பற்றாக்குறையும், தரமற்ற குடிநீரும் இன்றைய வாழ்வுக்குச் சாபகேடு. இயற்கை சுத்திகரிப்பு முறையை கையாள பழந்தமிழ் நூல்கள் வழிகாட்டுகின்றன.

**மழைநீர் சேகரிப்பு (Rain Water Harvesing)**

எதிர்கால பயன்பாட்டிற்காக மழைநீரைச் சேமித்து வைப்பது மழைநீர் சேமிப்பு எனப்படும். "மழைநீர் சேகரிப்பு இரண்டு முக்கிய முறைகளில் நடைபெறுகிறது. மழைநீரைப் பாத்திரங்களிலும் தொட்டிகளிலும் நேரடியாக சேமித்து குடிப்பதற்கும், சமைப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்துவது ஒருமுறையாகும். இரண்டாவது முறையில் நீர் கசிந்து நிலத்தினுள் செல்லும் பள்ளங்கள் உருவாக்கப்பட்டு, அதில் மழை நீர் சேகரிக்கப்பட்டு நிலத்தினுள் கசிந்து செல்ல அனுமதிக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீரின் அளவு அதிகமாகிறது." (என். ஆறுமுகம், வி. குமரேசன், சுற்றுச்சூழல் கல்வி, ப.230) முற்காலத்தில் குளங்களில் நீரைத் தேக்கி வைத்துள்ளனர். ஊர்ப் பொதுக்குளங்கள் கரைகள் உயர்த்தப்பட்டு,

"கொளக் குறை படாஅக் கோடுவளர் குட்டத்து" **(அகம்.162:1)**

அதன்வழி மழைநீரைச் சேமிக்கும் விழிப்புணர்வு இருந்துள்ளது. "குளங்கள், ஏரிகள், நீர்ப்பாசன குளங்கள், தெப்பக்குளங்கள், போன்ற நீர்ப்பிடிப்புகளில் மழைநீர் சேகரிக்கப்படுகிறது. இது ஒரு பழங்கால முறையாகும்." (என். ஆறுமுகம், வி. குமரேசன், சுற்றுச்சூழல் கல்வி, ப.230). இரவு பகலாகத் துயிலாது குளங்களைப் பாதுகாத்தனர். இதனை,

**"………….. ஈங்கைத்**
**துய் அவிழ் பனிமலர் உதரவீசித்**
**தொழில்மழை பொழிந்த பானாட் கங்குல்**
**எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்**
**பெருங்குளம் காவலன் போல"** **(அகம்.252:9-14)**

என்ற அகநானூறு பாடல் சான்று பகர்கின்றது. இந்நூற்றாண்டில் நீர் நிலைகளின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. "புதுடெல்லியில் பெருகிக் கொண்டிருக்கும் குடிசைப்பகுதிகளை கடந்து செல்லும் புகழ் பெற்ற யமுனை ஆறு ஏறக்குறைய அழிந்தே போய்விட்டது அல்லது கொல்லப்பட்டுவிட்டது……. லட்சணக்கான மக்கள் வழிபட்டுவரும் புனித கங்கை ஒரு திறந்த சாக்கடையாக விளங்குகிறது." (சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.25)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஓடும் நீரைத்தேக்கி வைத்தால் மழையில்லாத காலங்களில் பயன்படுத்தலாம் என்ற அறிவு அன்றைய மக்களிடம் இருந்துள்ளது. அணைகட்டும் தொழில்நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். குளங்களில் நீரைத்தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்தியதை,

**“குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்”** **(புறம்.33:5)**

**“பெருங்குள மடைநீர் விட்டென”** **(நற்.340)**

**“மிகுபெயல், உப்புச்சிறைநில்லா வெள்ளம் போல”** **(அகம்.208)**

**“சிறை அழிப் புதுப்புனல் ஆடுகம்”** **(ஐங்.78)**

என்ற பாடலடிகளில் சுட்டப்படும் ‘சிறை’ என்பது மழைநீரை ஓரிடத்தில் அகப்படுத்தல் என்பதாகும். மழைநீர் சேகரிப்பு நுட்பம் தெரிந்தவர்களாக பழந்தமிழர் இருந்துள்ளனர்.

இயற்கையாகக் கிட்டும் மழைநீரைப் பாதுகாக்க சுருங்கை (குழாய் போன்ற அமைப்பு) அமைத்துள்ளனர் பழந்தமிழர். இச்சுருங்கை யானையின் துதிக்கையைப் போன்று வெளிப்படும் நீரைச்சேகரிக்க உதவுகிறது. இக்குறிப்பினை பரிபாடல் பதிவு செய்துள்ளது.

**“நெடுமால் சுருங்கை நடு வழிப் போந்து**
**கடுமா களிறு அனைத்துக் கை விடு நீர் போலும்**
**நெடுநீர் மலி புனல் நீள் மாக் கூடல்”** **(பரி. 20.104-106)**

பழந்தமிழர் மழைநீரைச் சேகரித்துப் பயன்படுத்தியுள்ளனர் என அறியலாம்.

**நிலத்தடி நீர்வளம்**

மழை வளத்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்பது இயல்பு. சங்கமாந்தர்கள் நிலத்தடி நீரைப் பெற்றும் மகிழ்ந்துள்ளனர். நிலத்தடி நீர்நிலைகளை கூவல், கேணி, கிணறு என்று பல பெயர்களில் இலக்கியம் சுட்டுகின்றது. “தரையில் ஒரு குழி தோண்டினால், மேலாக உலர்ந்த மண் தென்படுகிறது. அதற்கு அடுத்து பல மீட்டர்கள் ஆழம் வரை ஈரமண் அமைந்திருக்கிறது. மேலும் ஆழமாகத் தோண்டினால், நீர் கசியத் தொடங்கி குழியில் நீர் சேருகிறது. எவ்வளவு ஆழத்தில் நீர்சேரத் தொடங்குகிறதோ அதை ஊற்றுநீர் மட்டம் என்கிறோம்.” (இளம்பாரதி (த.ஆ), நமது நீர்வளங்கள், ப.22.)

நீர்வளம் சற்றுக் குறைந்த பாலை நிலத்தில் கிணறு தோண்டப்பட்ட செய்தி பதிவுசெய்யப்பட்டுள்ளது. பசுக்கூட்டங்களுக்கு அந்நீர்நிலைகள் ஆதாரமாக இருந்துள்ளது. மிஞ்சிய நீரை யானை கூட்டம் உண்டுள்ளது.

**“வெயில் வெய்துற்ற பரல்அவல் ஒதுக்கில்,**
**கணிச்சியில் குழித்த கூவல் நண்ணி,**
**ஆன்வழிப் படுநர் தோண்டிய பத்தல்**
**யானை இனநிரை வௌவும்”** **(நற்.பாலை.240:6-9)**

**“கடற்றுஅடை மருங்கின் கணிச்சியின் - குழித்த**
**உடைக்கண் நீடுஅமை ஊறல் உண்ட**
**பாடுஇன் தெண்மணி, பயம்கெழு பெருநிரை”**

**(அகம்.399:6-8)**

**“சுரன் முதல் வருந்திய வருத்தம் பைபயப்**
**பாஅர் மலிசிறு கூவலின் தணியும்”**

**(நற்.41)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

என்ற பாடலடிகளின் வழி பாலைவழிச் செல்வோர் கூவலின் நீரை அருந்தினர் என்பதை அறியமுடிகிறது. ஆநிரைகளை மேய்க்கும் கோவலர் இந்நீர் நிலையைப் பயன்படுத்தினர்.

**"பயநிரை சேர்ந்த பாழ்நாட்டு ஆங்கண்**
**நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய**
**கொடுவாய்ப் பத்தல் வளர்ந்து உகு சிறுகுழி"**

**(அகம்.பாலை.155)**

கோவலர் தோண்டிய கிணற்றில் நீர் ஊறாத தன்மையால் அவற்றில் இலைச் சருகுகள் மூடிக் காணப்பட்டதை அகநானூறு பாலைத் திணைப்பாடல் பதிவுசெய்துள்ளது.

**"பரல்மண் சுவல முரண்நிலம் உடைத்த**
**வல்வாய்க் கணிச்சி, கூழார், கோவலர்**
**ஊறாது விட்ட உவலைக் கூவல்" (அகம்.பாலை.21)**

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த பாலையின் வறட்சியால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்த சூழலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நிலத்தடிநீர் மட்டம் சுற்றுச்சூழல் பாதிப்பால் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது என்ற உண்மைக்கான முன்னோட்டமாக மேற்கண்ட பதிவினைக் குறிப்பிடலாம்.

**சுகாதாரமான நீரும் - உடல்நல மேம்பாட்டுக்கான நீராடும் நிகழ்வும்**

அருவி, குளம், ஆறு, கடல் என்று பல்வேறு நீர்நிலைகளில் மக்கள் மகிழ்ந்து நீராடி மகிழ்ந்துள்ளனர். மாசு படாத நீரில் பல்வேறு விளையாட்டுக்களையும் விளையாடி உள்ளனர். "நீச்சல், பாய்ச்சல், மூழ்கல், நீச்சல் நடனம், கடலாடுதல், புனலாடுதல், தைந்நீராடல், மிதவை விளையாட்டுக்கள் ஆகியவை சங்ககால நீச்சல் விளையாட்டுக்களாகக் காணப்படுகின்றன. நீந்துதல் மற்ற எல்லா நீர் விளையாட்டுக்களிலும் நிகழும்." (செங்கை பொதுவன், பழங்கால விளையாட்டுக்கள், ப.84.)

குறுந்தொகைப் பாடல் ஆண்-பெண் இணைந்து அருவி நீராடியதைச் சுட்டியுள்ளது.

**"ஆர்கலி வெற்பன் மார்பு புணைஆக**
**கோடுஉயர் நெடுவரைக் கவாஅன், பகலே,**
**பாடுஇன் அருவி ஆடுதல் இனிதே" ((குறுந்..353:1-3)**

பெண்கள் நீரில் பாய்ந்து ஆடியதை ஐங்குறுநூறு சுட்டியுள்ளது.

**"ஒண்ணுதல் அரிவை பாய்ந்தென… குவளை**
**நூறித் தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே" (ஐங்.73)**

'நன்மை தரும் நீராடல்' என்று சுகாதாரமான நீர்நிலை சுட்டப்பட்டுள்ளது.

**"அலமரல் ஆயமொடு அமர்துணை தழீஇ**
**நலம்மிகு புதுப்புனல் ஆட," (ஐங்.64)**

மகளிர் தோழியரோடு நீராடியதை ஐங்குறுநூறு பதிவுசெய்துள்ளது.

**"புனல்ஆடு மகளிர்க்குப் புணர்துணை உதவும்" (ஐங்.15)**

புதுப்புனல் வரும்போது புனலாடுதல் பெருவழக்காக இருந்துள்ளது.

**"தலைப் பெயற் செம்புனல் ஆடி" (ஐங்.80)**

என்ற பாடலடிகள், கார்கால மழையால் உருவாகும் புதுவெள்ள நீராடுதலைக் குறிக்கின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பொதுவாக கடல் நீரில் உப்பு மற்றும் வேதிப் பொருட்களுடன் அண்டக் கோள்களின் ஆற்றலும் கலந்திருக்க வாய்ப்புள்ளது என்பர். இதனால் தான் கடலில் தினமும் குளிக்கக் கூடாது என்று வலியுறுத்துவர். உவர் நீராகிய கடல் நீர் உப்புத்தன்மை மிகுந்திருப்பதால் உடலைப் பிணி தாக்கும் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். உடலியல் கூற்றுப்படி கடலில் நீராடியதும் உடனே நன்னீரில் குளிக்க வலியுறுத்தப் படுகிறது. இக்கருத்தினைப் பட்டினப்பாலையில் காணலாம்.

**"தீது நீங்க கடல் ஆடியும்**
**மாசு போக புனல் படிந்தும்"** **(பட். 99-100)**
**"கடலாடிக் கயம்பாய்ந்து**
**கழிநெய்தற் பூக்குறூந்து.."** **(புறம். 339)**

இதன் வழி கடலில் கழிவுப்பொருட்கள் கலப்பதால் அவற்றை உபயோகிப்பது உடலுக்குத் தீங்காகும் என்ற சுகாதார நுட்பத்தை உய்த்துணர முடிகிறது.

சுகாதாரத் தூய்மைக்கு நல்லதாகும். நீராடல் உடலுக்கும், உள்ளத்திற்கும் உற்சாகம் அளிப்பவை.

**"பைஞ்சாய்க் கூந்தல்..........**
**தண் புனலாடி தன் நலம் மேம்பட்டனள்..."(ஐங். 70)**

புனலாடி 'நலம் மேம்பட்டாள்' என்று நீராடலின் நன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.

**"தண் அம்துவர் பல ஊட்டிச் சலம் குடைவார்**
**..........அப்புனல்**
**..........ஒண்தொடியார்**
**வண்ணம் தெளிர முகமும் வளர் முலைக்**
**கண்ணும் கழிய..........."** **(பரி. 10)**

பரிபாடல், உடல் தூய்மைக்கு 'இயற்கையான ஆற்றுநீரே' உதவும் என்கிறது. ஆற்றுநீரில் நீராடின் உடலுக்கு மருந்தாகும். இத்தகு நீர் மருத்துவ முறையினை நற்றிணை, பரிபாடல் பதிவுசெய்துள்ளது.

**"தைஇத் திங்கள் தண் தயம் படியும்**
**பெருந் தோட் குறுமகள்..........**
**மருந்து .............."** **(நற். 80)**
**"மருந்து ஆகும் தீம் நீர் மலி துறை மேய"** **(பரிதிர. 1)**

நீராடல் மருந்தாகும் என்ற மருந்தியல் சிந்தனை சங்கப்பாக்களில் பெறப்பட்டுள்ளது.

**சுனை நீராடல்**

சுனையிலுள்ள நீர் தெளிவாகப் பளிங்கை கரைத்து ஊற்றியது போல வீழ்வதால் மகளிர் நீராட ஏற்றதாக அமைந்துள்ளது எனக் குறிஞ்சிப்பாட்டு பதிவுசெய்துள்ளது.

**"மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென,**
**அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு தெள்நீர்,**
**அவிர் துகில் புரையும், அவ்வெள் அருவி,**
**..............................................................**
**பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி,**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**நளிபடு சிலம்பில், பாயம் பாடி,"** **(குறிஞ்சி. 47-58)**

குறிஞ்சி என்னும் மலைவளத்தில் உள்ள சுனையின் நீர்வளம் சுட்டப்பட்டுள்ளது.

**முடிவுரை**

நீர் அறிவியல் அறிந்த பழந்தமிழ் மக்கள் நீர் ஆதாரத்தைப் பேணியுள்ளனர். சங்கமாந்தர்கள் நிலத்தடி நீரைப் பெற்றும் மகிழ்ந்துள்ளனர். நீரின் சுழற்சி பற்றிய நீர் அறிவியல் நற்றிணை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பரிபாடல், கார்நாற்பது ஆகிய இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு பழந்தமிழகத்தில் முக்கியச்செயல்பாடாக இருந்தமை இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. நிலத்தடி நீர்நிலைகளைக் கூவல், கேணி, கிணறு என்று பல பெயர்களில் இலக்கியம் சுட்டுகின்றது. நீர் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வும் இலக்கியத்தின் வழி வெளிக்கொணரப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

1. https://ta.wiktionary.org/wiki/நீர்
2. https://www.merriam-webster.com/dictionary/water
3. https://www.brainkart.in/article/Hydrosphere_44642/
4. பிரைன் கார்ட்,சமூகஅறிவியல்) தமிழ்நாடு மாநில வாரிய சமச்சீர் கல்வி
5. சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.24
6. மேலது,
7. மேலது,
8. சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.25
9. கலைக்களஞ்சியம், தொகுதி6, ப. 533
10. வசந்தராணி, பாட்டில் தண்ணீர் தொடரும் அபாயம், ப.7
11. என். ஆறுமுகம், வி. குமரேசன், சுற்றுச்சூழல் கல்வி, ப.230
12. சா.சுரேஷ் (தமி.), நீராதிபத்தியம், ப.25
13. இளம்பாரதி (த.ஆ), நமது நீர்வளங்கள், ப.22.
14. செங்கை பொதுவன், பழங்கால விளையாட்டுக்கள், ப.84.)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 29. இருளர் பழங்குடிகளின் வாழ்வியலும் சமூகவியலும்

**முனைவர் ச.தனலெட்சுமி**,
உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி - 626123
DOI 10.5281/zenodo.17295225.

**Abstract:**

Although the origin of the human race is the final stage of evolution, in a human society that has undergone many stages of change, tribal people have been living without being subjected to the pressures of civilization and have been living with hunting as their primary occupation. Anthropologists have various views on the origin of tribes. The purpose of this article is to study the life and sociology of the Irular tribes among the tribal people found in the Nilgiris district of Tamil Nadu.

**KeyWords :** Tribes - Social - Civilization - Irular - Nilgiris

பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையே மனித இனத்தின் தோற்றம் என்றாலும் பல நிலை மாற்றம் கொண்டு வாழும் மனித சமுகத்தில் பழங்குடி மக்கள் நாகரீக உந்துதல்களுக்கு ஆட்படாமல் வேட்டைத் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.மானிடவியல் அறிஞர்கள் பழங்குடிகளின் பூர்விகம் பற்றிப் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் காணப்படும் பழங்குடி மக்களில் இருளர் பழங்குடிகளின் வாழ்வியலும் சமூகவியலும் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## பழங்குடிகள்

“Tribe” எனும் ஆங்கிலச் சொல்லின் மொழிப்பெயர்ப்பாகப் "பழங்குடி" எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது." இனக்குழு மக்கள்" என்றும் "மலைவாழ்மக்கள்" என்றும் இச்சொல்லுக்கு வேறு மொழிப்பெயர்ப்புகள் தமிழறிஞர்களால் கூறப்படுகின்றன.வெரியர் எல்வின்,லூயில் போன்றோர் “ Tribe “ எனும் சொல்லை நாகரிகத்தில் பின்தங்கியவர்கள் எனும் பொருளிலேயே பயன்படுத்துகின்றனர்.டி.என் மஜீம்தார் இச்சொல்லின் பொருள் தெளிவின்றி இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.[1] இச்சொல் பண்பாட்டிலும் மொழியிலும் ஒரு நிலையுடைய ஒரு குழுவினரைக் குறிப்பதாக அவர் விளக்கம் கூறியுள்ளார்.

"பழங்குடி எனும் சொல் முதன்மை நிலையையும் வளர்ச்சியடையாத பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் குழுவைக் குறிக்கின்றது.மேலும் பொதுவான பெயரையும்,குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் தன்மையையும் ஒரு மொழியைப் பேசும் இயல்பையும் திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலக்குகளைக் கொண்டு விளங்கும் தன்மை உடையவராய் ஒருவருக்கொருவர் கட்டுப்பாட்டுடனும் பொருட்களைப் பரிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடிகள் என்று பக்தவச்ல பாரதி கூறியுள்ளார்.”[2]

## வாழ்வியல்

மனிதனின் "அன்றாட செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், பொருள், உளவியல் தேவைகள், பொழுது போக்குகள், உறவாடல்கள் வேலை குடும்ப சுழற்சிகள் என வாழ்க்கையின் நாளாந்த அம்சங்களை வாழ்வியல் குறிக்கின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பொருளாதாரம், சூழலமைவு, தனிமனித நிலைகளைக் கடந்து அன்றாடம் ஒவ்வொரு மனிதனும் செய்யும் செயற்பாடுகள் பல உள."[3] என்று விக்கிப் பீடியா வாழ்வியல் குறித்து விளக்கம் தருகிறது.

**சமூகவியல் (Sociology)**

"சமூகவியல் என்பது மனித சமூகம்,சமூக உறவுகள், சமூக நடத்தைகள், சமூக அமைப்பு முறை,சமூக வாழ்க்கை முறை ஆகியவற்றை அறிவியல் நோக்கில் ஆயும் ஓர் இயல் ஆகும்."[4] சமூகவியலின் தந்தை ஆகஸ்ட் கோம்ட் (August comte) என்ற பிரெஞ்சு மெய்யியலாளர் ஆவார்.

"சமூகவியல், மனித சமூகங்கள் ,அவற்றின் தொடர்புகள் மற்றும் அவற்றைப் பாதுகாக்கும் ஒரு சமூக அறிவியல்,சமூகவியல் ஒரு பொதுமைப்படுத்தும் சமூக அறிவியலாக மானுடவியலால் மட்டுமே அதன் அகத்தை விஞ்சுகிறது.தொல்லியல், இயற்பியல், மானுடவியல் மற்றும் மொழியியல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு துறை"[5] என்று பிரிட்டானிக்கா சமூகவியலை வரையறை செய்கிறது.

**இருளர் - வாழிடம்**

தமிழகத்தில் உள்ள் 36 வகையான பழங்குடிகளில் மிகுதியான மக்கள் தொகை கொண்டவர்கள் இருளர்கள் ஆவர்.இப்பழங்குடிகள் தமிழக மாவட்டங்களில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

**இருளர்**

இருளர் (Irulas) எனப்படுவோர் தமிழ்நாட்டின் கோவை மாவட்ட்த்திலும்,கேரளத்திலும் வசிக்கும் பழங்குடியினர் ஆவர்.இவர்கள் காடு சார்ந்த வாழ்வியலுக்கு பழக்கப்பட்டவர்கள் குறிப்பாக பாம்பு, எலி போன்றவற்றைப் பிடிப்பதிலும், அரிய பல வகை மூலிகைகள் சேகரிப்பதிலும் விசத்தை முறிக்கும் மருந்து கொடுப்பதிலும் தேர்ந்தவர்கள்.இவர்களின் சமுதாயப் படிநிலை மிகவும் தாழ்த்தப்பட்ட ஒன்றாகும்.ஆகையால் இவர்கள் பழங்குடியினர் (Scgeduled Tribe) என இந்திய அரசால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களது எண்ணிக்கை தோராயமாக 25,000 நபர்கள் என கணித்துள்ளனர்.இவர்களின் மொழிவழக்கு இருளா மொழி என்றும் கூறப்படுகிறது.

**இருளர் பெயர்க் காரணம்**

இருளர் என்பது தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் இருண்ட மக்கள் என்று பொருள்படும்.இது இருள் என்ற மூல வார்த்தையிலிருந்து பெறப்படுகிறது.இது இருண்ட (கருமை) தோல் நிறத்தைக் குறிக்கிறது.

"இருளர்" என்னும் பெயர் இருட்டு அல்லது இரவு என்னும் பெயரிலிருந்து வந்தது.இந்த இருளர் என்னும் பெயர் இருளர்களின் உடல்நிறமாகிய கருமை நிறத்தாலும்,அவர்கள் இருள் நிறைந்த நிறத்தாலும் சுட்டப்படுகிறது.

**இருளர் சமூகம்**

இருளர் இன ஆண்கள்,பெண்களின் வார்த்தையை எதிர்பார்த்தே செயல்படுகின்றனர். வேட்டைக்கு ஆணும் பெண்ணும் சேர்ந்தே செல்கின்றனர். இருளர் இனப் பண்பாட்டில், ஆணும், பெண்ணும் எங்கும் இணைந்தே செல்கின்ற வழக்கம் உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வேட்டையில் பெண்கள், ஆண்களை வழி நடத்திச் செல்கின்றனர். இவர்களின் ஒட்டுமொத்த சமுதாய குல தெய்வமாகிய "கன்னியம்மா தெய்வம்" தான்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தினமும் வேட்டையின் போது வழிகாட்டி வருவதாக நம்பிக்கை கொண்டு வணங்குகிறார்கள் என இளைஞர் சமூகம் கி.மல்லிகா,இரா.ஜெயந்தி தமது கட்டுரையில் கூறியுள்ளார்கள்.

**உணவு முறை**

இருளர்கள் தங்களுக்கான உணவைக் காடுகளிலும்,சமவெளிப் பகுதியிலும் சேகரிக்கின்றார்.இவர்கள் உண்ணும் உணவை இறைச்சி வகை கிழங்கு வகை,காய்,கனி வகை, கீரை வகை எனப் பிரிக்கலாம். இருளர்கள் காட்டுப்பகுதிகளில் வேட்டையாடிய எலி, அணில், முயல், உடும்பு, காட்டுப்பூனை, கீரிப்பிள்ளை, மரநாய், ஆமை போன்றவற்றின் இறைச்சிகளைப் பிற இன மக்களுக்கு விற்கவும் ,தங்களது உணவுக்கு பயன்படுத்துகின்றனர். கிழங்கு வகைகளை சேகரித்து உண்கின்றனர் மற்றும் பல்வேறு வகையான காய், கனி, கீரை வகைகளையும் தம் உணவில் சேர்த்துக் கொள்கின்றனர்.

**மருத்துவ முறைகள் - எலும்பு முறிவு**

இருளர்களில் மருத்துவ முறையில் கைதேர்ந்த வல்லுனர்கள் உள்ளனர்.இவர்கள் வேட்டைத் தொழிலுக்குச் செல்லும் பொழுது பிற விலங்குகளின் அச்சுறுத்தலால் ஏற்படும் விபத்துக்களிலும் ,இவர்களுள் கள்ளு,சாராயம் குடித்து விட்டு அடித்துக் கொள்ளும் பொழுதும் கைகளால் முறிவு ஏற்படுகிறது.எப்படிப்பட்ட எலும்பு முறிவுக்கும் எலும்பொட்டித் தழையையும் ஆட்டுப் பாலையும் சேர்த்து அரைத்து முறிவு ஏற்பட்ட பகுதியில் தடவி அவற்றின் மீது மூங்கில் பட்டையை வைத்து அதன் மேல் பழைய துணியை நார் போல் கிழித்து நன்கு இருக்கிக் கட்டுகின்றனர். கட்டிய பின்னர் காலை,மாலை இரண்டு வேலையும் அதன் மீது உளுந்துமாவை அரைத்துப் பூசுவர். இவ்வாறு ஒரு வாரம் செய்து முடித்தவுடன் உடைந்த எலும்பானது ஒட்டிக் கொள்கின்றது. பிறகு இயல்பான நிலைக்கு வந்து விடுகின்றனர்.

**பாம்புக்கடி**

பாம்பு வகைகளில் நல்லப் பாம்பு கண்ணாடி விரியன் போன்ற பாம்புகள் அதிக நச்சுத்தன்மை உடையனவாகும்.இவை கடித்தால் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்திற்குள் கடிபட்டவர் இறந்து விடுவார்.இவைத் தவிர சுருட்டைப்பாம்பு கடித்தால் உடல் முழுக்கத் திட்டுத் திட்டாக வீங்குவதும் வலி அதிகமாகவும் இருப்பதே அறிகுறி.இதற்கு இருளர்கள் மருந்து தருகின்றனர்.நல்ல பாம்பு கடித்தால் நாட்டு மூலிகை இலைகளை வாங்கி வந்து அவற்றை நன்கு காய வைத்து இடித்து வைத்துள்ளனர்.அந்த மருந்தில் குறிப்பிட்ட அளவு எடுத்து மூன்று வேலைக்கும் கொடுக்கின்றனர். சுருட்டைப் பாம்பு கடித்தால் பெரியாநங்கை இலையைக் கொஞ்சம் பறித்து அவற்றுடன் பனைவெல்லத்தைச் சேர்த்து மருந்தாக உட்கொள்ளக் கொடுக்கின்றனர்.கண்ணாடி விரியன் பாம்பு கடித்தால் அதற்கென மலைப்பகுதிகளில் தும்பைப் பூ வடிவில் பெரிய அளவில் மஞ்சள் நிறத்தில் பூக்கக் கூடிய பூச்செடியின் விதையைக் குறிப்பிட்ட அளவு மருந்தாகக் கொடுக்கின்றனர்.இது எள் போன்று கறுப்பாகவும் சிறியதாகவும் காணப்படும் இச் செடியை இருளர்கள் வசிக்கும் பகுதியில் ஏரிக்கரை மேட்டில் வளர்த்து வருகின்றனர்.

**தொகுப்புரை**

- Tribe எனும் ஆங்கிலச் சொல்லின் மொழிப்பெயர்ப்பாகப் "பழங்குடி" எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது.
- .சமூகவியல், மனித சமூகங்கள் ,அவற்றின் தொடர்புகள் மற்றும் அவற்றைப் பாதுகாக்கும் ஒரு சமூக அறிவியல்,சமூகவியல் ஒரு பொதுமைப்படுத்தும் சமூக அறிவியலாக மானுடவியலால் மட்டுமே அதன் அகத்தை விஞ்சுகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

- தமிழகத்தில் உள்ள 36 வகையான பழங்குடிகளில் மிகுதியான மக்கள் தொகை கொண்டவர்கள் இருளர்கள் ஆவர்.
- இருளர்களின் வாழிடம் உணவுமுறை மருத்துவமுறை போன்ற வாழ்வியல் கருத்துக்களை அறியமுடிகின்றன.

**சான்றெண் விளக்கம்**


1. D.N.Majumdar, The Bodo - Speaking Tribes of the Garohills, Tribal situtating in India, Vol, 136-p-265
1. பக்தவத்சல பாரதி,பண்பாட்டு மானிடவியல் பக்-303-305
2. https://ta.wikipedia.org>wiki> வாழ்வியல்
3. Sociology,The American Heritage Science Dictionary
4. https://www.britannica.com>Humanities
5. எட்கர்தர்ய்டன்(தமிழில் - க.ரத்தினம்)தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,தொகுதி - ப - 483
6. கி.மல்லிகா & இரா.ஜெயந்தி,கிருஷ்ணகிரி மாவட்டம் கொல்லப்பள்ளி வனதேவதை அய்யனார் கோயில் வழிபாடு(கட்டுரை) ப - 88



http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

*MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai*
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை
SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 30. முடியரசன் கவிதைகளில் மொழி ஆளுமை

**திருமதி ஏ.பாரதி பிரபா**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
தி ஸ்டாண்டர்ட் பயர்வொர்க்ஸ் ராஜரத்தினம்
பெண்கள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

**முனைவர் பா.பொன்னி**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்டாண்டர்ட் பயர்வொர்க்ஸ் ராஜரத்தினம்
பெண்கள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

DOI 10.5281/zenodo.17295317.

**Abstarct**

Language is the identity of a society. It has its own nature, literary taste, flavor, culture, and grammatical structure. If a creator wants to identify themselves within that language, their work must contain all these elements. Only then can they be considered a great linguistic figure. This essay shows that all these elements are evident in the works of the poet Mudiyarasan

**KeyWords** : Society - Mudiyarasan - Culture - Grammatical Structure - Language - - personality - ability - creativity - language - love

## முன்னுரை

மொழி ஆளுமை என்பது ஒரு மொழியில் ஒருவருக்கு இருக்கும் ஆற்றல், திறமை மற்றும் செல்வாக்கு ஆகியவற்றைக் குறிக்கிறது. இது வெறும் மொழியைப் பேசுவது அல்லது எழுதுவதைக் கடந்து, அந்த மொழியைத் திறம்படப் பயன்படுத்துவதையும், அதன் நுட்பங்களை முழுமையாகப் புரிந்துகொள்வதையும் உள்ளடக்கியது ஆகும். முடியரசன் அவர்கள் தன்னுடை படைப்பின் மூலம் மொழியின் திறனையும் ஆளுமையையும் வெளிப்படுத்துகிறார்.

## மொழி

மொழி (Language) என்பது மனிதர்கள் தங்கள் எண்ணங்களையும், உணர்வுகளையும், கருத்துகளையும் பரிமாறிக்கொள்ளப் பயன்படுத்தும் ஒரு கருவி. இது ஒலிகள், சொற்கள், வாக்கியங்கள் மற்றும் சைகைகளின் தொகுப்பாகும்.

ஒர் இனத்தின் பண்பாடு, கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் என அனைத்தும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுவதற்கு முக்கியக் காரணமாக இருப்பது **மொழி**. மொழி, கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு கருவியாக மட்டும் இல்லாமல், ஒரு சமூகத்தின் தனித்துவமான அடையாளமாகவும் திகழ்கிறது. இதுவே மொழியின் முக்கியத்தௌவமாகப் பயன் படுகிறது

## முடியரசன் படைப்பில் மொழி ஆளுமை

ஒவ்வொரு கவிஞனும் தான் வாழும் காலத்தின் குரலாகவே இருக்கிறான். முடியரசன் காலத்தில் தமிழ்நாட்டில் வேற்று மொழி மோகம் அதிகமாக இருந்தது. பிற மொழி கலப்பால் தமிழ் மொழி தனது தனித்தன்மையை இழந்து வந்தது. இதன் காரணமாக, தமிழ்ப் பண்பாட்டில் அன்னியப் பண்பாட்டின் தாக்கம் மிகுதியாக இருந்தது. சமூகத்தில் சாதிப் பிரிவுகளும், போலிச் சடங்குகளும் பெருகின. சுயநலம் கொண்ட பணக்காரர்களால் உழைக்கும் மக்கள் சுரண்டப்பட்டனர். உண்மை, உழைப்பு, காதல், நேர்மை போன்ற மனித மாண்புகள் மதிப்பு இழந்தன. இத்தகைய கொடுமைகளை எதிர்த்துக் கவிஞனின் மென்மையான உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடே கவிதைகள். இவை சமூகத்தின் அவலங்களை அகற்றி, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களைப்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

போராட்டத்துக்கு அழைக்கும் போர் முரசுகளாக ஒலித்தன. பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் கவிதைகளைப் போலவே, முடியரசனின் கவிதைகளும் இத்தகைய சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் பிறந்தவையே. மேலும், தாய்மொழியைப் பாதுகாப்பது தாயைப் பாதுகாப்பது போன்றது என்றும், மொழியின் உணர்வை இழந்தால் வாழ்வின் உணர்வு அற்றுப்போகும் என்றும், நாட்டைப் பற்றிய உணர்வு பறிபோகும் என்றும் அவர் கூறுகிறார். இத்தகைய கருத்துகள் முடியரசனின் கவிதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

'முடியரசனின் படைப்புகளில், '**மொழியுணர்ச்சி**' எனும் கவிதை மொழிப்பற்றை ஆழமாக உணர்த்துகிறது. மேலும், இக்கவிதை தமிழ் மொழியின் தற்போதைய நிலையை எடுத்துக் கூறி, அதைக் காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.'

**இலைபொறுக்கும் நாயுடன்தன் திறமை காட்டி**
**எச்சிலுணும் மனிதனெனும் உருவங் கண்டும்,**
**குலைநடுங்கப் பெண்ணினத்தை அடிமை யாக்கும்**
**கொடுமையினைக் கண்மூடிப் பழக்கந் தன்னை**
**நிலைநிறுத்தப் பாடுபடும் நிலைமை கண்டும்,**
**நேர்மைபகுத் துணரறிவு கல்வி இல்லா**
**நிலையிருக்கக் கண்டிருந்தும் உணர்ச்சி காணா**
**நெஞ்சத்தார் மிக்குவரும் நாளில் இங்கு**
**ஈங்கதற்கா என்செய்யப் போகின் றீர்நீர்?**
---------------------------------------------------------
---------------------------------------------------------
**இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும்**

**(கவிதை தொகுப்பு, ப.20)**

கவிதையில், முடியரசன் தமிழ்ச் சமூகத்தில் காணும் பல அவலங்களைச் சுட்டிக்காட்டுகிறார். எடுத்துக்காட்டாக, மனிதர்கள் தங்களின் ஆற்றல்களைப் பயனற்ற வழியில் வீணடிப்பதையும், பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதையும், நேர்மையற்ற கல்விமுறையையும், உணர்ச்சியற்ற மனிதர்களையும் அவர் குறிப்பிடுகிறார். இவ்வாறு சமூகத்தில் பல அவலங்கள் நிலவும்போது, மொழிப்பற்றைப் பற்றிப் பேசுவது எங்ஙனம் பொருந்தும் என்று முடியரசன் இக்கவிதையில் ஒரு கேள்வியை எழுப்புகிறார்.

அந்நிய மொழிகளைக் கற்றுக்கொண்டு, தாய்மொழியில் பேச வெட்கப்படும் மனப்போக்கை இக்கவிதையில் முடியரசன் வன்மையாகக் கண்டிக்கிறார். மேலும், ஆட்சியாளர்கள் தமிழில் பேசுவதையும், தமிழுக்கு முக்கியத்துவம் தருவதையும் கண்டால்தான் உண்மையான மொழிப்பற்று உண்டாகும் என்று அவர் வலியுறுத்துகிறார். இறுதியாக, "இளைஞரினி விழித்தெழுந்தால் விடிவு தோன்றும்" என்று கூறி, இளைஞர்களின் விழிப்புணர்வு மட்டுமே தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் ஓர் விடியலைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையை விதைக்கிறார்.

தமிழ் மொழியின் தொன்மையையும், வளமையையும் தனது பாடல்கள் மூலம் எடுத்தியம்பினார். பிறமொழி ஆதிக்கத்தைக் கண்டித்து, தமிழ் மொழியின் தனித்துவத்தை நிலைநாட்டப் போராடினார் எனபதை தன்னுடைய மொழித்திறத்தால் வெளிப்படுத்துகிறார் என்பதைக் காணலாம்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

**"தாயே உயிரே தமிழே நினை வணங்கும்**
**சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே**
**தலை நின்றாய் இவ்வுலகில் தாள்பணிந்தேன்**
**நீயிங் கிலையென்றால் இன்பமெனக் கேது"**

கவிஞர் முடியரசன் இப்பாடலில், தமிழைத் தாயாகவும், உயிருடனும் கலந்தவளாகவும் கருதிப் போற்றுகிறார். மேலும், தமிழே தனக்குக் கிடைத்த அரிய செல்வம் என்றும், உலகிலேயே தலைசிறந்தது என்றும் கூறுகிறார். அவர், 'நீ இல்லை என்றால் எனக்கு இன்பம் ஏது?' என்று கூறி, தமிழின் பெருமையை உணர்த்தி, அதன் பாதங்களில் பணிந்து வணங்குகிறார்.

**மொழிப் பற்று**

தமிழ்நாட்டில், தாய்மொழியில் கல்வி கற்றால் அது இழிவு என நினைக்கும் மனப்போக்கு நிலவியது. படித்தவர்கள் என்று காட்டிக்கொள்ள ஆங்கிலம் கலந்தும், உயர்ந்த சாதியினர் என்று காட்டிக்கொள்ள சமஸ்கிருதம் கலந்தும் பேசும் வழக்கம் இருந்தது. தூய தமிழில் பேசுவதே குறைவு என்ற அறியாமை இன்றும் உள்ளது. அயல்நாடுகளில் வாழும் நீங்கள் தூய தமிழில் பேசுவதையும், எழுதுவதையும் கண்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். ஆனால், தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் கூட ஆங்கிலம் கலந்த 'தமிங்கில நடையில்' பேசும் நிலையை கண்டு வெட்கப்படுகிறோம். தொலைக்காட்சி, திரைப்படம், வானொலி, இதழ்கள் போன்ற ஊடகங்களில் நாள்தோறும் தமிழ் மொழி சிதைக்கப்படுகிறது. இந்த அவல நிலையைக் கண்டு நீங்கள் வேதனைப்படுகிறீர்கள் என்பதை நாங்கள் உணர்கிறோம். நாம் இப்போது அனுபவிக்கும் இந்த வேதனையை முடியரசன் அன்றே உணர்ந்து, இந்த இழிநிலை குறித்து எச்சரிக்கை செய்துள்ளார்.

தமிழனின் இயல்பான நடவடிக்கைகளான திருமணம், சாவுச்சடங்கு, இறைவழிபாடு ஆகிய எல்லாவற்றிலும் பிறமொழி நுழைவு கண்டு கொதிக்கிறார் முடியரசன்.

**மணவினையில் தமிழ்உண்டா? பயின்றார் தம்முள்**
**வாய்ப்பேச்சில் தமிழ்உண்டா? மாண்ட பின்னர்ப்**
**பிணவினையில் தமிழ்உண்டா? ஆவணத்தில்**
**பிழையோடு தமிழ்உண்டு. கோயில் சென்றால்**
**கணகணஎன்று ஒலியுண்டு ; தமிழைக் கேட்கக்**
**கடவுளரும் கூசிடுவர் ; அந்தோ ! அந்தோ !**
**அணுஅளவும் மொழியுணர்ச்சி இல்லா நாட்டில்**
**ஆத்திகரே இறையுணர்ச்சி வளர்வது எங்கே?**

தாய்மொழியில் வழிபாடு செய்யாவிட்டால் கடவுள் பக்தி கூட அழிந்துவிடும்" என்று முடியரசன் எச்சரிக்கிறார். மேலும், தமிழ் மொழியைக் காக்கப் போரிடுவதற்கு சிங்கம் போன்ற வீரர்களும், உணர்வும், மானமும் வேண்டும் என்கிறார். மொழி உரிமைப் போரில் உயிர்த் தியாகம் செய்த தாலமுத்து, நடராசன் போன்ற வீரர்களின் துணிவு அவசியம் என்றும் வலியுறுத்துகிறார்.'**அவளும் நானும்**' என்ற கவிதையின் மூலம் விளக்கிக் கூறுகிறார்.

கணவன் - மனைவி உரையாடலாக அமைந்த இக்கவிதையில், மனைவி தன் கணவனிடம், "நம் திருமணத்தின் போதும், கோயில்களிலும் தமிழ் ஒலி கேட்கவில்லை. குழந்தை பிறந்தபோதுகூடப் பைத்தியக்காரர்களைப் போல வேற்று மொழியில் பெயர்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வைத்தோம்" என்று குற்றம் சாட்டுகிறாள். இதைக்கேட்டு மனம் திருந்திய கணவன், தமிழ்மொழி காக்கச் சபதம் எடுக்கிறான்.

**தஞ்சம்என வந்தவரின் சூழ்ச்சி யாலே**
**தமிழ்வழங்காக் கோயில்உள்ளே தலையைக் காட்டேன்**
**எஞ்சிஉள்ள குழந்தைக்குத் தமிழ்ப்பேர் வைப்பேன்**
**இப்படியே என்வீட்டைத் தமிழ்வீடு ஆக்க**
**வஞ்சினமும் கொள்கின்றேன்.........**

அந்தக் கவிதையில், மனைவி தன் கணவனிடம் கேலி செய்யும் தொனியில், "கோயில் உங்கள் சொத்து; நீங்கள் கோயிலுக்குப் போகாமல் இருந்தால் மட்டும் தமிழ் பிழைத்துவிடாது. நாம் நம் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். வீரம் இல்லாமல் வெறும் பேச்சு மட்டும் போதுமா?" என்று கேட்கிறாள். இதையடுத்து, கணவன் தனது தோழர்களைப் பார்த்து, "நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்பதாக, முடியரசன் அந்தக் கவிதையை நிறைவு செய்கிறார்.

**முடிவுரை**

கவிஞர் முடியரசன் அவர்கள் தன்னுடைய கவிதத் தொகுப்பின் முலம் சமுதாய கட்டமைப்பையும் இலக்கியதரத்தையும் மொழியின் ஆளுமையையும் இங்கு தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளர். கற்றறிந்தோர் மற்றும் பன்மை மொழியினர் உட்பட, தமிழர்கள் அனைவரும் தங்கள் தாய்மொழியின் மீது பற்று கொள்ள வேண்டும்; அப்போதுதான் மொழி வளரும். இந்தக் கருத்தை மக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைக்க, தனது மொழியாளுமையைப் பயன்படுத்தினார். ஓர் சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய ஆற்றல் படைப்புகளுக்கு உண்டு என உறுதியாக நம்பிய தீர்க்கதரிசி அவர். எளிய தமிழில் பாமரர்களும் புரிந்துகொள்ளும் வகையில், படைப்பாற்றலும் மொழியாளுமையும் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. முடியரசன் கவிதகள் தொகுப்பு,(1955) தொ.ஆ. தமிழண்ணல், பாரிநிலையம், சென்னை

# 31. கல்வி மற்றும் மின்கற்றலில் Photoshop

**திரு.கி.சரவணன்** M.A., DDTP., DHNT.,
நீராளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி. சிவகாசி.
E-mail ID - gksaran11@gmail.com Mobile No: 9894269790

DOI 10.5281/zenodo.17295575.

**Abstract**

In today's digital world, the fields of education and e-learning are growing rapidly. Adobe Photoshop plays a key role in making learning visually appealing and stimulating student interest. With Photoshop, teachers can create attractive lesson plans, illustrations, posters, and learning materials. Students develop their creativity, color sense, design skills, and critical thinking skills. Furthermore, Photoshop is used in e-learning platforms to create interactive lessons and visual learning content. This enhances the learning experience and helps in easy understanding of knowledge. The use of Photoshop in education and e-learning not only makes students technically competent, but also encourages creative learning.

**KeyWords :** Digital World - E.Learing - Photoshop - Technical Methodology

இன்றைய டிஜிட்டல் உலகில் கல்வி மற்றும் மின்கற்றல் துறைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. இதில் கற்றலை காட்சியமைப்பு ரீதியாக அழகாக்கவும், மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கவும் Adobe Photoshop முக்கிய பங்காற்றுகிறது. Photoshop மூலம் ஆசிரியர்கள் கவர்ச்சிகரமான பாடக்குறிப்புகள், விளக்கப்படங்கள், போஸ்டர்கள் மற்றும் கற்றல் பொருட்களை உருவாக்க முடிகிறது. மாணவர்கள் இதன் மூலம் படைப்பாற்றல், நிற உணர்வு, வடிவமைப்பு நுணுக்கம் மற்றும் விமர்சன சிந்தனை ஆகிய திறன்களை வளர்க்கிறார்கள். மேலும், மின்கற்றல் தளங்களில் Photoshop பயன்படுத்தி செயற்பாட்டு (interactive) பாடங்கள் மற்றும் காட்சியமைப்பு கொண்ட கற்றல் உள்ளடக்கங்கள் உருவாக்கப்படுகின்றன. இது கற்றல் அனுபவத்தை மேலும் சிறப்பாக்கி, அறிவை எளிதாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. கல்வி மற்றும் மின்கற்றலில் Photoshop பயன்பாடு மாணவர்களை தொழில்நுட்ப ரீதியாக திறமையானவர்களாக மாற்றுவதுடன், படைப்பாற்றல்மிக்க கற்றலையும் ஊக்குவிக்கிறது.

அடோப் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட Photoshop என்பது உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்படும் சக்திவாய்ந்த படத் திருத்தும் மென்பொருள் ஆகும். ஆரம்பத்தில் புகைப்படக் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இது, இப்போது கல்வி, ஊடகம், விளம்பரம், மற்றும் மின்கற்றல் போன்ற பல துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கல்வித் துறையில் Photoshop ஒரு படைப்பாற்றல் கருவியாக மாறியுள்ளது. இது மாணவர்களின் கற்றலுக்கு வண்ணம் சேர்த்துக், பார்வைமையமான (visual) அணுகுமுறையை ஊக்குவிக்கிறது. தற்போதைய உலகில் கற்றல் முறைகள் ஆன்லைன் மற்றும் டிஜிட்டல் வடிவங்களுக்கு மாறிக் கொண்டிருக்கும் நிலையில், Photoshop போன்ற வடிவமைப்பு கருவிகள் மாணவர்களுக்கு தொழில்நுட்பத் திறன்களையும், படைப்பாற்றல் திறன்களையும் வளர்க்க உதவுகின்றன.

கல்வியிலும் கலைப்பாடங்களிலும் Photoshop முக்கிய பங்கு வகிக்கிறது. கலை, புகைப்படம், வடிவமைப்பு போன்ற பாடங்களில் Photoshop ஒரு பயிற்சி கருவியாகப்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பயன்படுகிறது. மாணவர்கள் புகைப்படங்களைத் திருத்துவது, நிறங்களைச் சரிசெய்தல், லேஅவுட் வடிவமைத்தல் போன்றவற்றை கற்றுக்கொள்கிறார்கள். இதனால் அவர்கள் தொழில்முறை தரத்தில் பணிகளை உருவாக்கும் திறனை பெறுகின்றனர். இதனுடன், Photoshop கலைக்கு மட்டுமல்லாமல் அறிவியல், புவியியல், வரலாறு போன்ற பிற பாடங்களிலும் பயனுள்ளதாக உள்ளது. மாணவர்கள் இதைப் பயன்படுத்தி வரைபடங்கள், விளக்கப்படங்கள் மற்றும் அறிவியல் மாதிரிகளை உருவாக்க முடியும். எடுத்துக்காட்டாக, சுற்றுச்சூழல் மாற்றங்களை கற்பிக்கும் போது மாணவர்கள் வனவெட்டம் அல்லது நகரமயமாதல் போன்ற மாற்றங்களை பட அடுக்குகளால் காட்ட முடியும். வரலாற்று பாடங்களில் பழைய புகைப்படங்களை மீள உருவாக்குவதும், வரலாற்று நிகழ்வுகளின் காலவரிசையை வடிவமைப்பதும் Photoshop மூலம் சாத்தியம்.

மின்கற்றல் (E-learning) தளங்களில் Photoshop இன் பங்கு இன்னும் முக்கியமானதாகும். ஆன்லைன் பாடங்களும் கல்வி உள்ளடக்கங்களும் பெரும்பாலும் பார்வைமையமான பொருட்களைக் கொண்டிருக்கின்றன. Photoshop ஆசிரியர்களுக்கும் வடிவமைப்பாளர்களுக்கும் கவர்ச்சிகரமான காட்சிப் பொருட்களை உருவாக்க உதவுகிறது. பாட விளம்பரங்கள், இணையப் பக்கப் படங்கள், போஸ்டர்கள், காட்சிப் பதாகைகள் போன்றவற்றை உருவாக்கி மாணவர்களின் கவனத்தை ஈர்க்க முடியும். மனித மூளை எழுத்துக்களை விட படங்களை விரைவாகப் புரிந்துகொள்வதால், Photoshop மூலம் உருவாக்கப்படும் காட்சிப் பொருட்கள் கற்றலுக்கு எளிமையையும் நினைவாற்றலையும் அதிகரிக்கின்றன.

Photoshop மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் திட்ட அடிப்படையிலான கற்றலுக்கும் உதவுகிறது. மாணவர்கள் போஸ்டர், தகவல் வரைபடம் (infographic) அல்லது விளம்பர வடிவமைப்பு போன்றவற்றை உருவாக்கும் போது, அவர்கள் பாடப்பொருளையும் வடிவமைப்பின் அடிப்படைகளையும் கற்றுக்கொள்கிறார்கள். நிறம், சமநிலை, மாறுபாடு, அமைப்பு போன்ற வடிவமைப்பு கொள்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களின் விமர்சன சிந்தனை மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்கள் மேம்படுகின்றன. மேலும் குழு திட்டங்கள் மூலம் Photoshop மாணவர்களுக்குள் ஒத்துழைப்பு மற்றும் தொடர்புத் திறன்களை வளர்க்கிறது. இவ்வாறு Photoshop ஒரு கற்றல் கருவியை விட, முழுமையான கல்வி அனுபவத்தை வழங்கும் ஒரு படைப்பாற்றல் ஊடகமாக மாறுகிறது.

ஆசிரியர்களுக்கும் Photoshop ஒரு அரிய துணையாகும். அவர்கள் பாடக்குறிப்புகள், வேலைத் தாள்கள், போஸ்டர்கள், மற்றும் ஸ்லைடுகள் போன்றவற்றை கவர்ச்சியாக வடிவமைக்க முடிகிறது. மின்கற்றல் தளங்களில் ஆசிரியர்கள் பாடப்பகுதி சிற்பங்கள், பத்தி சின்னங்கள் மற்றும் முகப்புப் படங்களை Photoshop மூலம் உருவாக்கி பாடத்திட்டத்தின் ஒற்றுமையை பேண முடியும். இதனால் ஆன்லைன் பாடங்கள் காட்சியமைப்பு ரீதியாக அழகாகவும் மாணவர்களுக்கு எளிதாகவும் மாறுகின்றன. சில ஆசிரியர்கள் தனித்துவமான தேவைகளுக்கேற்ப காட்சிப் பொருட்களை உருவாக்குகின்றனர் – உதாரணமாக பார்வை குறைபாடு கொண்ட மாணவர்களுக்கான நிற மாறுபாடு கொண்ட படங்கள் அல்லது சிறுவர்களுக்கான எளிமையான விளக்கப்படங்கள்.

தொழில்முறை மற்றும் தொழில்நுட்ப கல்வியிலும் Photoshop முக்கிய இடம் பெற்றுள்ளது. ஊடகம், பத்திரிகை, விளம்பரம், கட்டிடக்கலை, மற்றும் மல்டிமீடியா போன்ற பாடப்பிரிவுகளில் Photoshop ஒரு அடிப்படைப் பாடமாக கற்பிக்கப்படுகிறது. இதன் மூலம் மாணவர்கள் தொழில் சார்ந்த திறன்களைப் பெறுகிறார்கள். உதாரணமாக பத்திரிகைத்துறையில் Photoshop பயன்படுத்தி செய்தி புகைப்படங்களை திருத்தி வெளியிடுவது கற்பிக்கப்படுகிறது. விளம்பரத் துறையில் இது போஸ்டர், பிரோசர் மற்றும் டிஜிட்டல் விளம்பர வடிவமைப்பில் முக்கியமானதாகும். இன்று காட்சி அறிவு (visual literacy)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

முக்கியமாக மாறியுள்ள நிலையில் Photoshop திறமை ஒரு முக்கிய தொழில் நுணுக்கமாக மாறியுள்ளது.

Photoshop, Adobe Creative Cloud இல் உள்ள பிற மென்பொருள்களுடன் இணைந்து சிறப்பாக செயல்படுகிறது. Illustrator, InDesign, மற்றும் Adobe Express போன்ற கருவிகளுடன் இணைப்பதன் மூலம் ஆசிரியர்கள் மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பாளர்கள் முழுமையான கற்றல் பொருட்களை உருவாக்க முடியும். பல மின்கற்றல் வடிவமைப்பாளர்கள் Photoshop இல் உருவாக்கிய காட்சிகளை Adobe Captivate அல்லது Articulate Storyline போன்ற தளங்களில் சேர்த்து செயற்பாட்டு (interactive) பாடங்களை வடிவமைக்கிறார்கள். இதனால் ஆன்லைன் பாடங்கள் மாணவர்களுக்கு மேலும் கவர்ச்சியாகவும் பயனுள்ளதாகவும் மாறுகின்றன.

சமீபத்தில் Photoshop இல் சேர்க்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) அம்சங்கள் – Generative Fill, Neural Filters போன்றவை – இதை மேலும் எளிமையாக்கியுள்ளன. இத்தகைய அம்சங்கள் ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விரைவாக கற்றுக்கொள்வதற்கான வழிகளை வழங்குகின்றன. கற்பித்தல் பொருட்களை வடிவமைக்கவும், மாணவர்கள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும் இவை பெரிதும் உதவுகின்றன. செயற்கை நுண்ணறிவு கல்வியில் அனைவருக்கும் சமவாய்ப்பை வழங்குவதற்கும் உதவுகிறது, குறிப்பாக தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப காட்சிகளை மாற்றுவதில் இது பயனுள்ளது.

Photoshop இன் கல்வி தாக்கம் பள்ளிகளையும் கல்லூரிகளையும் தாண்டி உலகளாவிய ஆன்லைன் கற்றல் சமூகங்களிலும் விரிவடைந்துள்ளது. Coursera, Udemy, Skillshare போன்ற தளங்களில் Photoshop பாடங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இதன் மூலம் உலகம் முழுவதும் மாணவர்கள் தொழில்முறை வடிவமைப்பு திறன்களை கற்றுக்கொள்கின்றனர். பலரும் தங்களது Photoshop திட்டங்களை சமூக வலைதளங்கள் மற்றும் ஆன்லைன் போர்ட்ஃபோலியோக்களில் பகிர்ந்து, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்கின்றனர். இதனால் வடிவமைப்பு கல்வி பொதுமக்களுக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாக மாறியுள்ளது.

எனினும் Photoshop இன் பயன்பாடு பொறுப்புடன் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு படத் திருத்தத்தின் நெறிமுறைகளையும், காப்புரிமை மரியாதையையும், உண்மைச் செய்திகள் மற்றும் தவறான தகவல்களைப் பிரித்தறிவதையும் கற்பிக்க வேண்டும். Photoshop ஒரு சுயபாட கருவியாக மட்டுமல்ல, ஒழுக்கமுள்ள டிஜிட்டல் குடிமகனாக வளர்வதற்கும் ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும்.

மொத்தத்தில், Photoshop கல்வியிலும் மின்கற்றலிலும் ஒரு அற்புதமான கருவியாக திகழ்கிறது. இது கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவங்களை படைப்பாற்றலுடனும் தொழில்நுட்ப நுணுக்கத்துடனும் இணைக்கிறது. பாடக்குறிப்புகளை வடிவமைப்பதில் இருந்து ஆன்லைன் பாடங்களை உருவாக்குவதுவரை Photoshop கல்வியை உயிர்ப்பூட்டுகிறது. பார்வைமையம், படைப்பாற்றல் சிந்தனை, மற்றும் டிஜிட்டல் திறன்கள் ஆகியவை நவீன உலகில் மிகவும் அவசியமானவை. இத்தகைய திறன்களை வளர்க்கும் முக்கிய கருவியாக Photoshop கல்வியின் எதிர்காலத்தையும் கற்றலின் வடிவத்தையும் மாற்றி அமைக்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 32. கவிஞர் மீராவின் கவிதைகளில் சமூகச் சாடல்

**பேரா. அ.பார்த்திபன்,**
ஆங்கில உதவிப்பேராசிரியர்,
வி.இ.நா.செ.நா.கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்.
*DOI 10.5281/zenodo.17295976.*

**Abstract:**

It was formed when primitive man, who wandered in search of food as a nomad, began to live in groups. Society is the continuation of the settled life of nomadic man. Society or community can be considered as the union of various ethnic groups. Because man has the characteristic of living together, the Greek scholar Aristotle, when defining man, says, "Man is a social animal." Man's ability to think and think about the future distinguished him from other animals. He began to hunt and eat, and he began to store food for the future. As a result, agriculture was formed. Agriculture laid the foundation for his settled life. In his spare time, he began to think about the soil and the sky. It laid the foundation for the development of science.

Due to the development of science and social activity, man has undergone various changes and has accomplished many changes in the present era. Literature has always been a reflection of a society. The role of the writer is essential for the change of a society. It is no exaggeration to say that among those who are court poets and praisers of the state, there are those who have written condemning and mocking the erring king, and who have been exiled as a result, and who are still rising.

**KeyWords :** Poet Meera - Society

## முன்னுரை:

நாடோடியாக உணவுதேடி அலைந்த ஆதிமனிதன் குழுவாக வாழத் தொடங்கையில் உருவானது. சமூகம் என்பது நாடோடி மனிதனின் நிலையான வாழ்வின் தொடர்ச்சியே. பல்வேறு இனக்குழுக்கள் சேர்ந்ததே சமூகம் அல்லது சமுதாயம் என்று கொள்ளலாம். மனிதன் கூடி வாழும் பண்பினைக் கொண்டிருப்பதாலே கிரேக்கத்து அறிஞன் அரிஸ்டாடில் மனிதனை வரையருக்கும் போது "மனிதன் ஒரு சமுதாய விலங்கு" என்கிறார். மனிதனின் சிந்திக்கும் திறனும் எதிர்காலம் பற்றிய சிந்தனையும் அவனை மற்ற விலங்கினங்களிலிருந்து வித்தியாசப்படுத்தியது. அவன் வேட்டையாடி உண்டதுபோக எதிர்காலத்திற்கான உணவினை சேமித்து வைக்க ஆரம்பித்தான். இதன் விளைவாக வேளான்மை உருவாகியது. வேளான்மையே அவனின் நிலையான வாழ்விற்கு அடித்தலமிட்டது. கிடைத்த ஓய்வு நேரங்களில் அவன் மண்ணைப்பற்றியும் விண்ணைப்பற்றியும் சிந்திக்கலானான். அது அறிவியல் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது.

அறிவியல் வளர்ச்சியாலும் சமூகச் செயல்பாட்டினாலும் மனிதன் இன்றைய காலகட்டத்தில் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டும் பல மாற்றங்களை நிறைவேற்றியும் வருகின்றான். இலக்கியங்கள் என்றுமே ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்றன. ஒரு சமூகத்தின் மாற்றத்திற்கு எழுத்தாளனின் பங்கு இன்றியமையாதது. அரசவைக் கவிஞனாக அரசின் துதிபாடுபவனாக இருப்பவர்களுக்கு மத்தியில் தவறிழைக்கும் அரசனைக் கண்டித்தும் எல்லி நகைசெய்தும் எழுதியவர்களும் அதன் விளைவாக நாடு கடத்தப்பட்டவர்களும் இன்னமும் எழுக்கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல.

ஆக, ஒரு எழுத்தாளன் தான் வாழ்ந்த காலத்தைப் படைக்கிறான் அத்தகைய சீரிய முயற்சியில் அந்தக் காலத்தின் படைப்பாகவும் உருமாற்றம் பெருகிறான். ஒவ்வொரு


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

எழுத்தாளனும் தான் சார்ந்திருக்கும் சமூகத்தை உற்று நோக்கியும் அவ்வப்போது அதன் சில பிற்போக்குத்தனத்தைச் சாடியும் தன் சமூகப்பொறுப்பினை உறுதிசெய்கிறான்.

எழுத்தாளானின் சமூகப்பொறுப்பு அளப்பெரியது. முண்டாசுக் கவிஞன் பாரதி கவிதையின் சிறப்பினைப் பின்வருமாறு சிலாகிக்கிறார்:

**"வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவு மாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வார்"** என்கிறார்.

**எழுத்தாளன் கவிஞர் மீரா:**

இக்கட்டுரையில் நாம் காணவிருக்கும் எழுத்தாளரின் பார்வை விசாலமானது பன்முகத் தன்மை கொண்டது.

- கவிஞர் மீராவின் இயற்பெயர் மீ.ராஜேந்திரன். அவர் ஒரு தமிழ்ப் புதுக்கவிஞர்.
- தமிழ் இலக்கியத்தில் பெரும்தாக்கத்தைச் ஏற்படுத்திய அன்னம் - அகரம் பதிப்பகத்தை நிறுவி நடத்திய பதிப்பாளர்.
- சிவகங்கையில் பள்ளிப்படிப்பை முடித்த பின் மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றார். அங்கே கவிஞர் அபி, பா.செயப்பிரகாசம், நா. காமராசன் போன்றவர்களுக்கு அணுக்கமானவராக இருந்தார். மீரா சிவகங்கை மன்னர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.
- மதுரைப் பல்கலைக் கழகக் கல்லூரி ஆசிரியர்களின் தொழிற்சங்கமான மூட்டா (MUTA) இயக்கத்தில் தீவிரப் பங்காற்றினார். அவ்வமைப்பின் இதழின் ஆசிரியராக பணியாற்றினார். போராட்டம் நடத்தியதனால் கல்லூரியினரால் இருமுறை பணி நீக்கம் செய்யப்பட்டார். அப்போதுதான் அன்னம் பதிப்பகத்தைத் தொடங்கினார். தன் நண்பர் அபியின் 'மௌனத்தின் நாவுகள்' என்ற தொகுப்பை முதலில் வெளியிட்டார்.
- கவிஞர் மீரா தன்னுடைய கவிதைகளின் வாயிலாக அரசியல், சமூகத்தின் பிற்போக்குத்தனம், சாதியம் ஆணாதிக்கச் சிந்தனை மற்றும் வர்க்கப்பேதம் உள்ளிட்ட பல்வேறு சமூக இன்னல்களை நையாண்டி செய்வதே இவரின் தனிச்சிறப்பாகும். இவரது கவிதைகளில் எடுத்தாளப்பட்டுள்ள சமூக அவலங்களைப் பற்றிப்பேசுகிறது இக்கட்டுரை.

இன்றைய அரசியலின் போக்கு இலட்சியம் மறந்து இலட்சத்தில் திளைக்கிறது. கொண்ட கொள்கைகளை மறந்து கோட்டையை அடைந்திடவே அது எப்போதும் முனைகிறது. இதனைப் பட்டவர்த்தனமாகக் கவிஞர் மீரா தன்னுடைய 'வேகம்' என்கிற கவிதையில் தற்கால அரசியல் நிலைமையை பின்வருமாறு தோலுரித்துக்காட்டுகிறார்:

**"எங்கள் ஊர் எம்.எல்.ஏ. ஏழு மாதத்தில் எட்டுத் தடவை கட்சி மாறினார் மின்னல் வேகம் என்ன வேகம்? இன்னும் எழுபது கட்சி இருந்தால் இன்னும் வேகம் காட்டி இருப்பார்....... என்ன தேசம்? இந்தத் தேசம்?"** (மீரா கவிதைகள் 315)

இக்கவிதை இடத்திற்குத் தகுந்தாற்போல் தன் நிறத்தையும் குணத்தையும் மாற்றும் பச்சோந்தியைவிட அரசியல்வாதி மோசமானவன் என்பதை அரற்றிச்சொல்கிறது. 'கவிஞரின் மறுபக்கம்' என்னும் கவிதை சிலை அரசியலை சிலாகித்துப்பேசிவதுபோல் வசைபாடுகிறது. சிலை அரசியல் இன்றைய காலகட்டத்தில் மிகப்பெரிய பங்காற்றுகிறது. மக்களை மடைமாற்றி அவர்தம் இனத்தவருக்கு மிகப்பெரிய பொருட்செலவில் சிலைவைத்து அரசியல் இலாபத்தை அறுவடை செய்வதே நவீன அரசியலின் சானக்கியத்தனமாகக் கொண்டுள்ளனர் இன்றைய அரசியல்வாதிகள். நாட்டில் வறுமையும்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

வேலையின்மையும் தலைவிரித்தாடுகையில் நலத்திட்டங்களைத் தவிர்த்து ஓட்டுக்காகச் சில குறிப்பிட்ட இனத்தலைவர்களுக்குப் பெருஞ்சிலை வைத்துப் பெருமை பேசுகிறது இன்றைய அரசியல். மூவாயிரம் கோடிக்குமேல் செலவிட்டுச் சிலை வைத்து அதனை ஒற்றுமையின் சிலை என்றும் பெயருமிடுகிறது. மக்களும் தங்களின் மானசீகத் தலைவருக்கு மலைஉயர சிலைவைத்ததிலே மகிழ்ந்துபோய் மாற்றத்தை விரும்பாது மறுபடியும் தோற்றுத்தான் போகிறார்கள். இத்தகைய சிலை அரசியலைக் கவிஞர் பின்வருமாறு எழுதுகிறார்:

**“மகாத்மாவின் சிலையைச் செய்ததில் மாபெரும் மோசடி யாமே! ஆத்திரம் வேண்டாம் அன்பரீர்...... மோசடி செய்ததற் கிடையில் ஏதோ சிலையும் செய்ததாய் நினைத்துக் கொண்டால் நெஞ்சம் மகிழ்ந்து போவீர்! (மீரா கவிதைகள் 361)**

தன்னுடைய ‘புதுமைப்பெண்ணே புறப்படு’ என்கிற கவிதையில் சமூகத்தில் காலங்காலமாகப் பெண்ணித்திற்கு இழைக்கப்படும் அநீதியை அய்யன் பாரதி வழிநின்று அறச்சீற்றம் கொள்கிறார். பொருந்தாத திருமணம் மற்றும் பால்ய விவாகத்தினால் பெண்கள் இளம்வயதில் விதவையாகிவிட்டால் அவளை இந்த சமூகம் மறுமணம் செய்யவிடுவதில்லை

ஆனால் ஆண்களுக்கு எத்தனைமுறை வேண்டுமானாலும் திருமணம் செய்துகொள்வதை ஏற்றுக்கொள்ளும் சமூகத்தைக் கவிஞர் பின்வருமாறு சாடுகிறார்: பூவையொருத்தி பொங்குமிளமையில் பூவையிழந்து பொட்டை இழந்து விதவை ஆனால் வெள்ளுடைப் பூண்டு கதவைத் தாண்டா திருக்க வேண்டுமாம் ஆனால் பெண்டையிழந்த பெரிய மனிதன் துண்டை உதறித் தோளில் போட்டு சின்னப் பெண்ணைத்தேடி மணந்து இன்னொரு முறையவன் இன்புறலாமாம் இதே கவிதையின் மற்றுமோர் இடத்தில் பெண்ணுரிமை பற்றி பின்வருமாறு பேசுகிறார்:

**“உரிமை என்பது ஒருவழிப் பாதையா கட்டுப்பாடும் கற்பும் உங்கட்குத் தட்டுப் பாடு தானா? என்றே ஆடவர் முகத்தில் அறைந்தாற் போலக் கேட்டுத் துணிவாய்க் கிளர்ச்சி செய்யும் மங்கையர் இயக்கம் மலர வேண்டும்.” (மீரா கவிதைகள் 451)**

இவரின் எங்கும் சுவரொட்டி! எதற்கும் சுவரொட்டி ! என்கிற கவிதை தற்காலத்தில் நடக்கும் அரசியல் மற்றும் பொதுசமூகத்தின் தனக்குத்தானவிளம்பரம் செய்துகொள்ளும் சுய விளம்பரப்புத்தியினை எல்லி நகையாடுகிறது. அதிகப்பொருட்செலவில் ஆளுயரப் பதாகைகளும் சுவரொட்டி விளம்பரங்களும் அவர்தம் பகட்டு வாழ்வினைப் பறைசாட்டும் விதமாகவே இதனைக் கவிஞர்:

**“கடைக்குப் போய்வந்த - காய்கறி வாங்கிவந்த கர்ம வீரனே வருக! பற்றுத் தேய்த்துப் படிப்படியாய் சமையல்காரியாய்ப் பதவி உயர்வுபெற்ற பங்கஜமே வருக! கீர்த்தி மிகுந்த கேம்பிரிட்ஜ் பள்ளியிலே எல். கே.ஜி. வகுப்பிலே இனிதாகச் சேரவந்த இளந்தளிரே வருக! (மீரா கவிதைகள் 419)**

என்கிற வரிகளின் மூலமாக விவரிக்கிறார். மேலும் இன்றைய இளைஞர்கள் சினிமா மோகத்தின்பால் பீடிக்கப்பட்டு அடிப்படை அரசியல் அறிவு இல்லாதிருந்தாலும் தன்னுடைய ஆதர்சன நாயகனே தனக்கு அரசியல் தலைவனாக வரவேண்டும் என்று எண்ணி தன் ஆவிதுறக்கும் அளவிற்கு அவா கொள்வதினைக் கொ(டு)த்து வைத்தவர் என்கிற கவிதையின் மூலமாக எடுத்துரைக்கிறார்.

**“என்னருந் தமிழ்தாய் ஈன்ற மக்களே! உங்களைப் போல உலகில் யாரே கொடுத்துவைத்தவர்......! சினிமா அரங்கில் அரசியல் கூத்து; அரசியல் மேடையில் சினிமாச் சண்டை.” (மீரா கவிதைகள் 363)**


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தன்னுடைய ஏன் வரவில்லை என்கின்ற கவிதையில் சமூக அவலங்களைப் பின்வரும் வார்த்தைகளால் வசைபாடுகிறார்:

“கலியுகத்தில் காசு நாதர்களின் கையில் சிக்கித் தவிக்கும் மக்த லேனாக்களைக் காப்பாற்ற எந்த ஏசுநாதரும் ஏன் வரவில்லை? பெண்களை ஆசைவார்த்தகள் கூறி அவர்களின் நம்பிக்கையைப் பெற்றுப் பின் அவர்களுக்குத் தூரோகம் இழைக்கும் சில ஆண்களைச்சாடுகிறார். கணவன் என்றும் காதலன் என்றும் நண்பன் என்றும் நம்பிச்சீரலியும் பெண்கள் எவ்வாறு இன்னலுறுகிறார்கள் என்பதையும் கவிஞர் பட்டியலிடுகிறார்.

இந்திர போகத்துக்கு இரையாகிக் கல்லாய்க் கிடக்கும் அகலியைகளுக்கு விமோசனம் அளிக்க எந்த இராமநாதனும் ஏன் வரவில்லை? துச்சாதனக் கரங்களால் தொட்டுத் துகிலுரியப் பட்டுத்துடிக்கும் பாஞ்சாலிகளுக்குப் பரிவுகாட்ட எந்தக் கண்ணனும் ஏன் வரவில்லை? தன்னுடைய. ஒன்றே செய்க என்ற கவிதை தற்போதைய மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை நினைவூட்டுகிறது. அது வளர்ச்சியின் பெயரால் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டங்களிலும் நம்மின் இயற்கை வளங்களையும் நீர் ஆதாரங்களையும் நீர்த்துப்போகச் செய்கிறது. அடுத்த தலைமுறைக்கான தூயநீரும், சுத்தமான காற்றும், வளமான மண்ணும், தரமான கல்வியும் தடைப்பட்டுப்போகிறது. இதைத்தடுக்க முற்பட்ட மக்களை ஆளும் வர்கத்தின் துணையோடு அதிகார வர்க்கம் வேட்டையாடிக்கொள்கிறது என்றால் அதுமிகையல்லவே. சமீபத்தில் தூத்துஸ்டெர்லைட் போராட்டம் நம் நினைவிற்கு வருகிறது. மக்களின் உரிமைப் போராட்டம் கலவரமாகச் சித்தரிக்கப்பட்டு 14 அப்பாவி உயிர்கள் பலியிடப்பட்டதை வரலாறு மறக்காது. பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்தாலும் நிகழ்காலத்து நிகழ்வினைப் பேசுகிறது: சுடுங்கள்.... உணவுகோரிக் கிளர்ச்சி செய்தால்! உடனே சுடுங்கள் மக்களைக் காக்க முடிய வில்லையே என்ற கவலை எதற்கு? சட்டம் ஒழுங்கை யேனும் சரியாய்க் காத்தால் போதும்...... சுடுங்கள்...... சும்மா சுடுங்கள் (மீரா கவிதைகள் 374)

புதிய ஏற்பாடு இக்கவிதையில் வர்க்க பேதங்களைச்சாட கொத்தனார் மகனுக்கும் முதலாளி மகனுக்கும் நடக்கும் உரையாடல்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். சிறுவர்களின் உறையாடல் எவ்வாறு வர்க்க சிந்தனைய வெளிப்படுத்துகிறது என்பதை மறுநாள் வேறு கொத்தனார் வந்தார் என்ற வரிகளில் அறியலாம். கொட்டிக் கிடக்கும் மணலில் குதித்து விளையாடும் கொத்தனார் மகன் கூறினான்.... **'எங்க நைனா கட்டியதாக்கும் இந்த வீடு எங்க வீடு....' முதலாளி மைந்தன் முறைத்தான்... மறுநாள் .... வேறுகொத்தனார் வேலைக்கு வந்தார்! (மீரா கவிதைகள் 439)**

இந்தியச் சமூகத்தில் ஏழை பணக்காரன் என்கிற வர்க்கப் பேதங்கள் களைந்து எங்கும் ஜனநாயக சோஷலிசமன எல்லாருக்கும் எல்லாம் கிடைத்திட கவிஞர் ஏதுவாக ஒரு வழி சொல்கிறார் பின்வருமாறு:

**“ஜனநாயக சோஷலிசம் ஐந்து வருடம் முடிந்தால் தேர்தல் என்பதை மாற்றி இங்கே வருடா வருடம் வைத்தால் போதும். பெரும் பெரும் புள்ளிகள் எல்லாம் வெள்ளிப் பணத்தை அள்ளி இறைப்பார் ஆடிக் கரைப்பார் சுலப மாகச் சோஷ லிசத்தை அடையும் வழியிது; அற்புத வழியிது.” (மீரா கவிதைகள் 330)**

பணத்தால் ஜனநாயகத்தை பந்தயத்தில் வெல்லும் பணமுதலைகளையும் அரசியல் திமிங்கிலங்களையும் மேற்கண்ட வரிகளில் கவிஞர் வசைபாடும் கவிஞர் தன்னுடைய செய்யும் முறை என்ற கவிதையில் சில பிழைப்புவாத எழுத்தாளர்களைத்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

தோலுரிக்கிறார். தன் எழுத்திற்கும் வார்த்தைக்கும் சம்பந்தமில்லாத அவர்களின் சந்தர்பவாத கொள்கைகளையும் சாடுகிறார்: அவர் சிவப்பு விளக்குச் சிறுகதை எழுதிச் சேர்த்த பணத்தைச் செலவு செய்வது எப்படி என்று சிந்தனைத் தேரில்சென்றார் பின்னர் சிவப்பு விளக்குத் தெருவில் நின்றார். ( மீரா கவிதைகள் 358)

தன்னுடைய புகழ்மிக்கக் கவிதைகளில் ஒன்றான வள்ளலார் வருவாரா? என்ற கவிதையில், "ஏழைகளின் வாழ்வு பற்றி கம்யூனிசச் சித்தாந்தத்தின் தந்தையான கார்ல் மார்க்ஸை நினைவூட்டுகிறார். பொருளாதரத்தில் பின் தங்கிய தங்களுடைய அன்றாட வாழ்விற்கே திண்டாடும் ஏழைகளுக்கு பண்டிகைகள் என்பது என்றும் எட்டாக்கணியே என்கிறார். மார்க்ஸ்-'பண்டிகைகள் மற்றும் திருவிழாக்கள் என்பது ஏழைகளை நோக்கி ஏவப்படும் வேட்டை நாய்கள்' என்கிறார். மார்ஸ் வரிகளின் வழியே தன்னுடைய கவிதையில் கவிஞர் கீழ்க்காணுமாறு நிற்கிறார்:

**"தைத்திங்கள் வருகின்ற பொங்கல் நாளில் தங்கத்தைச் சுமக்கின்ற மகளிர் ஆக்கும் நெய்ப்பொங்கல் சுவைத்துண்டு மகிழ்ச்சி கொள்வர் நிதி படைத்த சீமான்கள்; என்றும் எங்கள் கைதொட்டு வாய்பட்ட துண்டோ பொங்கல்? கண்மட்டும் ஓயாமல் பொங்கும்! பொங்கும்! தெய்வங்கள் திருநாட்கள் எங்கட் கில்லை; தெருவோரச் சாக்கடையில் வருமா தெப்பம்? (மீரா கவிதைகள் 60)**

**முடிவுரை:**

கவிஞர் மீரா தன்னுடைய கவிதை வரிகளில் சமூகத்தின் அவலங்களையும் சாதியப் பாகுபாடுகளையும் வர்க்க பேதங்களையும் மறைமுகமாகவும் நேரடியாகவும் எல்லி நகையாண்டு என்றும் இலக்கியத்தில் தனக்கானதொரு தனித்துவத்தையும் தனி இடத்தையும் பெற்றுள்ளார். அவரின் கவிதைகளை மதிப்பீடு செய்வதூ குன்றினைக் குடத்தில் அடைக்கு முயற்சி என்றால் அது மிகையல்ல.

**துணைமை நின்றவை:**

1. மீரா கவிதைகள் அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர்-613077.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025

# 33. திருக்குறளில் அலர் அறிவுறுத்தல்

**திருமதி சி.கீர்த்தனா,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
Reg. No.: MKU24PFOL11410
ORCiD: https://orcid.org/0009-0000-2590-408X

**முனைவர் ச.தனலெட்சுமி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3511-2865

DOI 10.5281/zenodo.17296240.

**Abstract:**

Tamil is a classical language. The source of it is the Tolkappiyam and the Thirukkural. The Thirukkural, which has a time span of more than two thousand years, explains life. The book written based on Tamil. It is called the universal mystery. The Thirukkural is a literature that is suitable for all religions, all races, and all times. The Thirukkural is the counterpart to the Thirukkural in the literary genre that summarizes morals. The book that is most widely read in Tamil is the Thirukkural. The greatness and excellence of the Thirukkural, which has a wide range of ideas such as philosophies, life principles, morals, love, friendship, and politics, can be studied and studied. There are many research articles on this book, which is well-written and special. Valluvar has also depicted the love story of the hero and heroine, the love, intercourse, and separation, and the incident that causes the villagers to panic when they know about the love. This research article aims to examine the significance of the chapter 'Alar Acharya', one of the one hundred and thirty-three chapters, and the sub-topics of Alar Acharya, Acharya's explanation, Acharya's instruction, Acharya's parable in Sangam literature, and Acharya's parable in the Acharya's sermon.

**Keywords :** Thirukkural, Alar, Acharya's instruction, parable.

தமிழ்மொழி செம்மொழி. அதற்கு தொல்காப்பியமும், திருக்குறளுமே மூலகாரணமாகும். இரண்டாயிரத்தும் மேற்பட்ட கால எல்லையைக் கொண்ட திருக்குறள் வாழ்வியலை விளக்குகிறது. தமிழரை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். உலகப் பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. எல்லா மதத்தினரும், எல்லா இனத்தவரும், எக்காலத்தவருக்கும் பொருந்தும் இலக்கியம் திருக்குறள். அறக்கருத்துக்களைச் சுருங்கச் சொல்லும் இலக்கிய வகையில் திருக்குறளுக்கு இணை திருக்குறளே. தமிழில் அதிகமாக உரை செய்யப்பட்ட நூல் திருக்குறள். தத்துவங்கள், வாழ்வியல் ஒழுகலாறுகள், அறக்கருத்துக்கள், காதல், நட்பு, அரசியல் என்று பரந்து விரிந்தக் கருத்துக்களைக் கொண்ட திருக்குறளின் பெருமையினையும், சிறப்பினையும் எடுத்துக்கொண்டு ஆய்வு மேற்கொண்டே இருக்கலாம். சீரும் சிறப்பும் கொண்ட இந்நூல் சார்ந்த ஆய்வுக்கட்டுரைகள் ஏராளம். தலைவன் தலைவியின் காதல், புணர்தல், ஊடல், பிரிதல் என அமையும் காமத்துப்பாலில் காதலை ஊரார் அறிந்தால் அலர் தூற்றும் நிகழ்வையும் வள்ளுவர் வடித்துள்ளார். நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களுள் ஒன்றான 'அலர் அறிவுறுத்தல்' என்னும் அதிகாரத்தின் சிறப்பினையும், அலர் விளக்கம், அலரை அறிவுறுத்தும் நிகழ்வு, சங்க இலக்கியங்களில் அலர், உவமை மற்றும் அலர் தூற்றலில் உவமை என்ற உட்தலைப்புகளையும் ஆராயும் நோக்கில் இவ்ஆய்வுக் கட்டுரை நகர்கின்றது.

வள்ளுவத்தை உலகினுக்கு தந்து வான்புகழ் கொண்டது தமிழ்மொழியும், தமிழ் இனமும். தமிழர்களின் இலக்கிய அடையாளமாகத் திகழ்வது திருக்குறள். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. அறத்தில் பொருளீட்டி இன்பத்தைக்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

காணலாம் எனவும் கூறலாம். வாழ்க்கை, துறவறம், ஊழியல் போன்றவற்றை விளக்கும் அறம். அரசியல், நட்பு, குடி என்று விளக்கும் பொருள். களவு, கற்பு குறித்து விளக்கும் இன்பம் என்றவாறு அதிகாரங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. தற்சமயம் தலைவன் தலைவியின் காதல் தெரிந்தால் புறம் பேசுவது போல் இருபதாம் நூற்றாண்டில் தலைவன் தலைவியின் களவொழுக்க வாழ்வில் ஊரார் அலர் தூற்றும் நிகழ்வும் நிகழப்பெற்றது. அதனை வள்ளுவர் பத்து குறட்பாக்களில் விரித்துரைக்கிறார். அலர் தூற்றும் முறைமை மற்றும் சங்க இலக்கியங்களில் அலர் என்பதன் விளக்கம் குறித்து ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**அம்பல் - அலர்**

"ஆண், பெண் இருவருக்கும் காதல் உணர்வாகத் தோன்றி பின் உறவாக மலர்கின்றது. இவ்வுணர்வே களவு என்று கூறப்படுகிறது. இக்களவு பின்னர் ஊராருக்குத் தெரிய வரும். இக்களவை இரகசியமாக ஊரார் சிலர் பேசுவர் இஃது 'அம்பல்' எனப்படும். பின்னர் பலர் பிறர் அறியும்படி வெளிப்படையாகப் பேசுவது 'அலர்' எனப்படும். அதாவது மலரானது கவிந்த மொட்டு நிலையில் இருப்பது அம்பல், விரிந்து மலரானது அலர் என்று விளக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றது." அம்பல் என்பது முகிழ் முகிழ்த்தல் என்றும், அலர் என்பது சொல் நிகழ்தல் என்றும் உரைப்பர் நச்சினார்க்கினியர். (Wikipedia)

**அலர் அறிவுறுத்தல்**

காதலரிடையேயான நெருக்கத்தை ஊரார் பழித்துப் பேசுதல் 'அலர் தூற்றுதல்' எனப்படும். அலர் என்பது வெளிப்படையாகத் தூற்றுதல் என்று பொருள். களவுக்காலத்தில் ஏற்படும் அலரை நீக்க முடியாது. இதனை தொல்காப்பியர், **"களவும் கற்பும் அலர் வரைவு இன்றே"**[1] என்கிறார். மேலும், **"அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே"**[2] அதாவது, அன்றைய அலர் தூற்றும் நிகழ்வு நன்றே எனும் பொருளில் அமைகின்றது. அன்றைய அலர் களவு நீங்கி கற்பு வாழ்வில் காதலர்களை சேர்த்துள்ளது.

**அலரின் தோற்றச் சூழல்**

வரைவு கடாதலின் பொருட்டே அலர் தோன்றுகிறது. அதாவது திருமணம் மேற்கொள்ளாமல் தலைவன் தலைவியை திருட்டுத்தனமாக காண வருவது. ஆணின் மனம் என்றும் களவு வாழ்வையே நீட்டிக்க விரும்பும். களவுக்காலத்தில் எந்தவிதச் சுமையும் இன்றி தலைவியுடன் கூடியிருக்கும் இன்பத்தைத் தலைவன் விரும்புவான். அதனால் திருமணத்தை தள்ளி வைப்பான். பெண்ணின் மனம் மனைவியின் இடத்தை விரும்பும். இத்தகையச் சூழலில் தலைவன் தலைவியை காண வரும் பொழுது ஊரார் தலைவியை பழித்து பேசுவர். அதனை தலைவன் மனம் ஏற்காமல் வரைவு கடாதல் நிகழ்கின்றது. அலரின் பொருட்டே திருமணம் நடைபெற்றதான இலக்கியங்கள் பல விளக்குகின்றன. இலக்கியங்களில், ஊரார் அலர் தூற்றுவதை அறிந்து தலைவன் கூற்று, தலைவி கூற்று முறையில் பாடல்கள் அமைந்துள்ளன

**சங்க இலக்கியத்தில் அலர்**

சங்க இலக்கியங்களில் அலர் தூற்றுவோர் பெண்களாகவே சுட்டப்படுகின்றனர். பெண்கள் அலர் தூற்றும் இயல்பினை,

**"அலர் வாய் பெண்டிர்"**[3]

**"அம்பல் மூதூர் அலர் வாய்ப் பெண்டிர்"**[4]

**"அலர்வினை மேவல் அம்பல் பெண்டிர்"**[5]


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

ஊரார் மூக்கின் மேல் விரல் வைத்து அலர் தூற்றும் விதத்தினை, அலர் பெண்களின் அபிநயத்தை உலோச்சனார் எனும் புலவர்,

**"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி**
**மூக்கின் உச்சி சுட்டுவிரல் சேர்த்தி**
**மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற**
**சிறுபோல் வலந்தனள்"**[6]

நேரடியாக அலர் பேசத் தயங்கிய பெண்கள் தமக்குள் மறைவாக கடைக்கண் நோக்கி பேசினர் என்று விளக்குகிறார். இவ்வாறு அம்பல், அலர், கவ்வைக் குறித்த செய்திகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகின்றது.

**குறளில் அலர்அறிவுறுத்தல்**

வாயுறை வாழ்த்து என்றழைக்கப்படும் திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களையும் கொண்டது. இன்பத்துப்பால் களவியல், கற்பியல் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. களவியலில் உள்ள 'அலர் அறிவுறுத்தல்' எனும் அதிகாரத்தில் இடம்பெறும் அலர் சார்ந்த கருத்துக்கள் கீழ்க்கண்ட உட்தலைப்புகள் வழி ஆராயப்படுகின்றது.

**அலரால் இன்பம்**

ஊராரின் அலரால் தனக்கு காதலும் பெருகிற்று. காமமும் பெருகிற்று என்றும், எனக்கு நன்மையே உண்டாயிற்று என்கிறாள் தலைவி. இதனை

**"உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்**
**பெறாது பெற்றன்ன நீர்த்து"** **(குறள் எண்.1143)**

என்கிறது. அலரினால் தன் காதல் அனைவருக்கும் தெரிந்து திருமணம் நடக்காது என்று எண்ணி இருந்த எனக்கு திருமணம் நடந்தது போல் மகிழ்ச்சி பொங்கியதாக தலைவி கூறும் கூற்றாக வள்ளுவர்,

**"கவ்வையால் கவ்விது காமம் அதுவின்றேல்**
**நவ்வென்னும் நன்மை இழந்து"** **(குறள் எண்.1144)**

என்பதில் கவ்வை எனும் பழிச்சொல்லினால், துன்பத்தினால் எனக்கு நன்மையே என்பதாக தலைவி கூறுவது போல் அமைகின்றது. திருமணம் நீட்டிக்கும் பொழுது தலைவியும் அலரை விரும்புகிறாள் இதனை,

**"தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்**
**கௌவை எடுக்கும்இவ்வூர்" (குறள் எண்.1150)**

என்பதில் யான் விரும்பியவாறே ஊரார் அலர் தூற்றுகின்றனர். இனி என் காதலரும் இதனை அறிந்து விரைவில் திருமணம் செய்து கொள்வார் என்று அலரில் இன்பம் காணுவதாக அமைகின்றது.

**நாணமின்மை**

மலர் போன்ற கண்களை உடையவள் தலைவி. அவளின் அருமை அறியாமல் ஊரார் அலர் பேசுவதை பெரியதாக தலைவி எண்ணவில்லை. அவள் அருமை தெரிந்தால் அலர் பேசமாட்டார்கள் என்று தலைவி கூறுவதாக அமைகின்றது. இதனை,

**"மலரன்ன கண்ணாள் அருமை அறியாது**
**அலரெமக்கு ஈந்ததிவ் வூர்"** **(குறள் எண். 1142)**

என்ற குறள் வழி அறியலாம். ஊராரின் அலர் தூற்றலுக்கு தலைவியானவள் நாண இயலாது இருப்பதை,

**"அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்**
**பலர் நாணநீத்தக் கடை"** **(குறள் எண்.1149)**

என்பதில், உன்னைவிட்டுப் பிரியேன் அஞ்ச வேண்டாம் என்று உறுதியளித்தவர் பலரம் நாணும்படியாக என்னை விட்டுப் பிரி;ந்து சென்றிருக்கும் போது நான் மட்டும் ஊரார் தூற்றும் அலருக்காக நாண முடியுமா? தலைவி கூறுவதன் வழி அலரில் நாணமின்மையை அறியலாம்.

**அலர் உவமை**

ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையைக் கூறுவது உவமை அணி எனப்படும். இதனை தண்டி,

**"பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"[7]**

பண்பு, தொழில், பயன் போன்றவற்றின் அடிப்படையில் ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைத் தோன்றக் கூறுவதே உவமை என்கிறது. உவமானத்தையும் உவமேயத்தையும் இணைக்கும் உருபுகள் உவம உருபுகள். அலர் அறிவுறுத்தலில் வள்ளுவர் உவமைகளை கையாண்டு படைத்துள்ளார். கள் எனும் மதுவினை குடித்து குடித்து இன்பம் காண்பது போல் உள்ளது ஊரார் எங்கள் காதலை பேசுவது என்கிறாள் தலைவி. இதனை,

**"களித்தாறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்**
**வெளிப்படுந் தோறும் இனிது"** **(குறள் எண். 1145)**

என்கிறது குறள். மேலும், பாம்பு திங்களை கொண்ட செய்தி உலகம் அறிந்தது. இதனை,

**"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்பு கொண்டற்று"** **(குறள் எண்.1146)**

என்று, காதலனை கண்டது ஒரு நாள் தான். ஆனால் அதனால் உண்டாகிய அலரோ, பாம்பு திங்களைக் கொண்ட செய்தி போல பரந்து பரவி விட்டது ஊராரால் என்று கூறுகிறாள். மேலும்,

**"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்**
**காமம் நுதுப்பேம் எனல்"** **(குறள் எண்.1148)**

என்பதில், ஊரார் அலர் தூற்றியே காதலை அழித்து விடுவோம் என்று எண்ணுவது எப்படி உள்ளது என்றால், நெய்யை ஊற்றியே எரிகின்ற நெருப்பை அணைப்பதற்கு முயற்சி செய்வது போன்று என்று அலரை உவமை வழி வள்ளுவர் எடுத்தியம்புவதை அறியலாம்.

**தொகுப்புரை**

திருக்குறளின் சிறப்பினையும், மேன்மையினையும் விளக்கிக் கொண்டே இருக்கலாம். அந்த வகையில் திருக்குறளில் களவியலை கற்பியலாக மாற்றும் பண்புக் கொண்ட அலர் அறிவுறுத்தல் எனும் அதிகாரம் வழி, அலர் என்பதன் பொருள், அலருக்கான


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

SPL.EDITION : VI VOLUME : III
E.ISSN : 2584 - 1238 அக்டோபர் - 2025


காரணம், அலரில் இன்பம், அலரில் உவமை போன்ற கருத்துக்கள் யாவும் எடுத்துரைக்கப்படுவதை இக்கட்டுரை வழி அறியமுடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம், பொருளதிகாரம் ,நூற்பா.எண்- 1108
2. மேலது, நூற்பா.எண்- 1109
3. நற்றிணை, பாடல் எண் - 36
4. மேலது, பாடல் எண் - 143
5. அகநானூறு, பாடல் எண் - 203
6. நற்றிணை, பாடல் எண் - 149
7. தண்டியலங்காரம், நூற்பா.எண் -30




http://Creativecommons.org//license/by/4.0/.


ISBN: 978-93-343-7954-9

# 34. விருதுநகர் மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள்

**திருமதி க.பொற்கொடி,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**நெறியாளர் : முனைவர் மா.பத்மபிரியா,**
முதுகலை மற்றும் தமிழ் ஆய்வுத்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,

DOI 10.5281/zenodo.17304700.

**Abstract:**

The field of anthropology is one of the most important fields that is growing in the modern era. The field of anthropology is based on countless fields. Anthropology is the study of man at various levels. "Questions raised many centuries ago about the origin, nature, and differences among humans were the reason for the development of today's anthropology," says Bhaktavatsalabharathi. The word anthropology is called 'anthropology' in English. This word is derived from the Greek words 'anthropos' and 'logos'. These words mean 'man' and 'science' in Greek. The person who studies the field of anthropology is an anthropologist. The German philosopher Immanuel Kant published a book titled 'anthropology' in 1789 AD, explaining the origin of man. Since the time when anthropology was formed until today, countless changes have occurred. Therefore, today's anthropology is becoming a comprehensive science that studies humans.

**KeyWords :** Anthropology - Wisdom - Worship - Folklore

## முன்னுரை

மனிதன் தன்னை மீறி செயல்படும் சக்தியைக் கடவுள் என்று அழைத்தான். அக்கடவுள் தன் வாழ்வின் செயல்பாடுகளை சீராக்குபவர் என்றும் அவரை வழிபட்டால் தன்னுடைய துனபங்கள் பாதியாகக் குறைவதாகவும் நம்பினான். இவ்வாறு கடவுள் நம்பிக்கை மக்களிடம் உருவாகியது. இந்நம்பிக்கை மிகவும் நம்பகத் தன்மையாக மாறியதற்கு மிகப்பெரியக் காரணம் நாட்டுப்புற மக்கள் ஆவார். கிராமங்களில் வாழம் மக்களிடம் நாட்டுப்புறத் தெய்வங்கள் குறித்த கருத்தாடல்கள் அதிகம். இக்கருத்தாடல்களை முன்வைத்து விருதுநகர் மாவட்ட நாட்டுப்புறத்தெய்வங்களை மானிடவியல் நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## மானிடவியல் அறிமுகம்

இன்றைய நவீன யுகத்தில் வளர்ந்து வரும் துறைகளில் மிகவும் முக்கியமானத் துறையாக மானிடவியல் துறை அமைந்துள்ளது. மானிடவியல் துறை எண்ணற்றத் துறைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மனிதனைப் பற்றி பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யும் இயலே மானிடவியல் ஆகும். "மனிதனின் தோற்றம், தன்மை அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் முதலானவை குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களே இன்றைய மானிடவியல் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன"1 என்கிறார் பக்தவத்சலபாரதி. மானிடவியல் என்ற சொல்லானது ஆங்கிலத்தில் 'anthropology' என்று அழைக்கப்படுகின்றது. இச்சொல் 'anthropos', 'logos' ஆகிய கிரேக்கச் சொற்களிலிருந்து உருவாக்கப்பட்டது. கிரேக்கத்தில் 'மனிதன்', 'அறிவியல்' எனும் பொருளை இச்சொற்கள் குறிக்கின்றன. மானிடவியல் துறையை ஆய்வு செய்பவர் மானிடவியலாளர் ஆவார். ஜெருமானியத் தத்துவவியல் அறிஞர் இமானுவேல் காண்ட் என்பவர் கி.பி 1789 ஆம் ஆண்டு மனிதனின் தோற்றத்தை விளக்கும் ; 'anthropology' என்ற தலைப்பில் நூலை வெளியிட்டார். மானிடவியல் உருவாகிய காலம் முதல் இன்று வரை எண்ணற்ற


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

மாற்றங்கள் உருவாகியுள்ளன. ஆகையால் இன்றைய மானிடவியல் என்பது மனிதனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஒரு முழுமையான அறிவியலாகத் திகழ்ந்து வருகின்றது.

**நாட்டார் தெய்வங்கள்**

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது முதுமொழி. ஆனால் இன்று திரும்பும் திசையெல்லாம் கோயில்கள் காணப்படுகின்றன. மனிதன் தன்னை பயமுறுத்தும் அனைத்தையும் கடவுளாக வழிபட்டான். தனது பொருளாதாரத்திற்கேற்றவாறு கோயில்கள் கட்டினான். தன்னுடைய உணவுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு படையலிட்டான். மனிதன் தன்னை பயமுறுத்தும் அனைத்துக் கூறுகளையும் கடவுள் சரிசெய்தால் அவர் செய்த உதவிக்கு நன்றி செலுத்தும் விதமாக நேர்த்திக் கடன்கள் செய்தனர். பெருந்தெய்வங்களின்றி மக்களோடு மக்களாக வாழ்ந்து மறைந்தவர்கள், மக்களுக்குக் காவல் பணி செய்தவர்கள், மானத்திற்காக இறந்தவர்கள், உடன்கட்டை ஏறியவர்கள், போரில் மரணமடைந்தோர்களும் வழிபடப்பட்டனர். நாட்டுப்புற மக்களால் இத்தெய்வங்கள் வணங்கப்படுவதால் அவர்களை நாட்டுப்புறத் தெய்வங்கள் அல்லது நாட்டார் தெய்வங்கள் என்று அழைக்கின்றனர். விருதுநகர் மாவட்டத்திலும் இத்தகைய தன்மையுடைய நாட்டார் தெய்வங்களே அமைந்துள்ளன.

**பண்பாட்டுக் கூறுகள்**

பண்பாடு என்பது பண்பட்ட அமைப்பு ஆகும். ஒரு நாட்டின் பண்பாடு என்பது அந்நாட்டின் பண்பட்ட அமைப்பாகும். 'பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும்"2 என்கிறார் பக்தவத்சலபாரதி. பண்பாட்டியலாளர் பண்பாட்டின் கூறுகளை மூன்று வகைகளாகப் பிரிப்பர். அவையாவன,

- பண்பாட்டுக் கூறு
- பண்பாட்டுக் கலவை
- நிறுவனம்

ஆகியனவாகும். இவற்றுள் பண்பாட்டுக்கலவையை மட்டும் சிறிது காண்போம்.

**பண்பாட்டுக் கலவை - விருநகர் மாவட்ட நாட்டார் தெய்வங்களில்**

ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறு என்பது எண்ணற்ற நிகழ்வுகள் அடங்கிய தொகுப்பாகும். நாட்டார் தெய்வப் பண்பாட்டுக் கூறில் ஒன்றாக நாட்டுப்புற நடனத்தைக் கூறலாம். நடன அசைவுகள், விதிமுறைகள் மற்றும் பல கருவிகளுடன் கூடிய பின்னணி இசை ஆகியவை இணைந்து நிகழ்த்தப்படுவதே நடனம் என்றும் அவற்றுடன் நம்பிக்கைகள் மற்றும் விமாக்களும் தொடர்புப்படுத்தப்பட்டிருப்பதாக பண்பாட்டு மானிடவியல் நூலின் ஆசிரியர் பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார்.

**அறிகொல்ல வீரஜக்கம்மாள் கோயில்**

விருதுநகர் மாவட்டம் சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து திருவில்லிப்புத்தூர் செல்லும் சாலையில் அறிகொல்ல வீரஜக்கம்மாள் கோயில் அமைந்துள்ளது. பல மக்களால் சாதி மத பேதமின்றி இக்கோயில் வணங்கப்பட்டாலும் கோயில் நிர்வாக முறை, வழிபாட்டு முறைகள் மற்றும் விழாக்கள் ஆகியவை நாயக்கர் இன மக்களால் நிகழ்த்தப்படுகின்றது. மகாசிவராத்திரியன்று இக்கோயிலில் விழா எடுக்கப்படுகின்றது. இவ்விழாவின் பொழுது வருடம் முழுவதும் முள்கோட்டைக்குள் வைக்கப்பட்டிருந்த அம்மன் முள் கோட்டையின் முன்ற்றம் ஒதுக்கப்பட்டு மூன்றிலிருந்து ஐந்து நாட்கள் வரை வழிபாடு செய்யப்படுகின்றாள்.

மகாசிவராத்திரியன்று முளைப்பாரி எடுத்து இசைக்கருவிகள் வாசித்து வழிபாடு செய்கின்றனர். அன்றிரவு 11 மணிக்கு மேல் ஒன்பது நாயக்கர்களில் ஒரு குழுவினரான கம்பளத்து நாயக்கர்களால் தேவராட்டம் ஆடப்படுகின்றுது. இவ்ஆட்டத்தின் பொழுது உறுமி மேளம் வாசிக்கப்படும். உறுமியின் சப்தத்திற்கு ஏற்றாற் போல் கை அசைவுகளையும் உடல் அசைவுகளையும் கொண்டு ஆடுவர். அவ்வாறு ஆடும் போது கைகளில் கைக்குட்டையும் கால்களில் சலங்கையும் தலையில் ஒரு துண்டும் கட்டியுள்ளனர். வயது வேறுபாடின்றி இம்மரபைச் சேர்ந்த ஆண்மக்கள் ஒரே போல் நடனமாடுகின்றனர். இது பண்பாட்டுக் கலப்பு நிலைக்குச் சிறந்த சான்றாகும்.

**குலக்குறி - விருநகர் மாவட்ட நாட்டார் தெய்வங்களில்**

குலக்குறி என்பது ஒவ்வொரு குலத்திற்குரிய குறியீடு ஆகும். “சில சமூகத்தினர் தம் குலத்தவர்கள் சில பொருள்களிலிருந்து தோன்றியவர்கள் என்றும் அதனோடு வேறு பல முறைகளில் தொடர்புற்றவர்கள் என்றும் நம்புவதால் அப்பொருளை அவர்தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர்”3 என பக்தவத்சல பாரதி தம்முடைய பண்பாட்டு மானிடவியல் நூலில் குறிப்பிடுகின்றார். குலக்குறி என்பது தாவரமாகவோ விலங்காகவோ அல்லது இயற்கைப் பொருளாகவோ இருக்கலாம். தனி ஒருவருக்கென்று குலக்குறியும் அல்லது குழுவினர் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் காணப்படுவதாக பண்பாட்டு மானிடவியல் நூல் சுட்டுகின்றது. நாட்டார் தெய்வங்களிடையே எண்ணற்ற குலக்குறிகள் காணப்படுகின்றன.

**நாட்டார் தெய்வங்களிடம் காணலாகும் குலக்குறிகள்**

நாட்டார் தெய்வங்களிடம் காணப்படும் ஆயுதங்கள், விலங்குகள், மரங்கள் மற்றும் அத்தெய்வத்திற்கு செய்யப்படும் வழிபாடுகளிலும் குலக்குறிப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆண் தெய்வங்களுக்கு அரிவாள் மற்றும் வல்லயக்கம்பு போன்ற ஆயுதங்கள் பாதுகாப்பைக் குறிப்பிடும் குறியீட்டுப் பொருளாகும். “இந்த மக்களின் தெய்வங்களெல்லாம் இந்த மக்களைப் போலவே ஏதேனும் ஓர் ஆயுதம் ஏந்தி காவலுக்குரிய வயல்களின் ஓரத்திலும் கண்மாய்க் கரையிலும், ஊர் மந்தையிலும் ஊர் எல்லையிலும் அயராது கண் வழித்து நிற்கின்றன”4 என்கிறார் தொ.பரமசிவன். பெண் தெய்வங்களுக்கு சூலம், வேப்பிலை, குங்குமம் போன்றவை குறியீட்டுப் பொருளாகும். விருதுநகர் மாவட்ட நாட்டார் தெய்வங்களில் சந்தனமாரியம்மன், மாரியம்மன், இருக்கன்குடி மாரியம்மன், காளியம்மன், பத்திர காளியம்மன் போன்ற தெய்வங்களின் ஆயுதமாக திரிசூலத்தைக் காணமுடிகின்றது. திரிசூலத்தின் மூன்று முனைகளிலும் எலுமிச்சைப் பழம் குத்துவதையும் காணமுடிகின்றது. வேப்ப மரங்களில் அம்மன் குடியிருப்பதாக நம்புகின்றனர். வேப்ப இலைகள் வெப்பத்தைக் குறைக்கும் என்பதால் அம்மை நோய் இருப்பவர்களின் வீட்டிலும் படுக்கையிலும் வேப்ப இலைகளைப் பயன்படுத்துகின்றனர். திருவிழாக்காலங்களில் கொடிசாட்டும் பொழுது சிங்க உருவம் பொறிக்கப்பட்ட வெள்ளைத் துணியுடன் எலுமிச்சை, வேப்பிலை ஆகியவற்றையும் சேர்த்துக் கொடியில் வைத்துக் கட்டுவதைக் காணலாம். மேலும் பெண் தெய்வ வழிபாட்டில் குங்குமமும் குலக்குறியாகப் பன்படுத்தப்படுகின்றது. பெண் தெய்வங்களின் வாகனமாக சிங்கத்தைக் கூறலாம்.

கருப்பசாமி, மாடசாமி, அய்யனார் கோயில்களில் அரிவாள் குலக்குறியாகப் பயன்படுத்தப்படுகின்றது. காவல் தெய்வங்களின் குறியீடாக அரிவாளைக் குறிப்பிடலாம். எல்லையில் காவல்புரியும் தெய்வங்களிடம் பாதுகாப்பின் அடையாளமாக இவ்அரிவாளைப் பார்க்கமுடிகின்றது. மேலும் பல மணிகள் கொண்ட வல்லயக்கம்புகளும் குலக்குறியாகப்


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

பயன்படுகின்றது. கருப்பசாமி, மாடசாமி மற்றும் அய்யனார் கோயில் திருவிழாக்களின்; பொழுது அருள் வந்தவர்கள் அரிவாளையும் வல்லயக்கம்புகளையும் கொண்டு ஆடுவதை இன்றளவும் காணமுடிகின்றது. சிவகாசி பெரியாண்டவர் பெரியதாயம்மாள் வழிபாட்டில் பெரியாண்டவர் வேடமிட்டவர் அருள் வரும் பொழுது வல்லயக் கம்பைக் கையில் ஏந்தி ஆடிக்கொண்டே ஊரைச் சுற்றி வருவதைக் காணமுடிகின்றது. இக்கோயிலில் பெரியாண்டவரை லிங்கவடிவத்தில் வழிபாடு செய்கின்றனர். இக்கோயிலில் முனிவர்கள் தியானத்தின் பொழுது வைத்திருக்கும் தண்டத்தையும் காணமுடிகின்றது. மேலும் திருவிழாவிற்கு முன் காப்பு கட்டி விரதம் இருக்கும் பொழுது தினமும் கடவுள் முன் தண்டத்தையும் வல்லயக்கம்பையும் வைத்து வழிபடுவதைக் காண முடிகின்றது. கருப்பசாமி வழிபாட்டில் அரிவாளைக் காணமுடிகின்றது. அய்யனாரின் ஆயுதங்களாக செண்டு மற்றும் வாளைக் காணமுடிகின்றது. சிவகாசி பகுதியில் உள்ள கற்குவேல் அய்யனார் மற்றும் வீரியப்பெருமாள் அய்யனாரின் கைகளில் செண்டு எனப்படும் சாட்டைக்கம்பைக் காண முடிகின்றது. கருவறையின்றி தனியாக அய்யனார் குதிரை மேல் அமர்ந்திருக்கும் போதும் கையில் சாட்டைக் கம்பை ஏந்தியவாறே காட்சி கொடுக்கிறார். அய்யனாரின் வாகனமாக யானையும் குதிரையும் பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் கருப்பசாமி குதிரை வாகனத்தை உடையவராக அறியப்படுகின்றார்.

**திருவிழாக்களும் அமைப்பியல் குறியீடுகளும்**

தமிழர் மானிடவியலின் முக்கியக் கூறில் ஒன்று திருவிழா ஆகும். திருவிழா என்பது பண்பாட்டின் ஒரு முக்கிய வெளிப்பாடாக அமைகின்றது. திருவிழாக்களில் எண்ணற்றக் குறியீடுகள் காணப்படுகின்றன. திருவிழாக்களில் சில உளவியல் சார்ந்த கூறுகளையும் காண முடிகின்றது. திருவிழாக்காலங்களில் செய்யப்படும் நேர்த்திக்கடன்கள் பல நிலைகளில் அமைகின்றன. சிவகாசி, இருக்கன்குடி, திருத்தங்கல், விருதுநகர் மாரியம்மன், பத்திரகாளியம்மன் கோயில்களில் உடலை வருத்தி மேற்கொள்ளும் பல நேர்த்திக் கடன்களைக் காண முடிகின்றது. அம்மன் தன்னுடைய வேண்டுதலை நிறைவேற்றினால் அக்கினிச்சட்டி, 21 அக்கினிச்சட்டியைச் சுமந்து கோயிலைச் சுற்றி வலம் வந்து தன்னுடைய நன்றிக்கடனை செலுத்துகின்றனர். மேலும் திரிசூலம் குத்துதல், பறவைக் காவடி எடுத்தல், முதுகில் அம்மனின் சிலை கொண்ட தேரை உடலில் மாட்டி இழுத்து வருதல் போன்ற கடுமையான வேண்டுதல்களையும் செய்கின்றனர். அங்கப்பிரதட்சணம், அடிப்பிரதட்சணம் செய்தல் போன்ற முறைகளையும் காண முடிகின்றது. கரும்பாலைத் தொட்டில், பிள்ளைத் தொட்டில் எடுக்கும் முறைகளையும் இக்கோயில்களில் காணமுடிகின்றது.

ஆவுடையாபுரம் சந்தனமாரியம்மன் கோயிலில் குழி மாற்றிக் கொடுக்கும் முறை காணப்படுகின்றது. உடல்நலம் சரியில்லாத குழந்தைகள் உடல்நலம் சரியாக வேண்டி இந்த நேர்த்திக்கடன்களை வேண்டிக் கொள்கின்றனர். பிள்ளைகள் உடல்நிலை சரியானதும் கோயிலின்முன் வெட்டப்பட்ட குழியில் பிள்ளையை போட்டு வேப்பிலை, பூ போன்ற பொருட்களால் சில நொடிகள் நிரப்பி பின் பிள்ளையை மீண்டும் வெளியே எடுக்கின்றனர். மேலும் மனிதர்கள் தம்முடைய தலையில் உள்ள முடியை காணிக்கையாக்கியும் வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றனர். மேலும் சேவல், ஆடு போன்ற உயிர்களை பலி கொடுக்கும் மரபும் இக்கோயில்களில் காணப்படுகின்றது. சில கோயில்களில் தீ மிதி நிகழ்வும் நடைபெறுகின்றது. பொங்கல் வைத்து வழிபடும் மரபும் பல கோயில்களில் காணப்படுகின்றது.

**முடிவுரை**

விருதுநகரைச் சார்ந்த நாட்டார் மக்களின் தெய்வவழிபாட்டின் பல நிலைகளில் மானிடவியல் கூறுகளைக் காண முடிகின்றது. அது மட்டுமின்றி நாட்டார் தெய்வங்களும் மானிடவியல் கூறுகளுடன் ஒத்து வருகின்றன. நாட்டார் தெய்வங்களின் குலக்குறியீடுகளாக ஆயுதங்களில் சூலம், அரிவாள், வல்லயக்கம்பு ஆகியவற்றையும்; விலங்குகளில் சிங்கம், யானை, குதிரை ஆகியவற்றையும் மரங்களில் வேம்பையும் காண முடிகின்றது. நாட்டார் தெய்வங்களுக்கான பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக நடனம் இருப்பதை அறிகொல் வீரஜக்கம்மாள் கோயில் தேவராட்டத்தின் வழி அறிய முடிகின்றது. திருவிழாக்காலங்களில் செய்யப்படும் நேர்த்திக்கடன்கள் மக்களின் உளநிலையை எடுத்துரைக்கின்றன. நாட்டார் தெய்வ வழிபாட்டில் மானிடவியல் கூறுகள் காணப்படும் முறைமைகளைப் பின்வரும் கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.62
2. மேலது, ப.156
3. மேலது, ப.506
4. பேராசிரியர் தொ.பரமசிவன், தென்புலத்து மன்பதை, ப.283


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

# 35. பாரதியார் கவிதைகளில் குழந்தைகளுக்கான நன்னெறிச் சிந்தனைகள்

**திருமதி மா.குருவம்மாள்,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

**நெறியாளர் : முனைவர் மா.பத்மபிரியா,**
முதுகலை மற்றும் தமிழ் ஆய்வுத்துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி,

DOI 10.5281/zenodo.17304769.

**Abstract:**

The modern poems composed by Mahakavi Bharathiyar contain inspiring and uplifting messages that inspire people of all ages, from children to adults, with a sense of freedom and self-confidence. In particular, these poems are characterized by virtues for the young, which are characteristic of children's literature. Since children can only acquire the intellectual skills to understand and act on social values if they are reformed during their school years, Bharathiyar's poems can be taken as guides for children. Some of Bharathiyar's works also shine as contents of children's literature. He gives various advices such as "Love is seen," "Run and play, father," "May you have mercy on the enemy, O heart of mercy," "You are a small parrot, Kannamma," and "You are a child who never plays games." This article reveals that moral thoughts for children are revealed.

**Keywords :** Maha kavi - Bharathiyar - Wisdom - Ethics - Child

## முன்னுரை

மகாகவி பாரதியார் இயற்றிய நவீனக் கவிதைகளில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினருக்கும் ஏற்புடைத்தானப் பாங்கில் விடுதலை உணர்ச்சியுடன், தன்னம்பிக்கை தந்து ஊக்கம் அளிக்கும் எழுச்சியுரைகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, சிறார் இலக்கியங்கள் என்று அடையாளப்படுத்தும் தன்மையில் இளையோருக்கான நல்லறங்களே இக்கவிதைகளில் அணிவகுக்கின்றன. குழந்தைகளைப் பள்ளிப்பருவத்தில் சீர்திருத்தினால் தான் சமூகநன்மதிப்புகளை உணர்ந்து செயல்படும் அறிவுத்திறன்களைப் பெறுவர் என்பதால் பாரதியாரின் கவிதைகளை சிறுவர்களின் வழிகாட்டிகளாக எடுத்துக்கொள்ளலாம். பாரதியாரின் சிற்சில படைப்புகள் சிறார் இலக்கியத்தின் உள்ளடக்கங்களாகவும் ஒளிவீசுகின்றன. அன்பு செய்தல் கண்டீர், ஓடி விளையாடு பாப்பா,பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே, சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா, தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன் என்று பற்பல அறிவுரைகளை கூறுகின்றார். குழந்தைகளுக்கான நன்னெறிச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன என்று இக்கட்டுரை பகர்கின்றது.

## பாரதியும் பாப்பாவும்

குழந்தைகளுக்கு அறிவுரை சொல்லும் பெண்பாற்புலவர்களில் ஔவையார் முதலிடம் வகிப்பவர். "குழந்தைகளுக்கான நிறைய நீதிப்பாடல்களைப் பாடியவர் ஔவைப் பாட்டி ஆவார்.ஆத்தி சூடி,கொன்னைவேந்தன் போன்ற சிறுவர்களுக்கான நீதிநூல்களை இயற்றிய ஔவையார் விநாயகர் அகவல் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்." (மணவை முஸ்தபா,பக்.85ப.123) ஔவையாரின் நல்லறச்சிந்தனைகள் பாரதியாரின் பாப்பா பாடல்களிலும் மிளிர்கின்றது. மகாகவி பாரதியார் இயற்றிய குழந்தை பாடல்களில் சிறப்பிடம் பெறுவது "ஓடி விளையாடு பாப்பா" ஆகும். பாப்பா பாடல் குழந்தைகளுக்கான


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

நல்பழக்கவழக்கங்களை வலியுறுத்துவதோடு, அவர்களை உற்சாகப்படுத்தவும் உதவுகின்றன.

**ஓடி விளையாடு பாப்பா! - நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!**
**கூடிவிளையாடு பாப்பா! - ஒரு**
**குழைந்தையை வையாதே பாப்பா! (பாரதியார்,பாப்பா பாட்டு)**

விளையாட்டின் அவசியம்,ஒற்றுமையின் அவசியம்,அன்புசெய்தலின் முக்கியம் குறித்துப் பாரதியார் கவிதையில் ஓடி,கூடி,வையாதே போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். பாரதியின் பாப்பா பாட்டு உயிரினங்களின் மீது கருணை கொள்ளுமாறு வலியுறுத்துகின்றது. குருவி, வண்ணப்பறவை, கோழி, காகம், பசு, நாய், குதிரை, மாடு, ஆடு என்று மனிதர்களை அண்டிப்பிழைக்கும் உயிரினங்களைப் படடியலிட்டுள்ளார்.

**சின்னஞ் சிறுகுருவி போலே - நீ**
**திரிந்து பறந்துவா பாப்பா!**
**வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ**
**மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா!**
**கொத்தித் திரியுமந்தக் கோழி - அதைக்**
**கூட்டி விளையாடு பாப்பா!**
**எத்தித் திருடுமந்தக் காக்காய் - அதற்கு**
**இரக்கப் படவேணும் பாப்பா!**
**பாலைப் பொழிந்து தரும், பாப்பா! - அந்தப்**
**பசுமிக நல்லதடி பாப்பா!**
**வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது**
**மனிதர்க்குத் தோழனடி பாப்பா!**
**வண்டி இழுக்கும் நல்ல குதிரை, - நெல்லு**
**வயலில் உழுதுவரும் மாடு,**
**அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு, - இவை**
**ஆதரிக்க வேணுமடி பாப்பா!**
**வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா! (பாரதியார், பாப்பா பாட்டு)**

ஒவ்வொரு விலங்கின் குணத்தைக் கூறி அதனுள் குழந்தைகளுக்கான அறிவுரையை எடுத்துரைக்கின்றார். குருவி போல பறக்க வேண்டும்,வண்ணப்பறவை போல இயற்கையை ரசித்து மகிழ்ச்சி பெறு,கோழி தன் இரையை தானே கொத்தி உண்கிறது என்ற பழக்கத்தைக் கூறி அதனூடாக கோழியின் பண்பை அறிய அதனை உன்னுடன் வைத்து விளையாடு என்கிறார்.காகம் பசியினால் உணவைத் திருடுகின்றது.அதனால் காகத்தை இரக்கப்பட்டு மன்னித்துவிடுமாறு கூறுகின்றார்.பசு மனிதர்களுக்கு பால் தருகின்றது.நாய் மனிதனுக்கு தோழமை உறவு கொள்கிறது.குதிரை வண்டி இழுக்கின்றது,மாடு வயலை உழுகின்றது,ஆடு மனிதர்கைள அண்டிப்பிழைக்கின்றது எனவே அந்த உயிரினங்களை மனிதர்கள் தான் ஆதரிக்க வேண்டும் என்று உயிரின நேயம் கூறுகின்றார்.


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

குழந்தைகளின் அன்றாட வேலை முறைகளை நிரல்படுத்தியுள்ளார்.காலை முதல் மாலை வரை எதனை செயலாற்ற வேண்டும் என்பது குழந்தைகளுக்கான அவரின் அன்புக்கட்டளையாகும்.

**காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு**
**மாலை முழுதும் விளையாட்டு - என்று**
**பொய்சொல்லக் கூடாது பாப்பா! - என்றும்**
**புறஞ்சொல்ல லாகாது பாப்பா!**
**தெய்வம் நமக்குத்துணை பாப்பா! - ஒரு**
**தீங்குவர மாட்டாது பாப்பா! (பாரதியார்,பாப்பா பாட்டு)**

காலையில் படிப்பு,மாலையில் விளையாட்டு என்று பிரித்துவிடுகின்றார்.பொய்,புறம் பேசுதல் ஆகிய தீய செயல்களைக் கண்டிக்கிறார்.பாரதியக்கு தெய்வநம்பிக்கை இருப்பதால் குழந்தைகளுக்கு தெய்வநம்பிக்கையை ஊட்டுகின்றார். தெய்வே துணை என்கிறார்.

**பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்**
**பயங்கொள்ள லாகாது பாப்பா!**
**மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்**
**முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!**
**துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்**
**சோர்ந்துவிட லாகாது பாப்பா!**
**அன்பு மிகுந்த தெய்வ முண்டு - துன்பம்**
**அத்தனையும் போக்கிவிடும் பாப்பா! (பாரதியார்,பாப்பா பாட்டு)**

சிறுவர்களுக்குத் துன்பம் தரும் தீயவர்களைக் கண்டு பயம் இருக்கக் கூடாது என்று வீரவுரை ஆற்றியுள்ளார். பாப்பா என்று பெண்குழந்தைகளுக்கான வீரத்தை ஊட்டுகின்றார். மோதி மிதித்து விடு, உமிழ்ந்து விடு என்று பெண்குழந்தைகளுக்கு எதிரான பாலியல் சீண்டல்களைக் கோபமாக வெளிப்படுத்தியுள்ளார்.மேலும்,வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்லறங்களை வரிசைப்படுத்தியுள்ளார்.

**சோம்பல் மிகக்கெடுதி பாப்பா! - தாய்**
**சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!**
**தேம்பி யழுங்குழந்தை நொண்டி - நீ**
**திடங்கொண்டு போராடு பாப்பா!**
**சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!**
**நீதி,உயர்ந்தமதி,கல்வி - அன்பு**
**நிறைய உடையவர்கள் மேலோர்.**
**உயிர்க ளிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்**
**உண்மையென்று தானறிதல் வேணும்**
**வயிர முடைய நெஞ்சு வேணும் - இது**

வாழும் முறைமையடி பாப்பா! (பாரதியார்,பாப்பா பாட்டு)


http://Creativecommons.org//license/by/4.0/.
ISBN: 978-93-343-7954-9

1. சோம்பல் நீக்குதல்
2. தாய் சொல் கேட்டல்
3. மனதிடத்துடன் போராடல்
4. சாதி காழ்ப்பு நீக்குதல்
5. நீதி கடைப்பிடித்தல்
6. நல்லறிவு
7. கல்வி கற்றல்
8. அன்புசெய்தல்
9. உண்மை அறிதல்
10. மனவுறுதியுடன் இருத்தல்

இவ்வாறு சிறுவர்களுக்கான பத்து வாழ்வியல் முறைகளைக் கூறியுள்ளார்.

**அன்பே அறம்**

வாழ்தலின் அறமே அன்புசெய்தல் ஆகும். பாரதியாரின் அனைத்துக் கவிதைகளும் மானுட நலனுக்கு நன்மை தரும் கருத்துக்களைத் தருவன. “எத்தனையோ வாழ்க்கைத் தொல்லைகளுக்கிடையில் பாரதியாரின் கவிதையும் எழுத்தும் மெருகுபெற்றது.” (உ.இரா.சூரியநாராயணன், குழந்தைக் களஞ்சியம் தொகுதி ஒன்று அ முதல் இந்தியா வரை,ப.79) என்ற கருத்து உண்மையானது.பாரதியார் மானுட சமூகம் நலம் பெற அன்பு அவசியம் என்கிறார்.இயற்கையுடன் அன்பு செய்யுங்கள்,அனைத்து மதபேதம் மறந்து அன்பு செய்யுங்கள் என்கிறார்.குறிப்பாக, “உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்!” என்று மனிதர்களின் வேலையே பிற உயிர்களிடம் அன்புசெய்தல் என்கிறார்.

**“இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்**
**இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்**
**அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்**
**ஔடத மூலிகை பூண்டு புல் யாவையும்**
**எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ?**
**மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்**
**வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர் பாய்ச்சாவிடினும்**
**வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்**
**வகைவகையா நெற்கள்புற்கள் மலிந்திருக்குமென்றே?**
**யானெதற்கும் அஞ்சுகிலேன்,மானுடரே,நீவிர்**
**என்மதத்தைக் கைக் கொண்மின்;பாடுபடல்வேண்டா;**
**ஊனுடலை வருத்தாதீர்;உணவியற்கை கொடுக்கும்;**
**உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்!”**

பாரதியாரின் அனைத்துக் கவிதைகளும் மானுட நலனுக்கு நன்மை தரும் கருத்துக்களைத் தருவன. “எத்தனையோ வாழ்க்கைத் தொல்லைகளுக்கிடையில் பாரதியாரின் கவிதையும் எழுத்தும் மெருகுபெற்றது.” (உ.இரா.சூரியநாராயணன், குழந்தைக் களஞ்சியம் தொகுதி ஒன்று அ முதல் இந்தியா வரை,ப.79) இயற்கை நல்லுறவு,மானுட நேயம் பாரதியின் அன்பு செய்தல் கவிதையில் வெளிப்படுகின்றது.

**முடிவுரை**

மகாகவி பாரதியார் மானுடநலனை முன்னிறுத்தியே அனைத்துக் கவிதைகளையும் பாடியுள்ளார். அவரின் சிறுவருக்கானப் பாடல்கள் நல்லறங்களையே போதிக்கின்றன. அன்பு,அறிவு,வீரம் விளைந்த குழந்தைகளையே பாரதியின் கவிதைகள் பிரசவிக்கின்றன. குழந்தைகளின் எதிர்காலம் குறித்த கவலை பாரதியிடம் ஒட்டிக்கொண்டுள்ளது போலும் அதனால் தான் அவரின் கவிதைகளை வாசிக்கும் குழந்தை வாசகருக்குத் தன்னம்பிக்கை விதைகள் தூவப்படுகின்றன எனலாம்.

**துணைநூற்பட்டியல்**

1. பாரதியார்,பாரதியார் கவிதைகள்,பாரதி புத்தகாலயம்,சென்னை.
2. உ.இரா.சூரியநாராயணன்,குழந்தைக் களஞ்சியம் தொகுதி ஒன்று அ முதல் இந்தியா வரை,ப.79)தமிழ் வளர்ச்சிக் கழக இயக்ககம்,குறளகம்,சென்னை,2009.
3. மணவை முஸ்தபா,சிறுவர் கலைக்களஞ்சியம்,மீரா பப்ளிகேஷன்.ஏஇ103 அண்ணா நகர்,சென்னை.1998